T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XLV NO: 5

March 19

1983

211, 31 N83
N83 . 45 . 5;1
136006

வெளியீடு 12-12-1983] [Issued 12-12-1983

12

எழும்பூர், சென்னை-600 008

2691

# தமிழ் நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES

### பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

**சனிக்கிழமை, மார்ச் 19, 1983— தொகுதி XLV எண் 5**

**Saturday the 19th March 1983 Volume XLV No. 5**

**சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009**

**Legislative Assembly Department Fort St. George**
**Madras-600 009.**

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

136006
V2:11,3 N83
N83.45.51

# உள்ளடக்கம்

19—3—1983

வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் 499–531

தகவல் கோரல் :

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 532-533

ஒத்திவைப்புத் தீர்மானம் :

கள் குடித்தவர்களில் இருவர் குரோம்பேட்டையில் மரணமடைந்துள்ளதாகக் கூறப்படுவது 533–542

அறிக்கைகள் அளித்தல் :

(அ) அமைச்சரின் திருத்த அறிக்கை 543

(ஆ) பொதுக் கணக்குக் குழு 545

கவன ஈர்ப்பு :

திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் முக்கியமான வாயுக்களின் கட்டுப்பாட்டினால் அறுவை சிகிச்சைகள் பாதிப்பு. 544–545

அரசினர் சட்ட முன்வடிவு :

நில அளவை–எல்லைகள்(திருத்த சட்ட முன்வடிவு) 1983. 546

வரவு–செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 36—பாசனம்
(ஆ) கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு 546–553

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. 54 , 547 548–549 629–652

திரு. எஸ். ரெத்தினராஜ் 549–552

திரு. கே. குப்புசாமி 552–558

| | |
|---|---|
| திரு. சோ. அழகர்சாமி | 558–566 |
| திரு. எம். கே. ராஜமாணிக்கம் | 566–569 |
| திரு. இரா. அருணகிரி | 569–574 |
| திரு. ஜி. கே. சுப்பிரமணியன் | 574–578 |
| திரு. கே. ஆர். சுந்தரம் | 578–583 |
| திரு. ஆ. வெள்ளைச்சாமி | 583–5 |
| திரு. த. வேணுகோபால் | 586–5 |
| திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் | 590–5 |
| திரு. பி. தங்கவேலு | 594–5 |
| திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி | 598–6 |
| திரு. க. பாரமலை | 601–60 |
| திரு. எம். எஸ். மாணிக்கம் | 607–6 |
| திரு. எஸ். சிவராமன் | 611–61 |
| திரு. க. இரா. சின்னராசு | 614–61 |
| திரு. பி. முகமது இஸ்மாயில் | 617–619 |
| திரு. ஏ. சி. சண்முகம் | 619–6 |
| திரு. செ. இராமலிங்கம் | 624–6 |

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் : 653


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1983 மார்ச் 19.

பங்குனி 5, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்"

மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு, அதனிடத்திலே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**பச்சைத் தேயிலைக்கு அதிக விலை நிர்ணயம் செய்யும் திட்டம்**

*வினா எண். 469—திரு எம். ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பச்சைத் தேயிலைக்கு தற்போது உள்ள விலையை விட அதிகமான விலை கொடுக்க அரசு விலை நிர்ணயம் செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போதிருந்து அமுல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

600 008.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத்
அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய தலைவர்
தேயிலைத் தோட்டத்திற்குச் சொந்தக்காரர்கள், சிறுசிறு
ஏக்கர் என்று வைத்திருக்கக் கூடியவர்கள் 10, 15
கொடுக்கக்கூடிய விலை கட்டுப்படியாகவில்லை தங்களுக்குக்
அரசிடத்திலே முறையிட்டு இருக்கிறார்கள். என்று
சீலிக்கப்படும் என்று ஒரு முறை நான் அது பரி
வந்த செய்தியை பார்த்தேன். இந்தத் பத்திரிகையிலே
நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கின்ற ஒரு தேயிலை அந்
இருப்பதால், இந்த சிறுசிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்கு பொருளாக
விலையை அதிகரித்துக்கொடுக்க அரசு
செய்யுமா என அறிய விரும்புகிறேன்? பரிசீலனை

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
அரசு பச்சைத் தேயிலைக்கு தற்போது உள்ள அவர்கள்
விட அதிகமான விலை கொடுக்க அரசு விலையை
செய்யுமா என்று கேட்டிருந்தார்கள். அதற்கு விலை நிர்ணயம்
நான் பதில் அளித்தேன். ஆனால் அரசு இல்லை என்று
தேயிலைக்கு ஏறத்தாழ ஒரு நியாயமான இந்தப் பச்சைத்
பதில் கடந்த 2 ஆண்டுகளாக முயற்சி விலை கொடுப்
ஆண்டுக்காலத்திற்கு முன்பு இருந்த எடுத்து, இரண்டு
அதிக விலை கொடுத்திருக்கிறது. விலையைவிட இப்போது
குந்தா தொழிற் கூட்டுறவுத் தேயிலைக்கு குறிப்பாக 1981-82-ல்
ஒரு கிலோவுக்கு 1.82 பைசா. ஆனால் கொடுக்கப்பட்டது
பைசா கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு அங்கு 2.63
கூடங்களிலே ஏறத்தாழ 2 ரூபாய்க்கு இப்படி கூட்டுறவு தொழிற்
உள்ளாக கொடுக்கப்பட்டு வருகிறது மேலாக, 3 ரூபாய்க்கு
தில் தெரிவித்துக்கொள்கிறேன். என்பதை இந்த நேரத்
விலைகள் கிடைக்க எவ்வென்ன அதுமட்டுமல்லாமல் நல்ல
அதிகாரத்திற்கு உட்பட்டு முயற்சிகளை இந்த அரசின்
யெல்லாம் கடந்த 2 எடுக்கவேண்டுமோ, அவைகளை
குறிப்பாக 5 நடவடிக்கைகளை ஆண்டுகளிலே எடுத்து இருக்கிறது.
சிறு தொழிலாகச் செய்யக்கூடிய எடுத்து நல்ல விலைகள்
களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு தேயிலை உற்பத்தியாளர்
பாக தமிழகத்தில் நாம் செய்திருக்கிறோம். குறிப்
பனை வரி 5 சதவீதமாக பொறுப்பேற்றதற்குப் பிறகு விற்
குறைத்து, சிறு தேயிலை இருந்ததை $2\frac{1}{2}$ சதவீதமாக
யிருக்கிறோம். அதேபோல் உற்பத்தியாளர்களுக்கு ஆக்கி
யத்தின் மூலமாக 25 இன்றையதினம் தேயிலை வாரி
லைசர் சப்சிடி வாங்கிக் சதவீதம் உர மானியம், பெர்ட்டி
தாக இந்தத் தேயிலைத் கொடுத்து இருக்கிறோம். மூன்றாவ
தொழிலில் ஈடுபட்டு இருக்கிற சிறு



தொழில் முனைவோர்களுடைய பிரச்னைகளை அறிந்து கொள்வதற்காக அட்வைசரி கமிட்டி, ஆலோசனைக் குழுவை உருவாக்கியது மூன்றாவது நடவடிக்கையாக எடுத்திருக்கிறோம்.

நான்காவதாக ஹில் ஏரியா டெவலப்மென்ட் புரோகிராம் என்ற வகையில் இன்ட்கோஸ் மூலமாக குறைந்த விலையில் அவர்களுக்கு உரங்களை அந்த மெம்பர்களுக்கு அளித்து வருகிறோம்.

ஐந்தாவதாக அண்மையில் மத்திய அரசிடத்திலே வலியுறுத்தி கலால் வரியை கூடலூர் அல்லாத மற்ற தேயிலைத் தொழிற்சாலைக்கு ஆயத்தீர்வையை ரூ. 1.10-லிருந்து 60 பைசாவாக குறைக்கவும், கூடலூர் தொழிற்சாலைகளுக்கு 40 பைசாவிலிருந்து 36 பைசாவாக குறைக்கவும் மத்திய அரசுக்கு வற்புறுத்தி இந்தச் சலுகையைப் பெற்றுக்கொடுத்திருக்கிறோம். அதிக விலை பெற்றுத் தருவதற்கு அரசு முயற்சி எடுத்து வெற்றி பெற்றிருக்கிறது.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அதிகப்படியான அளவில் பணம் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் தனியார் கம்பெனிகளில் பச்சைத் தேயிலைக்கு ஒரு கிலோவுக்கு 3.60 பைசா கொடுத்து வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட காலங்களில் எல்லாம் நல்ல ஈல்டு கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பனிக்காலங்களில் இந்தத் தேயிலை கருகக்கூடிய நிலைமையிருக்கிறது. எனவே அதை ஈடுகட்டுவதற்காக மேலும் விலையை அதிகரித்துக் கொடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நான் தொகுத்துச் சொன்னேன் அதைத்தொடர்ந்து மேலும் நடவடிக்கைகளை எடுத்து, எந்த அளவுக்கு அதிக விலையை தேயிலை உற்பத்தியாளர்களுக்கு பெற்றுத் தர முடியுமோ, அந்த அளவுக்கு பெற்றுத் தர நிச்சயமாக அரசு முயற்சி எடுக்கும்.

திரு. கே. கல்லன்: பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கிடைப்பதற்கு இடைஞ்சலாக, குந்தா மேற்குநாடு கூட்டுறவுத் தேயிலைத்

தொழிற்சாலைகளில் பணிபுரியும் சில தொழிலாளர்கள் பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பச்சைத் தேயிலையைத் திருடிக் கொண்டு போன விவரம் அரசுக்குத் தெரியுமா? அதை பின்னால், அந்த பேரவை (G nerai Body) கூட்டத்தில் கண்டு பிடித்து உள்ளார்கள் செய்தி. அப்படியானால் அந்தத் தவறான செயலின் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய புகார் அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அரசு அதனை ஆழ்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீலகிரி மாவட்டத்தை வறட்சி கடுமையாகப் பாதித்திருப்பதன் காரணமாக, தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டு, அவர்கள் நட்டம் அடையக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்போது அவர்களுக்கு அதிகமாக ரூ. 3 வழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது போதாது. நல்ல ஈல்டு கிடைக்கும் காலத்திலேயே அவர்களுக்கு 30 பைசா, 40 பைசா, 1 ரூ. என்ற அளவில் வழங்கப்பட்டு, மிகவும் பற்றாக்குறையால் அவதிப்பட்டார்கள். இப்போது வறட்சியினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு இன்னும் அதிக அளவில் நிவாரணம் கிடைக்க, அல்லது வறட்சி அங்கு அதிகம் உள்ளதால் அதன் அடிப்படையில் ஏதாவது சலுகை வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை அடிப்படையாக வைத்துக்கொண்டு தக்க பரிகாரத்தை உரிய நேரத்தில் அரசு செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சமீபத்திலே நீலகிரி மாவட்டம் சென்றிருந்தபோது அங்கேயுள்ள தேயிலைக் கூட்டுறவுச் சங்கத்தைச் சென்று பார்த்தேன். தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை அங்கே இல்லாததன் காரணமாக, தேயிலையை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு போதுமான விலை கிடைக்கவில்லை. உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையையும் நல்ல விலைக்கு விற்கமுடியவில்லை. இதனால் ஏற்படும் பெரும் நட்டத்தின் காரணமாக பாதிக்கப்பட்டு அந்தச் சிறு விவசாயிகளும், தொழிலாளர்களும், அந்தத் தொழிலையே விட்டு விட்டுப் போய்விடலாமா என்று கூட நினைக்



கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே தேயிலை நல்ல விலைக்கு விற்கவும், விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கவும், சரியான நிர்வாகம் வரக்கூடிய முறையிலேயும் ஒரு நல்ல ஏற்பாட்டை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களுடைய அடிப்படை உணர்வோடு இந்த அரசும் ஒன்றுகிறது. இப்போதுதான் கூட்டுறவுச் சங்கத்தினுடைய அந்தச் சட்டம் கூட நிறைவேற்றப் பெற்றிருக்கிறது. விரைவிலே அது செயலுக்கு வருகிற நேரத்திலே, அத்தனை தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் சட்டபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாக சபையை நடத்துவார்கள்.

## திண்டுக்கல் அருகாமையில் லெதர் காம்ப்ளக்ஸ் அமைக்கும் திட்டம்.

வினா எண். 470 திரு. என். வரதராஜன் ;

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் :

மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திண்டுக்கல் அருகாமையில் லெதர் காம்ப்ளக்ஸ் தொடங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மூலதனத்தில் தொடங்கப்படுகிறது?

(இ) எத்தனைப் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) பின்தங்கிய பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களில் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாநிலத்திலும் ஓரிரு பின்தங்கிய பகுதிகளைத்

தேர்ந்தெடுத்து. அங்கே பெருரகத் தொழில்களும், சிறு தொழில்களும் ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சியடையக் கூடிய வகையில் தொழில் கேந்திரம் 3 அமைத்தல் பற்றி கொள்கை அளவில் மைய அரசு அறிவித்துள்ளது. இதனடிப்படையில் திண்டுக்கல்லில் தோல் தொழில் வளர்ச்சிக்கு என ஒரு தொழில் வளர்ச்சி மையம் அமைப்பதற்குறிய திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கென மைய அரசு, மைய அரசைச் சார்ந்த இணைச் செயலர் தலைமையில் பணிக்குழு ஒன்றினை அமைத்தது. இக்குழுவின் அறிக்கை மைய அரசிற்கு சமர்பிக்கப்பட்டு விட்டது. அறிக்கை மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) பூர்வாங்க அறிக்கையின்படி இம்மையத்தில் எதிர்பார்க்கப்படும் மொத்த முதலீடு ரூ. 62.96 கோடியாகும் இதனால் திண்டுக்கல் பகுதியை சுற்றியுள்ள சுமார் 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் பகுதியில் லெதர் காம்ப்ளக்ஸ் தொடங்குவது சம்பந்தமாக கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்த குழுவின் சிபாரிசுகளை எடுத்து மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து அனுப்பப்பட்டிருப்பதாக சொன்னார்கள். எப்போது இந்த சிபாரிசு செய்யப்பட்டது. இன்னும் எவ்வளவு காலத்தில் அது தொடங்குவதற்கான சூழ்நிலை இருக்கிறது. அத்தோடு அந்த அமைப்பு அந்த தொழில் காம்பிளக்ஸ் தனியார் துறையால் அமைக்கப்படவிருக்கிறதா அல்லது அரசுத்துறையால் அமைக்கப்படவிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, 1980 நவம்பர் மாதம் மத்திய அரசு தமிழக அரசிலிருந்து யோசனை கேட்டது. உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் திண்டுக்கல் பற்றி குறிப்பிட்டு, அங்கே தோல் தொழிற்சாலை அமைக்கலாம் என்று தமிழக அரசின் சார்பிலே கடிதம் எழுதினார்கள். பிறகு மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து ஒரு நிபுணர் குழுவை அமைத்து, ஆராய்ந்து எந்தெந்தத் தொழிலை வைக்கலாம், எந்த எந்த இணைப்பு அங்கே வைக்கப்படலாம் என்ற



விவரத்தை மத்திய அரசினுடைய பரிசீலனைக்கு வைத்திருக்கிறது. விரைவிலேயே மத்திய அரசு பரிசீலனை செய்து அங்கீகாரம் அளிக்கும் என்று நம்புகிறோம்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : தலைவரவர்களே, இந்த லெதர் காம்பிளக்ஸ் ஆரம்பிப்பதற்கு சென்ற ஆண்டு ஆம்பூர், வாணியம்பாடியில் சுமார் 400 ஏக்கர் நிலம் பார்வையிடப்பட்டது. அது கைவிடப்பட்டு இப்போது திண்டுக்கல்லுக்குப் போயிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, இரண்டும் வேறு வேறு திட்டங்கள். மாண்புமிகு உறுப்பினர் குலசேகர பாண்டியன் அவர்கள் இரண்டையும் இணைத்து குழப்பிக் கொள்ளவேண்டாம் இந்தத் திட்டம் வாணியம்பாடியிலும் வரும், திண்டுக்கல்லிலும் வரும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டிலே அறிவிக்கப்பட்டு, மத்திய அரசின் பரிசீலனையில் இத்திட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதிக காலதாமதம் ஏற்படுகிற காரணத்தால் அதை துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது சுமார் 10,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரு தொழிலாக இருப்பதால் மாநில அரசு தன்னுடைய நிதியிலிருந்தே இந்தத் திட்டத்தைத் தொடங்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, திண்டுக்கல்லை பொறுத்தவரையில் தோல் தொழில் புதியது அல்ல. இப்போது புதிதாக ஒன்று. இன்னும் சுமார் 10,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கூடுதலாக அளிக்கப்படுகின்ற வகையில் பரிசீலிக்கப்படும் திட்டம் இது. ஏற்கெனவே பல ஆயிரம் பேர்களுக்கு இந்தத் தொழிலில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. பின்தங்கிய சமுதாயத்து நண்பர்களும், ஆதி திராவிட சமுதாயத்து நண்பர்களும் இத்தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்; சிறு தொழில் நண்பர்களும் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தத் தொழிலுக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் மத்திய அரசில் இருக்கிற பொதுவசதி நிறுவனம் (காமன் ஃபெசிலிட்டி சென்டர்) எஸ். டி. சி. துணையுடன் இத்திட்டம் இன்னும் ஒன்றிரண்டு மாதங்களுக்குள் தொடங்கப்பட்டு, ஏற்கனவே அங்கே அமைக்கப்பட்டிருக்கிற தொழிலுக்கு உரத்தையும் வலிவையும் தமிழக அரசு ஊட்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 மார்ச் 19

## கப்பலூர் தொழிற்பேட்டையிலுள்ள தொழிற்சாலைகளுக்கு சலுகைகள் வழங்கும் திட்டம்

* வினா எண். 471 திரு என். எஸ். வி. சிந்தன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலத்துக்கு அருகே உள்ள கப்பலூர் தொழிற்பேட்டை உள்ள பகுதி திருமங்கலம் தாலுகாவுடன் சேர்க்கப்பட்டு அங்குள்ள தொழிற்சாலைகளுக்கு பின் தங்கிய பகுதியில் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கான சலுகைகள் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கப்பலூர் தொழிற் பேட்டையின் ஒரு பகுதி, பின்தங்கிய வட்டம் என அறிவிக்கப் பட்ட திருமங்கலம் வட்டத்தில் உள்ளது. அதற்கு மத்திய மூலதன மானியத்திட்டத்தின் கீழ் சலுகைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. மற்றொரு பகுதியான நிலையூர் மாநில அரசால் பின் தங்கி பகுதியாக அறிவிக்கப்பட்டு அங்குள்ள தொழிற்சாலைகளுக்கும் மாநில மூலதன மானியத்திட்டத்தின் கீழ் சலுகைகள் தற் போது வழங்கப்பட்டு வருகின்றன,

## 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி தேர்வுகள்.

* வினா எண் : 472 திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற மேல்நிலை, உயர் நிலைப்பள்ளித் தேர்வுகளில் 100 சதவிகிதம் மாணவர்கள் தேர்வு பெற்ற பள்ளிகள் எவை எவை ?

(ஆ) 30 சதவிகிதத்திற்குக்கீழ் தேர்வு பெற்ற பள்ளிகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை *** பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, இன்றையதினம் 30 சதவீதத்திற்கும் குறைவாக பல பள்ளிகளில் மாணவர்கள் தேர்வு பெற்று வருகிறார்கள். அதற்கான காரணத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவரவர்களே, 30 சதவீதத்திற்கு குறைவாக தேர்வு பெறும் பள்ளிகளில் அந்த மாணவர்களை ஆசிரியர்கள் ஊக்குவிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ள நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். நல்ல முறையில் மாணவர்கள் படித்து, தேர்ச்சி விகிதத்தை அதிகப் படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தப் பிரச்சனையை நாம் அணுகுகிறோம்.

*** [illegible] பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது



1983 மார்ச் 19]

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, 100 சதவீதம் தேர்வு பெற்ற பள்ளிகளுக்கு அரசு ஏதாவது ஊக்க போனஸ் போன்று பரிசுத் தொகை வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சரின் கையொப்பமிட்ட பாராட்டுக் கடிதம் ஒன்று அனுப்புகிறோம். 200 ரூபாய் அளவி லான புத்தகங்கள் அனுப்புகிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்விலே ஒரு சதவீதம் கூட மாணவர்கள் தேறாத நிலைமையில் உள்ள பள்ளிகள் என் னுடைய தொகுதியில் இருக்கின்றன. அதற்குக் காரணம் ஸ்டேட் சீனியாரிட்டி என்பதன்படி தலைமை ஆசிரியர்களைப் போடுகிற போது எங்களுடைய இடத்திற்குத் தெற்குப் பகுதியிலே உள்ள வர்களைக் கொண்டு வந்து போடுகிறார்கள். ஆனால், அவர்கள் அடிக்கடி லீவு போட்டுவிடுகிறார்கள். ஆகையால் ஆசிரியர்கள் இல்லாத நிலைமையில் பள்ளிகள் நடைமுறையில் சரியாக பாடம் போதிக்கப்படாத நிலைமை இருக்கின்றது. இதைப் போக்கு வதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஒரு பெர்சன்ட் கூட மாணவர்கள் தேறாத பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களின் கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில் நாம் அதற்கு விளக்கங்கள் கேட்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி வருகிறோம். ஆசிரியர்களின் லீவு நாட்கள் தற்போது அதிகமாக இருக்கின்ற நிலைமையில் அவர்கள் அவ்வாறு விடுப்பில் செல்வதன் காரணத்தாலும் பள்ளிகள் பாதிக்கப்படும் என்ற அடிப்படையிலே வேலை நாட் களை 200-லிருந்து 220 ஆக அதிகரித்திருக்கிறோம். ஆசிரியர்களை வேலை செய்ய வைக்க வேண்டும் என்பதற்காக அல்ல, பள்ளிக் கூடங்கள் பாதிக்கப்படுகின்ற நிலையிலே அந்தப் பாதிப்பைக் குறைப்பதற்குத்தான் இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதனால் லீவு எடுத்தால் பள்ளிகள் பாதிக்கப்படுகின்ற நிலைமை கொஞ்சம் குறையும்.

திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 விழுக்காட்டிற்குக் குறைவாக மாணவர்கள் தேறிய பள்ளிகளைப் பொறுத்தவரையில் பாடங்கள் வாரி யாகக் கணக்கெடுத்து எந்தெந்தப் பாடங்களில் மாணவர் கள் குறைந்த மதிப்பெண்கள் எடுத்துத் தவறி இருக்கிறார்

கள் என்று கண்டறிந்து அந்த ஆசிரியர்கள் மீது தக்க நடவடிக்கை அரசு எடுக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பார்த்து குறிப்பிட்ட பாடங்களைச் சொல்லித் தந்த ஆசிரியர்கள் யார் என்று பார்த்து கேட்கின்றபோது அவர்கள் சுலபமாக கீழ் வகுப்புகளில் இருக்கின்ற ஆசிரியர்கள் மீது பழியினைச் சுமத்துகிறார்கள். உயர்நிலைப்பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர்களைக் கேட்டால் அவர்கள் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களைச் சொல்கிறார்கள். தொடக்கப்பள்ளி ஆசிரியர்களைக் கேட்டால் பெற்றோர்களைச் சொல்கிறார்கள் இப்படி பழியை ஒருவர் மீது இன்னொருவர் தள்ளிவிடுகின்ற பழக்கம் இருக்கின்றது. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களை வேண்டிக் கேட்டுக்கொள்வது எல்லாம் எந்த வகுப்பில் எந்த ஆசிரியர் பாடங்களை நடத்தினாலும் அந்த வகுப்பில் உள்ள மாணவர்களை உயர்வடையச் செய்யவேண்டும் என்ற பொறுப்பினை தாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம், அந்த வகையிலே அந்தப் பொறுப்பிற்கு பதில் சொல்லவேண்டிய நிலைமையும், கடமையும் தங்களுக்கு இருக்கின்றது என்ற எண்ணத்துடன் கற்றுக் கொடுக்கவேண்டும் என்று நாம் கேட்டுக் கொண்டு வருகிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அதிகப்படியான மாணவர்கள் தேறாத நிலையில் உள்ள பள்ளிகளைப் பார்க்கின்றபோது ஸயன்ஸ், ஃபிசிக்ஸ், மேத்ஸ் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர்களை நியமிப்பதில் கால தாமதம் ஏற்படுவதால்தான் அப்படி ஆசிரியர்கள் இல்லாத குறை இருப்பதன் காரணத்தால்தான் அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. ஆகவே பள்ளி ஆரம்பிக்கின்றபோதே அப்படி ஆசிரியர்கள் இல்லாத இடங்களில் உடனடியாக ஆசிரியர்களை நியமிப்பதற்கு போதிய முயற்சிகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே செய்ய வேண்டிய காரியங்களைப் பொறுத்தவரையில் நாம் விரைவாகச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். ஆனால் இப்படிப்பட்ட குறைகளைச் சொல்லி மாணவர்கள் குறைந்த அளவில் தேர்வு பெறுவதற்கு இதுதான் காரணம் என்ற



வகையில் அவர்கள் தப்பித்துக் கொள்கின்ற வகையிலே இந்தக் காரணங்களை அதிகம் பெரிது படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு எஸ். எஸ். எல். சி. தேர்விலே 110 பள்ளிகளில் 100 சதவீதம் மாணவர்கள் தேறி இருப்பதாக பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட சில பள்ளிகளில் எஸ் எஸ். எல். சி. வகுப்பிற்கு வருவதற்கு முன்பாகவே 9—வது வகுப்பு படிக்கின்றபோதே, கொஞ்சம் குறைவாக மதிப்பெண் பெறுகின்ற அல்லது தேறமாட்டார்கள் என்று அவர்கள் நினைக்கிற மாணவர்களை எஸ். எஸ். எல். சி. தேர்வுக்கு அனுப்பாமல் நிறுத்திவிடுவதாகச் சொல்கிறார்களே, தங்களது பள்ளியில் 100 சதவீதம் மாணவர்கள் தேறி இருக்கிறார்கள் என்ற நல்ல பெயரினை வாங்கவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இப்படிப்பட்ட முறைகள் கையாளப்படுவதாகக் கூறப்படுவது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியானால் இந்தமாதிரி நடைமுறையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஒன்பதாவது வகுப்பில் எல்லோரையும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற நிலை இல்லை. சிலபேர்களை நிறுத்தி வைக்கக்கூடிய ஒரு பழக்கம் அல்லது முறை இருந்துகொண்டிருக்கிறது. அந்த வகையில்தான் அவர்களை நிறுத்துகிறார்கள். மிகவும் மோசமான மாணவர்களை நிறுத்திவிடுகிறார்கள். அதுமட்டுமல்ல. பள்ளிக்கூடங்களில் நடக்கிற பரீட்சையைவிட பொதுத்தேர்வு கடினமானதல்ல. ஏனென்றால் மாநிலம் முழுவதும் நடத்தப்படுகிற பொதுத் தேர்வை கடினமான ஒரு தேர்வாக நாம் நடத்திக்கொண்டிருக்கவில்லை. ஆகவே சாதாரணமாக சராசரியாகப் படிக்கிற எந்த ஒரு மாணவனும் தேர்வு பெறக்கூடிய நிலையில்தான் அந்தத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது.

### அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழியாகத் தமிழை நடைமுறைப்படுத்தும் திட்டம்.

* வினா எண். 473—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழியாகத் தமிழை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

[1983 மார்ச் 19

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழை மாநில ஆட்சி
மொழியாக்கும் நோக்கம் கொண்ட தமிழ்நாடு ஆட்சி
மொழிச் சட்டம், தமிழ்நாடு சட்ட மன்றத்தல் 1956 ஆம்
ஆண்டு இயற்றப்பட்டு, அதன் வழியாக தமிழை ஆட்சி
மொழியாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. ஆயி
னும், கடந்த 25 ஆண்டுகளில் இம்முயற்சியில் எதர்
பார்த்த அளவிற்கு முன்னேற்றம் காணப்படவில்லை. ஆகவே
மூவாண்டு முனைப்புத் திட்டம் என்ற காலக் கட்டத்திட்ட
மொன்றை கொணர்ந்து ஆட்சிமொழித் திட்டத்தை திவிரப்
படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இம் மூவாண்டு
முனைப்புத் திட்டத்தின் முதல் ஆண்டில் 17 துறைகளிலும்
இரண்டாம் ஆண்டில் எஞ்சிய அனைத்து துறைகளிலும்,
மூன்றாம் ஆண்டு, இறுதி கட்டமாக தலைமைச் செயலகத்
துறைகளிலும் ஆட்சிமொழித் திட்டத்தைச் செயல்படுத்த தீவிர
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்
களின் மூலம் விரைவான முன்னேற்றம் காண முடியும்
என்று அரசு நம்புகிறது.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, தமிழை ஆட்சி
மொழியாக்குவதற்கு ஒரு திட்டம் அரசுக்கு இருக்கிறது
என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது தனி
யார் பள்ளிகளில் ஆங்கிலத்திற்குத்தான் முன் உரிமை தந்து
அவர்கள்தான் விழுக்காடு அதிகமாகப் பெற்று தேர்வு
பெற்றிருக்கிறார்கள். நாம் தமிழ் பாடத்தை கட்டாய பாட
மாக வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே,
அங்கீகாரம் பெற்ற எல்லாப் பள்ளிகளிலும் தமிழை வைக்க
வேண்டும் என்றுதான் நாம் சொல்லி வருகிறோம். தமிழை
கட்டாயப் பாடமாக்குவதென்றால் சிறுபான்மை இனத்தைச்
சார்ந்தவர்கள் மீது நாம் கட்டாயமாக திணிக்க இயலாது,
இப்போதுள்ள இருமொழி திட்டப்படி. ஆகவே தமிழை
தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழ்படிப்பதற்கு எல்லா
வகைகளையும் செய்திருக்கிறோம். இந்தக் கேள்வி ஆட்சி
மொழி பற்றியது. அந்த அடிப்படையில் துணைக் கேள்வி
கள் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, ஆட்சிமொழித்
திட்டத்தை அமல்படுத்தும்போது ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி
யைப் போட்டு அவர்கள் எல்லா அலுவலகங்களுக்கும் சென்று
பொதுமக்களோடு தொடர்பு கொள்ளக்கூடிய கடிதப்போக்கு
வரத்துக்கள் தமிழில் இருக்க வேண்டும், இப்படித்தான்



1983 மார்ச் 19]

இருக்கவேண்டும் என்றெல்லாம் செய்யத்தக்க விதத்தில உத்தர
விட்டார்கள். அவர்கள் எல்லாவற்றையும் பரிசீலித்தார்கள்.
அதுபோன்று ஒரு அதிகாரியை இன்று நியமித்து அதற்கான
நடவடிக்கைகளை எடுக்க அரசு ஏதாவது திட்டம் வகுத்
திருக்கிறதா ? பொது மக்களோடு தொடர்பு கொள்ளக்
கூடிய கடிதங்கள்கூட இப்போது ஆங்கிலத்தில்தான் எழுதப்
பட்டு வருகின்றன. அதையாவது நிறுத்த வேண்டும் என்று
அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம்: தலைவர் அவர்களே,
இந்த மூவாண்டு முனைபபுத் திட்டம் வருவதற்கு முன்பு
பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன என்று கருதித்தான்
நாம் அதிகாரிகளை கட்டாயப்படுத்தும் வகையில் மூவாண்டு
முனைப்புத் திட்டம் என்றதொரு தட்டத்தைத் தீட்டி 1981–
82-ல் இருந்து அதைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வரு
கிறோம். அதில் கணிசமான அளவிற்கு நல்ல முன்னேற்றம்,
இதற்கு முன்னால் இருந்ததைவிட நல்ல முன்னேற்றம் ஏற்
பட்டிருக்கிறது. நமது தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்
இதற்கு முன்பு இருந்தவர்களைவிட அதிகமான அளவிற்கு
மாவட்ட அலுவலகங்களுக்குச் சென்று மாவட்டங்களுக்கு
சுற்றுப்பயணம் செய்து இதுபற்றிய கண்காணிப்பு வேலைகள்
செய்து இந்த ஆட்சிமொழித் திட்டத்தை வெற்றிகரமாகச்
செயல்படுத்தவேண்டும் என்று உழைத்து வருகிறார்கள் ஆகவே,
இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது
போன்ற நிகழ்வுகள் இருக்குமானால் அப்படி குறிப்பிட்ட
நிகழ்ச்சி பற்றி புகார் மாதிரி என்னிடம் சொன்
னால் நாம் அதைப்பற்றிக் கேட்பதற்கும் அப்படி கேட்கிற
போது அந்த அதிகாரி மேற்கொண்டு அந்த தவறைச் செய்
யாமல் இருக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படும். நாம் பொது
வாகப் பேசிக் கொண்டிருந்தால் குறிப்பிட்ட தவறு செய்கிற
அதிகாரிகளை நாம் கேட்கமுடியாத நிலை ஏற்படுகிறது.
அதனால்தான் இப்படிப்பட்ட தவறுகள் தொடர்ந்து நடை
பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டப்படி இவர்கள்
இப்படி அனுப்பியிருக்கக்கூடாது, இன்னார் அப்படி அனுப்பி
யிருக்கிறார் என்ற தகவலை அனுப்பினால் யார் தெரிவித்
தார் என்று வெளியே சொல்லாமல் ஆனால் அந்த அதி
காரியை விசாரித்து தக்க நடவடிக்கைகளை நாம் எடுக்
கலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களில்
தமிழை ஆட்சி மொழியாக ஆக்கி, அதை நல்ல முறையில்

[1983 மார்ச் 19

முனைப்புடன் செயல்படுத்துவதற்காக, தமிழிலேயே கோப்புகளைத் தயாரிக்கும் அரசு ஊழியர்களுக்கு பரிசுத் திட்டம் ஏதேனும் அமல்படுத்தப்படுகிறதா? அப்படி பரிசுத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது என்று சொன்னால், அது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்று எடுத்துக்கொள்ளாமல், ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு துறைக்கும் அந்தப் பரிசு கொடுப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பரிசுத் திட்டம் அமல்படுத்துகின்ற நிலைமையெல்லாம் மீறிப் போன நிலையில் நாம் இன்றைக்கு இருக்கிறோம். காரணம், 25 ஆண்டுகளுக்கு மேலாக இதை நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஆகவே, பரிசு தரும் நிலை இல்லை. அதற்கு மாறாக இதை நடைமுறைப்படுத்தாத நிலையில் இருக்கும் அரசு ஊழியர்கள்மீது கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்கும் நிலையில் அரசு இப்போது இருக்கிறது.

## உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர், மாணவர் விகிதாச்சாரம் குறித்த கோத்தாரி கமிஷன் பரிந்துரைகள்.

* வினா எண். 474—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தாரி கமிஷன் பரிந்துரைகளின்படி உயர்நிலைப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரத்தை கடைப்பிடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உயர்நிலைப் பள்ளிகளில் 8-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்புவரை ஆசிரியர்—மாணவர் விகிதாசாரம் என்று குறிப்பிட்ட எந்த விகிதத்தையும் கடைப்பிடிக்கவேண்டும் என்று கோத்தாரி கமிஷன் தனது பரிந்துரைகளில் எதிலும் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. 1982-83-ல் உள்ள நிலவரப்படி, தமிழகத்திலுள்ள அனைத்து உயர்நிலைப்பள்ளிகளுக்குமான ஆசிரியர்—மாணவர் விகிதம் (அதாவது மொத்த மாணவர் எண்ணிக்கையை மொத்த ஆசிரியர் எண்ணிக்கையால் வகுத்தால் வரும் எண்) 24 ஆக இருந்தது. மேல்நிலைப் பள்ளிகளில் அது 27 ஆக இருந்தது. மாநிலம் முழுமைக்குமான இந்தக்



1983 மார்ச் 19]

கணக்கு ஒரு சராசரிதான். ஆகையால் ஆங்காங்கு சில பல உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் இந்த விகிதத்துக்கு அதிகமாகவே ஆசிரியர் மாணவர் விகிதம் இருக்கலாம். அதனை உடனடியாக நாம் விரும்பும் அளவுக்கு குறைக்க வேண்டுமானால் தேவைப்படும் எண்ணிக்கையில் கூடுதல் ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக ஏற்படுத்த அரசு நிதி நிலை இடந்தராது.

## நடுநிலைப்பள்ளிகளில் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி.

* வினா எண் 475 திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடுநிலைப்பள்ளிகளில் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கட்கு MELT (Modern English Language Teaching) பயிற்சி அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேர் இதனால் பயனடைந்துள்ளனர்?

(இ) இல்லையெனில் இப்பயிற்சியளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) 31-12-82 நிலவரப்படி 19,221 பேர் பயனடைந்துள்ளனர்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பயிற்சி அளிக்கப்படுகிற இந்த ஆங்கிலப் பயிற்சித் திட்டத்தால் நம்முடைய அரசுக்கு எவ்வளவு செலவாகிறது? மத்திய அரசிலிருந்து ஏதேனும் மானியங்கள் நமக்கு வழங்கப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட அந்த விவரம் இங்கே இல்லை. ஆனால் 6 இடங்களிலோ அல்லது 7 இடங்களிலோ நாம் இந்தப் பயிற்சி வகுப்புகளை நடத்திவருகிறோம். பயிற்சி பெற வேண்டியவர்களை மாவட்ட கல்வி அலுவலரும், மகளிர் பள்ளி ஆய்வாளரும் தேர்ந்தெடுத்து அனுப்பிக்கொண்டு இருக்கிறார்கள். இது இடைநிலை ஆசிரியர்கள், பி.டி. ஆசிரியர்கள் உள்பட, இருசாராருக்கும் ஒன்றாக ஒரேவிதமான. பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'மெல்ட்' சிஸ்டத்தில் தற்போது பயிற்சி பெற்று வரக்கூடியவர்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்கிப் பயிற்சி அளிக்க சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இதே அளவிலேதான் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மேற்கொண்டு அந்த ஆங்கிலத்தைச் சொல்லித்தருவதிலே ஏதாவது சிறப்பான பயிற்சி தரவேண்டும் என்று கருதுகிறபோது நாம் என்.சி.இ.ஆர்,டி. நிறுவனத்தின் மூலமாக நாம் சில சிறப்புப் பயிற்சிகளைத் தந்து வருகிறோம். தேவைப்படுகிறபோது பல புதிய பயிற்சிகளைத் தர இந்த அரசு விரும்புகிறது.

### கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கான நடைமுறை நிதி உதவி

வினா எண் 476 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு நடைமுறை நிதி உதவியை அதிகரிக்க வேண்டுமென்று மத்திய அரசை தமிழக அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரிசர்வ் வங்கி, தறிகளின் அடிப்படையில் நடைமுறை நிதி வழங்கி வருகிறது. இதனை உயர்த்தித் தருமாறு, மத்திய





அரசை, தமிழக அரசு கோரியுள்ளதை தொடர்ந்து ரிசர்வ் வங்கி, கூட்டுறவு இயக்கத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் நடைமுறை நிதியுதவியை கீழ்க்காணும் முறையில் உயர்த்தியுள்ளது.—

| | முந்தைய தறி ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு. | இப்பொழுது அமுலில் உள்ள உயர்த்தப்பட்ட அளவு. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பருத்தி தறி | 2,000 | 2,000 |
| பட்டுத் தறி | 2,500 | 3,500 |
| பாலியஸ்டர் | 5,000 | 10,000 |

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது கொடுக்கப்பட்டு வரும் நடைமுறை நிதி உதவி பற்றிக் கூறியிருக்கிறார்கள். நடைமுறையில் இருக்கும் சங்கங்களின் கடந்த ஆண்டு உற்பத்தியின் அடிப்படையில் 4-ல் ஒரு பங்குதான் தற்போது கடன்—அதாவது கேஷ்-கிரிடிட்—வழங்கப்படும். அதை உயர்த்துவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நடைமுறை நிதிஉதவி பற்றித்தான் கேட்டு இருக்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். அதை உயர்த்தித் தருமாறு மத்திய அரசை மாநில அரசு இப்போது வற்புறுத்தி வருகிறது. பருத்தித் தறிக்கு ரூ. 2,000 என்றிருப்பதை ரூ 4,500 என்றும் பட்டுத்தறிக்கு ரூ. 3,500 என்பதை ரூ. 10,000 என்றும், பாலிஸ்டருக்கு ரூ. 10,000 என்பதை ரூ. 13,000 என்றும் உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டு இருக்கிறது.

(முற்பகல் 9.30)

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கைத்தறி சம்மந்தப்பட்ட வரையிலும் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியிலிருந்து கூடுதல் நிதி பெறுவதற்கு மத்திய அரசைக் கேட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த நிதி ஒதுக்கீடு எப்போதிருந்து செயலுக்கு வருமென்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் இதை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதற்கு அவர்கள் அனுமதி தந்தால், அந்த அடிப்படையிலே நாம் நிதி பெறமுடியும்.

## சென்னை கடற்கரையை ஒட்டி போடப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை

*வினா எண் 477 திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரையை ஒட்டி போடப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை இ.ஐ.டி. பாரி கம்பெனிக்குப் பக்கத்தில் எண்ணூருக்கு அருகில் கடலரிப்பு காரணமாக துண்டிக்கப் பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை சீர்படுத்த அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கடல் அரிப்பு ஏற்பட்ட பகுதியில் தற்காலிகமாக சாதாரண வண்டிகள் செல்வதற்கு ரூ.17,500 செலவில் கிராவல் போடப்பட்டு அச்சாலையில் வாகன போக்குவரத்து தற்சமயம் திரும்ப விடப்பட்டுள்ளது. அச்சாலையை முன்பிருந்த நிலைக்கு கொண்டுவருவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி திருவொற்றியூர் தொகுதியைச் சேர்ந்த இடம். தொழிற்சாலைகள் நிறைந்த இடம். பெரிய வாகனங்கள் அடிக்கடி செல்லக்கூடிய வாய்ப்புள்ள இடம். இந்தப் பகுதி ஓராண்டுக்கு முன்பாக கடலரிப்பால் பாதிக்கப்பட்டிருந்து. நான் கேள்வி கேட்டதற்குப் பிறகுதான், இப்போது அங்கே கிராவல் போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு தமிழகம் முழுவதும் கன்னியாகுமரியிலிருந்து கடற்கரையோரமாக நெடுஞ்சாலை போடவேண்டுமென்ற காலகட்டத்தில் இருக்கும் நாம், இப்படி ஓராண்டு காலமாக அங்கே ரோடு போடாமல் இருப்பது சரிதானா ? எனவே, உடனடியாக நட-



வடிக்கை எடுத்து, அந்த ரோடிற்கு கிராவல் மட்டும் போடாமல் நல்லமுறையிலே ரோடு போடுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை எண்ணூருக்குப் பக்கத்தில் ஈ. ஐ. டி. பாரி கம்பெனிக்கு பக்கத்தில் அமைந்திருக்கக்கூடிய நெடுஞ்சாலையாகும். அடிக்கடி கடலரிப்பு ஏற்படுவதன் மூலம் அந்த ரோடு பழுது அடைந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த அரிப்பைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், நாம் நிரந்தரமான தடுப்பு சுவர் ஒன்றை இரண்டு பக்கங்களிலும் போட வேண்டும். அப்படி கட்ட வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஏறத்தாழ 20 இலட்சத்திற்கு மேல் செலவாகும் என்று மதிப்பீடு தரப்பட்டிருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. கடந்த 1977-78-ல் இந்த ரோடில் அரிப்பு ஏற்பட்டது. இப்போது சாதாரண வண்டிகள் செல்வதற்காக இதற்கு ரூ. 17,500 செலவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, நிரந்தரமான முறையில் பரிகாரம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, கடலரிப்பால் தான் இந்த இடம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை. அந்த ஒரு இடம் மட்டுமல்ல. இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலே இருந்து ஆரம்பித்து, திருவொற்றியூர், எண்ணூர், புலிகட் வரையிலும் நீளமாக, இது செல்கிறது. கடலரிப்பைத் தடுப்பதற்காக 20 இலட்சம் ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இந்த கடலரிப்பால் அந்தப் பகுதியிலே உள்ள ஐஸ் பாக்டரி, பிரான் பிராசசிங் பாக்டரி, மீனவர்கள் வீடுகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதைத் தடுப்பதற்கு இதற்கு முன்னுரிமை தந்து, தடுப்புச் சுவரைக்கட்டி கடலரிப்பைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றையத்தினம் கடலரிப்பால் மீனவர்களுடைய வீடுகளும், அதை ஒட்டியுள்ள பாக்டரிகளும் திடீர் திடீரென பாதிக்கப்படுகின்றது. கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னாலே, நம்முடைய பட்டினப்பாக்கத்திலே கடலரிப்பு ஏற்பட்டு

அங்குள்ள ரோடு இன்றைய்த்தினம் சரியான முறையிலே இல்லாமல், அதற்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படி திடீர் திடீரென்று கடலரிப்பு ஏற்படுவதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடுப்புச்சுவர் ஏற்படுத்தவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதைக் கட்டுவதற்கு மத்திய அரசிடம் இருந்து கடன் பெற்றோ, அல்லது நிதி உதவி பெற்றோ, உடனடியாக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கின்ற சாந்தோம் பகுதியிலே உள்ள பட்டினப்பாக்கத்திலேகூட இப்படிப்பட்ட கடலரிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இவைகளையெல்லாம் நிரந்தரமாக தடுப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு இன்றையதினம் அரசிடம் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன.

*வினா எண் 478 :

நமது மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள்

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் (N.H Roads) எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) எண்ணிக்கை அதிகரித்துக்கொடுக்க மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

(இ) கடலூர்—நாகப்பட்டினம் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) எட்டு.

(ஆ) எண்ணிக்கையை அதிகரிக்க மத்திய அரசு தொடர்ந்து வற்புறுத்தப்படுகிறது.





(இ) கடலூர்—நாகப்பட்டினம் நெடுஞ்சாலை, கிழக்கு கடற்கரை சாலையின் ஒரு பகுதியாகும். கிழக்கு கடற்கரைச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த கடலூர் நாகப்பட்டினம் நெடுஞ்சாலை முழுவதும் கோவை, திருச்சி, உதகமண்டலம், தஞ்சாவூர், வழியாகச் செல்கிறது. அதை கருத்தில் கொண்டு இதை விரைவில் தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஏற்கனவே 16 சாலைகளை மாநில நெடுஞ்சாலைகளாக இருப்பதை தேசிய நெடுஞ்சாலையாக தரத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே இப்பொழுது கிழக்கு கடற்கரை சாலையைப் பொறுத்தவரையில் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பாக்கி இருக்கக்கூடிய சாலைகளுக்கும் இதுபோன்ற நிலையை ஏற்படுத்தி தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டும் என்ற செயற்குறிப்பு கடந்த 6, 7 ஆண்டுகளாக மத்திய அரசின் நிலுவையில் இருந்து வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகள் 8 இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த தேசிய நெடுஞ்சாலைகளுக்கு மத்திய அரசிடமிருந்து நமக்கு வழங்கப்படும்போது ஏதாவது விதிமுறைகள் அனுசரித்து ஆண்டுக்கு இத்தனை கிலோ மீட்டர் அல்லது இத்தனை சாலைகள் என்று விதிமுறைகளை நமக்கு மத்திய அரசு வழங்கியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகாலமாக ஒரு கிலோ மீட்டர் தூரம் கூட தேசிய நெடுஞ்சாலையாக மத்திய அரசு கொடுக்கவில்லை. ஆனால் மாநில அரசு 16 மாநில நெடுஞ்சாலையாக இருப்பதை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை மத்திய அரசுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இதுவரையில் அவர்கள் கொடுப்பதாக இல்லை, ஆகவே அப்படிப்பட்ட நிலையில் தான் இருந்துகொண்டிருக்கிறோம். தமிழகத்தில் உள்ள 8 தேசிய நெடுஞ்சாலைகளுக்கு அதன் பராமரிப்புக்குத்தான் மத்திய அரசு

பணம் தருகிறது. புதிய சாலைகள் போடுவதற்கு பணம் தரவில்லை. இப்போது 4, 5, 7, 7ஏ, 45, 46, 47, 49 ஆகிய 8 தேசிய நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. இவைகளில் ஒரு கிலோ மீட்டர் தூரம் கூட கடந்த 5 ஆண்டுகளாக நீட்டப்படவில்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்திலிருந்து அந்த மைசூர் செல்லும் பாதை ஒரு துறைமுகத்திலிருந்து மற்ற மாநிலத்திற்கு செல்கிறது. அதே போல் தமிழ் நாட்டில் 4 மாவட்ட தலை நகரங்களை இணைக்கிற சாலையாக அது இருக்கிறது. இப்படி ஒரு துறைமுகத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு செல்கின்ற சாலையாகவும், 4 மாவட்ட தலைநகரங்களை இணைக்கிற சாலையாகவும் இருப்பதால் அந்த சாலையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்துவதற்கு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி அடுத்த ஆண்டுகளில் அதைநிறைவேற்ற அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கூறுகின்ற காரணம் எல்லாம் நிதி வசதி போதவில்லை என்றும் இரண்டாவது லோ பிரையாரட்டி இப்படி எல்லாம் சொல்லித்தான் தட்டிக்கழிகிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால் நம்மை பொறுத்த வரையில் இன்று இருக்கக்கூடிய மாநில நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக தரத்தை உயர்த்தியாக வேண்டும். ஆகவே அப்படிப்பட்ட நிலையில் தான் நாம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நெடுஞ்சாலைகளைதேசியநெடுஞ்சாலையாக தரத்தை உயர்த்தவேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தெரிவித்தார்கள். மற்றும் மத்திய அரசுக்கு முறையீடுகளை தொடர்ந்து செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்கள்; இந்த மாநில நெடுஞ்சாலைகளில் அதிகமான லாரி, பஸ் போக்குவரத்து ஏற்பட்டு அதிகமான விபத்துகள் ஏற்பட்டு கொண்டிருக்கிற காரணத்தினால் இந்த மாநில நெடுஞ்சாலைகளை அகலப்படுத்துவதற்கு திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நெடுஞ்சாலையைப் பொறுத்த வரையில் இப்போது எல்லாம் two lane traffic என்று சொல்லக் கூடிய இரண்டு வழி பாதைகள் இருக்கின்றன. ஆனால் ஒரு சில இடங்களில் சிங்கள் ரோடு என்று சொல்கிற சிங்கள் லேன் ஒரு வழிப்பாதை அளவுக்கு சாலைகள் இருக்கின்றன. அவைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.





ஆனாலும் நகராட்சிப்பகுதிகளில் போகக்கூடிய மாநில நெடுஞ்சாலைகளை எதுவாக இருந்தாலும் end to end என்ற முறையில் மண் சாலையாக இல்லாமல் முழுவதும் தார் சாலையாக மாற்றவேண்டும் என்று நாம் நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறோம்.

மதுரை மாநகர் வழியே ஓடும் கிருதுமால் நதியைச் சீர் செய்யும் திட்டம்

திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில் முக்கியப் பகுதிகளான பேருந்து நிலையம். சுப்பிரமணியபுரம் வழியாக ஓடும் கிருதுமால் நதியை சீர்செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எல்லிஸ் நகர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பைபாஸ் ரோட்டிலிருந்து திடீர் நகர் ரயில்வே பாலம் வரை உள்ள கிருதுமால் நதியின் இரு புறங்களிலும் தடுப்புச் சுவர்களும் அடிப்பாகத்தில் தளமும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தாரால் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ரயில்வே மேம்பாலத்திலிருந்து சுப்பிரமணியபுரம் மேம்பாலம் வரை தடுப்புச் சுவர் கட்டுவதற்கான நடவடிக்கையை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்த கிருதுமால் நதியில் பல அரசியல் கட்சிகள்—அந்த நதியை ஆக்கிரமித்து—மன்றங்களை ஏற்படுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் பல குடிசைகளைக் கட்டி வாடகைக்கு விடுகிறார்கள், மர்ம பங்களாக்கள் எல்லாம்கூட இருக்கின்றன, எனவே, அவைகளையெல்லாம் அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இப்போது எல்லாம் ஆக்கிரமிப்பு என்பது அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த நிலைப்பொருளாக இருந்து கொண்டிருக்கிற நிலைமை எல்லாம் இருக்கிறது. ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமென்றால் அரசியல் கட்சிகள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

பல்வேறு இடங்களில் மன்றங்களைப் போடுகிறோம். இப்படி மன்றங்களைப் போடுவதன் மூலமாக It is an hindrance to the public and also for the Transport vehicles என்ற முறையிலே போக்குவரத்து ஸ்தம்பிக்கிற அளவுக்குக்கூட பல்வேறு இடங்களில் கொடிக்கம்பங்கள் நடப்படுகின்றன. அவைகளைத் தொடுக்கின்ற நேரத்திலே பிரஸ்டிஜியஸ் பைட் என்ற முறையிலே வந்து விடுகிறது. ஆகவே, இவைகளையெல்லாம் அகற்ற வேண்டுமென்று சொன்னால் அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பு தேவை.

திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது கிருதுமால் நதியின் இருபுறங்களிலும் தடுப்புச் சுவர்கள் கட்டுவதாகச் சொன்னார்கள். எப்போது அது செயலுக்கு வரும்? எவ்வளவு மதிப்பீட்டில் செய்யப்படும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே கிருதுமால் நதியின் இரு புறங்களிலும் நிரந்தரமாக தடுப்புச் சுவர் கட்டுவதற்கு 8,76,400 ரூபாய் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது எவ்வளவு சீக்கிரமாக நடவடிக்கையெடுக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கிருதுமால் நதி— நதி என்ற பெயரில்தான் இருக்கிறதே தவிர அது ஒரு சிறிய வாய்க்கால்தான்— கிட்டத்தட்ட 10 அடி அகலத்திலுள்ள ஒரு சிறிய வாய்க்கால், அது மதுரை நகரத்தின் ஊடே போவதால் சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. ஆகவே அந்த மாற்றியமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாற்றியமைப்பதற்கு ஏற்பாடுகள் இருப்பதாக என்னுடைய குறிப்புகளில் தரவில்லை. அப்படிப்பட்ட திட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை.

### கன்னியாகுமரி நகரியத்தை நகரசபையாக்கும் திட்டம்.

* வினா எண் 480— திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி நகரியத்தை நகரசபையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



மாண்புமிகு திரு ப. குந்தைவேலு: இல்லை.

திரு சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி டவுன்ஷிப் பொறுத்த வரையிலே அதனுடைய ஆண்டு வருமானம் ஏறத்தாழ 5 இலட்ச ரூபாய்க்குப் பக்கத்தில் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அங்கே பணிகளை நிறைவேற்ற போதிய ஊழியர்கள் இல்லை என்று அரசுக்குப் பல தடவைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மாநிலத் தலைமைச் செயலகத்திற்கு ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள் அண்மையிலேகூட அதற்காக ஒரு மாஸ்டர் பிளான் தயார் செய்து 18 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டங்களைச் செயல்படுந்த போதிய அதிகாரிகள் இல்லாததால் அந்தத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பதை அரசு அறியுமா? ஏறத்தாழ மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அனுப்பி ஒரு ஆண்டு ஆகியும்கூட அதிகாரிகள் சாங்ஷன் செய்யப்படவில்லையென்பதை அரசு அறியுமா? இதுபோன்று காலதாமதம் ஏற்படுவதால் போதிய அதிகாரிகளை நியமிக்கவேண்டும் என்பது ஒன்று, இன்னொன்று இதை அப்கிரேட் செய்து தேவையான அதிகாரிகளை நியமித்து கன்னியாகுமரி டவுன்ஷிப்பின் தரத்தை உயர்த்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா

மாண்புமிகு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஒரு பஞ்சாயத்து நகரியம். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு எடுப்பு அடிப்படையில் 14,087 பேர்கள் மக்கள் தொகை இருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதனுடைய ஆண்டு வருமானம் 3 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் ஆகவே குறைந்த பட்சம் தேவையான ஒரு மூன்றாம் நிலை நகராட்சிக்கு தேவை என்று சொன்னால் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு மட்டுமே 6.50 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதனாலே தான் தரத்தை உயர்த்தாமலே அதே நேரத்தில் நகரியத்தின் அழகைப் பாதுகாக்கவும் பயணிகளைக் கவருவதற்கான வகையில் அந்த நகரியம் சீர்திருத்தப்பட வேண்டுமென்பதற்காக சுற்றுலா வாரியம் மூலமாக அது எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல் சுற்றுலா வாரியத்தின் மூலமாக 18 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள்: ஆனால் அதைச் செயல் படுத்தப் போதிய அதிகாரிகள் இல்லை என்ற காரணத்தாலே அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் அது சாங்ஷன் செய்யப்படாமல் இருக்கிறது என்பதை அரசு அறியுமா? கூடுதல் ஊழியர்களை நியமித்து அரசு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே தேவையின் அடிப்படையில் எவ்வளவு பணியாளர்கள் தேவையோ அதை அறிந்து அதற்கான உத்தரவு எவ்வளவு சீக்கிரத்தில் வழங்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் வழங்கப்படும்.

## துறையூர் நகராட்சி தரம் உயர்த்தும் திட்டம்

* வினா எண் 481—திரு வெ. அரங்கராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) திருச்சி மாவட்டம் துறையூர் நகராட்சியை முதல் நிலை நகராட்சியாக உயர்த்த அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) துறையூர் நகராட்சியை முதல்நிலை நகராட்சியாக உயர்த்தும் கருத்து ஏதும் அரசிற்கு வரவில்லை. மேலும்தற்போது துறையூர் நகராட்சி மூன்றாம் நிலை நகராட்சியாக உள்ளது. ஆகையால் துறையூர் நகராட்சியினை உயர்த்துவதனால் அதனை இரண்டாம்நிலை நகராட்சியாக உயர்த்த இயலுமேயன்றி முதல்நிலைக்கு உயர்த்த இயலாது.

திரு. வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, இந்த நகராட்சியினுடைய வருமானம் உயர்ந்திருக்கிற காரணத்தால் மூன்றாம் நிலையில் இருப்பதை இரண்டாம் நிலை நகராட்சியாகவாது உயர்த்த இந்த ஆண்டே அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது பரிசீலனை செய்யப்படும்.



## மாவட்ட தலைநகரங்களில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதி அமைக்கும் திட்டம்.

* வினா எண் 482— திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் பணிபுரியும் பெண்களுக்கான விடுதி அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் மதுரையில் அவ்விடுதி எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தற்போது 6 பணிபுரியும் பெண்கள் விடுதிகள், அரசினாலும், 17 விடுதிகள் தனியாராலும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற பெண்கள் விடுதிகள் எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளுமாறு எல்லா மாவட்ட ஆட்சியாளர்களையும் அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

(ஆ) பணிபுரியும் பெண்கள் விடுதி ஒன்று மதுரையில் 5-2-81ல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் இட்படிப்பட்ட பெண்கள் விடுதிகளை ஏற்படுத்த ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திண்டுக்கல் போன்ற நகரங்களில் ஆட்சித் தலைவர் அலுவலகத்தைத் தவிர மற்ற மாவட்ட தலைமை அலுவலகங்கள் அத்தனையும் இருக்கின்றன. திண்டுக்கல்லில் ஒரு பெண்கள் கல்லூரியும், ஐந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. மாவட்ட தலைநகராக இருக்கிற சூழ்நிலையில் பெண்கள் விடுதியை திண்டுக்கல்லில் அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே 1982- 83-ல் மத்திய அரசிற்கு மாநில அரசு ஒன்பது பெண்கள் விடுதியைக் கட்டவேண்டுமென்று பரிந்துரை செய்து அனுப்பியுள்ளது. அதன்பேரில் இலாகாவும் நிதிநிலைக் குழுவும் இதை நல்ல முறையில் ஆய்வுசெய்து மாவட்டத்திலுள்ள பல்வேறு மாவட்டத்

தலைநகரங்களிலும் மற்ற நகரங்களிலும் குறைந்தபட்சம் 30 விடுதிகளையாவது அமைத்து அதிலே பெண்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்ற அடிப்படையில் மாநில சமூகநலவாரியம் கூட தனியார் நிறுவனங்களை அணுகி விடுதிகளைக் கட்ட முயற்சியை மேற்கொண்டுள்ளது. மாவட்ட ஆட்சியாளர்கள் நடவடிக்கையை மேற்கொண்டு விண்ணப்பங்களை பெறவேண்டியவர்களிடம் பெற்று அவைகளை சமூகநல இயக்குநருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்ற அறிக்கையை தலைமைச் செயலாளர் அவர்கள் அனுப்பியுள்ளார்கள். மாவட்ட ஆட்சியாளர்கள் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு அனுப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். திண்டுக்கல்லில் பெண்கள் விடுதி அமைக்கப்படுமா என்ற கேள்வியை உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார். 30 விடுதிகள் அமைக்கப்படுகிறபோது அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது தனியார் நிறுவனங்களும் பெண்கள் விடுதியை கட்டவிருக்கின்றன என்ற விவரத்தைத் தெரிவித்தார்கள். அப்படி அவர்கள் அந்த விடுதிகளை அமைக்கிறபோது அவர்களுக்கு அரசு ஏதாவது உதவிகளை செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, மொத்த மதிப்பீட்டில் 75 சதவீதம் மத்திய அரசும், 15 சதவீதம் அல்லது 35 ஆயிரம் ரூபாய் மாநில அரசும் மானியமாகக் கொடுத்து, 10 சதவீதம் தனியார் நிறுவனம் ஏற்றுக்கொண்டு பெண்கள் விடுதியை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. தி. கா. நல்லப்பன் ; தலைவர் அவர்களே, இந்த விடுதிகளைக் கட்டுகிறபோது பணிபுரியும் பெண்களுக்காக என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விடுதிகளில் அரசு வேலைகளில் பணிபுரியும் பெண்கள் மட்டிலும் அனுமதிக்கப்படுவார்களா அல்லது தனியார் நிறுவனங்களில், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களும் இதில் தங்கலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே பெரும்பாலும் அரசு அலுவலகங்களில் பணிபுரிகிற திருமணம் ஆகாத பெண்கள், விதவைகள் ஆகியவர்களின் பாதுகாப்பிற்காக பெண்கள் விடுதிகள் அமைக்கப்படுகின்றன. தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் தங்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களும் இந்த தனியார் பெண்கள் விடுதியை அணுகினால் அவர்களுக்கும் கண்டிப்பாக சலுகைகள் அளிக்கப்படும்.





(முற்பகல் 9—50)

திரு கு. முத்து கிருஷ்ணன் ; தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் பெண்கள் பணி புரிவது என்பது, 10 ஆண்டுகளுடைய கணக்கை டுத்துப்பார்த்தால், இப்பொழுது மிகவும் கூடுதலாகப் பெண்கள் பணி புரிகிறார்கள். அவர்கள் உண்மையிலே வெளியிலேயிருந்து தினசரி, பணியிடத்திற்கு வந்து வேலை செய்து திரும்பிச் செல்லும் நேரம் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நேரம். இந்த அரசு பெண்களுக்குப் பல சலுகைகள் அளித்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் பணிபுரியக்கூடிய அந்தப் பெண்கள் அங்கேயே தங்கி இருக்க உணவு வசதியோடு கூடிய விடுதிகளை, தலைநகரங்களிலே அமைத்துத் தர அரசு ஆவண செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரைக்கும் 9 விடுதிகள் இருக்கின்றன இன்னும் 30 விடுதிகளை ஆரம்பிப்பதற்காகத்தான் அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது.

## நியாயவிலையில் இட்டிலி, தோசை வழங்க சிற்றுண்டி சாலைகள் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 483—திரு. செ. செம்மலை, திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) நியாய விலையில் இட்லி, தோசை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ) விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழ், அவர்களைக் கொண்டு உணவு வகைகளைத் தயாரித்துப் மலிவு விலையில்

பொதுமக்களுக்கு வினியோகிக்கும் சிற்றுண்டி சாலைகள் அமைக்கும் திட்டம் ஜனவரி 1983-ல் துவக்கப்பட்டு சென்னை நகரில் தற்சமயம் 8 இடங்களில் நடைப்பெற்று வருகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலிவு விலையிலே இட்லி, தோசை வழங்குகின்ற இந்தக் கடைகள் 8 இடங்களில் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச் சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சென்னையில் இந்த 8 இடங்களில் ஒரு நாளைக்கு எவ்வளவு வியாபாரம் நடக்கிற கிறது. மேலும், மாவட்டங்களுக்கு அதை விஸ்தரிக்க அரசாங்கத் திட்டம் ஆலோசனை உள்ளதா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் எவ்வளவு வியா பாரம் நடைபெறுகின்றது என்பதைப் பற்றிய குறிப்பு எனக்குக் கொடுக்கப்படவில்லை. தமிழகத்தில் 60 இடங்களில் ஆரம்பிக்க வேண்டுமென்று சென்னையில் 20 இடங்களில், தஞ்சை திருச்சி கோயம்பத்தூர், சேலம் போன்ற மாவட்டங்களில் ஒவ்வொன் றிலும் 10 இடங்களைத் தேர்ந்தெடுத்து, விதவைகளுக்குக் கடைகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு ஆய்ந்து கொண்டு—செயலாக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர் களே, இந்த மாவட்டங்களிலே இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துகின்றபொழுது அரசாங்கமே அந்த இடங்களை நிர்ண யிக்கிறதா அல்லது, அங்கேயிருக்கிற தாய்மார்கள் அந்தத் திட் டத்திலே சேர்வதற்கு அவர்கள் விண்ணப்பிப்பார்களானால், அந்த இடங்களிலே அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுகிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். அடுத்தது, இதுபோன்ற மலிவு விலையிலே இட்டிலி, தோசை வழங்குகின்ற கடையொன்றை, சட்டமன்ற உறுப்பினர் விதியிலே ஆரம்பிக்க அமைச்சர் நடவடிக்கை எடுப் பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதற்காக சமூகநலத் துறையின் மூலமாக, ரூ. 95, 000 ஒதுக்கீடு செய்து இந்தத் திட்டம் 2 கட்டமாகச் செல்பட்டு வருகின்றது. முதலாவது திட்டத்தின் அடிப்படையில் 30 விதவைப் பெண்களுக்கு ரூ. 2, 500 வீதம் வங்கிகளின் மூலம் கடன் மூலம் கடன் கொடுத்து, ரூ. 500 அரசு மானியமாகக் கொடுத்து செயல்படுத்த, ரூ. 15, 000 அதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டத்





தின் அடிப்படையில், 30 பெண்களுக்கு, ரூ. 7,500 வீதம் வங்கி களின் மூலம்கடன் கொடுத்து. ரூ. 2,500 வீதம் அரசு மானி யமாகக் கொடுத்து செயல்படுத்த, ஒதுக்கீடு செய்து—அவர் களுக்கு சில பயிற்சிகளை அளிக்க வேண்டும்; எப்படித் தயார் செய்ய வேண்டும், எப்படி விநியோகம் செய்ய வேண்டுமென்று அந்த விதவைகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற அடிப் படையில், அதற்கு ரூ. 5,000 ஒதுக்கீடு செய்து, ஆக மொத்தம் ரூ. 95,000 அதற்கென்று ஒதுக்கீடு செய்து செயலாக்கத்தில் இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு முன்பு அந்தக் கடையை அமைப்பதற்கு, அரசு சண்டிப்பாக ஆய்ந்து, அதை ஏற்படுவ தற்கான வழிவகைகளைச் செய்யும்.

செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு தலைவர் அவர்களே நியாய விலையில் இட்டிலி, தோசை வழங்கும் திட்டத்தைக் கூட்டுறவுச் சங்கம் அமைத்து, அதன் மூலம் வழங்க அரசு ஆவன செய்யுமா, என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்து ஒன்றும் இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் எழுதிய பராசக்தி சினிமாவில் தமிழ்நாட் டிலே தாலியில்லாத கைம்பெண்களுக்கு இட்டிலி சுட்டு விற்பது தான் தாசில்தார் வேலை என்று அந்த நேரத்திலேயே சொன் னார்கள். நம்முடைய அமைச்சரவர்கள் இப்பொழுது இந்தத் திட்டத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற் கிறோம். தமிழ்நாட்டிலே உள்ள கைம்பெண்கள் இட்டிலி' தோசை சுட்டு விற்பதற்கான பாத்திரங்களை வாங்குவதற்கு 200 ரூபாயையும். மூலதனமாக 300 ரூபாயையும் ஆகமொத்தம் 500 ரூபாயையும் ஒரே தவணையாக சப்சிடியாகக் கொடுத்தால் தமிழ்நாட்டிலே உள்ள தாய்க்குலம், குறிப்பாக கைம்பெண் குலம் காப்பாற்றப்படும் அல்லவா? அதற்கு ஏதாவது அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, இட்டிலி, தோசை வியாபாரம் செய் வதைப் பொறுத்தவரையில் முதல் கட்டத்தில் வீட்டில் இருந்து கொண்டே அவர்கள் அந்தத் தொழிலைச் செய்யலாம்; மற் றொன்று பெட்டிக்கடை வைத்தும் நடத்தலாம். இப்படி இரண்டு வகைகளில் நடத்தலாம். முதல் கட்டத்திற்கு ஆக

500 ரூபாய் மானியமும் இரண்டாவது கட்டத்திற்கு 2,500 ரூபாய் மானியமும் ஆகக் கொடுக்கின்ற செயலாக்கத்தை அரசு கையாண்டு வருகிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விதவைத் தாய்மார்களைக் கொண்டு ஆரம்பிக்கப்படும் இந்த இட்டிலி, தோசை நியாய விலைக் கடைகளை வியாபாரம் அதிகமாக நடக்கின்ற, மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள், பிராந்தியப் போக்குவரத்து அலுவலர் அலுவலகம், நீதிமன்றங்கள் ஆகிய இத்தகைய இடங்களில் ஆரம்பிப்பதற்கு முன்னுரிமை கொடுப்பதற்கு சமூக நலத்துறை நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விதவைகளுக்கு, சுய வேலை, வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையிலே மலிவு விலையில்—ஹோட்டல் போன்ற இடங்களில் பார்த்தால் இந்த உணவுப் பொருட்களை அதிகமான விலையில்தான் கொடுக்கிறார்கள். இந்தக் கடைகளில் மலிவு விலையில் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும் சுய வேலை வாய்ப்பை ஊக்குவிக்க வேண்டுமென்கிற அடிப்படையிலேயும் இந்தத் திட்டத்தை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதன் அடிப்படையில் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம், இராணி மேரிக் கல்லூரி வளாகம், காவல் துறை ஆணையாளர் வளாகம், காயிதே மில்லத் மகளிர் கல்லூரி வளாகம், மகளிர் பாலிடெக்னிக், தரமணி போன்ற இப்படிப்பட்ட இடங்களில் அமைத்து அது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே' நியாய விலையில் இட்லி, தோசை விற்பவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை மலிவு விலையில் கொடுக்க அரசு தயாராக இருக்கிறதா? இட்லி, தோசை ஆகியவைகளை மலிவு விலையில் விற்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்று யாராவது முன் வந்தால் அவர்களுக்கு அரசு புறம்போக்கு இடங்களில் இலவசமாக கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு தயாரா இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்களுக்கு அத்தியாவசியமான பொருட்கள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் மலிவு விலையில் கொடுக்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாய விலைக்கடைகளின் மூலமாக இட்லி, தோசை வழங்குவதற்கு மாவட்டத் தலைநகரங்களில் திறப்பதற்



கான ஏற்பாடு இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதேபோல். ஜனதா ஆட்சிக் காலத்தில் ஒரு ரூபாய்க்குச் சாப்பாடு போட்டார்கள். அம்மாதிரி இந்தக் கடைகளின் மூலமாக ஒரு ரூபாய்க்குச் சாப்பாடு போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இட்லி, தோசை பற்றிய கேள்வி; சோற்றுக்குப் போகக் கூடாது.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளின் மூலமாக இட்லி, தோசை கிடைப்பதற்கு, அரசு சலுகை அளிப்பதைப் பாராட்டுகிறேன். அதே போல அனைத்துக் கடைகளிலும் விற்கப்படும் உணவுப் பண்டங்களைக் குறைந்த விலைக்கு அளிப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இட்லி, தோசை பற்றிய கேள்விதான்; உணவுப் பண்டங்களைப் பற்றிய கேள்வி அல்ல.

திரு. செ. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 இடங்களில் ஏற்படுத்த இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது மாவட்ட வாரியாகப் பிரித்துக் கொடுக்கப்படுமா? வட்டங்கள்தோறும் அந்தக் கடைகள் இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாவட்டந்தோறும் இப்பொழுது நாம் ஆரம்பிக்கவிருக்கிறோம். கல்லூரிகள், மற்றைய பொது இடங்கள் போன்று எங்கெங்கு வியாபாரம் அதிகமாக நடக்கின்ற இடமாக இருக்கின்றனவோ அந்த இடங்களில் அமைப்பதற்கு அரசு ஆலோசித்து ஆய்ந்து கொண்டிருக்கிறது, தஞ்சை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் போன்ற இடங்களில் இது அமைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1983 மார்ச் 19

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு என். வி. என். சோமு; சென்னை பி. அண்டு சி. ஆலையில் பணி புரியும் தொழிலாளர்கள் திடீரென்று நிர்வாகத்தால் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால் அங்கே நிலவும் பதட்ட நிலை குறித்து........

(முற்பகல் 10·00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பதட்ட நிலை இப்பொழுது வராது. அதைப் பற்றி ஒரு தீர்மானமாகக் கொண்டு வாருங்கள். திடீரென்று பிரச்சினை கிளப்பினால் பதில் கிடைக்காது.

திரு ப. பொன்னுரங்கம்; அவர் ஏற்கனவே இதைப்பற்றி உங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்தால் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமா?

திரு டி. மணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' சமீபத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் சுமுகமான ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்தத் தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றிருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு சோமு அவர்களுக்கு சொன்ன பதில்தான் உங்களுக்கும்.

திரு என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கடுமையானக் குடிநீர்த் தட்டுப்பாடு எங்கே பார்த்தாலும் ஏற்பட்டிருக்கிறது..........

திரு சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிலை சம்பந்தமாக நாம் விவாதிக்க வேண்டியிருக்கிறது.

திரு இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நாங்கள் கொடுக்கக் கூடிய கேள்விகளுக்குப் பதில்கள் 45 தினங்களுக்குள்ளாக கொடுக்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே இந்த அறிவிப்பை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் 1½ ஆண்டு 2 ஆண்டுகளுக்கு முன்பு நான் என்னுடைய கேள்வியை போட்டிருக்கிறேன். அதற்கு இன்னும் பதில் வரவில்லை.





மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஏற்கனவே இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வந்து பதில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கள் குடித்தவர்களில் இருவர் குரோம்பேட்டையில் மரணமடைந்துள்ளதாகக் கூறப்படுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பாபு ஜனார்த்தனன், தி. கா. நல்லப்பன், இரா. கருப்பையா, ஏ. டி. கருப்பையா, டி. மணி, என். வரதராஜன், எஸ். ஆண்டித் தேவர், சு. பாலன், பெ. சு. திருவேங்கடம், பம்மல் நல்லதம்பி, ஜே. எஸ். இராசு, ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், செ. சிவசாமி, என். எஸ். வி. சித்தன், எல். இளையபெருமாள், இல. பலராமன், து. புருஷோத்தமன், கே. எம் தங்கமணி, மு. அப்பாத்துரை, எம். ஆறுமுகம், ஆகியோர் "சென்னை குரோம்பேட்டை அருகே கள் குடித்த இருவர் சாவு, 30 பேர் நிலை கவலைக்கிடமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்ற நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களை மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்னால், குரோம்பேட்டையில் 40 பேருக்கு மேல் உரிமம் பெறாத இடத்திலே கள் குடித்த காரணத்தால் அனைவரும் மயக்கமுற்று, வாந்தி எடுத்து, அவர்கள் எல்லாம் குரோம்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அதில் இருவர் மரணமுற்றிருக்கிறார்கள். உரிமம் இல்லாத கள் விற்கும் நிலைமை இன்றைய தினம் நாட்டில் நிறைய இருக்கின்றது. அப்படி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் காப்பாற்றப்பட்டிருக்கலாம். மருத்துவ மனையில் போதிய வசதி இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் ஜகத்ரட்சகனும், பம்மல் நல்லதம்பி அவர்களும் அந்த மருத்துவ மனைக்குச் சென்று அவர்களை

பார்த்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே, அதைப்பற்றி சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் மாண்பு மிகு உறுப்பினர் ஜகத்ரட்சகன் தொடர்புகொண்டு, அதற்குப் பிறகு பல டாக்டர்கள் அந்த மருத்துவ மனைக்குஅனுப்பப் பட்டிருக்கிறார்கள். போதிய அளவிற்கு சிகிச்சை அளிக்கப் பட்டிருந்தால் அந்த அளவிற்கு மரணம் ஏற்பட்டிருக்காது என்று பொதுவாக எல்லோரும் தெரிவித்திருக்கிறார்கள். அங்கே பலராமன் என்ற ஒரு தொழிலாளி இறந்து விட்டார். ஏழை விறகு வெட்டி ஏழுமலை என்பவரும் இறந்திருக்கிறார். பலராமனுக்கு ஒரு மனைவி, நான்கு பிள்ளைகள். அதேபோல ஏழுமலைக்கு ஒரு மனைவியும் ஒரு மகனும் இருக்கிறார்கள். இன்றைய தினம் அவர்கள் அநாதை ஆக்கப்பட்டிருக்கிறார்கள். போதிய வசதியும், நல்ல மருத்துவமும் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்தால், நிச்சயமாக அவர்கள் பிழைத்திருப்பார்கள் என்ற கருத்தை தெரிவிக்கிறார்கள். தமிழ்நாட்டில் இப்பொழுது உரிமம் பெறாது கள்ளச் சாராயத்தை விற்பவர்கள், ஊக்கு விக்கப்படுகிறார்கள். சிலர் அரசியல் பின்னணியில் சாராயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அரசியல் பின்னணியைக் கொண்டு ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். அதிலே பெரிய ** ** ** —எல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அரசியல் ஆதிக்கம் அவர்சளுக்கு எல்லாம் பின்னணியிலே இருக்கிறது.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த் தனன் அவர்கள் எப்போதும் ஒரு வரையறைக்கு உட்பட்டு பேசக்கூடிய வர்கள். அப்படி இருந்தும் என்னவோ இன்று அவர்கள் சில பெயர்களை உள்நோக்கத்தை வைத்து தன் னுடைய பேச்சை இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். * *

* *

இதையெல்லாம் தேவையற்ற வாதம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பெயர் வருகிற மாதிரி குறிப்பிட்டு இருந்தால் அது நீக்கப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





திரு. பாபு ஜனார்த்தனன் ; பேரவைத் தலைவர் அவர்களே, **என்ற கருத்தைச் சொன்னேனே தவிர, இதிலே யார் பெயரை யும் குறிப்பிடவில்லை. இலக்கிய நயத்தோடு எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. இராமச்சந்திரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, நயமும் இல்லை, நியாயமும் இல்லை. ஆகையி னாலே இதிலே எங்கே இருந்து இலக்கியம் வருகிறது. வேண்டும் என்றே ஒரு உள்நோக்கத்தோடு சில வார்த்தைகளை தெரிவிக்கின்றாரே தவிர, வேறு அல்ல என்பதை தாங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே,

* * *

என்று அந்தப் படத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இலக்கிய நயத்தோடு சொல்வது என்றால் அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடு). எனினும் அதுவே வேறு உட்கருத்தைக் கொண்டது என்பதனாலே நீக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; பேரவைத் தலைவர் அவர்களே,

* * * *

நீக்குவதுதான் பொருத்தமாக இருக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : * *

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் * * * *

திரு. அ. ரகுமான்கான் . * * * *

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குரோம் பேட்டைக்கு வருவதுதான் நல்லது. இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது பேசுகிறபோது வேறு விவகாரங்களைப் பற்றி பேசியதால் இதிலே தகராறு ஏற்படுகிறது. ஆகவே ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது மட்டும் பேசினால் நன்றாக இருக்கும்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * என்ற வார்த்தைகளை நீக்குவதோடு, அது சம்பந்தமாக நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களும் நீக்கப்பெறுகின்றன.

திரு பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே காந்தியார் படத்தைப் பார்க்க ஏற்பாடு செய்தார்கள். அதை எதிரொலிக்கின்ற வகையிலே உள்ள இது எங்க நாடு என்ற படத்தையும் பார்க்க எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக காண ஏற்பாடு செய்தால் அது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனவே இன்றையதினம் கள்ள மது இறக்கி இருக்கின்ற காரணத்தால், அதை சாப்பிட்டு இருக்கிறார்கள். பொதுவாக இப்படிப்பட்ட இந்தக் கள்ளில் முதலிலே பவுடர்களை எல்லாம் கலக்கிறார்கள். அரளி விதையெல்லாம் அரைத்து, கரைத்து அந்த கள்ள மதுவிலே கலக்கிறார்கள். பவுடர்களையெல்லாம் கலந்து பெரிய பெரிய டிரம்களில் வைக்கிறார்கள்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கள்ளில் இதை எல்லாம் கலக்க முடியாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சபாநாயகர் அவர்களுக்கு இது எப்படித் தெரியும்? அனுபவம் உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கள் என்பது மரத்தில் இருந்து இறக்குவது. காய்ச்சுவது என்றால் ஏதாவது அதிலே போட்டு காய்ச்சலாம். இது எங்கள் ஜில்லாவில் ரொம்ப அதிகம் அதனால் எனக்கு நன்றாகவே தெரியும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: இப்படி பெரிய பெரிய டிரம்களில் கள்ளைப் போட்டு, அதிலே ஈச்சங்கள்ளைப் போட்டு அரளி விதையை அரைத்துக் கரைத்து, கலந்து, பவுடர்களைக் கலந்து விற்கிறார்கள் என்று பல இடங்களில் சொல்லப்படுகிறது. அதிலே ஈடுபட்டு இருக்கும் பல பேர் இதைத் தெரிவித்து இருக்கிறாகள். இப்படி கள்ள மது விற்ற பலர் மீது

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





காவல்துறை நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கள்ள மதுவால், கள்ளச் சாராயத்தால் பல ஏழைக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குரோம்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில் பாதிக்கப்பட்டவர்களை குரோம்பேட்டை மருத்துவ மனையில சேர்த்து இருக்கிறார்கள். அங்கே போதிய மருத்துவ வசதி இல்லை. அதற்குப் பிற்கு அங்கே வசிக்கின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜகத்ரட்சகள் அவர்கள் எடுத்த முயற்சியின் விளைவாக சென்னை பெது மருத்துவ மனையில் இருந்து 10 டாக்டர்கள் வந்து அவர்களைப் பிழைக்க வைக்க முயற்சித்து இருக்கிறார்கள். அப்படியிருந்தும் இரண்டு பேர் இறந்து இருக்கிறார்கள். இப்படிப் பல இடங்களில் கள்ளச் சாராயம், கள்ள மதுவால் பாதிக்கப்படும் சூழ்நிலை 6 மாதம் ஒரு வருஷத்திற்கு ஒரு முறை பாதிப்பு ஏற்படுகிறது. பல குடும்பங்கள் அதனால் அழிந்து விட்டு இருக்கின்றன.

இதற்குக் காரணம் உரிமம் பெற்றவர்களிடத்திலே இந்த மது வாங்கப்படாமல். உரிமம் பெறாதவர்களிடத்திலே இந்த கள்ளசாராயம் அல்லது கள்ள மது வாங்கப்படுவதால் இந்த நிலைமை ஏற்படுகிறது. ஏற்கனவே மாண்புமிகு எங்களுடைய தலைவர் தெரிவத்ததைப்போல், மிகக் குறைந்த விலையில் சாராயம் விற்கப்பட வேண்டும். கன்ட்ரோல் விலையில்—அதாவது 100 மில்லி ரூ. 1 என்ற அளவில் சாராயம் விற்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால் அதனால் ஏழை எளிய மக்கள் பயன் அடைவார்கள். இப்படிப்பட்ட குடும்பங்கள் அழிவதும் தடுக்க முடியும். ஆகவே, இந்தக் கள்ளச் சாராயம், கள்ள மதுவால் ஏற்படும் விபத்துக்களைப் பற்றியும் அதனால் ஏற்படும் மரணங்கள் பற்றியும் அதிலே செய்யப்படும் கலப்படங்களைப் பற்றியும் விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13-3-1983 அன்று குரோம்பேட்டை சமீபத்தில் உள்ள கந்திலியான்சாவடி என்ற இடத்தில் கள் குடித்ததன் காரணமாக ஏழுமலை, பலராமன் மற்றும் 12 வயது மதிக்கத்தக்க சிறுமி பாதிக்கப்பட்டு இறந்து இருக்கிறார்கள். இதைத்தவிர 30 பேரும் அந்த கள் குடித்ததன் விளைவாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்தக் கள் குடியை இங்கே அனுமதித்ததன் நோக்கமே, ஏற்கனவே கள்ள சாராயம் குடித்து பல நூற்றுக்கணக்கான, ஆயிரக்

கணக்கான மக்கள் இறந்து இருக்கிறார்கள், மற்றும் தனி யாருக்கு இந்த விற்பனையை விட்டு இருப்பதால், அவர்கள் லாபத்தைச் சம்பாதித்துக்கொண்டு போய்விடுகிறார்கள், அந்தப் பணம் அரசாங்கத்திற்கு வரவேண்டும் என்ற அடிப் படையிலே, அரசாங்கம் கடைகளை ஏலம் விட்டு, அந்த கள் விற்பனையை அனுமதித்து இருக்கிறார்கள்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பாபுஜனார்தனன் குறிப்பிட்டதைப்போல, அந்தக் கள்ளிலே பவுடரையும், பூசனிக்காயையும் கலக்கும் சூழ்நிலை இருக்கிறது. இதற்கு காரணம், அந்தக் கள் விற்பனை மூலம் அதிக லாபம் பெறவேண்டும் என்பதேயாகும். அது மட்டுமல்லாமல், எங்கே கள் விற்பனைக்கு நாம் இடத்தை ஒதுக்கி இருக்கிறோமோ அந்த இடத்தில் அவர்கள் விற்பது இல்லை. பெரும்பாலும் நாம் ஒதுக்கிய இடம் ஒரு புறம் இருக்கும், அவர்கள் விற்பனை ஒரு இடத்தில் இருக்கும். இதனால் அந்தப் பகுதியில் இருக்கும் கள்ளுக்கடை காண்ட்ராக்டருக்கும் அவர் களுக்கு முரண்பாடு, மோதல்கூட வருவது உண்டு. இம் மாதிரியான சூழ்நிலையில்தான் அந்தக் கடைக்குச் சொந்த மானவர்பேரில் ஏதாவது கெட்டபெயர் வரவேண்டும் என்ற எண்ணத்தில், மக்கள் செத்தாலும் பரவாயில்லை என்று இம்மாதிரியான பிரச்சினைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதால், இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை குறித்து விரிவாக விவாதிக்கவேண்டும் என்பதால், இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே' கடந்த 13-ந் தேதியன்று குரோம்பேட்டையில் துர்க்கை யம்மன் கோவில் பக்கத்தில் கள் குடித்ததால் இரண்டு பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள், 30-க்கும் மேற்பட்ட வர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஏற்கெனவே இந்த மதுச் சட்டம் வருகின்றபோது நாங்கள் சில கருத்துக்களை சொன்னோம். திருட்டுதனமாக விற்கப்படும் கள்ளை தடை செய்ய வேண்டும். அதைப்போன்று கள்ளச்சாராயம் விற்பனையும் தடை செய்ய வேண்டும்.

இந்த கள்ளச்சாராயம், கள் முதலியவை விற்கப் படுவதற்குக் காரணம், உரிமம் பெற்று விற்கப்படுகின்ற மதுவின் விலை அதிகமாக இருப்பதுதான். அது மட்டு





மல்லாமல் உரிமம் பெற்று விற்பவர்கள் அதிக லாபம் சம்பாதிப்பதற்காக சாராயத்திலும் கள்ளிலும் கலப்படம் செய்து விற்கிறார்கள். குறிப்பாக பவுடர் அல்லது பூசணிக்காய் மட்டுமல்லாமல் கள் வைக்கப்பட்டிருக்கும் பானை அல்லது டிரம்மின் அடிபக்கத்தில் அபினையும் ஒட்டிவைத்து விடுகிறார்கள். அதன் காரணமாக போதை அதிகமாகிறது. போதையை அதிகப்படுத்துவதற்காகவே ஒப்பந்தக்காரர்கள் இந்தமாதிரி அபினையும் மதுவுடன் கலந்து விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். இந்த குரோம்பேட்டையிலும் இப்படிபட்ட முறையில் உரிமம் பெறாதவர்கள் கலப்படம் செய்து மது விற்ற காரணத் தால் அதை அருந்தி இரண்டு பேர் பலியாகி இருக்கிறார்கள். இறந்துபோனவர்கள் குடும்பங்களுக்கு அரசு உதவி அளிக்கவும் எதிர்காலத்தில் இதுபோன்ற துயர சம்பவங்கள் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கவும், உரிமம் பற்றவர்கள் விற்கும் கள், சாராயம் போன்றவற்றை காலாகாலத்தில் சோதனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும் கள்ளத் தனமாக மது விற்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, சென்னைக்கு அருகிலுள்ள குரோம்பேட்டையில் கள் குடித்து இரண்டு பேர் செத்து, 36 பேர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. இது மிகவும் பயங்கரமான ஒரு நிலை என்பதை பொதுமக்களும் நம்மைப்போன்ற அரசியல்வாதிகளும் அறிந்து அதிருப்தியடையும் வகையில் இருக்கிறோம். " குடி குடியைக் கெடுக்கும் " என்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள் சாதாரண மக்கள். மதுவிலக்கை நாங்கள் தீவிரமாக அமுல் நடத்துவோம் என்று சொன்ன அண்ணா தி.மு.கழக ஆட்சியில் இன்றைக்கு இது போன்று சமுதாயத்தில் இருக்கிற சாதாரண மக்கள், பாமர மக்கள் பாதிக்கப்படுவது கண்டு வருத்தத்தையும் வேதனையையும் தெரிவிக்கின்ற வகையில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நாங்கள் கொடுத்திருக்கிறோம்

கள் குடித்ததனால் இரண்டு பேர் செத்ததோடு மட்டு மல்லாமல் 36 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள்: இது ஒரு சாதாரண நிகழ்ச்சியாக இல்லாமல் தொடர்ந்து எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு

சட்டபேரவைத் தலைவரவர்களே, கள்ளிலே கலப்படம் இருக்கிறதா என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். அந்த அளவுக்கு நம்முடைய அவைத் தலைவருக்குக்கூட தெரியாமல் சில நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. கள்ளிலும் சாராயத்திலும் கலப்படம் இருக்கிறது. கிராமப்புறங்களில் இது சர்வசாதாரணம். அதனால் நகரங்களில் இல்லை என்று சொல்வதற்கில்லை.

மற்ற மாநிலங்களில் இருக்கிறவர்கள் ஏதோ ஒருவகை வெள்ளை பவுடரை கொண்டுவந்து கொடுக்கிறார்கள், அதை கலக்கி கள்ளிலே கலப்படம் செய்கிறார்கள் இப்படி திருட்டுத்தனமாக கலப்பட மதுவை விற்பனை செய்கிறார்கள் என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு வறட்சி நிலை மிகவும் கடுமையாக இருக்கிறது. குடிக்க தண்ணீர் கூட இல்லை. இப்படிப்பட்ட நேரத்தில் கள்ளைக் குடித்து பசியைப் போக்கலாம் என்று சொல்லக்கூடிய இந்த அபாயகரமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது. இந்த நிலை தமிழ்நாட்டில் பரவலாக இருக்கிறது. அதற்கு உரிய நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அதனால் தான் நாங்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.

இப்படி பல துயர சம்பவங்கள் நடைபெறுகின்ற சூழ்நிலை இருப்பதால் இந்த வறட்சியின் காரணமாக ஓராண்டு காலத்திற்கு மது விற்பனையை கூட சஸ்பெண்ட் செய்து வைக்கலாம் என்பது நியாயமான கோரிக்கையாக இருக்கும். இரண்டு குடும்பங்கள் பாதிக்கப்பட்டு, இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கு, குழந்தைகளுக்கு அரசு உதவி செய்யும் என்ற நிலைமை இருந்தாலும் கூட, யார் இந்த மதுவை விற்றார்களோ அவர்களிடமே ஒரு கணிசமான தொகையை வசூல்செய்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கொடுத்து வசூல் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மதுவிலக்கை தீவிரமாக அமுல்படுத்துவோம் என்று சொன்ன இந்த ஆட்சியில், 'குடி குடியைக் கெடுக்கும்' என்ற முறையிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படுவது நியாயமல்ல. இது மிகவும் வருந்தத்தக்கது. வறட்சி கடுமையாக இருப்பதால் மது விற்பனையை ஓராண்டு காலத்திற்கு ஒத்திவைப்பது நல்லதாக இருக்கும். இதுபோன்ற





பல்வேறு பிரச்சனைகளை இங்கே விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10—20)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்த கருத்தின்படியே அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் உடனடியாக எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட கள் குடித்தவர்கள் எல்லாம் அபாயகரமான நிலையில் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி தெரிந்தவுடன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். காஞ்சிபுரத்திலிருந்த டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசரையும், பொது மருத்துவமனையிலிருந்து 4 மருத்துவர்களையும் அனுப்பி உடனடியாக அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்து, அவர்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டுபேர் மட்டுமே இறந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், மருத்துவமனையிலே 5 பேர்கள் நிலைமை மிக மோசமாகும் நிலைமையிலே இருந்தது. இங்கே இருந்து சென்றிருந்த மருத்துவர்கள் மிகத் திறமையாக அவர்களுக்கு சிகிச்சை அளித்ததன் விளைவாக நேற்றையதினம் 19 ஆம் தேதி, அவர்கள் நல்லபடி வீட்டுக்கு சென்றிருக்கிறார்கள். அதேபோல தாம்பரம் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருந்தவர்களுக்கும், சென்னை பொது மருத்துவமனையிலிருந்து சென்றிருந்த மருத்துவர்கள், நல்ல முறையில் சிகிச்சை அளித்ததன் விளைவாக, 33 பேர்களும் நேற்றைக்கு முதல்நாள் 17 ஆம் தேதியன்று நல்ல நினைவுடன் நல்லபடியாக வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றதாகத் தெரிந்த உடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லாம் சென்று அவர்களைப் போய் பார்த்திருக்கிறார்கள். மது மற்றும் ஆயத் தீர்வை ஆணையாளர் அவர்கள், பாதிக்கப்பட்ட நோயாளிகளை சென்னை மருத்துவ

மனையிலும், தாம்பரம் மருத்துவமனையிலும் சென்று பார்த்து மருத்துவர்களை விசாரித்து அவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை செய்திருக்கிறார்கள்.

அதேபோல செங்கல்பட்டு துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் (அமுல் பிரிவு) சைதாப்பேட்டை, உதவி கலெக்டர் எல்லோரும் சென்று பார்த்து தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட கள்ள மதுவை குடிப்பதற்கு, காரணமாக இருந்தவர்கள் யார் என்பது குறித்து அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. காவல் துறையினர் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள எடுத்துக் கொண்டிருக்கிறார்சள்.

குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், சுப்பிரமணிய கிராமணியார் என்பவர்தான் அந்தப் பகுதியிலே கள்ளுக்கடை வைத்திருக்கிறார்கள். அவருடைய ஏஜண்டாக இருந்த திரு. மாரிமுத்து என்பவர்தான், அந்த மதுவை கள்ளுக்கடைகளிலே விற்பனை செய்ததால். இப்படி அதிக அளவில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற விவரம் அரசுக்கு வந்து, அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட மாரிமுத்து என்பவர்மீது விசாரணைக்குப் பின்பு வழக்கு தொடரப்பட்டு, துணை சிறைச்சாலையில் இன்று வரையில் இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ள மதுவை குடித்து அதனால் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம், நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம், தகுந்த முறையில் நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதற்கு காரணமாக இருந்தவர்கள் கைது செய்யப்பட்டு. வீட்டுக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள் என்கிற காரணத்தால் அரசு தக்க நடவடிக்கைகளை தகுந்த முறையில் எடுத்திருக்கிறது என்று கூறி, இது குறித்து விவாதிக்க அவையை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.



## 4. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 107 (1)-ன் கீழ், 29—1—83 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், வினா எண் 43-க்கு அளித்த விடையினை திருத்தி அளிக்க மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் என்னுடைய இசைவினைக் கேட்டிருந்தார்கள். திருந்திய விடையை அளிக்குமாறு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 29—1—83 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உடுக்குறியிட்ட வினா எண் 43 (பழைய எண் 15323) தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின்போது, உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி கீழ்க்கண்ட வினாவினைக் கேட்டிருந்தார்.

"பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டான்சியிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் கொஞ்சம் விலை அதிகமாக இருக்கிறது எனச் சொல்கிறார்கள். விலையைக் குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா? மேலும், இதற்குத் தேவையான மூலப் பொருள்களை தனியார்களிடமிருந்துதான் வாங்கப்படுகிறதா? அது எப்படி கொள்முதல் செய்யப்படுகிறது? அந்த அடக்க விலையைக் குறைந்து லாபத்தைக் குறைத்து தரமான பொருள்களை குறைந்த விலையில் பொதுமக்களுக்கு கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்." இதற்கு "பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது டான்சி நிறுவனம் இலாபத்தில்தான் இயங்கிக் கொண்டு வருகிறது. அடக்க விலையைக் குறைப்பதற்கு முயற்சிகளை எடுக்கும்" என்பதற்குப் பதிலாக கீழ்க்கண்ட திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

"பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனம் 1980-81 ஆம் ஆண்டில் ஆதாயத்தில் தான் இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அடுத்து வந்த ஆண்டுகளில் நிறுவனம் ஆதாயம் காட்டவில்லை."

## 5. கவன ஈர்ப்பு.

### திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் முக்கியமான வாயுக்களின் தட்டுப்பாட்டினால் அறுவை சிகிச்சைகள் பாதிப்பு.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, "திண்டுக்கல்லில் உள்ள அரசு மருத்துவ மனையில் ஆக்ஸிஜன், நைட்ரஸ் ஆக்ஸைட் ஆகிய வாயுக்கள் இல்லாததால் அறுவை சிகிச்சைகள் செய்யப் பெறாதது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசு தலைமையிட மருத்துவமனையில் 1983 ஆம் ஆண்டு, ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் ஆக்ஸிஜன், நைட்ரஸ் ஆக்ஸைடு தட்டுப்பாடு இருந்தது. இதற்கான காரணம், மின் பற்றாக்குறையினால், இந்தியன் ஆக்ஸிஜன் நிறுவனம் தேவையான அளவு ஆக்ஸிஜன், நைட்ரஸ் ஆக்ஸைடு வாயுக்களை விநியோகம் செய்ய முடியாமல் போனதாகும். தற்போது நிலைமை சீரடைந்து போதிய அளவு ஆக்ஸிஜன், நைட்ரஸ் ஆக்ஸைடும் கிடைக்கப் பெறுகின்றன. தட்டுப்பாடு இருந்த மாதங்களிலும் அவசரகால அறுவை சிகிச்சைகளும், குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகளும் எந்தவித தடையின்றி நடைபெற்றன.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆக்ஸிஜன் சிலிண்டர் திண்டுக்கல்லிலே உள்ள அரசு மருத்துவமனைக்கு 28 சிலிண்டர்கள் தான் கொடுக்கப்படுகின்றது. அந்தச் சிலிண்டர்கள் தீர்ந்ததற்குப் பிறகு சம்பந்தப்பட்ட கம்பெனிக்கு அனுப்பி சிலிண்டர் மாற்றுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. தற்போது லெப்ரோஸ்கோபி ஆப்ரேஷன்கள் மற்றும் குடும்பநல ஆப்ரேஷன் முகாம், கண் ஆப்ரேஷன் முகாம் போன்றவை நடைபெற்று வருவதால் அந்த முகாம்களுக்கு இந்த சிலிண்டர்கள் அடிக்கடி அனுப்பப்படுகின்றன. ஆகவே சிலிண்டர்கள் போதிய அளவுக்கு இல்லாத காரணத்தால் மாதக்கணக்கில் சில ஆப்ரேஷன்கள் நடக்காமல் இருக்கின்றன. இந்த நிலைமையை நிவர்த்திக்கின்ற வகையில் கூடுதலாக சிலிண்டர் அந்த அரசு மருத்துவமனைக்கு உடனடியாக அனுப்ப அரசு ஏற்பாடு செய்யுமா?



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ;** பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஏற்கனவே என்னிடத்தில் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். எனவே உடனடியாக பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது மாதிரி இன்னும் கொஞ்சம் கூடுதலாக அந்த அரசு மருத்துவமனைக்கு ஆக்ஸிஜன் மற்றும் நைட்ரஸ் ஆக்ஸைட் ஆகிய வாயுக்கள் கொண்ட சிலிண்டர்களைக் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலே இருக்கின்ற அந்த அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் அனஸ்திசியன் என்று சொல்லப்படுகின்ற டாக்டர்கள் இரண்டே பேர் தான் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் விபத்துப் பிரிவுக்கு மாற்றப்பட்டு விட்டார். எனவே அவ்வளவு பெரிய மருத்துவமனையில் ஒரே ஒரு அனஸ்திசியன் தான் பணிபுரிந்து வருகிறார். அதனால் பல்வேறு அறுவை சிகிச்சைகள் நடப்பதற்கு காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே அது மாவட்ட மருத்துவமனையாக இருக்கின்ற காரணத்தால் அங்கே கூடுதலாக அனஸ்திசியன்களை நியமிக்க உத்தரவிடப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் க்வாலிஃபைட் அனஸ்திட்டிசியன்ஸ் பற்றிச் சொல்கிறார்கள். ஆனால் அங்கே மேலும் 3 பேர் க்வாலிஃபைட் டாக்டர்கள் என்ற நிலைமையில் இல்லை என்றாலும் இன்-சர்வீஸ் ட்ரெயினிங் கொடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி இன்னும் கூடுதலாக அந்த அனஸ்திசியன்களை போடுவதற்கு அரசாங்கம் ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 4. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி.

#### (ஆ) பொதுக் கணக்குக் குழு.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாக செலவழிந்த தொகைகள் பற்றிய மேற்படி குழுவின் பதினெட்டாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவு

நில அளவை—எல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நில அளவை—எல்லைகள் (திருத்த) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. வரவு—செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 36—பாசனம்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ; தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 41,15,74,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு சு. பாலன் ; பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,74,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



''மானியக் கோரிக்கை எண். 36— பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 41,15,74,000—இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

(முற்பகல் 10–30)

திருமதி. தா இராசாம்பாள்: தலைவரவர்களே, வறட்சி நிவாரணத்தின் மூலம் ஏரிகளை ஆழப்படுத்திக் கரைகளை மேலும் வலுப்படுத்தவும், உபரி மண்ணை குன்றுகளாகக் குவித்து, தேங்கும் நீரின் பரிமானத்தை அதிகப்படுத்துவது பற்றி அந்த மண் குன்றுகளில் ஆல், அரசு போன்ற நீண்ட ஆயுள் உள்ள மரங்களை வளர்ப்பது பற்றியும் விவாதிக்க நான் கிழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, தமிழகத்தில் நீர்ப்பாசன வழிக்கு சிறிய நீர்த்தேக்க திட்டங்களை அமைக்கவும், வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் அருகில் மோர்தனா அணை கட்டவும் மற்றும் பத்ரபள்ளி. ராஜாதோப்பு. ஜலகம்பாவு, மேல் அரசன்பட்டு ஆகிய இடங்களில் அணைகள் கட்ட போதிய வசதி செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,74,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சே. சிவசாமி : தலைவரவர்களே, வைகை நதியின் மூலம் சீசன் காலத்தில் தண்ணீர் வீணாக கடலுக்கு போவதைத் தடுத்து விவசாயத்திற்கு உபயோகிப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுக் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,74,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண். 51–பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக்கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 63,99,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, விவசாய காலங்களில் பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும்போது தண்ணீர் இறைத்துக் கொடுக்க வசதியாக எல்லா கிராம

வாய்க்கால் தலைப்புகளிலும் சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டியதன் இன்றியமையாமை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 51 - பாசனம் குறித்த மூல தனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,99, 71,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. எம். தங்கமணி: தலைவரவர்களே, வறட்சி பணி ஆணையர் F4/2.7/12/83–2, Dt. 23-1-83 எண்ணின் உத்தரவுப்படி வரத்துவாய்க்கால் மாராமத்து செய்வது நிறுத்தப் பட்டுள்ளதால் பாசன ஏரிகள் பாதிக்கப்படுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக்கோரிக்கை எண்.51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,99, 71,000 இல் ரூ,100 குறைக்க வேண்டும்.''.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, ஊத்துக்குளி ஒன்றி யம் அணைப்பாளயம் அணையைப் பெரிதுபடுத்தி இரட்டைக் கிணர் இன்னம் ஏனைய குட்டைகளுக்கு தண்ணீர் விட்டு வெங்கலப் பாளையம் வழியாக கொண்டு செல்வது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண்.51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63.99,71,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரை யாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983-84-ம் ஆண்டுக்கான பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு போன்ற கோரிக்கைகள் மீது அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிற தொகைகள் குறித்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அது குறித்த என்னுடைய உரையை** இங்கே நான் அச்சிட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கி

**163—17 ம்பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





யிருக்கிறேன். அதை இந்த மன்றத்தில் நான் படித்ததாக தாங்கள் ஏற்றுக்கொண்டு அவைக்குறிப்பில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் களுடைய மேலான கருத்துக்களைப் பெற்று பிறகு அதற்கு தக்க பதில் சொல்வதற்கான வாய்ப்பினை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி பேசுவதற்கு 18 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே நாட் டில் வறட்சி, நாம் எடுத்துக் கொண்டிருக்கிற பிரச்சனை நீர்ப் பாசனம். ஆகவே அனைவரும் சுருக்கமாகப் பேசினால் நல்லது. நேற்று சபை 2½ மணி வரை நடந்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து இதன்மீது சுருக்கமாக பேசி முடிக்கவும்.

திரு, எஸ். ரெத்தினராஜு: தலைவர் அவர்களே. 1983-84 ஆம் ஆண்டிற்கான பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய மானியங்களில் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற 105,15,45,000 ரூபாய்க்கான செலவினங்களுக்குரிய கோரிக்கை களின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என் னுடைய கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளில் தரப்பட்டிருக்கிற விளக்கங் களில் நிலத்தின்மேல் இருக்கின்ற நீரையெல்லாம் பயன்படுத்தி விட்டதாக அறிக்கையில் தரப்பட்டிருக்கிறது. 95 சதவிதத்திற்கு மேற்பட்ட அளவில் நிலத்தின்மேல் கிடைக்கிற நீர் ஆதாரங்களை யெல்லாம் பயன்படுத்திவிட்டதாகவும் நிலத்தினடியில் உள்ள நீரை அதிக அளவுக்குப் பயன்படுத்துவதற்காகவும் நிலத்தடி நீரை அதிகப்படியான பகுதிகளிலே சேமித்து வைத்து மழை நீரை அதிக மான இடங்களில் சேமித்து வைத்து பிறகு நிலத்தடி நீராக அவற்றை எடுத்துப் பயன்படுத்தக்கூடிய முறையிலே புதிய திட் டங்களை ஆய்வு செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே மழை நீர் வீணாக கடலில் போய்ச் சேருவதைத் தடுப்பதற்காக கோதையாறு பாச னத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு முதல் கட்டமாக பேச்சிப் பாறை அணைக்கட்டு 1896 ஆம் ஆண்டு கட்டப்பட்டிருக்கிறது. ஆறு ஆண்டுகள் வேலை செய்யப்பட்ட அந்த அணையும் அதைத் தொடர்ந்து பெருஞ்சாணிக்குப் பக்கத்திலே கட்டப்பட்டிருக்கிற அணையும் அதைத் தொடர்ந்து 1964 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டிற்குள்ளாக கட்டப்பட்ட சிற்றாறு 1 மற்றும் 2 என்ற அணைக்கட்டுகளின் மூலமாக பாசனம் நடைபெறுகிறது.

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1983 மார்ச் 19

அந்தப் பாசனத்தின் மூலமாகக் கிட்டத்தட்ட 80 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுவதற்கான நிலையிருப்பதாக அதிகாரிகள் கணக்குகளைத் தருகிறார்கள். ஆனால் கோதையாறு இரிகேஷன் மேனுவலைப் பொறுத்தவரையில் கோதையாறு பாசனத் திட்டத்தை முதலில் ஆய்ந்து செயல்படுத்திய அதிகாரிகள், பொறியியல் வல்லுநர்கள் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு 1 மற்றும் 2 ஆகிய அணைக்கட்டுகளை கட்டி முடித்தபிறகு இருக்கிற பாசன ஆதாரங்களைப் பெருக்குவதற்காக மாம்பழத்துறை அணைக்கட்டுத் திட்டத்தையும் அதைப் போலவே பொய்கை அணைத் திட்டத்தையும் தடக்கயாற்று அணைத் திட்டத்தையும் உலக்கை அருவி அணைத் திட்டத்தையும் கட்ட வேண்டுமென்று வல்லுநர்கள் தெரிவித்தார்கள். அந்த வல்லுநர்கள் தெரிவித்த கருத்துக்களையெல்லாம் எடுத்துக் கொள்ளாமல் இன்றைக்கு மாம்பழத்துறை அணைக்கட்டுத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. இந்த மாமன்றத்திலே பல்வேறு உறுப்பினர்கள் இந்த மாம்பழத்துறை அணைக் கட்டுத் திட்டம் கட்டப்படவேண்டுமென்றும், கட்டப்படாத காரணத்தினால் தண்ணீர் வீணாக மல்லியாற்றில் போய் கடலில் போய்ச்சேருகிறது என்றும் பல உறுப்பினர்கள் இங்கே பல ஆண்டுகளாகத் தெரிவித்தும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. 1974 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பாசனக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அந்தக் கருத்தரங்கில் பல்வேறு விவசாய சங்கங்களைச் சேர்ந்தவர்களும் பொதுமக்கள் பிரதிநிதிகளும் ஊராட்சித் தலைவர்களும் தெரிவித்த கருத்துக்களுக்கு இணங்க மாம்பழத்துறைத் திட்டத்தை ஆய்வுசெய்வதாகச் சொன்னார்கள். ஆனால் 1977 ஆம் ஆண்டு குடிநீர்த் திட்டத்திற்காக அந்தத் திட்டம் மாற்றப்பட இருக்கிறது. எனவே குடிநீர் வடிகால் வாரியத்திடம் கலந்து பேசி அந்தத் திட்டத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியுமா என்று ஆய்வு செய்வோம் என்ற கருத்தைப் பொதுப் பணித் துறை தெரிவித்தது. ஆனால் குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர்த் திட்டத்திற்காக அந்த அணைக்கட்டை கட்ட வில்லை. அதேபோல் உலக்கை அருவித் திட்டத்தை நாகர்கோயில் நகரசபைக்கு குடிநீருக்காக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க விவசாயத்திற்கு அதைப் பயன்படுத் தாமல் விட்டுவிடுகிறோம் என்று பொதுப்பணித் துறை தெரிவித்திருக்கிறது. இந்த மாம்பழத்துறை திட்டத்தையும் உலக்கை அருவித்திட்டத்தையும் குடிநீருக்காக நாம் விட்டு விடுவதில் தவறில்லை. ஆனால் பெரிதாகக் கட்டினால் குடிநீருக்காகப் பயன்படுத்திய பிறகு எஞ்சிய தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியும் என்ற காரணத்தினால்



1983 மார்ச் 19] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

நிச்சயமாக பொதுப்பணித் துறை இந்த இரண்டு திட்டங்களையும் உடனடியாகக் கட்டுவதற்கு முன்வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.40)

அதற்கு அடுத்து இந்த விவர அறிக்கையில் வறட்சி நிவாரணப் பணிகளில் குளங்களை ஆழப்படுத்துவதற்காக பணிகளை மேற்கொள்ள 36.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய அரசின் உதவியோடு நிறைவேற்ற ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களைச் செய்கிறபோது குளங்களை ஆழப்படுத்துகிற பணிகளாக இருந்தாலும், வாய்க்கால்களை தூர் எடுக்கிற பணியாக இருந்தாலும், பாசன ஆதாரத்தை விரிவுப்படுத்துகிற வகையில் அந்த பணிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜூன் மாதம் முதல் தேதியில் மழை வந்து அணைக்கட்டுகள் நிரம்பிவிட்டால் பாசனத்திற்கு தண்ணீர் விடப்படும் பணிகள் துவங்கிவிடும். கடந்த இரண்டு, மூன்று ஆண்டு காலமாக பாசனத்திற்கு தண்ணீர் வழங்குவது ஆரம்பித்தபின் இந்தப் பணிகளுக்காக மானியம் வழங்கப்பட்டு அதன் காரணமாக குளங்களும், கால்வாய்களும் தூர் எடுக்காமல் இருப்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நான் விளக்கியிருக்கிறேன். இந்த ஆண்டு வறட்சி நிதி ஒதுக்கியிருக்கிறபோது, இந்த நேரத்திலேயே குளங்கள், வாய்க்கால்கள், தூர் எடுக்கிற பணிகளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குளங்களை ஆழப்படுத்துவதற்காக, அங்கேயிருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக தனியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குளங்களை ஆழப்படுத்தினால்தான் மழைக்காலங்களில் வரும் தண்ணீரை சேமித்து வைப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். குமரி மாவட்டம் திருவிதாங்கூர்—கொச்சின் சமஸ்தானத்தில் இருந்தபோது குளங்களை ஆழப்படுத்துகிறப் பணிகள் மார்ச் மாதத்திலிருந்து ஜூன் மாதத்திற்குள்ளாக செய்யப்பட்டுவிடும். இப்போது கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக ஜூன் மாதம்தான் வேலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. எனவே மழைத் தண்ணீர் சேமித்து வைக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

குளங்கள் ஆழப்படுத்தப்படாததால் தூர்ந்து விடுகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன், குளங்களை ஆழப்படுத்துவதற்கும், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும்,

'டிசில்ட்—கம்—ரெக்ளமேஷன்' என்ற ஸ்கீமில் பணிகளை
செய்வது சாத்தியமாக இருக்குமா என்பதை
வேண்டும். குளங்களை ஆழப்படுத்தி ஆராய
வைப்பதற்கும், பாசனத்திற்கு தண்ணீரை சேர்த்து
'டிசில்ட்-கம்-ரெக்ளமேஷன்' பயனுள்ளதாக செய்வதற்கும்
மாவட்டத்தில் ஸ்கிமில் பணிகளை கன்னியாகுமரி
உடனடியாக செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

குளங்களில் ஓவர்-ப்ளோ/சூலூயிஸ் அமைப்புகள் அனைத்தும்
கெட்டுவிட்டிருக்கின்றன. கோதையாறு திட்டத்தில் அந்த
நிலை இருக்கிறது. அவற்றிற்கு சிமெண்ட் லைனிங் போட
வேண்டியுள்ளது. ஷட்டர்ஸ உடனடியாக ரிப்பேர் செய்ய
வேண்டியிருக்கின்றன. இவைகளை இந்த வறட்சிப் பணி
களில் எடுத்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
தண்ணீர் தேங்கும் பரப்பை அதிகமாக்குவதற்கு உடனடி
யாக பணிகளை மேற்கொண்டு ஜூன் மாதம் முதல்
தேதிக்குள்ளாக அவற்றை முடிக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். வெள்ளத் தடுப்பை பொறுத்தவரையில்,
ப்ளட்-கன்ட்ரோலுக்காக ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில்
19 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது தற்காலிக
மாக 5.50 கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. 1978-ம்
ஆண்டு தென்மேற்கு பருவ மழையின் போது வள்ளியாற்றில்
ஒரு உடைப்பு ஏற்பட்டது. இன்றுவரையில் அந்த
உடைப்பு வேலைகள் செய்யப்படவில்லை என்பதை தெரிவித்து
உடனடியாக அந்தப் பணிகளைச் செய்வதற்கு நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்,

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் துறை என்பது முக்கிய
மான துறை என்ற காரணத்தினால்தான் 'பிரையாரிட்டி
செக்டாரி' லே அதைச் சேர்த்து, கடந்த ஆண்டைவிட
ரூ. 20 கோடி அதிகமாக அதற்கு இந்த அரசு நிதியை
ஒதுக்கி இருக்கிறது. ஆனால், எதிர்காலத்தில் செயல்
படுத்த வேண்டிய திட்டங்களைக் கருத்தில் கொண்டு
பார்ப்போமானால், வருகிற ஆண்டுகளிலே இன்னும் பல
மடங்கு அதற்குக் கூடுதல் தொகை வழங்கப்பட வேண்டியது
நியாயமான ஒன்று என்பதை முதற்கண் நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். இந்திய துணைக் கண்டத்தி
லேயே 'சர்ஃபேஸ் வாட்டர்'—மேற்பரப்பு நீர், 'கிரவுண்ட்
வாட்டர்'—நிலத்தடி நீர், 'சப்சாயில் வாட்டர்' இவற்றை
யெல்லாம் முழுமையாகப் பயன்படுத்தியிருப்பது தமிழகம்
என்பதை இந்தப் பேரவை நன்கு அறியும். அந்த
அளவிலே பாசனங்கள் மூலமாக, 1983-84 ஆம் ஆண்டில்





35,000 ஏக்கர் நிலங்கள் தமிழகத்தில் வளம் பெறும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, வருகின்ற ஆண்டுகளில், கிட்டத்தட்ட ரூ. 32 கோடி செலவில் 6 புதிய நடுத்தர பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன. இந்த திட்டங்களின் மூலமாக, 30,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவதோடு, கிட்டத்தட்ட 32,000 மெட்ரிக் டன் கூடுதல் உணவை உற்பத்தியாக்க இந்தத் திட்டங்கள் வழிவகுத்திருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல் அடுத்த ஆண்டு 8 புதிய பாசன திட்டங்கள், 15 நடுத்தர பாசன திட்டங்கள், 30 சிறுபாசனத் திட்டங்கள், அதோடு மேலும் 23 பாசன திட்டங்களுக்கான ஆய்வு தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது எதைக் காட்டுகிறது என்றால், தமிழகத்திலே பருவ மழைப் பொய்த்து வருகிறது, தமிழகத்திலே உணவு உற்பத்தி குறைந்து வருகிறது, மின் உற்பத்தி குறைந்து வருகிறது என்ற நிலையில், அவ்வப்போது பெய்கின்ற மழை நீரைப் பக்குவமாகப் பயன்படுத்தி, வேளாண்மைத் துறை வளம் பெறச் செய்ய வேண்டுமென்ற கருத்தோடுதான் இந்தத் திட்டங்களை எல்லாம் தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை அறியும்போது தமிழக அரசுக்கு நம்முடைய பாராட்டுதலை உரித்தாக நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு இதுபோன்று ஆய்விலே இருக்கிற திட்டங்கள் செயல் முறைக்கு வரும்போது, சில வறட்சியான பகுதிகளிலே, அணைகட்டுத் திட்ட ஆய்வு நடைபெற்று, அரசினுடைய பரிசிலனைக்கு வரும்போது, பொருளாதார ரீதியாக அது சாத்தியப்படாது, அதாவது, benefit cost atio B.C.R. என்று சுருக்கமாகச் சொல்வார்கள். இந்த அடிப்படையில் நாம் எடுத்துப் பார்ப்போமானால், தமிழகத்தினுடைய வறண்ட பகுதியிலே எந்த இடத்திலும் அணைக் கட்டோ, நீர்த் தேக்கமோ கட்ட முடியாத சூழ்நிலை உருவாகும். எனவேதான், அணைக்கட்டு பகுதியினுடைய பின்தங்கிய நிலையை, வறட்சி நிலையைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, அந்த அணைகள் கட்டுகின்ற வேலையை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமே தவிர, அவை பொருளாதார ரீதியாக சாத்தியப்படவில்லையென்றாலும் அவற்றைச் செயல்படுத்த வேண்டிய ஒரு செயல்முறையை அரசு உருவாக்க வேண்டும். இந்த Benefit cost ratioவை வறட்சிப் பகுதிகளில், பின்தங்கிய பகுதிகளில் முழுமையாகப் பின்பற்றாமல், அதை விட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலைமையில் என்னுடைய தொகுதியான ஒட்டன் சத்திரத்தில், நல்லதங்காள் ஓடைக்குக் குறுக்கே தொட்டியத்திற்குப் பக்கத்திலே ஒரு அணையும் அதேபோன்று இடையன் ஓட்டி நங்கச்சி ஆற்றின் குறுக்கே ஒரு அணையும் கட்டுவதற்கான ஆய்வு முடிவடையும் நிலையிலே இருக்கிறது. அவைகள் எல்லாம் பொருளாதார ரீதியில் சாத்தியப்படாத நிலையில் இருக்கின்றன. அவை Benefit cost ratio வரவில்லையென்ற குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். என்றாலும் ஆண்டுக்காண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற அந்தப் பகுதிகள் நீர்ப்பாசன வசதி பெற வேண்டுமென்றால் நிச்சயமாக benefit cost ratio என்பதை எடுத்துக் கொள்ளாமல் ஏரியாவினுடைய பின்தங்கிய நிலைமை பொருளாதாரத்திலே அது எந்த அளவு பின்தங்கியிருக்கிறது என்பதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு இந்த அணைகளைக் கட்டுகின்ற வேலைகளை அரசு உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நாம் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அத்திக்கொம்பைக்குத் தெற்கே யுள்ள மலையிருந்து தண்ணீர் வழியும் இடத்தில் 9 அடி பாலம் என்று சொல்வார்கள். ஒரு பெரிய நீர்த்தேக்கம் கட்ட ஆய்வு முடிந்து அதுவும் அரசுக்கு வந்திருக்கிறது. அங்கே அந்த நீர்த்தேக்கத்தைக் கட்டும்போது ஒட்டன்சத்திரத்திற்கு பக்கத்திலே உள்ள சின்னக்கொம்பைக்கு தண்ணீர் கிடைப்பதோடு, ஒட்டன்சத்திரத்தினுடைய குடிநீர்ப் பிரச்சனையும் தீர்வதற்கு அங்கு வாய்ப்பிருக்கிறது. அதே போன்று திருப்பாச்சிக்குப் பக்கத்திலே பெருமாள்குளம் இருக்கிறது. அந்தப் பெருமாள்குளத்திலிருந்து தனி வாய்க்கால் அமைத்து, உபரி நீரை முத்துச்சமுத்திரம் வீரமல்லாங்குளம், பாப்பான்குளம், பெரியகுளம் ஆகிய குளங்களுக்குத் தண்ணீர் எடுத்துச் செல்ல ஆய்வு முடிந்த சூழ்நிலையில் இருக்கிறது. அந்த ஆய்விலுள்ள நடைமுறைத் திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஆண்டு முழுவதும் தண்ணீர் வரத்துக் கிடையாது. பெரனியல் ரிவர்ஸ் என்று சொல்லக்கூடிய வகையில் வடக்கே உள்ள கங்கையைப் போன்று இங்கே ஆறுகள் கிடையாது. அவ்வப்பொழுது பெய்கின்ற மழை நீரைத் தேக்கி வைத்துக் கொண்டுதான் வேளாண்மைக்கும் குடிதண்ணீருக்கும் பயன்படுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமை தமிழ்நாட்டிலே இருக்கிறது. பருவமழை தொடர்ந்து பொய்த்து வருவதை





நாம் அறிவோம். மழை பெய்யும்பொழுது அந்த நீர் வீணாக கடலில் சென்று கலந்து விடாமல், அந்தத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கான நீர்த் தேக்கங்களை—ஸ்டோரேஜ் டேங்க்ஸ் என்று சொல்லப்படுகின்ற நீர்த் தேக்கங்களை எங்கெங்கு சாத்தியப்படுகிறதோ அங்கெல்லாம் கட்ட வேண்டியது அவசியம் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

எப்படி நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது சம்பந்தமாக தமிழக அரசு குழாய்க்கிணறுகள் கழகம் என்று அமைத்திருக்கின்றதோ அதைப்போல ஸ்டோரேஜ் டேங்குகள் நிர்வகிப்பதற்கும், கவனிப்பதற்கும் தனியாக ஒரு வாட்டர் மேனேஜ்மென்ட் போர்டு அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக தனியாக ஆண்டுதோறும் நிதி ஒதுக்க வேண்டும். இப்படி தனி நிதியாக ஒதுக்கி, தனி அமைப்பை ஏற்படுத்தினால், தமிழ்நாட்டில் ஆங்காங்கு வீணாகப் போகும் உபரி நீரைத் தேக்கி வைக்கக்கூடிய நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு முழுவதும் இருந்தால் இதுபோன்ற வறட்சிக் காலங்களில் விவசாயத்திற்கும் குடி நீருக்கும் மிகவும் பயன்படும். ஆகவே இதுபற்றித் தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அணைகளில் இருக்கின்ற தண்ணீரைத் திறந்து விடுவதைப் பொறுத்தவரையில் அதற்கான கன்ட்ரோல் கோவை மாவட்டத்திலே பி. டபிள்யு.டி யினிடத்திலே இருக்கிறது. ஆனால் மதுரை மாவட்டத்திலே இதற்கான அதிகாரம் ரெவின்யு துறையிடத்திலேயும் பி.டபிள்யு.டி. யினிடத்திலேயும் இணைந்து இருக்கிறது. இதன் காரணமாக விவசாயிகளுக்குத் தேவைப்பட்ட நேரத்தில் உடனடியாக தண்ணீர் திறந்து விட முடிவதில்லை. எனவே இப்படி இருக்கின்ற டூயல் கண்ட்ரோல் சிஸ்டத்தை எடுத்து விட்டு, இதற்கான அதிகாரத்தை பொது பராமத்து துறையினிடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1960 ஆம் ஆண்டிலிருந்து அமராவதி ஆற்றிலே அன்-ஆதரைஸ்ட் பம்பு செட்டுகளை ரெகுலரைஸ் செய்யாமல் இருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து இருபது ஆண்டு காலமாக எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட்டுகளைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். எனவே. சிறிய நதி, பெரிய நதி என்று பார்க்காமல் அவற்றை ரெகுலரைஸ் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பர்குலேஷன் பான்ட்ஸ் என்று சொல்லப்படுகின்ற குட்டைகள் சம்பந்தமாக ஆரம்ப காலத்தில் நடைமுறையில் இருந்தது. ஆனால், அது இடையிலே கைவிடப்பட்டிருக்கிறது. எனவே, பர்குலேஷன் பான்ட்ஸ் திட்டத்தை விரைவில் அமல் செய்ய வேண்டுமென்று விவசாயிகள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட நாடு, அதாவது தென்மாநிலங்களில் உள்ள நில வளம், நீர் வளம், கனி வளம், காட்டு வளம் முதலியவை களைத் தென் மாநிலங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ள வேண்டிய கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். திராவிட நாடு பிரி வினையை நாம் கை விட்டு விட்டோம் என்றாலும்கூட, அதற்கான காரணங்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன. தென் மாநிலங்களின் ஒற்றுமையை வலியுறுத்தி, அதைச் செயல் படுத்துகின்ற வகையில் திராவிட நதிகளை இணைப்பதற்கான ஏற் பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வடக்கே பக்ரா நங்கல் அணை ஏற்பட்டதன் காரணமாக, . . .

திரு. செ. சிவசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்): ஏற் கனவே பேசுகின்ற உறுப்பினர்களுக்கு நேரம் குறைவாகத்தான் இருக்கிறது. இதிலே குறுக்கிடு செய்ய வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. குப்புசாமி: திராவிட நாடு என்று சொன்னவுடனேயே எழுந்திருக்கிறார்கள். திராவிட நாடு என்று சொல்வதற்கு எங் களுக்கு உரிமை இருக்கிறது. அதைப் பறிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. திராவிட நாடு பிரிவினையைக் கை விட்டு விட்டோம், ஆனால் திராவிட நாடு என்று சொல்வதிலே என்ன தவறு இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். திராவிட நாடு என்று சொல்வதில் உங்களுக்கு காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டால், தென் மாநிலங்கள் என்று சொல்லவும் தயாராக இருக்கிறேன்.

தென் மாநிலங்களில் ஓடுகின்ற மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி ஆகிய வளைகுடா நதிகளை இணைக்க வேண்டிய கால கட்டத்தில் இருக்கிறோம். வடக்கே பக்ரா-நங் கல் அணைக்கட்டுத் திட்டத்தை நேரு பெருமகனார் நிறை வேற்றினார்கள். அதன் காரணமாக ஐந்து மாநிலங்களுக்கு நீர் கிடைத்து, மின் வளமும், உணவு உற்பத்தியும் அங்கே பெருகி இருக்கிறது. நேரு அவர்களுக்கு ஒரு மானுமென்டாக வட மாநிலங்களில் அந்த பக்ரா-நங்கல் அணை இருந்து கொண்டிருக் கிறது. நான் இங்கே உள்ள இந்திரா காங்கிரஸ் நண்பர்களைக்



கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமரின் நினைவுச் சின்னமாக இங்குள்ள வளைகுடா நதிகளை இணைப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அவர்கள் மூலமாக நான் இங்கே கேட்டுக்கொள் ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

. . .

கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபரி நீரை பற்றி ஆராய மத்திய அரசு ஒரு தொழில் நுட்பக் குழுவைப் போட்டு ஆய்வுக்குக் கொண்டு வந்தது. அந்த ஆய்வின் அடிப் படையில் தமிழக அரசு கேரள அரசோடு பேச்சு வார்த்தை தொடங்கும் நிலையில் இருக்கிறது. அந்தப் பேச்சு வார்த்தை யில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றால் மத்திய தொழில் நுட்பக் குழுவே மேற்கு நோக்கிப் பாயும் உபரி நீரைத் தமிழகத் திற்குத் திருப்பி விடுகின்ற ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காங்கிரஸ் ஆட்சி நடந்த காலத்தில் தமிழகத்தில் வளர்ச்சிக்கு 1,000 கோடியிலே ஒரு திட்டம் தீட்ட அவர்கள் வற்புறுத்தினார்கள். அப்போதிருந்த ஆட்சி நிலைமை எள்ளி நகையாடியது. ஆனால், இப்பொழுது அருமைத் தம்பி புரட்சித் தலைவர் 1,700 கோடிக்கு மேலே இங்கே திட்டங்கள் தீட்டி இருப்பதை நாம் நிதிநிலைஅறிக்கை யிலே காண்கிறோம். கடல் நீரைக் குடிநீராக்குவது, விவசாயத்திற்குப் பயன்படுத்துவது—ஆகிய அண்ணாவினுடைய வார்த்தைகள் இன்று நடைமுறையிலே சாத்தியமாக வந்திருக்கிறது. கடல் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவது அற்புதமான திட்டம். அதற்கென்று இன்றைக்கு ரூ.50 கோடிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மணி அடிக்கப் பெற்றது) பல்வேறு உறுப்பினர்கள் பேசுவதற்கு சில குறிப்புகளை கொடுத்திருக்கிறார்கள்.

வேடசந்தூர் தொகுதியில் 1977-ல் புயலில் குடகனாறு உடைந்து, இதை மீண்டும் கட்டி, வேடசந்தூர் பகுதியில் முழு தண்ணீர் கிடைக்கின்ற அளவிற்கு தமிழக அரசு விரைவாக இந்த வேலைகளில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேடசந்தூர் பகுதிஅய்யலூர் அருகில் கங்கையூரில் புதிய அணை அமைக்க ஆய்வுப் பணி அரசின் ஆய்வில் இருப்பதாகத் தெரிகிறது. அதை விரைவுபடுத்தி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குஜிலியம்பாறை ஒன்றியம் ராகிரி அருகில் அணை கட்ட ஆய்வுப் பணிகளை விரைவில் மேற்கொள்ளுமாறு வேண்டிக

கேட்டுக்கொள்கிறேன். தேனீத் தொகுதில் ஒடைப்பட்டி சண்முகா
நதித் திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று
விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறன்.

வைகை ஆற்றில் வெள்ள பெருக்கால் உடைந்துபோன
ஆத்தங்கரைப்பட்டி அணையினை திப்பரவு என்ற இடத்தில்
கட்டவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக மிகமுக்கியமான திட்டம் ஒன்றை வைக்கவிரும்பு
கிறேன். திருச்சி மாவட்டத்தில், திருச்சி தொகுதியில், இனாம்
குளத்தூர் என்ற பகுதியில், பெரும்பாலும், இஸ்லாம் பெருங்குடி
மக்கள் வாழ்கிறார்கள். காமராஜர் முதல் அமைச்சராக இருந்த
காலம் முதல் அவர்கள் ஊருக்கு அருகில் ஓடும்பட்டாணி ஓடையில்
ஒரு அணைக்கட்ட வேண்டும் என்று கோரினார்கள். ஆனாலும்
அவர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை. இந்த அணை
யினால் சுமார் 1,000 ஏக்கர் புஞ்சை நிலம் நஞ்சையாக
மாறும் நிலையுள்ளது. மேலும் அதிகாரிகள் ஆய்வு செய்து அந்த
அணை தேவை என்று முடிவு செய்தும், வசதி படைத்த சிலர்
அந்த அணையைக் கட்ட விடாமல், தலையிட்டு, நீதி மன்றத்திற்குச்
சென்று தடையை வாங்கியிருக்கிறார்கள். தற்சமயம் நமது இதய
தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் அவர்களுக்கு அந்த
அணை கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆக இதன் மீது தடை
யும்,வழக்கும் நடைபெறுகிறது. சிறுபான்மையினரின் உரிமைக்காக
காயல்பட்டிணத்தைச் சுட்டிக் காட்டிய எதிர்க்கட்சியைச் சார்ந்த
வர்கள் எல்லாம் கூட இந்த சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள்
வாழும் பகுதியில் கட்டப்படும் பட்டாணி ஓடையின் இடையில்
கட்டும் அணைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். என்ற செய்தி
எனக்கு வந்துள்ளது. எனவே அரசு அங்குள்ள சிறுபான்மையினர்
பயனடையும் பொருட்டு, இந்த அணையை விரைவில் கட்ட
வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தற்காலிகத்
தலைவரவர்களே, பாசனம் மற்றும் பாசனம் குறித்த மூலதன,
மானியக் கோரிக்கை மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில்
எனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு மிகமிக முக்கியமானது பாசனம் சம்பந்தப்பட்ட
தற்குச் செய்ய வேண்டிய வேலைகள் ஆகும், இன்றைக்கு
நம்முடைய தமிழ்நாட்டிலே அமைச்சரவர்கள் சொல்லியிருக்கின்ற
குறிப்புகளைப் பார்க்கும்பொழுது, பெரிய பாசனத்திட்டங்கள்
பூரணமாகவும் 96 சதவீதம் வரை பயன்படுத்தப்பட்டு விட்டது
என்றும், சிறிய சிறிய பாசனங்கள் மூலமும் நிலத்தடி நீர்
சம்பந்தமான ஆராய்ச்சிகள் மூலமும் செய்ய இருக்கின்ற





வேலைகள் பற்றியும் இப்போது இருக்கின்ற பாசன வசதிகளை
மேம்படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகள் இவைகளை
யெல்லாம் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றன, ஆனால் அதே
நேரத்தில், சமீப காலமாக மழை குறைந்து வரக்கூடிய
சூழ்நிலையில் இன்றைக்குக் கூட பத்திரிகையிலே பார்த்தேன்
ஐக்கிய நாடு சபையின் பரிசு பெற்ற பம்பாய் சுற்றுப்புற சூழ்
நிலைகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் டைரக்டர் டாக்டர் ராகி மையூர்
என்பவர், தமிழகத்திலும், கேரளத்திலும் சமீப காலமாக
20, 22 ஆண்டுகளாக அதிகமான மரங்களை வெட்டி விட்ட
காரணத்தால் மழை குறைந்து விட்டது என்று குறிப்பிட்டி
ருக்கிறார். இந்த நிலை தொடர்ந்தால் தமிழகம் ஒரு தார்
பாலைவனமாகிவிடக் கூடிய நிலை எற்பட்டுவிடும் என்று
சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-20)

தமிழகத்திலே கடந்த காலத்தில்—மன்னர்கள் காலத்தில்
பெய்யும் மழைத் தண்ணீரைக் தேக்கி வைத்த பழக்கம்
தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது. இன்றைக்குப் புதிய
தாக சில இடங்களிலே அணைகள் மற்றவைகள்
எல்லாம் கட்டினாலும்கூட பூர்ணமாக இந்தப்
பாசனத்திற்குச் செய்ய வேண்டிய பலவேலைகளை
இந்த அரசு கடந்த காலமாக இருந்தாலும் சரி இந்த
ஆட்சியானலும் சரி, செய்யத் தவறியிருக்கிறது என்பதை
நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாமேதை காரல் மார்க்ஸ் கூட இந்தியாவைப் பற்றி தான்
எழுதியிருக்கிற ஒரு புத்தகத்திலே என்ன எழுதியிருக்கிறார்கள்
என்றால் ஆங்கிலேயர் ஆட்சியிலே லேண்ட் ரெவின்யூ, லா
அண்ட் ஆர்டர் ஆகிய இந்த இரண்டையும்தான் அவர்கள்
கவனித்தார்களே தவிர இரிகேசன் பற்றி எந்த அக்கறை
யையும் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை என்று 100
ஆண்டுகளுக்கு முன்பே அந்த மாமேதை அவர்கள் எழுதி
யிருக்கிறார்கள். அது இன்றைக்கும் பொருந்தும் என்று நான்
நினைக்கிறேன்,

இன்றைக்குப் பல இடங்களிலே தமிழகத்திலே 37 ஆயிரத்
திற்கும் அதிகமான குளங்கள், கண்மாய்கள் இருக்கின்றன.
அப்படி இருந்தாலும் அந்தக் குளம் குட்டைகளிலே எவ்வளவு

நீர் தேங்குகிறது? அவைகளிலே அதிகமான அளவுக்கு நீர் தேங்குவதற்கு நாம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னிடமே பல பேர்கள் சொல்லியிருக்கிறார்கள். சில இடங்களிலே உள்ள ஆயக்கட்டுக்காரர்கள், வயதானவர்கள் சொல்கிறார்கள், எங்கள் ஊரிலே இந்த கண்மாய் இருக்கிறது. இதற்கு முன்னால் ஒரு தடவை நீர் நிரம்பினால் இரண்டு போகம் விளையும். ஆனால் இப்போது ஒரு போகம் விளைவதற்கு 2 தடவை தண்ணீர் நிரப்ப வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

ஸ்ரீவைகுண்டம் கண்மாய், நம்பிபுரம் கண்மாய் இது போன்ற எல்லா இடத்திலும் இப்படித்தான் சொல்கிறார்கள். ஆகவே எந்தக் கண்மாயாக இருந்தாலும் அவைகளை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இரண்டு போகம் விளையக் கூடிய கண்மாய்களில் ஒரு போகத்திற்கே தண்ணீர் பற்றவில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்? கண்மாய்கள் மேடாக இருக்கின்றன. அதற்காக நாம் வருடா வருடம் பணம் ஒதுக்குகிறோம். ஆனால் அந்தப் பணம் காண்ட்ராக்டர்களுக்குத்தான் ஒதுங்குகிறதே தவிர, அந்தக் கண்மாய்களை ஆழப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சாட்ட விரும்புகிறேன். இது மிக முக்கியமானது. நீர்ப்பாசனத் தேவைகளை நாம் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. இல்லை என்று சொன்னால், தமிழகம் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகும். உணவு உற்பத்தி அதிகமாக செய்ய முடியாது. நீர்ப்பாசன ஏற்பாடுகளை அதிகமாக்கினால் இன்னொரு தமிழகம் இருந்தாலும்கூட அதற்கும் உணவளிக்கும் அளவுக்கு உணவு உற்பத்தி செய்ய முடியும். எனவே, நல்ல பாசன வசதிகள் இன்றைக்கு இல்லாத காரணத்தால் நம்முடைய உணவு உற்பத்தி குறைந்து கொண்டு வருகிறது என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். ஆகவே இன்றைக்கு விவசாயிகளின் கோரிக்கைகளை பழைய ஜமீன் குளங்கள் மராமத்து செய்ய வேண்டும். கண்மாய் கால்வாயை வெட்ட வேண்டும் என்று எதை எடுத்துக் கொண்டாலும் எதையும் நாம் முறையாக சீர்திருத்தம் செய்யவில்லை. இந்தக் கண்மாய்களை ஆழப்படுத்துகின்ற நடவடிக்கைகள் எப்படி நடக்கின்றன என்றால் கரை ஓரத்திலே கொஞ்சம் புதியதாக வெட்டுவார்கள். அதை அப்படியே கரை மேலே போட்டு விடுவது. மழை வந்தவுடனே அந்த மண் கரைந்து மறுபடியும் அந்தப் பள்ளத்திற்கு வந்துவிடும். பிறகு மறுபடியும் கொஞ்சம் புதியதாக வெட்டுவார்கள், கரைமேல் போடுவார்கள். திரும்ப மழை வரும்போது, அந்த மண் கரைந்து மீண்டும் அந்தப் பள்ளத்திலேதான் வந்து விடும். ஆகவே அப்படித்தான் நடந்து கொண்டு வருகிறதே தவிர கண்மாய்களை முழு





மையாக ஆழப்படுத்தி, அவற்றினுடைய கொள் அளவை அதிகமாக்குகின்ற அளவுக்கு மராமத்து வேலையை செய்வதில்லை. பணத்தை ஒதுக்கும்போது, இதற்கு இவ்வளவு கோடி என்று நாம் பார்க்கக்கூடாது. அதிகமான பணத்தை ஒதுக்கி சீரான பாசன ஏற்பாடுகள் செய்திருந்தால் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய குடிநீர்ப்பஞ்சம் எல்லாம் ஏற்பட்டிருக்காது. குளங்களிலே நிரம்ப தண்ணீர் தேங்கினால் 500 ஏக்கர், 400 ஏக்கர் பாசனவசதி ஏற்படுவது மட்டுமல்ல, பக்கத்திலே உள்ள நீர்நிலைகளின் லெவல் உயரும். பூமிக்கு அடியிலே நீர் மட்டம் உயர்ந்து இருக்கும். அப்படி இருக்கும்போது தண்ணீருக்குப் பங்கம் ஏற்படாத நிலைமை இருக்கும். அதை செய்ய தவறியிருக்கிறோம். இப்போதுகூட பல இடங்களிலே நாம் பார்த்தால் பல கண்மாய்கள் எல்லாம் குடியிருப்புகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. சென்னைக்கும் பக்கத்திலே போகும்போது நாம் பார்த்தால் கண்மாய்கள் எல்லாம் குடியிருப்புகளாக மாறிக்கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு 37 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்மாய்கள், ஏரிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் கண்மாய்கள் எல்லாம் இன்றைக்கு மண் மேடிட்டு மூடிக் கொண்டிருக்கின்றன. அவற்றை உடனடியாக ஆழப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை தேவையோ, எவ்வளவு பணம் செலவானாலும் அவைகளை ஆழப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நாம் விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏன் என்றால் இந்தப் பணிகளில் காண்ட்ராக்டர்கள் அந்தப் பணத்தைக் கொள்ளை அடித்துக் கொண்டு செல்லவிடாமல் அதைக் கண்காணித்து, கண்மாய்களை ஆழப்படுத்தும் திட்டங்கள், கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டங்களில் நாம் கவனத்துடன் ஈடுபட்டு அவைகளை சீர் செய்ய துரிதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோக புதிதாக பல மாவட்டங்களில் இன்றைக்கு புதிய கண்மாய்கள் அமைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி இன்றைக்கு அதற்கு வேண்டிய புதிய பாசன கண்மாய்களை உருவாக்குவதற்கு திட்டம் தீட்ட வேண்டும்.

இன்னொரு பெரிய முயற்சியாக கங்கை காவேரி இணைப்பு சம்பந்தமாக பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு காவிரி சம்பந்தமாக நீண்ட காலமாக அந்தப் பிரச்சனை தீர்க்கப்படாமல் இருக்கிறது. நம்முடைய ஒப்பந்தப்படி நடவடிக்கை எடுக்கவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்கு ஏப்ரல்

[திரு. சோ. அழகர்சாமி] [1983 மார்ச் 19

5 ஆம் தேதி செல்லுவதாக இருக்கிறார்கள். எப்படியாவது
நல்ல முறையில் ஒரு தீர்வு நமக்குத் தேவை. அந்தத் தண்ணீர்
முறையாக கிடைப்பதற்கு வேண்டிய ஒப்பந்தத்தை துரிதமாக
முடிக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி பாசனத்தைப் பொறுத்தவரையில், புதிதாக பல
நவீனப்படுத்தும் ஏற்பாடுகள் தொடர்ந்து செய்யப்பட்டதாகச்
சொல்லப்படுகிறது. 356 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்
கள் தீட்டப் பெற்று மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு
அனுப்பப்பட்டு இருக்கிறது. உலக வங்கியிடம் கடன் கேட்டு
இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். போன வருஷம்
இதே கருத்து சொல்லப்பட்டது. இந்த வருஷமும் இதே கருத்து
சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை நிறை
வேற்ற துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

பெரியாறு நீர்த்தேக்க அணை சம்பந்தமாக இன்றைக்கு ஒரு
திட்டத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், இது சம்பந்தமாக
இரண்டு இடங்களில் ரெகுலேட்டர்கள் கட்டியிருக்கிறீர்கள்.
ரெகுலேட்டர் கட்டுவதற்கு முன்னாடி பல கால்வாய்கள் மூல
மாகத் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இந்த இரண்டு
இடத்திலே ரெகுலேட்டர் அமைத்த பின்பு ஒன்று மானா
மதுரைக்குப் பக்கத்திலே உள்ள பாண்டியூர் என்ற இடத்திலும்,
மற்றொன்று மதுரைக்குப் பக்கத்திலே எருதனூர் என்ற இடத்தி
லும் ரெகுலேட்டர்கள் கட்டப்பட்டு இருக்கின்றன அதற்குப்
பக்கத்திலே இருக்கின்ற கால்வாய்கள் வெள்ளத்தால் அடித்துக்
கொண்டுபோய், ஏற்கனவே வந்து கொண்டிருந்த பாசனங்
களும் இல்லாமல் போய்விட்டது. அந்த காண்ட்ராக்டர் சரியாக
வேலை செய்யவில்லை. வேலைகள் ஒழுங்காக நடைபெறவில்லை
என்று பலவிதமான விசாரணைகள் இன்றைக்கு நடந்துகொண்டு
இருக்கின்றன. ஆகவே, அங்கே நல்லமுறையில் கான்கிரீட்
போட்டு அந்தக் கால்வாயை அமைத்து, ஆயிரக்கணக்கான
குளங்களுக்கு தண்ணீர் தருவதற்கு வழிவகை செய்ய நடவடிக்கை
எடுக்க வேண்டும்.

அதே மாதிரி பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் சம்பந்தப்
பட்ட வரையில் இப்போது அந்தத் திட்டத்திலே குறிப்பிட்ட
நேரத்திலே தண்ணீர் திறந்து விடப்படுகிறது என்பதால் அந்தக்
கால்வாய்களில் பூராவும் தூர் எடுக்காமல் வண்டல் நிறைந்து
இருப்பதால், அந்தக் கால்வாயை தூர் எடுத்து சீரமைத்துத்
தர வேண்டும். அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.



1983 மார்ச் 19] [திரு. சோ. அழகர்சாமி]

இன்றைக்குக் கோடிக்கணக்கான மக்களுக்கு முக்கியமான வாழ்
வளிக்கும் திட்டமாக இருக்கும் நிலத்தடி நீரை, தஞ்சை, குமரி,
புதுக்கோட்டை, தருமபுரி, கிழக்கு இராமநாதபுரம், மதுரை,
நெல்லை போன்ற இடங்களில் அதிகமாக உபயோகிக்க வேண்
டும். அங்கே அதிகமான அளவிற்குத் தென்னாற்காடு மற்றும்
சில மாவட்டங்களில் உள்ளது போல் அதிகமான கிணறுகள்
கிடையாது. சேலம் மாவட்டத்திலும் அதிக கிணறுகள் கிடை
யாது. சேலம் மாவட்டத்தில் பூமிக்கடியில் ஒரு ஆறே ஓடிக்
கொண்டிருப்பதாக யாரோ சொன்னதாகப் பத்திரிகையில்
செய்தி பார்த்தேன். ஆகவே, ஆழ்குழாய்க் கிணறுகளை
அமைக்கும் வேலைகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

கொடிமுடியாறு திட்டம் பற்றி நான் நீண்ட நாட்களாகச்
சொல்லிவருகிறேன். நெல்லை மாவட்டத்திலே உள்ள ஒரு
பெரிய மனிதர் இதற்குக் குறுக்கே நிற்கிறார். அவருக்கு இந்தத்
திட்டத்தைச் செயல்படுத்துவதில் விருப்பம் இல்லாததால் அந்த
அணைக்காக ஏற்கனவே 50 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்ட
பின்னாலும், ஊழியர்களுக்கு அங்கே வீடு கட்ட பணம் செல
வழிக்கப்பட்ட பின்னாலும், இன்னும் அந்த அணை கட்டப்
படாமல் இருக்கிறது. ஆகவே, அந்த அணையிடத்தை அமைச்சர்
அவர்கள்கூட வந்து பார்வையிட்டு, அதைக் கட்ட வேண்டும்
என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, கொடிமுடியாறு திட்
டத்தை நிறைவேற்றி அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

வைப்பாறு அணை கட்ட வேண்டும் என்று பல காலமாகக்
கேட்டு வருகிறோம். அங்கே அணை இல்லாததால் பல கண்மாய்
கள் பாசனம் பெற முடியவில்லை. சிறுபாசனத் திட்டங்
களில் பல கண்மாய்கள் அமைக்கப்படாமல் இருக்கின்றன.
டி. புதுப்பட்டியில் ஒரு கண்மாய் கட்ட வேண்டும் என்று நான்
எம்.எல்.ஏ. வாக வந்த 20 ஆண்டு காலமாகக் கேட்டு வருகிறேன்.
அந்த பேப்பர் வருகிறது, போகிறது. ஆனால், திட்டம் எடுத்துக்
கொள்ளப்படவில்லை. அதை நிறைவேற்றினால் ஆயிரம் ஏக்கர்
நிலம் பாசனம் பெறும். இப்படிப்பட்ட சிறு சிறு பாசனத்
திட்டங்கள் நிறைய இருக்கின்றன. பூதலப்புரம் கிராமத்தில் ஒரு
கண்மாய் கட்ட வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் கெலபாம்
பள்ளி என்ற இடத்தை நான் போன வருஷம் போய்ப்பார்த்தேன்.
அங்கே அதிகமான பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அப்படி
நிறைய பணம் செலவழிக்கப்பட்ட பின்னாலுங்கூட யாரோ ஒரு
அம்மையார் கோர்ட்டுக்குப் போய் விட்டார்கள் என்ற காரணத்
திற்காக அப்படி விடப்பட்டிருக்கிறது, அவரைக் கூப்பிட்டுப்பேசி

[திரு. சோ. அழகர்சாமி] [1983 மார்ச் 19

அந்தப் பிரச்சனையைத் தீர்த்து இருக்கலாம். போன ஆண்டும் தெரிவிக்கப்பட்டு இருந்தது அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை, யாரோ கோர்ட்டுக்குப்போய் இருக்கிறார்கள் என்று. இந்த ஆண்டும் அதையே தெரிவித்து இருக்கிறார்கள். இந்த மாதிரி திட்டங்களைத் துரிதப்படுத்தி அந்த வேலைகளை யெல்லாம் துரிதமாக முடிக்க வேண்டும் என்ற கேட்டுக் கொள் கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக 56 கோடி ரூபாய் செலவில் கசிவுநீர்த் திட்டம் கீழ்பவானி அணையில் கட்டுவது என்ன ஆயிற்று? பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தைத் தீவிரப் படுத்த வேண்டும். பெரியார் மாவட்டத்தில் உள்ள அணைப் பாளையம் அணையில் இருந்து புஞ்சைப்பாளையத்திற்குக் கொண்டு செல்லும் திட்டத்தில் இது இரட்டைக் கிணற்றி லிருந்து வெங்கலப்பாளையம் வரையில் வழியில் இருக்கும் குளம் குட்டைகளுக்குத் தண்ணீர் விட்டு விட்டு அந்தக் கால் வாயைக் கொண்டு வந்தால் வழியில் உள்ள சிறுசிறு குளங் கள், குட்டைகள் பாசன வசதி பெறும். அந்த வகையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

(முற்பகல் 11-10)

சிறு பாசனத் திட்டம் சம்பந்தமாக 1982-83 ஆம் ஆண்டுக்கு 2·85 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த 1983--84 ஆம் ஆண்டிற்கு 2.47 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. போன ஆண்டைவிட இந்த ஆண்டு குறைந்து இருக்கிறது. எல்லாச் செலவும் கூடிக் கொண்டு வருகிறபோது இது குறைந்து இருக் கிறது. நான் முதன் முதலில் அசெம்பிளிக்கு வந்தபோது 200 கோடி தான் பட்ஜெட் என்று நினைக்கிறேன். தற்போது அது 1800 கோடிக்கு உயர்ந்துள்ளது இப்படி எல்லாத் துறை களுக்கும் அதிகமாகப் பணம் ஒதுக்கீடு செய்யப்படும்போது இந்த நீர்ப்பாசனத் துறைக்கு மட்டும் ஒதுக்கீடு குறைந்து கொண்டு வருகிறது. போன வருஷமும் குறைந்திருந்தது. அதைப் போன்று இந்த வருஷமும் குறைந்திருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டில் பெரிய பாசனத் திட்டங்களுக்கு இனி வாய்ப்பு இல்லை. எனவே சிறு சிறுபாசனத் திட்டங்களைத்தான் நாம் மேற்கொள்ள வேண்டி யிருக்கிறது. மழைக் காலங்களில் தண்ணீர் ஆங்காங்கே வீணா வதைத் தடுத்து, சிறு, சிறு அணைகள் கட்டி ஏரிகள், குளம், குட் டைகள் அமைத்து அந்த வகையிலே நம்முடைய பாசன ஆதாரங்



1983 மார்ச் 19] [திரு.சோ. அழகர்சாமி]

களை நாம் பெருக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு அதிகமாக தொகை ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 8 இலட்சம் ரூபாய் குறைந்திருக்கிறது. இது சரியல்ல.

பாசன வசதிகளைப் பெருக்க புதிய கண்மாய்கள், குளம் குட்டைகள், ஏரிகள் அமைப்பது ஒரு புறமிருக்க, ஏற்கனவே இருக்கிற கண்மாய்கள், குளம், குட்டைகளைத் தூர் வாரி, ஆழப் படுத்தி, அவற்றின் கொள்ளவுகளை அதிகப்படுத்துவதும் முக் கியமாகும். ஏரி, குளங்களின் கரைகளையும் சீர் செய்ய வேண்டும். அதற்கெல்லாம் இப்போது ஒதுக்கி இருக்கிற இந்தத் தொகை போதாது. இந்தத் தொகையை அதிகப்படுத்த டும். சிறு பாசனத் திட்டங்களை அதிகமாக நிறைவேற்றி, பாசன ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

இன்றைக்குக் குளித்தலை தாலுகாவில் குடகனாறு பாசனத். திட்டத்தில் 3,000 ஏக்கர் நிலம் பாழாகிறது. அங்கே மழைக் காலத்தில் வெள்ளம் வருகிறது. வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி கரைகளை உயர்த்தி தண்ணீரை எங்கே எப்படி கொண்டு சேர்க்க வேண்டுமோ அங்கே கொண்டு சேர்க்க வேண்டும். அந்த ஆற்றிலே திடீரென்று வெள்ளம் வந்து இரண்டு பக்கங்களி லுள்ள பயிர்களையும் அழித்து விடுகிறது. அதனால் கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் நிலத்திலுள்ள பயிர்கள் எல்லாம் வீணாகின்றன இந்த நிலைமையைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கெல்லாம் பணம் இல்லையா என்றால் இருக்கிறது. சென்ற ஆண்டு கூட இதற்காக ஒதுக்கப்பட்ட 20 இலட்சம் ரூபாயைத் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். ஒதுக்கப்பட்ட பணம் செலவிடப்படவில்லை.

நம்முடைய மாநிலத்தில் பெரிய பாசனங்களுக்கு இனி வாய்ப்பு இல்லை, அதைச் செய்ய வேண்டுமானால் மத்திய அரசுதான் செய்ய வேண்டிருக்கிறது. அண்டை மாநிலங் களின் உதவியுடன்தான் செய்ய முடியும். கங்கை-காவேரி இணைப்பு, அதற்கு முன்னாலே கோதாவரி கிருஷ்ணா இணைப்பு, பின் அதை மகா நதியுடன் இணைத்து, இறுதியில் தாமிர வருணி ஆற்றுடன் இணைக்க வேண்டுமென்ற பெரிய திட்டம் நம்மால் மட்டும் நிறைவேற்றப்பட முடியாது. மத்திய அரசு நிதியுதவி செய்ய வேண்டும். அண்டை மாநிலங்களும் ஒத் துழைக்க வேண்டும். இப்போது இருக்கின்ற நிலையில் நம்முடைய அரசால் என்ன செய்ய முடியுமோ அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய மாநிலத்திற்குள் இருக்கின்ற சிறு சிறு பாசன ஆதாரங்களைப் பெருக்க வேண்டும் .குளம், குட்டை

களை ஏற்படுத்த வேண்டும். இருக்கின்ற கண்மாய்களை ஆழப் படுத்த வேண்டும். அதிலே தீவிர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். சிறு பாசனத் திட்டங்களுக்காக அதிகமான தொகையை ஒதுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம்.கே. ராஜாமாணிக்கம் . மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப் பளித்தற்காக முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போதுள்ள பாசன அமைப்புகள நவீனப் படுத்துதல் என்ற தலைப்பின்கீழ் காவிரி டெல்டா திட்டத்தை நவீனப் படுத்துவதற்கான 366 கோடி ரூபாய் மதிப்பீட்டுத் தொகையில் தமிழக அரசால் ஒப்பளிக்கப்பட்டு இத்திட்டத்தை நிறை வேற்ற மைய அரசு ஒப்புதலுக்காகவும் உலக வங்கி நிதி உதவி பெறவும் தற்போது மைய அரசை அணுகி யுள்ளதாகவும் குறிப்பில் உள்ளது. இத்திட்டத்திற்கு மைய அரசு ஒப்புதல் அளிக்க இப்பேரவையின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டம் விரைவில் நிறைவேற்றப் படுமானால் உண்மையிலேயே தமிழக அரசுக்கும் மைய அரசுக்கும் இப்பகுதி மக்கள் என்றென்றும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள காட்டாறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டி ஆங்காங்கே உள்ள ஏரி, குளம், குட்டைகளில் நீர்ப் பிடிப்பினை ஏற்படுத்தி அதன் வாயிலாக அதிகப்படியான நிலங்கள் பாசனம் பெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தப் பேரவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முசிறியைப் பொறுத்த அளவில் காவிரியின் பக்கங்களில் நிரந்தரமான பகுதிகளில் நீர்ப்பாசனத்திற்காக பெட் ரெகுலேட்டர் ஒன்றை அமைத்து நல்ல முறையில் பாசனம் செய்து கொண்டிருக் கிறார்கள். ஆனால் காவிரியின் வடகரைப் பகுதியிலுள்ள பக் கங்களில் அந்த நிலை இல்லை. தண்ணீர் கரைகளிலே அதிக மாக வரும்போதுகூட காவிரியின் உபநதிகளில் மடை கட்டி அவைகளில் தண்ணீர் போய்ச் சேர்ந்திருக்கிறது. அந்த நிலை யைப் போக்குவதற்காக, முசிறியில் காவிரியின் வடகரையில்



ஸ்ரீராமசமுத்திரத்திற்கு அருகில் இருந்து பிரிந்து செல்லும் வடகரை வாய்க்காலில் இருந்து கோடைக்காலத்தில் ஊற்று நீரைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்த வருடா வருடம் 'குறம்பு, கட்டுவதற் கென்றே சுமார் ஒரு லட்சம் செலவாகிறது. ஆகவே இதைக் குறைக்கும் வகையில் இதில் ஏற் படும் நடைமுறைச் சிக்கல்களை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக இந்த இடத்தில் நிரந்தரமான 'பெட் ரெகுலேட்டரை' அமைக்க வேண்டும். அந்தப் பகுதி மக்களுக்குப் பாசன திட்ட வசதியை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முசிறிப் பகுதியில் ஓடக்கூடிய ஐயாறு என்னும் காட் டாற்றின் குறுக்கே ஐயாத்துருக்கு அருகில் ஒரு 'செக்' டேம் கட்டி அதற்கு அருகில் உள்ள கோமங்கலம், நெய்வேலி, சித் தாம்பூர் ஆகிய ஊர்களில் உள்ள ஏரிகளுக்கு நீர் கொண்டு சென்றால் அதன்மூலம் சுமார் 1,500 ஏக்கர் வரையில் பயன் பெறச் செய்வதுடன் இந்தப் பகுதி வாழ் மக்கள் புரட்சித் தலைவரின் அரசுக்கு என்றென்றும் கடமைப்பட்டவர்கள் ஆவார் கள் என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்து முசிறி வட்டத்தில் குணசீலம் கிராமத்திற்கு காவிரி ஆற்றிலிருந்து பாசனத்திற்காகச் செல்லும் வாய்க்கால் திருச்சி—சேலம் சாலையின் குறுக்கே 26.6 கிலோ மீட்டரில் செல்கிறது. இந்தப் பகுதியில் காவிரியின் இடது கரையில் இந்த வாய்க்கால் அமைந்துள்ளது. இதற்குத் திருகு பலகை கிடையாது. எனவே காவிரியின் கரைகளைப் பலப்படுதும வகையிலும் வாய்க்காலின் இரு புறங்களிலும் கட்டைகட்டி திருகு பலகை அமைத்தால் வெள்ளக் காலங்களில் கரைகளுக்குச் சேதம் ஏற்படாத வகையிலும் பாதுகாக்க முடியும். அதே சமயம் குணசீலம் கிராமத்திற்கும் நல்ல முறையில் பாசன வசதி செய்து கொடுக்க முடியும். ஆகவே இங்கு திருகு பலகையை உடனடியாக அமைத்துத் தர வேண்டும் என்று மாண் புமிகு பேரவைத் தலைவரின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருச்சி மாவட்டம் லல்குடி தாலுகாவில் இனாம் சமயபுரம் பஞ்சாயத்து அருகாமையில் சுமார் 100 ஏக்கர் பரப்புளவு கொண்ட ஒரு ஏரி இருக்கிறது. இந்த ஏரிக்கு உப்பானர் அணையிலிருந்து நீர் வர, வாய்க்கால் ஒன்றை வெட்டித்தர வேண்டும் என்றும் இந்த ஏரியை ஆழப்படுத்தி இதில் உள்ள 'கலிங்கியை' புதுப்பித்துத்தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இதனால் அந்தப் பகுதியில் சுமார் 1000 அல்லது 1500 ஏக்கருக்கு மேல் உள்ள நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கக்கூடும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, எதை அவசியம் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, முசிறிவட்டம், நெய்வேலி கிராமத்திலுள்ள சுமார் 250 ஏக்கர் பரப்பளவுள்ள ஏரியை ஆழப்படுத்தி, தண்ணிர் வரும் வரய்க்காலில் கலிங்கியை மேலும் உயரமாகக் கட்டி, வாய்க்காலையும் அழப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் அந்த ஏரி 7, 8, ஆண்டுகளுக்கு முன்னால் தூர் எடுக்கப்பட்டது. எனவே அதனை தூர் எடுத்து ஆழப்படுத்திக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு அது பெரிதும் பயன்படும். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அதனை அத்தியாவசியப் பணியாக மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, லால்குடி தாலுக்காவில் கொணலை கிராமத்தில் உள்ள ஏரியிலிருந்து, உப்பாற்றின் மூலமாக அந்தப்பகுதி மக்களுக்கு தண்ணீர் கொடுக்க ஒரு வாய்க்கால் சீர் செய்யப்படாத நிலையில் மிக மோசமாக இருப்பதினால் அதிலே தண்ணிர் வருவதில்லை. ஆகவே, அந்தக் கொணலை கிராமத்தில் உள்ள ஏரியை ஆழப்படுத்துவதோடு, உப்பாற்றிலிருந்து ஏரிக்குத் தண்ணிர் வரும் வாய்க்காலையும் சீர் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் அந்தப்பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் வசதியோடு பாசன வசதியையும் செய்து கொடுக்க முடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முசிறிப் பகுதியில் பேரூர் எடையப்பட்டி என்ற கிராமங்களுக்கு அருகில் ஏற்கனவே ஒரு ஏரி இருக்கிறது. அந்த ஏரியை அங்கே தோண்ட ஆரம்பிக்கும்போது, அங்கேயுள்ள அரிசன மக்களுக்கு அந்த ஏரியின் மூலம் பயன் கிடைக்க வேண்டும் என்கிற திட்டத்தின் அடிப்படையிலேயே உருவாக்கினார்கள். மழையில்லாத ஒருசில ஆண்டுகளில், சுமார் 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒருசில அரசு ஊழியர்களின் முயற்சியின் காரணமாக, அந்த ஏரிப் பகுதியில் சுமார் 59 ஏக்கர் நிலத்தை ஒருவரே அனுபவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தால் அந்தத் தனி நபரே அந்த ஏரியினுடைய நீர்ப்பாசனம் முழுவதையும் பயன்படுத்துகிற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூறப்பட்டது. அந்தப்பகுதி மக்களின் சார்பாக ஸ்டே ஆர்டர் ஒன்றும் வாங்கப்பட்டது. அனால் தற்போது அந்த ஸ்டே ஆர்டரை ரத்து செய்திருக்கிறார்கள். ஆகவே அதை மறுபரிசீலனை செய்து, அந்தப் பகுதியிலுள்ள 3,000 அரிசன மக்களுக்குப் பயன்படும் வகையில் மாற்றித்தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாசனம் சம்பந்தப்பட்ட இன்ஜினியர் ஒருவர் கூட அந்த ஏரியைப் பாசனத்திற்காக உபயோகப்படுத்த மாற்றும்போது, அந்த ஏரியைச் சுற்றிக்கொண்டு போய், அந்தப் பாசனப் பகுதி





வாய்க்காலை வெட்டி உள்ளார்கள். இப்படி ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்ட காரணத்தால், அந்த ஏரியின் கரைகளே விழுந்துவிடுமோ என்கிற அளவுக்கு அந்தப் பகுதி மக்கள் அச்சத்திற்கு ஆட்பட்டிருக்கிறார்கள். அந்தப் பொதுச் சொத்து தனியார் ஒருவருக்கே சொந்தமான சொத்தாக மாறிவிட்டதால், அவர்கள் சுற்றுப் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்து விட்டதால், அந்த ஏரியையும் வருடா வருடம் தூர் எடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டு விட்டது, ஆகவே இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்று நிலவும் வறட்சியான சூழ்நிலையில் அந்தப் பகுதி மக்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து, இந்தப் பிரச்சனையில் ஒரு முடிவுகாண வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அந்தப் பகுதி மக்களின் சார்பாக மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெரியார் மாவட்டம், கெம்பநாயக்கன் பாளையம் என்னுமிடத்தில் பெரும் பாசனத் திட்டம் ஒன்று ஆய்வு செய்யப்பட்டு அதற்கென்று ரூ. 3·81 இலட்சம் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக குறிப்புப் புத்தகத்தில் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் மூலமாக சுமார் 2,650 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் என்கிற நிலை இருப்பதால் இந்தத் திட்டத்தினை விரைவிலே செய்ய தக்க நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து கல்லணையைப் பொறுத்தவரையில் அதிலிருந்து கிளை வாய்க்கால்கள் பிரிந்து செல்கின்ற இடத்தில் மணல் எக்கலிடுகின்றது. அப்படி மண்மேடு ஏற்படுவதன் காரணத்தால் அது பாசனத்தைத் தடை செய்கின்ற விதத்தில் இருக்கின்றது. இதனை நிரந்தரமாகப் போக்கவேண்டும். உலக வங்கியின் மூலமாகப் பெறுகின்ற கடன் உதவியை இதற்கு வழங்கி அதை நவீனப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி உரையை முடிக்கிறேன்.

* திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கையில் பாசனத்துறை மானியத்தின்மீது நான் சார்ந்துள்ள காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

கிட்டத்தட்ட 20 வருட காலமாக நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆண்டுதோறும் மழையின் அளவு மிகவும் குறைந்து கொண்டே வருகின்றது. இராமநாதபுரம் மாவட்டத்

[திரு. இரா. அருணகிரி] [1983 மார்ச் 19

தைப்பொறுத்தவரையில் கண்மாய்கள், குளங்கள் நிறைந்த பகுதியாகும். அந்தப் பகுதியிலே பொதுவாகப் பஞ்சம் என்றவுடனே மக்கள் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று பிழைக்கின்ற பழக்கம் உண்டு. ஆனால் தற்போது தஞ்சை மாவட்டத்திலும் மிகவும் வறட்சியாக இருக்கின்றது. எனவே பிற்படுத்தப்பட்ட மாவட்டங்கள் என்று அறிவிப்பது போன்று அந்த மாவட்டத்தை வறட்சியால் நிரந்தரமாக பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அறிவித்து அந்தப் பகுதிக்காக ஒரு ஸ்பெஷல் ப்ளான் ஏற்படுத்தி அந்த வகையில் வறட்சியினைப் போக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வறட்சி நிவாரணப் பணியில் ஏரிகள், கண்மாய்கள், குளங்கள் ஆகியவை வெட்டப்படுகின்றன. எங்களுடைய பகுதியில் ஊருணிகள் நிறைய இருக்கின்றன. ஆனால் ஊருணிகளை வெட்டுவதைப் பொறுத்தவரையில் வறட்சி நிவாரணத்தின்கீழ் செய்வதற்கு வழி இல்லை என்று சொல்கிறார்கள். ஊருணி வெட்டுவதன் மூலம் தட்டுப்பாட்டை நீக்குகின்ற வகையில் தண்ணீர் கிடைக்கும். எனவே அந்த ஊருணிகளை ஆழப்படுத்துவதற்கு இத்திட்டத்தின்கீழ் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து ஊருணியில் உள்ள நீரின் மேற்பகுதி ஆவியாகப் போய்விடுவதைத் தடுக்க புதிய கெமிக்கல் ஒன்று தயாரித்திருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. அந்த கெமிக்கல் எங்களுடைய மாவட்டத்திற்கு முதலாவதாகக் கொடுக்கப்பட வேண்டும். அவற்றுக்கு நிரந்தரமான வகையிலே ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே உள்ள கண்மாய்களில் எல்லாம் முன்பு 6 மாதங்களுக்குத் தேவையான அளவுக்குக்கூட தண்ணீர் நிறைந்து இருந்தன. அவ்வளவு மிக ஆழமான கண்மாய்களாக இருந்தன. ஆனால் அவை எல்லாம் தற்போது மேடாகி 3 மாதத்திற்குத் தேவையான தண்ணீர்கூட அவற்றிலிருந்து கிடைக்காத நிலைமை இருக்கின்றது. எனவே அவற்றை எல்லாம் நவீன இயந்திரங்களைக் கொண்டு ஆழப்படுத்தி அவற்றிலே நீர் அளவை அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முன்னாள் மத்திய வேளாண்மைத் துறை இணை அமைச்சர் அவர்கள் பொதுக்கூட்டம் வாயிலாக ஒன்றை அறிவித்தார்கள். அதாவது மகாநதியிலிருந்து கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகள் வழியாக காவிரி, தாமிரபரணி ஆகிய தென் மாநிலங்களிலுள்ள நதிகள் வரையில் ஒரு இணைப்பினை ஏற்படுத்துகின்ற ஒரு சிறப்பான திட்டத்தை இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இணைப்பதாக பொதுக்கூட்டம் ஒன்றின் வாயிலாகத்



1983 மார்ச் 19] [திரு. இரா. அருணகிரி]

தெரிவித்தார்கள். எனவே இவ்வளவு நல்லதொரு திட்டத்தை எடுத்துக் கொள்கின்ற வகையில் மாநில அரசு மத்திய அரசோடு கலந்தாலோசனை செய்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த திட்டம் நிறைவேற்றப்படுமேயானால் ஆந்திரா மற்றும் ஒரிசா போன்ற மாநிலங்களில் இருப்பதைவிட அதிக வறட்சி உள்ள எமது பகுதிகளுக்கு நிரந்தர நீர்ப்பாசன வசதி ஏற்படும்.

அடுத்தபடியாக பெரியார் மேம்பாட்டுத் திட்டம் என்னுடைய தொகுதியிலே செயல்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட பாதி வேலைகள் முடிந்துவிட்டன. 5 கோடி ரூபாய் செலவில் அந்தத் திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்படுவதற்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களைத் பொறுத்த வரையில் அவற்றிற்குக் கொடுக்கப்படும் தொகை மிகவும் குறைவு. ஒரு சென்ட் நிலத்திற்கு 20 ரூபாய் 25 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஏன் இவ்வளவு குறைவான பணம் கொடுக்கப்படுகின்றது என்று கேட்டால் நீதிமன்றத்திற்குச் செல்லுங்கள் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 15 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனத்திற்கு அந்தத் திட்டம் பயன்படும் என்ற காரணத்தினால் அங்குள்ள மக்கள் எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் கொடுத்தும்கூட அவற்றுக்கு உரிய பணம் சரியாகக் கொடுக்கப்படவில்லை. அதற்கான விலையினை மிகக் குறைவாக நிர்ணயித்து இருக்கிறார்கள். எனவே ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு நல்ல விலையினை நிர்ணயித்துக் கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக அங்கே பாதிக்கப்பட்டிருக்கிற ஆதி திராவிட மக்களுக்கு இன்னும் கூட சரியான முறையில் மனை இடங்கள் கொடுக்கப்படவில்லை, அவர்களுக்குப் போதுமான நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை. அவை எல்லாம் கொடுக்கப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மட்டி கண்மாய் என்ற கண்மாயிலே 1,200 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. அதை நவீனப்படுத்த வேண்டும் என்று 17 லட்சம் ரூபாயில் திட்டமிடப்பட்டது. அது இப்போது தலைமைப் பொறியாளரிடமிருந்து திருப்பி அனுப்பப்பட்டு வந்துள்ளது. அது எதற்காகத் திருப்பி அனுப்பப்பட்டது என்று கேட்டால் டி.பி.எஸ்.சி. முதல் திட்டத்தில் இருக்கும்போது அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இப்போது அந்த திட்டம் இல்லை என்று சொல்கிறார்கள். அதற்கு ஆய்வு செய்வதற்காகக் கிட்டத்தட்ட 10,000 ரூபாய் செலவு செய்த பின்னால் இப்போது இந்தத் திட்டத்தில் எடுத்துக்கொள்வது இல்லை என்ற நிலையில் இருக்கிறார்கள். அதை நவீனப்படுத்தும் திட்டத்தில் உடனடியாக சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு இரா. அருணகிரி] 1983 மார்ச் 19

அடுத்தபடியாக 1976 லே வெள்ளம் ஏற்பட்டபோது கால்ப்பூர், மட்டியூர், சதுர்வேதி மங்கலம் போன்ற இடங்களில் எல்லாம் அணை உடைப்புகள் ஏற்பட்டன. ஆனால் ஒருசில இடங்களில் மாங்குடி, மலர்குடி போன்ற இடங்களில் அதற்குரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் கால்ப்பூர் போன்ற கிராமங்களில் ஏன் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்று கேட்டபோது முதலிலே செயல்படுத்தப்பட்ட திட்டம் எதன் அடிப்படையில் எந்த எட்டில் செயற்படுத்தப்பட்டது என்று எங்களுக்கு தெரியாது என்று பொறியாளர்கள் சொல்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை தெரிந்துகொண்டு உடனடியாக எந்தத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த வேண்டுமோ அந்த திட்டத்தின் கீழ் வேலையை துவங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கலோரப்பள்ளி பற்றி இப்போது எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்தில் அந்த அணை 4 கோடியே 55 லட்சம் ரூபாயில் திட்டமிடப்பட்டது. ஆனால் அணை கட்டப்பட்டு 3 ஆண்டு காலம் ஆகிறது. அதிலே முக்கால் வாசி வேலைகள் ஓரளவுக்கு முடிந்துவிட்டன. ஆனால் அது தனிநபர் ஒருவரால் தடை செய்யப்பட்டு வழக்கு மன்றத்தில் இருக்கிறது. அதை நீக்க இந்த அரசு தங்களால் ஆன முயற்சி எடுத்து உடனடியாக நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அணை வருகிற நேரத்தில் இது ஏன் வருகிறது என்று கேட்டபோது அந்த திட்டம் சிப்காட் நிறுவனத்துக்கு தண்ணீர் வசதிக்காகவும், அடுத்தப்படியாக விவசாயத்திற்காகவும் பயன்படுத்தப்படும். அதற்காக இந்த திட்டத்தினை செயற்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது சிப்காட்டில் கிடைத்த தொழில்களுக்கு தண்ணீர் இல்லாத காரணத்தினால் தொழில் பாதிக்கப்பட்டு விவசாயம் பாதிக்கப்பட்டு அவர்கள் வாங்கிய வட்டியைச் செலுத்த முடியாமல்இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக காவேரி நீரைப் பொறுத்த அளவில் புதுக்கோட்டை, இராமநாதபுரம், கிழக்கு முகவை எல்லாம் காவேரி உபரி நீரை பயன்படுத்துவதற்காக ஒரு திட்டம் வரை முறையில் இருக்கிறது. அந்த திட்டம் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்த உபரி நீர் வருகின்ற காலத்தில் இப்போது வழக்கு இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டாமல் பாக்கி நிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு நல்ல செயற்திட்டத்தினை நிறைவேற்றி வறட்சிப் பகுதிகளான புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்கு கிடைக்கும்படி அதைச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 19] [திரு. இரா. அருணகிரி]

ஆழ் குழாய் கிணறுகள் என்னுடைய பகுதியில் கேட்டால் டி.பி.எஸ்.சி.தான் காரணம் என்று சொல்கிறார்கள். எங்களுடைய மாவட்டம் வறட்சியாக அறிவிக்கப்பட்டது. இன்னும் குடிநீர் குழாய்கள் அமைக்கப்படவில்லை, விவசாயத்திற்கு ஆழ் குழாய் கிணறுகள், சமுதாய கிணறுகள் எதுவும் அமைக்கப்படவில்லை ஏன் என்று கேட்டால் உங்களுடைய திட்டங்கள் டி.பி.எஸ்.சி.யில் வரவில்லை. என்று எதற்கெடுத்தாலும் அதையே காரணமாக சொல்கிறார்கள். அந்த திட்டத்தை உடனடியாக செயற்படுத்தி ஆழ்குழாய் கிணறுகளையும் அதில் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சி ஏற்படும்போது எல்லாம் இந்த மண்ணை எடுக்கும் வேலையை விடுத்து நிரந்தரமான ஒரு நீர்பாசனத் திட்டத்தையும், நிரந்தரமான சமுதாய கிணறுகளையும், நிரந்தரமான ஆழ் குழாய் கிணறுகளையும் அமைக்குமாறு ஒரு நல்ல திட்டத்தினை கொண்டுவரவேண்டுமே ஒழிய வெட்டிய மண்ணையே வெட்டி காண்டிராக்ட்காரர்களை பணக்காரர்களாக மாற்றும் ஒரு வழியை செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக இங்கே இருக்கின்ற மானியத் தொகையை கொடுக்கும்போது அதற்குரிய அதிகாரிகள் மானியத் தொகையில் ஒரு பங்கை கொடுக்கிறார்கள். நாம் ஆழ் குழாய் கிணறுகளை போடும்போது அதற்கு கொடுக்க வேண்டிய மானியத்தில் நீங்கள் ஏதாவது ஒரு பங்கை கொடுப்பதன் மூலமாகத்தான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

அதேபோல் கடன் வாங்கி கட்டிய கிணறுகளில் ஊற்று இல்லாமல் இருக்கிறது. அதனால் அந்த விவசாயி மேலும் கடன்காரர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அந்த விவசாயிகள் எந்த விதமான ஊற்றும் இல்லாமல் கிட்டத்தட்ட 30 கஜம் 40 கெஜம் என்று வெட்டியும் கூட அதில் வெறும் பாறையாக இருக்கிறது. பாறையாக இருப்பதால் அதற்குரிய கடனை கழிக்க வேண்டும் என்று கேட்கிறபோது அதற்கு பரிசிலனை செய்கிறோம் என்று சொல்லி கிட்டத்தட்ட 6 வருட காலம் அந்த கடனைத் தள்ளுபடி செய்யாமல் அப்படியே இருக்கிறது. ஆனால் அந்த கடனை வசூல் செய்வதற்கு வருகின்ற அதிகாரிகள் பெரிய வசதி படைத்தவர்கள் போல் 5, 6 கார்களில் வந்து திருப்தியாக சாப்பிட்டு விட்டு அந்த கணக்கையும் அந்த விவசாயிகள் தலையில்

எழுதக்கூடிய ஒரு நிலைமையை மாற்ற வேண்டும் என்று இந்த மன்றத்தின் வாயிலாக கேட்டுக்கொண்டு விடை பெறு கிறேன். நன்றி. வணக்கம்.

[முற்பகல் 11-30]

**திரு. ஜி.கே. சுப்பிரமணியம்:** மாண்புமிகு மாற்றுந் தலைவர் அவர்களே, நீர்பாசனத் துறையைப் பொறுத்தமட்டிலும் இன்றைக்கு இயற்கையாக வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவிரி என்று நாம் காவியங்களிலே படித்திருக்கிறோம். ஆனால் அது வெறும் கதையாக ஆகிவிட்ட இந்தச் சூழ்நிலையிலும் நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியிலே இதற்கு முன்னுரிமை கொடுத்து அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்து நீர்ப்பற்றாக் குறையைப் போக்க மாபெரும் பாசனத் திட்டங்களை நிறை வேற்றுவதில் தமிழகம் முன்னோடியாக இருக்கிறது. அதற்காக புரட்சித் தலைவர் அவர்களுடைய இந்த அரசை அவர் தலைமையின்கீழ் இயங்கிகொண்டிருக்கிற இந்த நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்,

அதே நேரத்திலே நீர்வற்றிய நிலையில், நெருக்கடிமிகுந்த நிலையில் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் முறையாகப் பங்கீடு செய்ய காவிரி டெல்டா பகுதியில் எல்.பி.பி.-யிலிருந்து தண்ணீர் கொடுத்து மிகவும் அற்புதமாகச் சமாளித்துக் கொண்டிருக் கிறார்கள் என்பது பாராட்டுக்குரிய ஒன்று. வறட்சி தமிழகத்திற்கு புதிதல்ல, முன்பு ஆண்டவர்கள் காலத்திலேயும் வறட்சி இருந்தது, அதற்கு முன்பு ஆண்டவர்கள் காலத்திலேயும் வறட்சியை நாம் சந்தித்து இருக்கிறோம். டெக்னிக் கலர் அரிசியை வாங்கி சாப்பிட்ட கதையை நாம் மறந்துவிடவில்லை. இயற்கையை காரணம் காட்டி மாற்று கட்சி நண்பர்கள் எம்,ஜி.ஆர். ஆட்சியில் பஞ்சம் எம்.ஜி.ஆர். ஆட்சியில் மழைநீர் வரவில்லை எம்.ஜி.ஆர். ஆட்சியில்கடுமையானவறட்சி பாரதியார் பாடிய பாடலுக்கு ஒப்ப 'நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி, வஞ்சனை செய்வாரடி கிளியே, வாய்ச்சொல்லில் வீரரடி, என்று சொன்னதைப்போல் வாய்வீரம் பேசிக்கொண்டிருக்கிறார்களே தவிர நிலைமையைச் சமாளிப்பதற்காக அவர்கள் என்ன ஆலோசனை களைத் தருகிறார்கள் ஆகாத பெண்டாண்டியின் கால் பட்டால் குற்றம், கைபட்டால் குற்றம் என்ற போக்கிலே அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் மிகத் தெளி வாகக் குறிப்பிட்டிருக்கிறார்க்ள் ஆளுங்கட்சிஎன்னதான் பட்டத்து யானையாக இயங்கினாலும்எதிர்க்கட்சிகள் எதிர் கட்சிகளாக இல்லாமல் அங்குசமாக இருந்து தேர்தலில் வேட்பாளர்களாக



இருந்தவர்கள் மக்கள் மன்றத்திற்குவந்ததும் மக்கள் பொறுப்பாளர் களாக மாறி ஆட்சியாளர்களுக்கு உதவியாக இருந்திடல். வேண்டுமென்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தினார்கள் ஆகவே சட்டமன்றத்தில் வந்து உட்காருகின்றவர்கள் மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச்சொல்லி. . .

**திரு. என். சங்கரய்யா :** அனாவசியமாக சர்ச்சைகளை உருவாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நீர்ப்பாசனத் தைப்பற்றி பேசினால் பரவாயில்லை. ஆனால் அவர்கள் பொதுவாக சர்ச்சைகளைக் கிளப்பும் வகையில் பேசிக்கொண் டிருக்கிறார்கள், அதற்குப் பின்னாலே பிரச்சினைகள் எல்லாம் வரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுந் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்)** மானியக் கோரிக்கையிலே உறுப்பினர் பேசவேண்டும்.

**திரு. ஜி. கே. சுப்ரமனியன்:** அவ்வப்போது குடுபோடுவதைத் தவிர்த்து 5 ஆண்டுகளாக வான்பொய்த்தாலும் பாசனத்திற்கு மாத்திரம் என்று திட்டத்தை செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவசர காலத்திலே பயன்படுத்தகூடிய முறையிலே ஸ்டோரேஜ் ரிசர்வாயர் என்ற முறையிலே கட்டினால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே ஒரு ஸ்டோரேஜ் ரிசர்வாயர் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இதுபோன்ற வறட்சிக் காலத்திலே அதிலிருந்து நீரை எடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கும். பாண்டியாறு-புன்னம்புழா திட்டத் த துரிதப்படுத்த வேண்டும். அதன் மூலமாக பெரியார் மாவட்டத்திற்கு நீர்ப்பாசன பற்றாக்குறையைப் போக்குகின்ற நிலைமைக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள் நாங்களும் உங்களோடு ஒத்துழைப்புத் தருகிறோம் என்று. இதை நான் எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால் அப்பர் பவானித் திட்டம் அவர்கள் காலததில் 100 கோடி ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டு இன்றைக்கு அது 125 கோடியாக ஆகி திட்டம் ஆய்விலே தான் இருந்துகொண்டிருக் கிறதே தவிர மிகப் பெரிய திட்டங்கள் கொண்டுவந்து நீர்த்தேக்கங்களை உருவாககுகிறபோதுதான் பிரச்சினைகள் தீருவதற்கு வாய்ப்பு ஏற்படும். இப்படிப்பட்டத் திட்டங்களை செயல் படுத்துகிற போது மத்திய அரசை நாம் வேண்டி நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல மத்திய

அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டார். நீங்கள் கேட்கவேண்டிய முறையிலே கேளுங்கள். நாங்கள் கொடுக்கவேண்டியதை கொடுக்கிறோம் என்று குறிப்பிடுகிறார்கள். மத்திய அரசிடம் எதற்கெடுத்தாலும் கைநீட்ட வேண்டிய நிலையில் அவர்கள் கேட்க வேண்டிய முறையில் கேளுங்கள், தரவேண்டியதை தருகிறோம் என்று குறிப்பிடுகிறார்கள். நாலரை கோடி மக்களின் நம்பிக்கை நாயகன், புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் உண்ணா நோன்பு இருந்து இந்த மக்களுடைய நிலையை அடையாளம் காட்டியிருக்கிறார். நாங்கள் என்ன ஆந்திரா முதலமைச்சர் போல நீங்கள் உங்கள் மடியிலிருந்து எடுத்துக் கொடுக்கவில்லை; நான் என் வீட்டுச் செலவுகளுக்காக கேட்கவில்லை; என்று கடுமையாக கேட்கிறோம். பண்பு உள்ளத்தோடு பகைவருக்கும் அருளுகின்ற நல்ல நோக்கத்தோடு புரட்சித் தலைவர் கேட்டார்கள். ஒருவேளை சுந்தரராஜன் அவர்கள் விருப்பத்திற்திணங்க என்னைப் போன்றவர்கள் அந்த டெல்லிப் பட்டணத்திற்குச் சென்று அம்மையாரிடத்திலே உட்கார்ந்து கொண்டு,

இன்னமும் பாராமுகம் ஏனம்மா
தமிழ் நாட்டை பாரம்மா,

என்று ஆண்டிப்பண்டாரம் போல கையிலே திருவோட்டை வைத்துக்கொண்டு கேட்கவா முடியும்? கேட்கவேண்டிய சூழ்நிலையைத் தான் ஏற்படுத்துகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

"கண் இல்லையோ உனக்கு

காதென்ன செவிடோ

தமிழ்நாட்டு நிலையை நீ பாரம்மா." (கூச்சல், குழப்பம்)

திரு. இல.பலராமன்: மாற்றுத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த அவை மிகவும் புனிதமானது: மிகவும் தேவையானது. என்ற உணர்வு இருக்கிறபோது நேரமும் அங்கத்தினர் தன்னுடைய இசைத் திறமையை இந்த அவையிலே காண்பிப்பது நியாயம் தானா? இந்த பாடலை இந்த அவையில் வைத்து இந்த் அவையை ஒரு கச்சேரி அவையாக மாற்றுவது நியாயம் தானா? இதற்கு நீதி வழங்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு எம்,எஸ். மாணிக்கம்): இதற்கு முன்னால் பாடுவது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜி.கே. சுப்ரமணியம்: இதிலே புனிதம் இருக்கிறதா, இல்லையா என்பது இந்த அவையில் முன்னால் நடந்திருக்கிற ***நடவடிக்கைகளை எல்லாம் நீங்கள் சீர்தூக்கிப் பார்த்தால் அப்போது தெரியும். இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவ்வளவோ காரசாரமாக் ***எல்லாம் செய்து பேசி அவையே நடக்கவிடாமல் செய்த நிகழ்ச்சிகள் எல்லாம் இருக்கின்றன. (கூச்சல். குழப்டம்)

திரு: என்.சங்கரய்யா: மாற்றுத்தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது * * *

என்றெல்லாம் பேசியிருக்கிறார். அவைகளை அவைக்குறிப்பிலே இருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம்.எஸ்.மாணிக்கம்): * * * என்ற வார்த்தைகளை அவைக்குறிப்பிலே இருந்து நீக்கிவிடுகிறேன். நேரம் குறைவாக இருப்பதால் சீக்கிரமாக மானியக் கோரிக்கை மீது பேசி முடித்துவிடுங்கள்.

திரு. ஜி.கே.சுப்ரமணியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, டெல்லியில் உட்கார்ந்து கொண்டு, "கண் இல்லையோ உனக்கு காதென்ன செவிடோ"...

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம்.எஸ்.மாணிக்கம்): மானியக் கோரிக்கை மீது பேசுங்கள். பாடல் வேண்டாம்.

திரு. ஜி.கே.சுப்ரமணியன்: மானியக் கோரிக்கைக்கு இதிலே சம்பந்தமிருக்கிறது என்ற காரணத்தினாலே இந்த பாடலை பாடித்தான் தீர வேண்டும். அதிலே தவறு இல்லை.

"கண் இல்லையோ உனக்கு
காதென்ன செவிடோ
தமிழ்நாட்டின் குறையை நீ தீராய் அம்மா
இன்னமும் பாரா முகம் ஏனம்மா
தாய் இருக்க பிள்ளை ஏங்கலாமா

---

* மாண்புமிகு மாற்றுத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

ஏழை இந்தியா என்ற வெறும் பேச்சு பேசலாமா
அன்னை இந்திரா காந்தி கொஞ்சம்
தமிழ் நாட்டை பாரம்மா
இன்னமும் பாரா முகம் ஏனம்மா''

இப்படி எல்லோரும் சேர்ந்துபோய் டெல்லிப் பட்டணத்திலே அந்த அத்தாணி மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டு யாசகமா கேட்டுக்கொண்டிருக்க முடியும்? இந்த சூழ்நிலையில் பவானி சாகரைப் பொறுத்தவரையில்,.. (மணியடிக்கப்பெற்றது)

(முற்பகல் 11-40)

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பாசன மசோதாவின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே பெரிய நீர் ஆதாரங்கள் இல்லாத ஒரு நிலைமையில், இந்த நாட்டில் மகாநதியை யும் கங்கையையும் இணைக்கின்ற மாபெரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நீண்டபல ஆண்டுகளாக மத்திய அரசு ஆலோசனை சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அந்தத் திட்டங்களை நிறைவேற்றி தமிழகத்தினுடைய நீர் வளத்தைப் பெருக்குவதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று அமைச்சர் அவர்கள் கொள்கை அறிவிப்பிலே, பெரியார்—வைகை அணையிலே சீர்திருத்தம் செய்வதன் மூலமாக ரூ.15 கோடியைச் செலவழித்து 40,000 ஏக்கர் களுக்கு மேல் நீர்வளத்தைப் பெற முடியும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதற்கு உலக வங்கியிடத்திலிருந்து கடன் பெற்று, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். உலக வங்கியிடத் திலே பெறுகின்ற கடன்களுக்கு என்ன வட்டிவீதங்கள் விதிக்கப் பட்டிருக்கின்றன. இப்படி சீர்திருத்தம் செய்வதன் மூலமாக அந்தப் பகுதி விவசாயிகளுக்குத் தீர்வையை அதிகப்படுத்தக் கூடிய வாய்ப்பு ஏற்படுமே, இவை பற்றியெல்லாம் அரசினுடைய கொள்கை என்னஎன்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன் இப்படிப்பட்ட கால்வாய்களைச் சீர்திருத்துவதன் மூலமாக சிமெண்ட் ரிவிட் அடித்து கால்வாய் அமைப்பதன் மூலமாக,

மாவட்டங்களிலே உள்ள கால்வாய்களுக்கு அக்கம்பக்கத்திலே உள்ள கிணறுகள் அடியிலே உள்ள நிலத்தடி நீர் பாதிக்கப்படும் என்று அந்தப்பகுதி மக்கள் அச்சப்படுகிறார்களே அதைத் தமிழக அரசு ஆலோசனை செய்ததா என்பதையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன், ஏனென்றால் ஒரு திட்டம் நிறைவேற்றுகின்ற நேரத்தில், அந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற பலன்கள் என்ன' அதன் மூலம் கிடைக்கின்ற வளங்கள் என்ன என்பதை அரசு பரிசீலித்து, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்திலே, அவை பற்றி அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழகத்தை எடுத்துக்கொண்டால், பல்வேறு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமுலாக்குவதற்கு நீண்ட நெடுங்காலமாகவே கோரிக்கைகள் இருந்து வருகின்றன. இன்றைக்குப் பெரிய நீர் ஆதாரங்கள் இல்லாத காலத்தில், இத்தகைய சிறிய திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாகத்தான் தமிழகத்தினுடைய வறட்சி நிலைமையைப் போக்கமுடியும். அரசினுடைய குறிப்பின் 4-ஆம் பக்கத்திலே, ஏற்கனவே 15 திட்டங்களும் 5-வது பக்கத்திலே 25 திட்டங்களும் ஆய்விலே இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த 15 திட்டங்கள் என்ன, என்ன திட்டங்கள்? அந்த 23 திட்டங்கள் என்ன, என்ன திட்டங்கள்? ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் பதிலுரையின் பொழுது கூற முடியாவிட்டாலும், அதை ஒரு அறிக்கையாக மாமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்தால், அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைத் தெரிந்துகொள்ள மாமன்ற உறுப்பினர்களுக்கு உதவிகரமாக இருக்கும், என்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, பல்வேறு திட்டங்கள் ஆய்விலே இருப்பதாகப் பல்லாண்டுக்காலமாக சொல்லப்பட்டு வருகின்றது. குறிப்பாக, எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், வாணியம்பாடிக்கு அருகிலே, ஆண்டியப்பனூர் அணை என்பதும் போளூருக்குப் பக்கத்திலே செண்பகத்தோப்புத் திட்டமும் ஆய்விலே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதே போல், அமெதி பக்கத்திலே அரசம்பட்டு கிராமத்திற்குப் பக்கத்திலே ஒரு அணை கட்டுவதற்கு ஆய்விலே இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே 1954-லே பெருந்தலைவர் காமராஜர் போட்டியிட்ட நேரத்திலேயிருந்து இன்றைக்கு வரையிலே ஒரு ஆணை ஆய்விலே உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1983 மார்ச் 19

1971-ஆம் ஆண்டில் அந்த அணையைக் கட்டுவதற்கு கலைஞர் அவர்கள் அடிக்கல்லை நாட்டினார்கள். ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்டு திட்டம் முடிக்கப்பட்டு விட்டது, சேங்க்ஷன் கொடுக்கப்பட்டு விட்டது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அடிக்கல்தான் நாட்டப்பட்டதே தவிர வேலைகள் ஆரம்பிக்கப்பட வில்லை. 1981-ஆம் ஆண்டிலே அமைச்சரிடத்திலே கேள்வி கேட்ட பொழுது, திட்டத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று அப்பொழுது சொன்னார்கள். 1982-83-ஆம் ஆண் டிலே முடியும் என்று சொன்னார்கள் 1982-83 ஆம் ஆண்டு முடிந்து விட்டது. இதைப்பற்றி அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து 1982-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே இந்த நிதி ஆண்டிலேயே அந்த வேலைகளை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கடிதம் கூட எழுதினேன். ஆனால் அது இன்னும் எடுத் துக் கொள்ளப்பட வில்லை. இப்படிப்பட்ட பல திட்டங்கள் மாநிலத்தில் பலயிடங்களில் இருப்பதாகச் சொல்லப்படுகின் றனவே தவிர இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

மதுரை மாவட்டத்தில் வேடசந்தூருக்குப் பக்கத்தில் உள்ள திருமலைத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள், ஏற்கனவே உடைந்து விட்ட குடகனாறு திட்டம், பழனிக்கு அருகிலே 5 கோடி ரூபாய் அளவில் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு இதுவரை யில் நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற பச்சையாறு திட்டம் ஆகியவைகள் இந்த நிலைமைகளில் தான் இருக்கின்றன. இப்படி ஆய்வு ஆய்வு என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே தவிர அவைகள் நிறைவேற்றப்படவில்லை. இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம்தான் இனிமேல் தமிழ்நாட்டிற்கு வாழ்வு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் வேளாண்மைத் துறைக்கான பட்ஜெட்டின் மீது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் கூறி னார்கள், 1982-83 ஆம் ஆண்டில் 28 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி கிடைத்தது; 1983-84 ஆம் ஆண்டில் 69 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியை எதிர்பார்க்கிறோம் என்று சொன் னார்கள். நீர்ப்பாசன வசதி இல்லாமல் இந்தக் குறிக்கோளை எப்படி அடைய முடியும் என்பதை அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களை அமைப்பதன் மூலமாகத்தான் மழைக் காலங்களில் பெய்கின்ற தண்ணீரைத் தேக்கி வைத்து, அந்தந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் நீர்ப் பாசனத்தைப் பெறக் கூடிய நிலைமை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1983 மார்ச் 19] [திரு. கே.ஆர். சுந்தரம்]

அதோடு மட்டுமல்லாமல், தமிழகத்திலே இன்றைக்குப் பல் வேறு கிராமங்களில், இந்த வறட்சிக் காலத்தில், சில பல சமுதாயக் கிணறுகளை வெட்டினார்கள். இப்படிப்பட்ட சமு தாயக் கிணறுகளை நீர் ஆதாரம் உள்ள இடங்களில் அதிகமாக அமைப்பதன் மூலம், இரண்டு மூன்று ஏக்கரா நிலம் உடையவர் களும் பயன் அடையும் வகையில் உதவி செய்ய முடியும். எனவே, எங்கெங்கெல்லாம் சாத்தியமோ அங்கங்கெல்லாம் அத்தகைய சமுதாயக் கிணறுகளை எடுக்க உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் எத்தகைய நீர்ப் பாசனத் திட்டமும் இல்லை. சாத்தனூர் அணைக்கட்டு இருந்தாலும் அதனால் எங்கள் மாவட்டத்திற்கு முழுப் பலன் கிடையாது. திருவண்ணா மலையில் ஒரு பகுதிக்கும், தென் ஆற்காடு ஜில்லாவுக்கும்தான் போகிறதே தவிர, எங்கள் மாவட்டத்தில் முழுப் பயனும் கிடைக்கவில்லை. தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக அதிக உற்பத்தியைச் செய்யக்கூடிய மாவட்டம் வட ஆற்காடு மாவட்டமாகும். அந்த வட ஆற்காடு மாவட்டத்திலேயே இன்றைக்கு ஆந்திரா மாநிலத்திலுள்ள அரிசியை நம்பி வாழும் நிலைமை இருக்கிறது. ஆகவேதான் இத்தகைய திட்டங்களைப் பின் தங்கிய மாவட்டங்களில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே நகைச்சுவையாகக் கூட இங்கே பேசினார்கள். சேர நாட்டுப் பிரதேசத்திலிருந்தும், பாண்டிய நாட்டுப் பிரதேசத் திலிருந்தும் வந்த அமைச்சர்கள் தங்கள் தங்கள் மாவட்டத்தைப் பார்த்துக் கொள்கிறார்கள் என்ற அச்ச உணர்வு தொண்டை மண்டல மக்களுக்கு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய நீர்ப் பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் எங்கள் மாவட்டத்தில் உள்ள காவேரிப்பாக்கம் பெரிய ஏரி சுமார் 300 ஆண்டுக் காலமாக நீர்ப்பாசனத்தை தந்து வருகின்ற ஏரி யாகும். அந்த ஏரியின் கரைகளை பலப்படுத்த வேண்டும்.

தூசி மாமண்டூர் ஏரியைப் பலப்படுத்த வேண்டும். போளூர் பெரிய ஏரியைப் பலப்படுத்த வேண்டும்.

பாக்கம் ஏரியிலிருந்து வரும் கால்வாய் தூர்ந்துபோய் இருக் கிறது. அதைப்பற்றி டி.டி.சி. கூட்டத்திலும் சொல்லியிருக்கி றேன். குடியாத்தம் பெரிய ஏரி, தாராபடவேடு ஏரி ஆகிய ஏரிகளையும் பலப்படுத்த வேண்டும். 400 ஏக்கர் நிலங்களுக்கு

பாயக் கூடிய ஏரி ஒன்று இருக்கிறது. அந்த ஏரியில் கடந்த 15 ஆண்டுக் காலமாகத் தண்ணீர் இல்லாமல் இன்றைக்கு அங்கே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. மழைக் காலங்களில் பாலாற்றில் தண்ணீர் வரும் பொழுது அநேக பக்கங்களில் கால்வாய்கள் இருக்கின்றன். ஆனால் அவைகளை எல்லாம் தூர்ந்து போய்க் கிடக்கின்றன. இவைகளைப் பற்றிக் கேட்கும் பொழுது, இந்தக் கால்வாய்களைக் குடி மராமத்து செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இன்றைக்குக் குடிமராமத்து செய்யும் நிலைமை கிராமங்களிலே இல்லை. ஆகவே, வறட்சிக் காலங்களில் இத்தகைய நீர் வரத்துக்களைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்றும், அவைகளை நல்ல முறையில் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நிலத்தடி நீரைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால் மாநிலம் முழுவதிலும் மலையோரங்களிலும் அல்லது தேவைப்பட்ட இடங்களிலேயும் நீர்த் தேக்கக் குட்டைகள் என்று சொல்வார்களே, அந்த நீர்த் தேக்கக் குட்டைகளை அமைப்பது இன்றைக்கு மிகவும் அவசியமாகும். என்னுடைய தொகுதியில் சேம்பள்ளி, தட்டப்பாறை மூல கொள்ளை, முதலியார் ஏரி, வலசை, கணவாய் மோட்டூர், கொட்டமிட்டா. சேத்துவண்டி போன்ற பல்வேறு இடங்களில் இத்தகைய அமைப்புகளை அமைக்க வேண்டுமென்று டி.டி.சி. கூட்டத்தில் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். அவைகள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள்.

மாவட்டந்தோறும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நீர்ப்பாசன மாநாட்டைக் கூட்டி, ஆதாரம் தேட வேண்டும் என்றும், பரிசீலிக்க வேண்டும் என்றும் மாவட்ட அதிகாரிகளுக்குச் சொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. மூன்றாண்டுக் காலமாக நான் உறுப்பினராக இருக்கிறேன். எங்கள் மாவட்டத்திலே இந்த மாநாடே நடத்தப்படவில்லை. இப்படிப்பட்ட மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால் கூட்டப்படவில்லை.

(முற்பகல் 11-50)

அதே போல் கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கே ஒரு அணையைக் கட்டுவதற்கு ஏற்கனவே திட்டம் இடப்பட்டு, அந்த அணையைக் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் கூட இதுவரை துவக்கப்படவில்லை, அதைத் துவக்க வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். மாம்பழத்துறை அணை ஒன்றும் நீண்டகாலமாக கோரிக்கையாக இருந்து கொண்டு வருகிறது. அது ஒரு சிறிய நீர்த்தேக்கம். குழித்துறை





ஆற்றிலிருந்து வருகின்ற கால்வாய்களும் அந்தத் திட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதேபோல் பள்ளிக்குட்டம் 1977-லிருந்து ஆய்வில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக தமிழகத்திலே இன்றைக்கு குடி தண்ணீர் பிரச்சினை, வறட்சி காலங்களில் தவிர்க்க முடியும் என்று பலவேறு உறுப்பினர்கள் சொல்லி இருக்கிறார்கள். நிரந்தரமாக பலன் தரத்தக்க முறையில் அந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் எந்தவித வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை. நிலத்தடி நீரைப் பெருக்குவதில் அரசு முன்வர வேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

*திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட பாசனம், மற்றும் நிலத்தடி நீர் பற்றி பேசுகின்ற நல்ல வாய்ப்பினை அளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'' என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். அப்படிப்பட்ட விவசாயத்திற்கு இன்றியமையாதது நீர் ஆகும். அதுவும் இது போன்ற வறட்சிக் காலத்திலே அந்த நீர்ப்பாசனத்தை மிகவும் திறமையாகச் செயல்படுத்தி வருகின்ற அமைச்சரவர்களுக்கு முதலில் என் நன்றியையும், பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, அது நல்ல காலத்திலேயே வறட்சியான பகுதியாகும். ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திலே நிலத்தடி நீர் இல்லை. அங்கே மழை பெய்த நல்ல காலத்திலே கூட நிலத்தடி நீர் இல்லை என்று ரெட்டியார் சத்திரத்தில் கிணறுகள் வெட்டுவதற்குக் கடன் கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட வறண்ட பகுதி ரெட்டியார் சத்திர ஊராட்சி ஒன்றியப் பகுதியாகும். அந்தப் பகுதியிலே, 2, 3 திட்டங்கள் பன்னெடுங் காலமாக இங்கே கோரிக்கையாக வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டமன்றத்தில் பேசுகின்றபோதெல்லாம், அந்தக் கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறேன். இன்றைய தினமும் அதை வைத்திருக்கிறேன். அத்திட்டம் சோத்தால்நாயக்கன் கோம்பை எனப்படும் கீழ்கோம்பை திட்டமாகும். இன்று அமைச்சரவர்களை விடப்போவது இல்லை. எப்படியாவது கோரிக்கை பற்றி உறுதிமொழி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் திட்டத்தைப் பற்றி நான் 2, 3 முறை வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். மிகவும் வறண்ட பகுதியான அந்தப் பகுதியிலே, அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், 4, 5 பஞ்சாயத்துக்கள் பயன்பெறும்.

4, 5 பஞ்சாயத்துக்கள் பயன்பெறுகிற அதே நேரத்தில், அங்கே இருக்கிற மக்கள் பன்னெடுங் காலமாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற அவர்களுக்கு, வாழ்வு அளிக்கக் கூடிய வகையில் அது அமையும் என்று தெரிவித்து, அது எப்படியும் இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சரவர்கள் தங்களது உரையிலே அது குறித்து, எங்களுக்கு ஆதாரவான ஒரு வழியை வகுத்து, திட்டம் நிறைவேற்றப்படும் என்ற அறிவிப்பைக் கொடுக்க வேண்டுமென்று உரிமையோடு, உறுதியோடு, பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல் என்னுடைய தொகுதியில் புல்வெட்டு கண்மாய் என்ற ஒரு திட்டம் பன்னெடுங்காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிற திட்டம். அந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், அது நிறைவேற்றப்பட்டால், அதிலிருந்து ஒரு 10-க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு, கால்வாய் இணைத்தால், அதன் மூலம் செம்பட்டி போன்ற மேடான பகுதியிலே இருக்கிற 10-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அது போலவே நாயோடையை குட்டைத் திட்டமாக செயல்படுத்தப்பட்டிருக்கின்றது. அதை விரிவு படுத்தி, பெரிய திட்டமாக்கினால், அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு பயன் பெறும் வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது போல் திண்டுக்கல் நகரத்திற்கு, எனது பகுதியான காமராஜ் நீர்த்தேக்கத்திலிருந்து தான் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல்சுற்றியுள்ள மக்களும், அந்தப்பகுதியிலிருந்துதான்குடி தண்ணீர் எடுக்கிறார்கள். ஆக அதையும் தூறு எடுக்க வேண்டும். அது போல் என்னுடைய பகுதியில் மருதா நதி என்று ஒரு அணை இருக்கிறது. அதிலிருந்து என்னுடைய பகுதிக்கு அதிகமாக பாசனத்திற்கு நீர் விடாமல், அருகிலே இருக்கக் கூடிய நிலக்கோட்டைக்கு அதிகமாக நீர் விடுகின்றார்கள். அந்த மருதா நதியிலிருந்து வடக்கு பகுதியாக வருகின்ற ஒரு கால்வாயை இன்னும் ஒரு கிலோ மீட்டர் நீட்டினால், என்னுடைய தொகுதியைச் சார்ந்த சித்தரேவு, நெல்லூர், சிங்காரக்கோட்டை, ஒட்டுப்பட்டி, நல்லாம் பிள்ளை போன்றபகுதிகள் பயன்பெறும்என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஆரம்பத்திலேயே எடுத்து வைத்த சோத்தால் நாய்க்கன் கோம்பை திட்டத்தைப் பொறுத்தவரை இங்கேயிருக்கின்ற பொறியாளர்கள் அதைக் குட்டைத் திட்டமாக மாற்றி அனுப்பியிருப்பதாக கேள்விப்படுகிறேன். அந்த அளவுக்கு இந்தத் திட்டத்தை போட்டு முடித்தால் அதனால் நல்ல பலன் இருக்காது. எனவே அந்த திட்டத்தை விரிவுபடுத்தி அதை பெரிய அணையாக கட்டி அந்தத் பகுதியிலே இருக்கின்ற நிலங்களுக்கு நீர் வருகின்ற அளவிற்கு பெரிய திட்டமாக நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அதேபோல் செங்கை மாவட்டத்திலே இரண்டாவது மிகப் பெரிய ஏரியாக உள்ள உத்திரமேரூர் ஏரி நீண்டகாலமாக ஆழப்படுத்தப்படாமல் இருக்கிறது. இதற்கு ஏறக்குறைய 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கி ஆழப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றையதினம் நம்முடையமாநிலம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தவறட்சி என்பது 2,3 ஆண்டுகளுக்கு ஒரு முறை வருவது வழக்கமாகிவிட்டது. இதற்கு எல்லாம் என்ன காரணம் ? பல ஆண்டுகளுக்கு மேலாக கங்கை காவிரி இணைப்புஎன்றுபிரச்சினைவாயளவிலே, பேச்சளவிலேஇருக்கிறது. ஏன் மத்திய அரசு இந்தப் பெரிய திட்டத்தைநிறைவேற்றுவதற்கு தயக்கம் காட்டுகிறது? கங்கை காவிரியை இணைத்து விட்டால் தமிழகத்திலே இருக்கின்றவர்கள் செழிப்படைவார்கள். அப்படி செழிப்படைந்துவிட்டால் மத்திய அரசிலே இருக்கின்றவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழே வரமாட்டார்கள் என்ற எண்ணமா? நீங்கள் இதைத் தள்ளிப்போட்டுக்கொண்டு வருவதற்கு காரணமா என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதேபோல் காவிரி நீர்ப் பிரச்சினை. இதைப் பொறுத்த வரையில் இந்த உடன்பாடு 1974-லே முடிந்துவிட்டாலும், இப்போது 9 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. அதைப் புதுப்பிப்பதற்கு மத்திய அரசு பொறுப்பிலே இருக்கின்றவர்கள் முன்வரவில்லை. இரண்டு மாநிலங்களையும் அழைத்து வைத்து அதைப் பேசித் தீர்வு காண்பதற்கு ஏன் முன் வரவில்லை என்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்?

அதேபோல் இன்றையதினம் அனைத்து நதிகளையும் தேசியமயமாக்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் 5, 6 ஆண்டுகளுக்கு முன்பாகவே மிகத் தெளிவாக தன்னுடைய திட்டமாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நதிகளை தேசிய மயமாக்கிவிட்டால் இன்றைய தினம் நாட்டிலே இருக்கின்ற பிரச்சினை சுலபமாக தீர்வு காணமுடியும். அப்படிப்பட்ட ஒரு நல்ல கொள்கையை மத்திய அரசு எடுத்துக் கொண்டு நதிகளை எல்லாம் தேசிய மயமாக்க வேண்டும். இரண்டு மாநிலங்களிலே இருக்கின்ற பிரச்சினைகளுக்கு அப்போதுதான் சுலபமாக தீர்வு காண முடியும். அந்த வகையிலே இந்தக் கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசை இந்த மன்றத்தின் மூலமாக நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆ. வெள்ளைச்சாமி] [1983 மார்ச் 19

அதேபோல் கேரளாவிலே மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆறுகளின் மூலம் தண்ணீர் வீணாகக் கடலிலே சென்று கலக்கிறது. அதையெல்லாம் கிழக்கே திருப்பிவிட்டால் தமிழகத்திலே வறட்சியால் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டம், கோவை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் பயன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்கு நம்முடைய தமிழக அரசு முனைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையிலே மத்திய அரசு தலையிட்டு இந்தப் பிரச்சினையிலே சுலபமான வழியிலே தீர்ப்பதற்கு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த விசயத்தில் மத்திய அரசு பாராமுகமாக இருக்கக்கூடாது. இது போன்ற பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டால் மாநிலத்தில் நல்ல நிலைமை ஏற்படும். அது நாட்டுக்கும் நல்லது. ஆகவே இது போன்ற திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு ஒத்துழைப்புக் கொடுத்து திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84-ஆம் ஆண்டில் பாசனத் துறை, பாசனம் குறித்த மூலதனச் செலவு மானிய கோரிக்கையின் மீது நான் என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். நீரின்றி அமையாது உலகு என்பதற்கு ஏற்ப, வேளாண்மைப் பணிகள் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு பாசனத்துறையால் தான் முடியும் என்பதும் உணவுத் துறைக்கு உயிர் ஊட்டுவது பாசனத்துறைதான் என்றாலும் பாசனத் திட்டங்களை ஆய்வு செய்வதற்கு வேலைகளை துரிதமாகச் செய்வதற்கு மிகப் பெரிய அளவிலே ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாசனத் துறை மூலம் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வேலைகள் துவங்கி அந்த வேலைகள் நிறைவு பெறாமலேயே நின்றுவிடுகின்றன. அப்படி நின்று விடுகின்ற காரணத்தால் ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் சரண்டர் செய்யப்படுகிறது. இந்த நிலையை அரசு போக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



1983 மார்ச் 19] [திரு. த. வேணுகோபால்]

(நண்பகல் 12-00)

வடாற்காடு மாவட்டத்தில் 3,600 ஏரிகள், 3 லட்சம் கிணறுகள், 20 லட்சம் பம்ப் செட்டுகள் இருக்கின்றன. பருவ மழை சரியாகப் பெய்யாத காரணத்தால், கடுமையான வறட்சியால் வடாற்காடு மாவட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. வடாற்காடு மாவட்டத்தில் பல அணைகள் கட்ட வேண்டும் என்று பல ஆண்டு காலமாகக் கேட்டுக் கொண்டு வருகிறோம். நீண்ட நாட்களாக இந்தச் சட்டமன்றத்திலும் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, அவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி கேட்டுக் கொண்டே இருக்கின்ற நிலைமைகள் தான் இருக்கின்றனவே தவிர, அதை நிறைவு செய்வதற்கு நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுவதாகத் தெரியவில்லை. இங்கே 1983-84 ஆம் ஆண்டுக்கான சாதனை திட்டம் என்ற விளக்கப் புத்தகம் கொடுக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கிறபோது, வடாற்காடு மாவட்டத்திலே எந்த ஒரு சிறிய பாசனத் திட்டமோ அல்லது பெரிய பாசனத் திட்டமோ அல்லது அணை கட்டுதல் போன்ற திட்டங்களோ, இந்தச் சாதனைத் திட்டப் பட்டியலில் இல்லை, என்பதை நான் வருத்தத்தோடு கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய வடாற்காடு மாவட்டத்தில், செங்கம் பகுதியில் குப்பநத்தம் அணை, போளூர் பகுதியில் செண்பகத்தோப்பு அணை, வேலூர் பகுதியில் அமிர்தி அணை, திருப்பத்தூர் பகுதியில் ஆண்டியப்பனூர் அணை, கலசப்பாக்கம் பகுதியில் மிருகண்ட நதியில் அணை, தண்டராம்பட்டு பகுதியில் கல்நாட்டூர் புதூரில் புதிய ஏரி அமைத்தல், கலசப்பாக்கம் பகுதியில் தென்மகாதேவ மங்கலம் என்ற இடத்தில் புதிய ஏரி அமைத்தல் போன்ற பல வேலைகளையெல்லாம் அரசு செய்ய வேண்டும் என்று பல முறை வற்புறுத்தி இருந்தும் கூட, அந்த வேலைகளை உடனடியாகச் செய்வதற்கு இந்த அரசு இதுவரையில் முன்வரவில்லை. இனி மேலாவது அவற்றை எடுத்துக் கொள்வதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சாதனைத் திட்டத்திலே மேற்சொன்னவற்றில் ஏதாவது ஒரு திட்டத்தையாவது செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்களா என்று பார்த்தால், அதைக்கூடச் செய்யவில்லை என்பதை நான் வருத்தத்தோடு கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. த. வேணுகோபால்] [1983 மார்ச் 19

மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்கள் 1977-லேயிருந்து வழக்கமாகக் கூறிவரும் வார்த்தை ' ஆய்வில் ' இருக்கிறது என்பதாகும். அது என்ன திட்டம் என்று சொன்னால், ஒரு முக்கியமான திட்டம்—என்னுடைய தொகுதியில் உள்ள சாத்தூர் அணை மேல்மட்டக் கால்வாய்த் திட்டம். சாத்தனூர் அணையில் மழை காலங்களில் தண்ணீர் நிரம்புகிறபோது பல மடங்கு நீர் வெளியே சென்று விடுகிறது. அப்படி வெளியே செல்லும் தண்ணீரை வீணாகப்போகவிடாமல், மற்ற இடங்களுக்குப் பயன்படக்கூடிய அளவில் அந்தத் தண்ணீரை பயன்படுத்துவதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி காலத்திலேயே ஆய்வு செய்யப்பட்டது. அப்படி ஆய்வு செய்யப்பட்டு இருந்தாலும் இன்று வரையில் அந்தப் பணிகள் எதுவும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்தப் பணிகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லி, நான் இந்த மன்றத்திலே கேள்விகள் மூலமும், பாசனத் துறை மானியத்தின் மீது பேசுகின்ற நேரத்திலும் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் இருக்கிறது, ஆய்வில் இருக்கிறது, என்று தான் வழக்கமாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, அப்படி ஆய்விலேயே அதை ஆண்டாண்டுக்காலம் விடாமல் உடனடியாக அந்த வேலையைச் செய்து கொடுத்தால், தற்போது என்னுடைய தொகுதியில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க முடியும். அதோடு பல கிராமங்களுக்கு அது பாசன வசதியை அளிக்க வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி, அந்தக் கால்வாயை வெட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக அந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் அதனால் பயன் அடையும் கிராமங்கள் கோவிந்தம்பட்டு, மேல் கரிப்பூர், சாத்தனூர், தண்டராம்பட்டு, ராதாபுரம், மேல்செட்டிப் பட்டு, கீழ்செட்டிப்பட்டு, மேல்கச்சிராப்பட்டு, சமுத்திர ஏரி. இந்த சமுத்திர ஏரிக்குக் கடைசியாக தண்ணீர் வருவதால், திருவண்ணாமலைக்கு இருக்கும் குடிநீர் பிரச்சினையும் தீரும். அதோடு, நந்தன் கால்வாய் திட்டமும் பயன்பெறும். அந்த நந்தன் கால்வாய் ஏற்கெனவே வெட்டப்பட்டு, வேலைகள் முடிந்து தற்போது அந்த மேல்மட்டக்கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப் படாத காரணத்தால், நந்தன் கால்வாய் வெறும் கால்வாயாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு, காவிரி ஆற்றிலிருந்து—ஒகேனக்கல் வழியாக பெண்ணை ஆற்றை இணைக்கும் திட்டம் ஒன்று ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு இருப்பதாக எனக்குத் தகவல் வந்துள்ளது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, வேலைகள் முடிக்கப்பட்டால், பெண்ணை ஆற்றுக்குத் தண்ணீர் வரும். அதனால் சாத்தனூர் அணையில் எப்போதும் தண்ணீர் நிறைந்து இருக்கும்.



1983 மார்ச் 19] [திரு. த. வேணுகோபால்]

சாத்தனூர் அணை தற்போது மழையில்லாத காரணத்தால் வறண்டுபோய் கிடக்கிறது. சரியான முறையில் சீர் செய்யவில்லை என்றால் எப்போதும் வறண்ட நிலைமைதான் ஏற்படும். ஆகவே, காவிரியிலிருந்து ஒகனேக்கல் மூலமாக பெண்ணையாற்றுக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தைத்துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாத்தனூர் அணையில் இடதுபுறக் கால்வாய் தற்போது தண்ணீர் வரும் பிரதானமான கால்வாயாக இருக்கிறது. அந்தக் கால்வாயில் இருபுறமும் சிமென்ட் லைனிங் செய்து, தண்ணீர் கசிவதை தடுக்க வேண்டும். தண்ணீர் பற்றாக்குறை இருக்கும்போது 20மைல், 25 மைல், நீளத்திற்கு மண் கரை இருப்பதால், தண்ணீர் கசிவு ஏற்பட்டு, கடைசி பகுதியில் இருக்கக் கூடிய கிராமங்களுக்கு தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படுகிறது; தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. அந்த நிலையைப் போக்குவதற்கு கால்வாயின் இருபுறமும் சிமென்ட் லைனிங் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த இடதுபுறக் கால்வாயின் மூலம் என்னுடைய தொகுதியில் 36 ஏரிகள் பாசனம் பெறும் வாய்ப்பு ஏற்படும். அந்த வாய்ப்பு இருந்தும் தற்போது தண்ணீர் குறைவாக வருவதனால் அந்த ஏரிகளுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே, அந்த ஏரிகளுக்கு, அணையில் தண்ணீர் குறைவாக இருக்கும்போது, போதுமான அளவுக்கு தண்ணீர் விடவும் நேரடியாக ஏரிகளுக்கு தண்ணீர் விட தனித்தனியாக மதகுகள் அமைத்துக் கொடுக்கவும், கிளைக்கால்வாய் அமைத்துத் தரவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட அளவிலாவது அல்லது மாநில அளவிலாவது அல்லது கோட்ட அளவிலாவது நீர்ப்பாசன மாநாடுகள் நடத்தப்பட வேண்டும். 1977-ல் இருந்து கிட்டத்தட்ட வடாற்காடு மாவட்டத்தில் நீர்ப்பாசன மாநாடே நடந்ததாகத் தெரியவில்லை. நீர்ப்பாசன மாநாடுகளை நடத்தினால் அந்தந்த பகுதியில் இருக்கிற நீர் பற்றாக்குறையை எடுத்துச் சொல்லி அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு செய்யாறு தொகுதியில் பாலாறு அணைப்பகுதியிலிருந்து 80 ஏரிகளுக்கு தண்ணீர் பாயவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் 80 ஏரிகளுக்கு தண்ணீர் வரக்கூடிய அந்த வரத்துக்கால்வாய் மண்மேடிட்டு இருப்பதால் சரியாக தண்ணீர் வரவில்லை. அந்த வரத்துக்கால்வாயை தூர்வாரி, அகலப்படுத்தி, அந்த 80 ஏரிகளுக்கும் தண்ணீர் பாய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் தொகுதியில் செண்பகத்தோப்பு அணைத்திட்டம் பற்றி ஏற்கனவே சொல்லப்பட்டது. ஆனால் இதுவரையில் அதற்கான வேலை தொடங்கப்படவில்லை. அந்த வேலையை உடனடியாகத் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏரி, குளம், குட்டைகள், வரத்து வாய்க்கால்கள் போன்றவற்றை மராமத்து செய்வதற்கு தண்ணீர் இல்லாத இந்த நேரத்தில் வேலைகளைத் தொடங்கினால் சிறப்பாக இருக்கும். இந்தப் பாசனத் துறையின் மூலம் செய்யும் வேலைகள் விவசாயத்திற்கு பயன் அளிப்பதாகவும், கிராம மக்களுக்கு பயன் அளிப்பதாகவும் இருக்கவேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் பாசனத் துறைக்கு ஒதுக்கியுள்ள தொகை போதுமானதாக இல்லை. இந்தத் துறைக்கு இன்னும் அதிகமான தொகையை ஒதுக்கி, பாசனப் பணிகளுக்கு அதிகமாக செலவிட வழிவகை செய்ய வேண்டுமேன்று கூறி, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே தென்மேற்கு பருவ மழையும், வடகிழக்கு பருவ மழையும் பொய்த்துவிட்ட இந்த நேரத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டு குடிநீருக்கும் விவசாய பாசனத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டு தமிழ்நாடே தத்தளித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அதைச் சமாளிப்பதற்காக சிறப்பான திட்டங்களைத் தீட்டி, மிகவும் குறைந்த அளவிலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த மானியத் தொகையை வைத்து, விவசாயத்திற்குத் தேவையான நீர் வரத்து வாய்க்கால்களை சீரான முறையிலே, செம்மையான முறையிலே இருக்கிற தொகையைக் கொண்டு பராமரித்து, அதன் மூலம் விவசாய உற்பத்தியை எந்தவிதமான தங்குதடங்கலின்றி நடத்தி கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.





(பிற்பகல் 12-10)

பொதுவாகவே தற்போதுள்ள சூழ்நிலையில், பலபகுதிகளிலேயும் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையை பார்க்கும்போது, குடிதண்ணீர் இல்லாமல், மழையே பெய்யாமல் மக்கள் எந்த அளவுக்கு கடும் சிரமப்படுகிறார்கள் என்பதை எல்லாம் முன் உதாரணமாக எடுத்துக் கொண்டு, அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், வருகிற காலங்களிலும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழ முடியாத அளவுக்கு அப்படி வந்தால் அதனை சமாளிக்கக்கூடிய அளவுக்கு நாம் நிலைமைகளை சீர்திருத்த, கவனிக்க வேண்டும். ஏனெனில் தொடர்ந்து 2 வருடங்களுக்கு ஒரு முறை, 3 வருடங்களுக்கு ஒரு முறை இதுபோன்ற வறட்சி ஏற்படுவதும் மக்கள் குடிக்க தண்ணீர் கூட இல்லாமல் சிரமப்படுவதும் வழக்கமான ஒன்றாகி விட்ட காரணத்தால், அதை தடுப்பதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் முறைப்படுத்தி நாம் திட்டமிட்டு எடுக்க வேண்டும்.

இந்த ஆண்டு மழை பெய்யாத நிலையினால் அடுத்த ஆண்டு நிச்சயமாக பயங்கரமான முறையிலே மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்தோடக்கூடிய நிலையை ஏற்படுத்தும். ஏனெனில் 2 ஆண்டுக் காலமாக, வறட்சியினால் வறண்டு காய்ந்து போயிருக்கும் பூமி அடுத்த ஆண்டு நிச்சயமாக வருகிற நிதி நிலை ஆண்டிலே, பெரும் வெள்ளப்பெருக்கை சமாளிக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாயிருக்கிறது. அந்த அடிப்படையிலே வரக்கூடிய தண்ணீரை நாம் தடுத்து நிறுத்தி, பத்திரமாக சேகரித்து வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அதற்கான அடிப்படை திட்டங்களை நாம் உடனடியாக போட்டாக வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அதற்கு முன்னோடியாக ஒவ்வொரு சட்டமன்றத் தொகுயிலும் இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு ஆங்காங்கு இருக்கக் கூடிய பொதுப்பணித் துறையின் வல்லுநர்களை அழைத்து வைத்துக் கொண்டு, மழை வந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் அதனை தடுத்து நிறுத்துவதற்கும், சேமித்து வைப்பதற்கும், மாவட்டங்கள் வாரியாக, நாடாளுமன்ற தொகுதிகள் வாரியாக, பலவகை திட்டங்களை தீட்டி, அவைகளை உடனடியாக செயல்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்] [1983 மார்ச் 19

ஏன் என்றால், ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்பு மாதம் மும்மாரி மழை பெய்ததாலும், இருக்கின்ற குளங்களும், கண்மாய்களும் அவ்வப்போது சீர் செய்யப்பட்டு வந்ததாலும், ஏரிகள் எல்லாம் நீரினால் நிரப்பப்பட்டிருந்தன. அந்தக் குளங்களிலும் கண்மாய்களிலும் நீர் சேகரிக்கப்பட்டு, கோடை காலங்களில் பாசனத்திற்கும், குடிதண்ணீருக்கும் பயன் படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இன்று தமிழகத்தில் பல ஆயிரக்கணக்கான குளங்களும், கண்மாய்களும் தூர் எடுக்கப் படாமல் மண்மேடிடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளை யெல்லாம் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு தொகுதியாக, ஒவ்வொரு ஒன்றியமாக கருத்தில் கொண்டு, அவைகளை போய் நேரில் பார்வையிட்டு அவைகளை செப்பனிட வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து அந்த ஏரிகளையும், குளங்களை யும், கண்மாய்களையும் சீர்படுத்தினால், நாம் எதிர்காலத் தில் வறட்சியை தடுத்து, தண்ணீரை சேமித்து வைக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியும். ஆகவே, இதனை தயவு செய்து அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், மேற்கு மலை தொடரிலே இருக்கக்கூடிய கண்டம்பள்ளத் தாக்கு, பாடி பள்ளத் தாக்கு, பெரிய பள்ளம் பள்ளத்தாக்கு போன்ற இடங்கள் மேற்கு தொடர்ச்சி மலையில் உருவாகக் கூடிய ஆறுகளின் தலையான பகுதியில் இருக்கின்றன. குறிப் பாக வைகை நதியிலிருந்து நீர் வரக்கூடிய கொட்டப்பாடி ஆற்றிலே இப்போதும் குடிப்பதற்கு தண்ணீர் இருந்துக் கொண் டிருக்கிறது. ஆனால், மழை நாட்களிலே வரக்கூடிய வெள்ளப் பெருக்கை யாராலும் கட்டுப்படுத்த இயலாது என்கிற அளவுக்கு வெள்ளம் பெருக்கெடுத்தோடிவரும். ஆகவே இந்த ஆற்றிலிருந்து வரும் தண்ணீரை சேகரித்து வைக்கலாம் என்று ஒரு திட்டம் முன்னாள் அமைச்சராக இருந்த மாண்புமிகு தர்மலிங்கம் அவர்களால் திட்டமிடப்பட்டு, கொம்புத்தூக்கி என்ற இடத்தில் அதற்கான ஒரு அணையைக் கட்டலாம் என்று திட்டம் போடப்பட்டது. அதற்குப் பிறகு அந்த திட்டம் கைவிடப்பட்டது.

அதன்பிறகு அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் 1972 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன்—அப்போது இதனை மறுபரிசீ லனை செய்து அந்த அணையைக் கட்டுவதற்கான முயற்சி களை மேற்கெண்டு வந்தார். ஆனால் என்ன காரணத்தி னாலோ தெரியவில்லை. இன்றுவரையில் அந்த அணை கட்டப் படவில்லை. இதனை அரசு மறுபடியும் பரிசீலனைக்கு எடுத் துக்கொண்டு, அந்த அணையைக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1983 மார்ச் 19] [திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்]

மேற்கு நோக்கிச் செல்லும் ஆறுகளை திருப்பி, தண்ணீர் பெறும் திட்டம் தற்போது ஆய்வில் இருந்து வருகிறது. அந்த திட்டத்தின் கீழ் மேற்கு நோக்கிச் செல்லும் ஆறுகளாக, கல்லாறு பண்ணையாறு ஆகியவைகளை திருப்பி, அதன்மூலம் தண்ணீர் கொண்டு வர முயற்சிகளை மேற்கொள்வோமேயானால், நாடோடி மன்னன் படத்திலே கன்னித்தீவிலே தண்ணீர் வந்து கொட்டுகிறதே, கிட்டத்திட்ட அது மாதிரி 3 ஆயிரம் அடி உயரத்திலிருந்து பெரிய நீர்விழ்ச்சியாக விழக்கூடிய அளவுக்கு தண்ணீர் கிடைக்கும். அதை நாம் பாசனத்திற்கும், குடிப்ப தற்கும் பயன்படுத்துவதோடு மட்டுமல்ல. அதிலிருந்து மின்சாரமும் எடுக்கலாம். அதையடுத்தப் பகுதிகளில் உள்ள அத்தனை இடங்களுக்கும் தண்ணீர் கிடைப்பதோடு, மதுரை மாவட்டத்திற்கு கூட அதனை கொண்டு வந்து, அங்குள்ள குடிநீர் பிரச்னையை தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளலாம். அந்தப் பகுதிகளுக்குக் கூட இதிலி ருந்து தண்ணீர் கொண்டு வரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரியகுளம் நாடாளுமன்றத்தொகுதியில் சோத்துப்பாறை அணைத்திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய நாடாளு மன்ற உறுப்பினர் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கம்பம், போடிநாயக்கனூர், தேனி போன்ற தொகுதிகளிலுள்ள மக்கள் மிகவும் வருந்துவதற்குரிய நிலைமை இருக்கின்றது. அந்தப் பகுதியில் நீண்டகாலமாகக் கேட்கப்பட்டு வந்த 18 ஆம் கால்வாய்த் திட்டம், பெரியார் உயர் மட்டக் கால்வாய்த் திட்டம் பற்றி கொள்கை விளக்கக்குறிப்பில் எந்தவிதத்திலும் குறிப்பிடாதது குறித்து அந்தத் தொகுதி மக்கள் மிகவும் வருந்து வதற்கு உரிய நிலைமை இருக்கின்றது. ஏற்கனவே மாண்பு மிகு அமைச்சர் அவர்களால் ஆய்வுப் பணி துவக்கப்பட்டு அது தற்போது எந்த நிலையில் இருக்கின்றது என்பது எங்களுக்குத் தெரியாது. ஆகவே கொள்கை விளக்கக் குறிப்பில் அந்தப் 18 ஆம் கால்வாய்த் திட்டம் பற்றி இல்லாதது அந்தப் பகுதி மக்களை ஏமாற்றத்திற்கு ஆளாக்கி இருக்கின்றது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை கூறுகின்றபோது அதனுடைய நிலைமை என்ன என்பது பற்றியும் அது எந்தக் காலத்திலே கிடைக்கும் என்பதைப் பற்றியும் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போடித் தொகுதியில் உள்ள சங்கரப்ப நாயக்கன் கண்மாய், பங்காருசாமி நாயக்கன் கண்மாய்; மரிசூர் கண்மாய் ஆகியவற்றைத் தூர் எடுக்கவேண்டும் என்று சென்ற முறை

நிதிநிலை அறிக்கையிலே கேட்டிருந்தும் அந்தப் பணி இன்று வரை நடைபெற வில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து போடி ஊராட்சி ஒன்றியத்தில் நாகலாபுரம், பெருமாள் கவுன்டன்பட்டி கரையம்பட்டி, தொம்புச்சேரி போன்ற கிராமங்கள் பயங்கரமான வறட்சிப் பிரதேசம். அங்கே குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத நிலைமையிலே மிகவும் வறண்ட நிலைமை இருக்கின்றது. அங்கே எந்தக் காலத்திலும் வறட்சி தான். எனவே அந்த வறட்சியினைப் போக்குகின்ற வகையில் மல்லிங்கஸ்வாமி கரட்டின் கீழ் குளம் வெட்டவேண்டும் என்று நீண்டகாலமாக கோரிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. நான் சென்ற முறை நிதிநிலை அறிக்கையில் கூட அதைப்பற்றிப் பேசி இருக்கிறேன். அது ஆய்வில் இருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே தயவு செய்து அதையும் விரைவில் முடித்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எங்களுடைய பகுதியிலே வெள்ள நிவாரணம் பணியினைப் பொறுத்த வரையில் மண் எடுக்கின்ற பணியினையும், கட்டுமானப் பணியினையும்தான் செய்கிறார்கள். தண்ணீர் வரக்கூடிய வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடுகின்ற பணியினை மேற்கோள்ள வில்லை. அந்தப் பணியினை பொதுப் பணித்துறையும் செய்யவில்லை. ஊராட்சி ஒன்றியமும் செய்ய வில்லை. எனவே குளத்திற்கு தண்ணீர் வரக்கூடிய கால்வாய் பணியைப் பொறுத்த வரையில் எந்த டிப்பார்ட்மென்டும் எடுத்துக்கொண்டு செய்ததாகத் தெரியவில்லை. குளத்திற்கு தண்ணீர் வருகின்ற வாய்க்கால்களைச் செப்பனிட்டால்தான் குளத்திற்கு தண்ணீர் சரியாக வரக்கூடிய நிலைமை ஏற்படும். மேலும் ஆங்காங்கே குளங்களை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் தண்ணீர் வரக்கூடிய வாய்க்கால்களிலும் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி அத்தனை குளங்களுக்கும் வரக்கூடிய வாய்க்கால்களைச் செப்பனிட்டுக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு பி. தங்கவேலு : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டு பாசனம் குறித்த மானியத் கோரிக்கையின் மீது இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தியா சுதந்திரம் அடைந்தபோது ஏறத்தாழ 75 சதவீதத்தினர் விவசாயத் துறையில் நேரடியாகவோ அல்லது விவசாய சம்பந்தப்பட்ட தொழிலிலோ ஈடுபட்டிருந்தார்கள். இன்றைய புள்ளி விவரத்தில் பார்த்தாலும் ஏறத்தாழ 74 சதவீதத்தினர்





விவசாயத்திலேதான் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தினை மனதில் வைத்துக்கொண்டுதான் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் 20 அம்சத் திட்டத்தில் நீர்ப்பாசனத் துறைக்கு முன்னுரிமை வழங்கி இருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்திலேயே அநேகமாக அனைத்துப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் நிறைவேற்றப் பட்டுவிட்டன.

(பிற்பகல் 12-20)

முன்னாள் பாரதப் பிரதமர் நேருஜி அவர்கள் அழகாக குறிப்பிட்டார்கள் ''அணைக்கட்டுக்களும், தொழிற்சாலைகளும் தான் இன்றைய நவீன கால கோயில்கள்'' என்று. பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்திலே கட்டிய பரம்பிக்குளம் ஆளியாறு நீர்த்தேக்கமும், வைகை அணைக்கட்டும், இன்னும் பிற அணைக்கட்டுகளும் தமிழகத்தில் இன்றைய நவீன கால கோயில்களாக காட்சி அளிக்கின்றன.

சமீபத்தில் எனது தொகுதியை சார்ந்த கங்கைகொண்ட சோழபுரத்தில் ராஜேந்திர சோழனுக்கு விழா எடுக்கப்பட்டது. கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள சோழீச்சுவரர் ஆலயம் எத்தனை புகழ் பெற்றதோ அத்தகைய புகழ் வாய்ந்தது அதன் அருகிலுள்ள பொன்னேரி. இன்றைய தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன் இந்த பொன்னேரியில் ஒரு நீர்த் தேக்கத்தை கட்டித்தாருங்கள். கங்கைகொண்ட சோழபுரத்தில் இந்த பொன்னேரி நீர்த்தேக்கம் ஒரு நவீன கால கோயிலாக எதிர் காலத்தில் விளங்கவேண்டுமென்பது எங்கள் எல்லோருடை ஆசை. இதனை நிறைவேற்றித்தரும்படி மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் அவர்ககளை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கச்சேரி புளி ஓடையில் ஓர் நீர்த்தேக்கம் கட்டித்தரவேண்டும் என மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சமீபத்தில் செயங்கொண்டத்திற்கு வருகை தந்திருந்தார்கள். அப்போது தத்தனூர் ஊராட்சி மன்றத்தில் நிறைவேற்ற இருக்கும்

ஓடைத்திட்டத்தை நிறைவேற்றித் தருவதாக அந்தக் கூட்டத்தில் கூறியிருந்தார்கள். அதனை விரைவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட வெண்ணங்குழி நீர்த்தேக்கம் திட்டத்தினை விரிவுபடுத்தி கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எனது செயங்கொண்டம் தொகுதியில் ஏற்கனவே சுத்தமல்லி நீர்த்தேக்கத் திட்டம் மிகச் சிறப்பான முறையிலே நடந்துவருகிறது. அதற்காக மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவதற்காக சமீபத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். அது சமயம் இத்திட்டத்திற்கு நிலங்கள் கொடுத்த விவசாயிகள் எல்லாம் அமைச்சரிடத்திலே ஒரு மனுவை கொடுத்தார்கள். அங்கு ஆர்ஜிதம் செய்த நிலங்களுக்கு இதுவரை நஷ்ட ஈடு கொடுக்கவில்லை என்றும் அதனை உடனடியாக கொடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கேட்டார்கள். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு மார்க்கெட்டிங் ரேட்டில் எப்படி நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறதோ அது மாதிரி அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்

எனது தொகுதியில் கொள்ளிடத்திலிருந்து பொன்னாற்று சானல் மூலம் சுமார் 15,000 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்கிறது. கொள்ளிடத்தில் தண்ணீர் வரும்போதெல்லாம் பொன்னாற்று சானலின் தலைப்பில் மணல் மேடாகிவிடுகிறது. இதனால் பொன்னாற்று சானலிற்கு தண்ணீர் வரத்து தடைப்பட்டு விடுகிறது. இந்த மணலை அகற்றுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் புல்டோசர் வைத்து அதை அகற்ற வேண்டியிருக்கிறது. கொள்ளிடம் ஆற்றில் வரும் தண்ணீரின் போக்கை மாற்றினால் இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காண முடியும் என்று என்ஜினீயர்கள் கூறுகிறார்கள். அதற்காக கொள்ளிடத்தின் தெற்குக் கரையில் 2 தடுப்புச்சுவர்கள் கட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் கால்வாய்களை நவீனப்படுத்தும் திட்டத்தில் இந்த பொன்னாற்று சானலையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது செயங்கொண்டம் தொகுதியில் கொள்ளிடக்கரையில் அடிக்கடி வெள்ள நீர் வந்து கெடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே செயங்கொண்டம் தொகுதி அண்ணகாரன் பேட்டை அருகே இரண்டு ஆண்டுகட்கு முன்னால் மிகப்பெரிய உடைப்பு ஏற்பட்டு சரி செய்திருக்கிறார்கள். கொள்ளிடத்தில் வெள்ளம்



வரும்போதெல்லாம் இந்தப்பகுதி பாதிக்கப்படுகிறது. எனவே, அண்ணகாரன்பேட்டை அருகே வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டி ஒரு நிரந்தரமான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே இந்த சட்டமன்றத்தில் பொன்னேரி நீர்த் தேக்கத்தைப் பற்றியும், பொன்னாற்று சானலிற்கு தண்ணீர் வர கொள்ளிடத்தில் இரண்டு தடுப்புச் சுவர்கள் எழுப்பவேண்டும் என இதற்கு முன்னர் இந்த சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். இந்த கோரிக்கைகளை எல்லாம் இவ்வாண்டு பாசனத்திட்டத்தில் சேர்க்கப்படாதது குறித்து மிகவும் வருத்தப்படுகிறேன். வரும் ஆண்டிலாவது இந்த திட்டங்களை எல்லாம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

எனது செயங்கொண்டம் தொகுதியில் குழாய் கிணறுகளை அமைப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. எனவே, தமிழ்நாடு குழாய் கிணறு கழகம் எங்கள் பகுதிக்கு ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியை வறட்சி பகுதியாக அறிவித்து விவசாயிகளுக்கு சலுகைகள் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்திலே பவர் டிரில்லர்ஸ், ஹேண்ட் பம்ப் செட்டுகள் குறைவாக இருக்கிற காரணத்தினால் இந்த வறட்சி காலத்திலே அதிகமான பவர் டிரில்லர்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதில் தமிழக அரசு முனைப்பாக இருக்கவேண்டும். வட ஆற்காடு, திருச்சி, சேலம், தஞ்சை ஆகிய மாவட்டங்களில் அதிகமான ஆழ்குழாய் கிணறுகளை அமைப்பதிலே அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரளாவிலே மேற்குநோக்கிப் ஓடுகின்ற நதிகளின் உபரி நீரை தமிழகத்திற்குத் திருப்பி விடுவதற்கான முயற்சியை மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்காக நான் மத்திய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே மழை இல்லாத வறட்சி நேரங்களிலே மக்கள் பல்வேறு இடங்களுக்கு சென்றுவிடுகிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. அருணகிரி கூறியதைப்போல் எங்கள் பகுதியிலே வறட்சி ஏற்பட்டால் பக்கத்து மாவட்டமான தஞ்சை மாவட்டத்திற்குத்தான் மக்கள் செல்வார்கள். ஆனாலு

அங்கேயும் வறட்சி இருப்பதால் மக்கள் இன்றைக்கு கஷ்டப்படுகிறார்கள், அவர்களுக்கு பல திட்டங்களை வறட்சி நிவாரணப் பணிகள் மூலமாக செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சிப் பணிகளின் வேலைகள் தடைபடாமல் இருப்பதற்காக தகுந்த முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கங்கைகொண்ட சோழபுரம் விழாவில் கலந்துகொண்டபோது பொன்னேரியை ஆழப்படுத்துவதற்கு ஒரு பெரிய தொகையை அறிவித்தார்கள். அந்தத் தொகையை சேங்ஷன் செய்து வெகு விரைவிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீராணம் ஏரியில் சில்ட் கிளியரன்ஸ் செய்துகொடுக்கவேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பு நல்கியமைக்காக மாண்புமிகு சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக்கூறி முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டிற்கான நீர்ப்பாசனத் துறைமானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்ததற்காக தங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தமிழகத்தில் விவசாயிகளுக்குத் தேவையான பெரிய நதிகள் இல்லாத காரணத்தினால் சிறு சிறு நதிகளையும் ஏரி குளங்களையும் பயன்படுத்துகின்ற முறையிலே தண்ணீரை சேமிக்கின்ற வகையிலே தற்சமயம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு முனைப்பாக செயல்படுவதற்காக நான் பாராட்டுகிறேன். அந்த வகையிலே இந்த ஆண்டு பாசனத்திற்கும் பாசன மூலதனச் செலவிற்கும் சேர்த்து 105 கோடி ரூபாய் அனுமதிக்கவேண்டுமென்று கேட்டு வழங்க இருக்கின்ற அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். 1983-84 ஆம் ஆண்டிலே புதிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் 6 திட்டங்களும் சிறிய திட்டங்களும் செயற்குறிப்பிலே சேர்க்கப்பட்டிருப்பதைப் பார்த்தோம். மிக மகிழ்ச்சி அடைகிறோம். அந்த வகையிலே எனது தொகுதியில் குடகனாறு திட்டம் இந்த ஆண்டு சேர்க்கப்பட்டுள்ளது. அது ஏறத்தாழ 10 ஆயிரம் ஏக்கர் பாயும் அளவுக்கு இருப்பதால் இந்த மேற்கொள்ளப்பட இருக்கிறது என்று அறிகிறேன். அந்தத் திட்டத்தினால் திண்டுக்கல் நகருக்குத் தேவையான குடிநீர் கொடுக்கப்படும் என்று அறிகிறேன். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீதப்படும் தண்ணீரை எனது தொகுதிக்கும் — அங்கே 6 ஆயிரம் ஏக்கர் வரை பாசனம் பெறும் வாய்ப்பு இருப்பதால்—வேடசந்தூர் தொகுதிக்கும்



கொடுப்பதற்கு அந்தத் தொகுதிகளுக்குப் பயன்படும் வகையில் அமைச்சர் அவர்கள் அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நொய்யாறுத் திட்டம் கடந்த 25 ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு செயல்படுத்தப்படாமல் இருந்தது. அந்தத் திட்டத்தை அமைச்சர் அவர்கள் துவக்கிவைத்தார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பத்தாயிரம் ஏக்கர் பாயும் அளவுக்கு செயல்படுத்தவேண்டும். அதையும் விரைவாக அடுத்த ஆண்டிலேயே நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30.)

அடுத்து நங்காச்சி என்ற ஒரு ஆறு ஒட்டன் சத்திரம் தொகுதியில் இடையக்கோட்டையில் உள்ளது. அந்த தொகுதியில் அணைக் கட்டப்பட ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதிகாரிகள் சிறிய குட்டை அணையாக கட்ட விருப்பதாக அறிந்தேன். அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் அரவாக் குறிச்சியும், ஒட்டன் சத்திரமும் இணையும் இடம். அது மிகவும் வறண்ட பகுதி. மதுரையிலே இராமநாதபுரம் மாவட்டத்தைப் போன்ற பகுதியாகும். அதை பெரிய அணையாகக் கட்ட வேண்டும். அப்படி. கட்டினால் அங்கே இருக்கிற 5, 6 பஞ்சாயத்துகள் பயன்படும். கிணறுகளை மிக ஆழப்படுத்தியும் தண்ணீர் இல்லை. ஆகவே அந்த பகுதி பயன்பெறும் வகையில் விரைவில் பெரிய அணையாக கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கீழ் பவானி அணையில் காங்கிரீட் போட ஆய்வு செய்யப்பட்டுள்ளது என அறிந்தேன். அமைச்சர் அவர்கள் கூட ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது தெரிவித்திருக்கிறார்கள். அதை விரைவு படுத்தினால் இரண்டாயிரம் ஏக்கர் பாசன வசதி கிடைக்கும் என்று சொன்னார்கள். தமிழகத்திலேயே கீழ்பவானி அதிக பாசன வசதியைக் கொடுக்கிற நிலையில் இருக்கிறது. காங்கிரீட் போடும் வேலையை விரைவு படுத்தி ஆவன செய்யவேண்டும். என்னுடைய பகுதி ஆய்வு செய்யப்பட்டு சேர்க்காமல் விட்டிருக்கிறார்கள். இந்தத்திட்டத்தை என்னுடைய தொகுதியும் பயன்பெறும் வகையில் செய்துதருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அமராவதியில் ஒரு அணைக் கட்டும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் மயில்ரங்கம் அருகில் கட்டவிருப்பதாக அறிந்தேன். அந்தத் திட்டத்தை செயல்படுத்

(திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி) [1983 மார்ச் 19

தினால் என்னுடைய தொகுதியும், அரவாக்குறிச்சியும் பயன் பெற வாய்ப்பு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை விரைவில் முடித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல அமராவதியிலும், நொய்யலாற்றிலும், விவசாயிகள் அனுமதி பெறாமல் தண்ணீரை பெற்று பயிர்செய்து வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு அனுமதி வழங்கவேண்டுமென்று ஏறத்தாழ 1½ ஆண்டு காலமாக கேட்டு வருகிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு இந்த பிரச்னையை ரெகுலேட் பண்ணிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் அவர்கள் இன்று ஆயில் என்ஜின் மூலமாக பாசனம் செய்து வருகிறார்கள். டீசல் விலை மிகவும் உயர்ந்திருக்கிறது. இந்த ஆண்டிலே கூட இரண்டு ஆறுகளிலும் தண்ணீர் வராததால் டீசலை உபயோகித்து பயிர் செய்தார்கள். ஆனாலும் கூட பயிர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நிறைய நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு இந்த பிரச்னையை ரெகுலேட் செய்து கொடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்திலே மூன்று கோடி ரூபாய் திட்டத்தில் ஆய்வில் உள்ள திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம், புதுப்பட்டி அணைத் திட்டத்தை இந்த ஆண்டே எடுத்து நிறைவேற்றி கொடுக்கவேண்டும்.

திருச்சி மாவட்டம் செயங்கொண்டத்தில் சோழ கங்கை என்ற 16 மைல் உள்ள ஏரியை ஆழப்படுத்தினால் 10 ஆயிரம் விவசாயிகள் பயன் அடைவார்கள். மேலும் ஆண்டிமடம் தொகுதியில் உள்ள குழுமூர், நல்ல நாயகபுரம் ஆகிய 75 ஏக்கருக்கு மேல் உள்ள ஏரியை ஆழப்படுத்தி தந்தால் அங்குள்ள விவசாயிகள் பயன் அடைவார்கள். இவற்றை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு விரைவு படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தென்னாற்காடு மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடித் தொகுதியில் — உறுப்பினர் தங்கராசு அவர்களின் பகுதி — வீராணம் ஏரியிலிருந்து வடகோடி வழியாக பெருமாள் ஏரிக்கு வரும் வரத்து வாய்க்காலை இருபுறமும் பெருமாள் ஏரி வரை அணை ஏற்படுத்தித் தர வேண்டும். இந்த அணை இல்லாததால் பல கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. அதை தடுக்கவேண்டும். இதனால் பாதிக்கப்படுகின்ற கிராமங்கள், கல்குணம், பூதம்பாடி, ஆரூர் அகரம், கொத்தவாச்சேரி மற்றும்





136006 சென்னை-600 005.

பத்து கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் இதை மனதில் வைத்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியான கரூர் மேற்கு கோடிக்கு பி.ஏ.பி. மூலமாக தண்ணீர் வரும் வாய்ப்பு உள்ளதாக அறிகிறேன். அதற்கு நல்லாயம் என்ற இடத்தில் ஒரு அணை கட்டி, அந்த தண்ணீரை மேற்கு நோக்கி போகிறது. அதை கிழக்கு நோக்கி திருப்பிவிட்டால் என்னுடைய பகுதியும் பயன்பெறும். அதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். என்னுடைய பகுதியில் இரண்டு, மூன்று ஆறுகள் ஓடுகின்றன. அமராவதி, நொய்யல், குடகனாறு, நங்காச்சி ஆகிற ஆறுகள் ஓடுகின்றன. ஓடியும் கூட அந்த பகுதி முழுக்க முழுக்க வறண்ட பகுதியாக இருக்கிறது. அதை கருத்தில்கொண்டு இந்த நான்கு ஆறுகளிலும் அணைகட்டி பாசன வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. பா. மலை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே பாசனம், பாசனம் மீதான மூலதனச் செலவு ஆகிய கோரிக்கைகள் மீது தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள அனுமதித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாசனத் துறை, அரசுத் துறையிலே மிக முக்கியமான துறை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மனிதனுக்கு எப்படி முதுகெலும்பு அவசியமோ அதைப் போல. பாசனத் திட்டங்கள் வெற்றி பெறவில்லையென்றால், சமூக வாழ்க்கையே சிதைந்து போகும். அப்படிப்பட்ட முக்கியமான பாசனத் துறைக்கு இன்று பல்வேறு சோதனைகள் வந்திருக்கின்றனவே. இயற்கையாகவே மழை பொய்த்ததன் காரணமாக, விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் காவிரி நீர்ப் பிரச்சினையில் கர்நாடக அரசின் பிடிவாதம் காரணமாகவும், மத்திய அரசின் மெத்தனம் காரணமாகவும் இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விவசாயம் இல்லாமல் போய்விட்டன. அதைப் போலவே பெரியார் அணையினுடைய நீர்த்தேக்கக் கொள்ளளவை, 152 அடியிலிருந்து 136 அடியாகக் குறைந்திருப்பதன் காரணமாகவும் இன்றைக்குப் பெரியார் வைகை பாசன பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விவசாயமின்றி இருக்கின்றன. ஆகவே, இப்படி விவசாயம் செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு, கணிசமாகக் குறைந்து வருகிறது. ஆனால், மக்களுடைய தொகை பெருக்கம் ஒழுங்காக முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆகவே ஒரு பக்கம் உற்பத்திக் குறைவு, மறுபக்கம் தேவைகள் அதிகரிப்பு. இதனால், உணவுத் தட்டுப்பாடு அதிகமாகி இந்த நிலை நீடித்

தால் என்ன ஆகுமோ என்ற அச்சம் மக்களை இன்று வாட்டிக் கொண்டிருக்கிறது. பாசனப் பரப்பு, பாசன வசதி குறைந்து விட்டதை விளக்குவதைப் போல, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய அறிக்கையேகூட, 1982-83-ஆம் ஆண்டு 22 பக்கங்களாக இருந்தது, இன்றைக்கு, 14 பக்கமாக ஆகியிருக்கிறது. என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும் என்று சொல்வார்கள்; ஆகவே, சட்டியில் இருப்பதை நிதானமாக, சீராக விநியோகிப்பதற்கு அமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,

ஏற்கெனவே, நமக்குக் கிடைக்கின்ற மேல்பரப்பு, நீர் 95 சதவிகிதத்தைப் பயன்படுத்திவிட்ட நிலையில் பெரிய திட்டங்களை இனிமேல் உண்டாக்க முடியாது என்கின்ற சூழ்நிலையில் இருக்கின்ற பாசனத் திட்டங்களை நவீனப்படுத்துவது, அதன் மூலம் கிடைக்கின்ற சேமிப்புத் தண்ணீரைக் கூடுதலாகப் பாசனத்திற்குப் பயன்படுத்துவது, நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது; சிறு நடுத்தரப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவது போன்ற பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்திலே கோல்வார்பட்டி நீர்த்தேக்கத் திட்டம், ஆணைக்குட்டம் நீர்த்தேக்கம் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றி, 11,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி செய்து தருவதற்கான முயற்சிகள் மேற்கொண்டுள்ள அமைச்சர் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன்.

கண்மாய்க்கரை தரப்படுத்துதல், கண்மாய்களின் முழுக் கொள்ளவிற்கு தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு வகை செய்தல், தண்ணீர் வரத்துக் கால்வாய்களைக் சீரமைத்தல் போன்ற வேலைகள் மிகமிக முக்கியமானவை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இது மிகமிகத் தேவையானது என்பது என்னுடைய கருத்து, அந்த வகையில், எங்கள் மாவட்டத்தில், பல்வேறு நடவடிக்கைகளை இன்றைக்கு அரசு மேற்கொண்டிருக்கிறது. மேலும், அதை முனைப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. பரளையார் கிருதுமால் திட்டங்களை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கிகொள்கிறேன். நாட்டாண்டி ஒடை சிமைக்கால்வாய்த் திட்டங்களையும் விரைவாக செயல் படுத்த வேண்டும். குறிப்பாக, வறட்சி நிலவிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், எங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற மிகப் பெருவாரியாக கண்மாய்களை, ஆழப்படுத்துவது, கரைகளைப் பலப்படுத்துவது போன்ற





நடவடிக்கைகளை முனைப்பாகச் செயல்படுத்த வேண்டும். கொந்தகை, பூவந்தி, திருப்புவனம், பழையனூர், பிரமனூர், காஞூர் திருப்பாச்சேத்தி, மார்நாடு, கட்டிகுளம், இடைக்காட்டுர் போன்ற முன்னாளைய ஜமீன் கண்மாய்களைச் சீர்திருத்தம் செய்வதற்கு ஆழப்படுத்துவதற்கு நல்ல முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மத்திய அரசாங்கத்திடமிருந்து வறட்சிக்காக நாம் பெறப் போகின்ற நிதியை அதிகமாகப் பெற நாம் முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரதிலே நான் சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன். வறட்சிக்காக, தோராயமாக, ரூ. 190 கோடியை நம்முடைய அரசாங்கம் மத்திய அரசைக் கேட்டிருக்கிறது. மத்தியக் குழுவும் வந்துவிட்டு சென்றிருக்கிறது. ஆனால், இந்த மத்திய நிதியைப் பொறுத்தவரை, நம்முடைய தமிழகச் சட்ட மன்றத்தின் செட்டி நாட்டரசர் அவர்கள் 1956 ஆம் ஆண்டிலே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

if only the Madras Goverment apply the Central Goverment wi'' readily grant it. only if the State Govefment ask for Rs. 100 crore the central Goverment will ask whethes 50 crores will not do. That is the methad which the people in he North are adopting and I want the Madras Government also to do likewise.

என்று சொல்லியிருக்கிறார்கள். இதைக் கருத்திலே கொண்டு நமக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியிலே காங்கிரஸ் ஆட்சியும், தமிழகத்திலே காங்கிரஸ் ஆட்சியும் இருந்தபொழுது, மரியாதைக்குரிய சண்முகராஜேஸ்வர சேதுபதி அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள்.

we must put pressure jointly. Uuion is strength· If we divide ourselves, we are uot going to gain auythiug. Hon. Meubers may blame me and I can even own the blame but nothing tangible is going to be achieved.

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நான் இப்பொழுது கேட்டுக் கொள்வது இப்படிப்பட்ட திட்டங்களுக்கு நிதியைப் பெறுவதில் நிதி அமைச்சர் அவர்களும், தமிழ்நாடு அரசும் மற்ற

கட்சிகளுடைய ஒத்துழைப்பையும், பெற்று, மிக அதிகமான அளவிலே பெறுவதற்கான முயற்சிகளை செய்து அதிக நிதியைப்பெற்று வறட்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–40)

வறட்சியாக இருக்கின்ற இந்தக் காலகட்டத்திலே கிடைக்கின்ற நீரைப் பயன்படுத்திகொண்டு இருக்கின்ற பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற முனைப்போடு, இருக்கின்ற தண்ணீரைப் பாய்ச்ச வேண்டுமென்று விவசாயிகள் முயற்சிக்கின்றபொழுது அதிகாரிகள் அதைத் தடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் எடுத்தார் என்று சொல்லி மகாலிங்கம் என்ற அரிசன விவசாயியின் எஞ்சினைப் பறிமுதல் செய்தது மட்டுமல்லாமல், அவர்மீது எஸ்.ஜே.எம். கோர்ட்டிலே வழக்கும் தாக்கல் செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து. இப்படிப்பட்ட வறட்சிக் காலங்களில் அவர்கள் தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, குறிப்பிட்ட இந்தச் சம்பவத்தில் போடப்பட்டிருக்கின்ற வழக்கையும் திரும்ப பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வைகைப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், வைகை அணை கட்டியதற்குப் பிறகு இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக அங்குள்ள மக்கள் நினைக்கிறார்கள். வருஷ நாடு மலைதான் வைகைக்கு தண்ணீர் வருகின்றஆதாரமாக இருந்தது. டிபாரஸ்டேஷன் என்ற வகையிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் அளவுள்ள காடுகளை அழித்து விவசாயம் செய்யப்படுவதால், மழையின் பரிமாணம் குறைந்திருக்கிறது. ஆகவே, காடுகளை வளர்க்க வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு, அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார்-வைகைக் கால்வாய் சீரமைப்பால் கிடைக்கும் சேமிப்பு நீரைப் பயன்படுத்துவது, புதிய விஸ்தரிப்புப் பகுதிகளைத் தீர்மானிப்பது ஆகியவைபற்றி பெரியார்-வைகை பாசனப் பகுதிகளை சேர்ந்த விவசாயப் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளின் கூட்டுக்கூட்டத்தை நடத்தி முடிவு எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்களை மிக்க பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து பச்சையாறு திட்டத்தைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். நெல்லை மாவட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையில் களக்காடு மலையில் பச்சையாறு உற்பத்தி ஆகிறது. அந்த ஆறு நாங்குநேரி தாலுக்காவிற்குப் பயன்படுகின்ற ஆறு ஆகும். அன்றைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. ப.உ.ச. அவர்கள், அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருப்பதாக அப்பொழுது நடந்த நீர்ப்பாசனக் கருத்தரங்கில் அறிவிப்பு கொடுத்திருந்தார். 27—11—1975 ஆம் தேதியில் அன்றைய முதல்வர் மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அப்படி அடிக்கல் நாட்டப்பட்டதே தவிர, இதுவரையில் வேலை தொடங்கவில்லை. இந்த நிலைமை ஏன் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே சொல்ல வேண்டுக் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடுமுடியாறுத் திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் 1976 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, அணைப்பகுதிவரை, ரோடு போடப்பட்டு, அதிகாரிகள் தங்குவதற்குக் கட்டிடம் கட்டப்பட்டு, சாமான்களைச் சேர்த்து வைப்பதற்கு ஸ்டோர்ஸ் கட்டியதற்குப் பிறகும் அந்த வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதையும் விரைவில் நிறை வேற்றித் தருவதற்கு அரசு முனைப்பு காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளைக் கிழக்கே திருப்புவது சம்பந்தமாக ஏற்கனவே பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆனால் அது இன்னும் பலனளிக்கவில்லை. அதில் முனைப்பான நடவடிக்கை வருமா என்பது தெரியவில்லை.

தமிழ்நாட்டில் நமக்குக் கிடைக்கக்கூடிய மேற்பரப்பு நீர் 95 சதவீதம் பயன்படுத்தப்பட்டு விட்டது. மேற்பரப்பு நீரை மேலும் பயன்படுத்துவதற்கான பெரிய திட்டங்களை எடுத்துக்கொள்ளும் சூழ்நிலை இப்போது இல்லை. இந்தச் சூழ்நிலையிலே இதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. எனவே மிகக் கடும் முயற்சிகளை மேற்கொண்டு அதைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நீர் வளம் 1,300 டி. எம். சி. ஆனால் கேரளத்தில் நீர் வளம் 2,500 டி.எம்.சி. இதில் நீர்ப்பாசனம், போக்குவரத்து இவற்றிற்கெல்லாம் போக உபரியாகக் கடலில் போய் விழுவது 1,430 டி.எம்.சி. இந்த நிலையில் தேசிய நீர் வள அமைப்பைச் சுட்டிக்காட்டி இதுபற்றி கேரள அரசு தானே ஆய்வு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று

சொல்லப்படுகிறது. அவர்கள் எப்பொழுது ஆய்வு செய்து முடிவைக் கொடுக்கப் போகிறார்கள்? அதற்கு ஏதாவது கால நிர்ணயம் உண்டா? அப்படிச் செய்யவில்லை என்றால் தேசிய நீர்வள அமைப்பு தாமே செய்வதாகக் கூறியிருக்கிறார்களே, எப்பொழுது அதைச் செய்யப் போகிறார்கள். அதற்காக மாநில அரசு செய்கின்ற முயற்சிகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில், நம்முடைய மாநிலத் திட்டத்தின் மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளைத் திருப்பி விடும் திட்டத்திற்காக ஒரு லம்ப்—சம் தொகையை டோக்கன் கிராண்டாக ஒதுக்கியிருக்கிறீர்கள். எனவே, அதைச் செலவழிக்கின்ற முறையில் இந்தப் பிரச்னையில் அமைச்சரவர்கள் முனைப்போடு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி நதி நீர்ப் பிரச்னையில், 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கருத்துக்களை அறிந்து காவிரி நதி நீர்ப் பங்கீடு குறித்து ஒரு வரைவுக் குறிப்பை அனுப்பியிருக்கிறோம். 1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று இருக்கின்றன. பேச்சு வார்த்தைகள் நடந்தனவே தவிர இந்தப் பிரச்னை தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே இருக்கிறது. சமீப காலத்தில் அப்படிப்பட்ட கூட்டம் நடக்கும் என்று நமக்குத் தோன்றவில்லை.

இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினையில், தமிழகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்ற பற்றாக்குறைக்குத் தீர்வு காணும் முறையில் இந்த முயற்சிகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பாசனத் துறைக்கு மட்டுமாவது தனியாக இன்னொரு ஸ்டேட் அமைச்சரைப் போட்டு, மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளைத் திருப்புவது, காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தீர்வு காண்பது போன்ற நீர்த் திட்டங்களைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொண்டு இருக்கும் பாசனத்துறை அமைச்சரவர்கள் அதில் முழு நேரத்தையும் செலவழிக்கும் வாய்ப்பை அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் இதற்கான திட்டங்களைத் தீட்டி நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்ற என்னுடைய வேண்டுகோளை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





பம்பையார் திட்டம் பற்றிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசப்பட்டிருக்கிறது. முன்பு இதுபற்றிப் பேசுகின்றபொழுது 1956-ம் ஆண்டிலேயே மத்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு சிபார்சு செய்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது அதனுடைய நிலை என்னவென்று தெரியவில்லை.

அதேபோல இன்றைக்கு நம்முடைய அரசு கொடுத்திருக்கிற குறிப்புகளில் கல்லாறு அணை—அதிலே—2 டி.எம்.சி. தண்ணீர் தான் நாம் கோரியிருக்கிறோம். அந்த 2 டி.எம்.சி. தண்ணீர் நமக்கு வருமேயானால், மதுரை நகரத்திலுள்ள தண்ணீர் தேவை நிரந்தரமாகத் தீர்ந்துவிடும் என்கிற காரணத்தாலே, அந்தத் திட்டத்தைப் பெறுவதற்கான முயற்சிகளை அமைச்சரவர்கள் எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வைகை போன்ற ஆறுகளிலே இருந்து பிரிந்து செல்லுகின்ற கால்வாய்கள் நிலைமை ஒருபுறமிருக்க, மழையையே நம்பியிருக்கின்ற கண்மாய்களுக்கு பல்வேறு காட்டுப் பகுதிகளிலிருந்து தண்ணீர் வருகிறது. பல ஓடைகள் மூலமாக தண்ணீர் வருகிறது. அப்படிப் பட்ட ஓடைகளில், மிக முக்கியமான ஓடைகள் என்று கருதுகிற ஓடைகளை, அரசு செலவிலே வெட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கொள்ளுக்குளம் சூரக்குளம் பகுதியிலே அப்படிப்பட்ட கண்மாய்கள் இருக்கின்றன. காட்டு பகுதியிலிருந்து மழை இருக்கும்பொழுது தான் அந்தக் கண்மாய்களுக்கு தண்ணீர் வரமுடியும், அதை நம்பி ஆயிரக் கணக்கான ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட திட்டங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

**திரு. எம். எஸ். மாணிக்கம்** : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, பாசனத்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, இந்தத் திட்டத்தின் மூலமாக புரட்சித் தலைவருடைய அரசு தமிழ்நாட்டிலே ஆற்று நீரை அதிகமாகப் பயன்படுத்தி, அதன் மூலமாக பாசனத்தை தமிழ்நாடு பூராவும் முடித்து விட்டோம் என்ற நிலைமையிலே மழைக் காலத்திலே பெறுகிற

[திரு. எம். எஸ். மாணிக்கம்] [1983 மார்ச் 19

வெள்ள நீரைப் பயன்படுத்துவதற்கும், நிலத்தடி நீரைப்
பயன்படுத்துவதற்குமான திட்டங்களை, இன்றைய புரட்சித்
தலைவருடைய அரசு செயலாற்றி வருகிறது என்பதைப்
பாராட்டுகிறேன். அது மட்டுமல்ல கடலில் வீணாகச் செல்லக்
கூடிய, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை தமிழகத்திற்குத்
திருப்பி, அதன் மூலம் தமிழகத்தில் வறண்டு கிடக்கிற மாவட்டங்
களைச் சோலைகளாக மாற்றுவதற்கு, மற்ற மாநில அரசுகளுடன்
முயற்சிகளை எடுத்துக்கொண்டு, அதற்கான செயலாக்கத்தை
ஊக்கத்துடன் செயல்படுத்துவதற்காக, மாண்புமிகு
நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்களைப் பாராட்டுகிறேன்.
தஞ்சை மாவட்டத்திலே இந்த ஆண்டு காவிரி நீர்ப்பாசனம்
இல்லாத காரணத்தால் அந்த மாவட்டம் வறண்டிருக்கிறது.
இப்படி உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமையிலே
அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு
அமைச்சரவர்கள் ஒரு குறிப்பை கொடுத்திருக்கிறார்கள்,
அந்தத் திட்டம் 1970-லே துவக்கப்பட்டாலும், அதற்கான
நடைமுறைகளில் எந்தவிதமான முயற்சிகளும் எடுத்துக்
கொள்ளப்படாமல் இருக்கின்றன. ஆகவே காவிரி ஒப்பந்தம்
முடிந்ததற்குப் பின்னாலே, இப்படிப்பட்ட திட்டங்களை
நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்காமல்,
இந்தத் திட்டங்களை உடனடியாக செயலாற்றி, அதன்
மூலம் அந்தத் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, தஞ்சை
மாவட்டத்தில் இருக்கின்ற நிலங்களுக்கு அதிக அளவிற்கு
பாசன வசதியை செய்து தருவதற்கான நடவடிக்கைகளை
எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு
375 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை
அதிகமாக்கி, அந்தத் திட்டங்களை விரைவிலே முடிப்பதற்
கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு
புரட்சித் தலைவரவர்களையும், அமைச்சர் அவர்களையும்,
நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல என்னுடைய
தொகுதியான வேதாரண்யத்தில் இருக்கிற கிராமங்களில் 6
கிராமங்களைத் தவிர, பாக்கி கிராமங்கள் அனைத்துமே
மானாவாரிப் பகுதியாக பாசனம் பெறாத பகுதியாக உள்ளன
அதுமட்டுமல்ல, அங்கே ஓடுகிற ஆறு கடலிலே சென்று
கலக்கக்கூடியதால், வயல்களைவிட பள்ளத்திலே இருக்கிற
காரணத்தால், அங்கே இருக்கிற நிலங்கள் அந்தப் பாசனங்
களைப் பெறமுடியவில்லை. எனவே, கடலிலே செல்கின்ற
அந்த வீணாகக்கூடிய நீரை நீர் இறவைத் திட்டம் மூலமாக
நிறைவேற்றி, 10, [12 கிராமங்களுக்கு பாசன வசதி
அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே முதன் முறையாக
அங்கே தான் இறைவைப் பாசனத் திட்டம் ஆரம்பிக்கப்
பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சுமார் 30
நீர் இறைவை திட்டங்களிலே, அந்தப் பகுதியில் மட்டும் 20



1983 மார்ச் 19] [திரு. எம். எஸ். மாணிக்கம்]

நீர் இறவைத்திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆனால்
அங்கே அந்தத் திட்டங்களுக்காக, முழுமையாக, சிறப்பாக
நடத்தமுடியாமல், அங்கே அதற்கு வேண்டிய
உதவிகளையெல்லாம் செய்யாத காரணத்தால், அந்தக்
வாய்க்கால்கள், கண்மாய்கள் தூர்ந்து, மண் பகுதியாக
இருக்கிற காரணத்தால், பாசன வசதி பெற முடியாமல்
இருக்கிறது. எனவே, நீர் இறைவைத் திட்டங்கள்
அனைத்திற்குமே, அங்கே காரை பூசி இந்த பாசன வசதியை
உறுதியாக்கவேண்டும். 25 ஏக்கர் நிலம் வரை கிளை
வாய்க்கால்களை வெட்டி, அதற்கும் காரை பூசி, அந்தப்
பாசனத்திட்டங்களை நவீனமாக்கி நிறைவேற்றித் தரவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இருக்கக்கூடிய
எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற, ஆய்வில் இருக்கிற செட்டி
புலம், நீர் இறவைத் திட்டத்தையும், மருதூர் வடக்கு
நீர் இறவைத் திட்டத்தையும் பஞ்சநதிக்குளம் மேற்கு
திட்டத்தையும் அதற்கான ஆய்வுகளையும் விரைவிலே
முடித்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டு
மென்று மாண்புமிகு அமைச்சரவர்களை கேட்டுக்கொள்கிறேன்.
அதைப்போல அங்கு வடிகால் வசதி குறைவாக இருக்கிறது,
என்ற காரணத்தாலே, முதலிலே தண்ணீர் வராவிட்டாலும்,
மழைக் காலங்களிலே வெள்ளக் காடாகப்போய் அங்கே
படகில் செல்லக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்
பட்ட நிலைமையை மாற்றுவதற்காக, வடிகால் வெட்ட
1971-ல் ஒரு திட்டத்தையும், தீட்டியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12.50]

அதற்காக 11 லட்சம் மதிப்பீடு செய்து அதை 14
இலட்ச ரூபாயிலே முடித்து விட்டதாகச் சொன்னார்கள்.
அப்படி அந்த ஆற்றின் நிலம் கையகப்படுத்தப்பட்டதே தவிர,
முழுமையாக வெட்டப்படாமல் இருக்கிறது. இந்த ஆண்டு
வெட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் வெட்டி
அங்கே ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி
அந்த ஆறு முழுவதையும் கடல் வரையிலே வெட்டி கடல் நீர்
உள்ளே போகாமல் ஒரு ரெகுலேட்டர் கட்டு
வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல், செல்லக்
கோன் வாய்க்கால் பாருக் கொண்டான் பகுதியில் அங்கே ஆக்கிர
மிப்புச் செய்திருக்கிற அனைத்துப் பகுதியிலேயும் உள்ளவர்களை
வெளியேற்றி, அங்கே வடிகாலை வெட்டித்தர வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். மாணிக்கம்] [1983 மார்ச் 19

அதே போல் முள்ளியாறு கடலிலே கலக்கிற அந்தப் பகுதியிலேயும், வாய்மேடு தென்னடார், இடையிலே உள்ள அந்தப் பகுதியில் கடல் தண்ணீர் உள்ளே புகுந்து விடுகிறது. இதில் மண் அணை அந்தப் பகுதி மக்களே கட்டக் கூடிய நிலையிருக்கிறது. இன்றைக்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு வரை, பொதுப் பணித் துறையே அந்த மண் அணையைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால் தற்போது 2 ஆண்டுக் காலமாக அப்படி கட்டாமல் இருக்கிறார்கள். எனவே பொதுப் பணித்துறையியே அந்த ஆற்றில் 2 கிலோ மீட்டர் தூரம் வெட்டி கடல் தண்ணீர் உள்ளே போகாமல் இருப்பதற்கு ஒரு ரெகுலேட்டர் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் வேதாரண்யம் கால்வாய், ஆறு காட்டுத்துறை பகுதியிலே தூர்ந்து போயிருக்கிறது. அதையும் கடலுக்கு நேரடியாக வெட்டி, அதை மேம்பாடு செய்ய வேண்டும். அதே போல் நம்முடைய அமைச்சர் கூட அரைக்கால் கரைவாயை மேம்பாடு செய்வதற்கு 2 இலட்சம் ரூபாய் அளவிற்கு திட்டம் இருக்கிறது என ஒரு பதிலிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்த திட்டம் நிறைவேற்றப் படாமல் இருக்கிறது. இப்போது 10 ஆயிரம் ரூபாய் செலவு செய்தால் போதும் என்று சொல்லி, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே இது 1955 ஆம் ஆண்டிலே அடித்த வெள்ளத்திலே அந்தக் கரைகள் உடைந்து அதற்குப் பிறகு சீர் செய்யப்படாமல் 25 ஆண்டுக் காலமாக இருக்கிறது. எனவே அதை மறுபடியும் பரிசீலனை செய்து அந்த திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஈரவாய்க்கால், மற்றும் சாண்புலம் செம்போடை வடிகால் திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டும். மரக்கால் கோடையாற்றிலே பெட்டடாம் கட்டியிருப்பதற்குப் பதிலாக ஒரு ரெகுலேட்டரைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதையும் இந்த ஆண்டு உடனடியாக நிறைவேற்றித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே நொச்சிக் கோட்டம், வாளங் கோட்டம் என்று அந்த பகுதியிலே 2 ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகள் வெட்டி தண்ணீர் தேக்கி, அதன் மூலமாக அங்கே உள்ள நிலங்கள் எல்லாம் பாசனம் பெறுவதற்கு—ஆற்றிலே தண்ணீர் வராவிட்டாலும் கூட—அப்படிப் பட்ட தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



[1983 மார்ச் 19] [திரு. எம். எஸ். மாணிக்கம்]

1955 ஆம் ஆண்டிலே அடப்பாற்றிலே வடிகால் வாய்க்கால் வெட்டினார்கள். அப்படி வெட்டும் போது அந்த ஊரைப் பிரித்து விட்டார்கள். அங்கே இப்போது பாலம் கட்டாமல் இருக்கிறது. ஆனால் அதற்குப் பின்னாலே நல்லாறு என்ற வாய்க்காலிலே ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. எனவே எந்த இடத்திலே பாலம் கட்டுவது என்ற தகராறு இருந்ததால் இந்தப் பகுதியிலே பாலத் தக் கட்ட வில்லை. எனவே இப்போது அங்கே பாலம் ஒன்றைக் கட்டித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இன்றைய தினம் பெரியார்—வைகைப் பாசனத் திட்டத்திற்கு நவீனப்படுத்த வேண்டும் என்று சொல்லி, மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு அனுப்புவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே.எஸ். அவர்கள் சொன்னார்கள். பாராமுகம் இல்லையோ என்று சொன்னார்கள். மரியாதைக்குரிய அன்னை இந்திரா அவர்கள் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் என்றும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். என்ன செய்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எல்லாம் பார்த்துக் கொண்டு, ஆக்கப்பூர்வமான வேலைகளுக்கு எல்லாம் அவர்கள் கை அசைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையிலே தமிழகத்தைப் புறக்கணிப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து கங்கை—காவிரி இணைப்பு என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திரு. சி. பி. ராமசாமி ஐயர் போன்றவர்கள் எல்லாம் அதை இணைப்பதற்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலை பற்றாக்குறை காரணமாக, அதைச் செய்வதற்கு சாத்தியக் கூறு இல்லாமல் இருப்பதால் மற்றப் பணிகளைச் செய்ய நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தென் ஆற்காடு மாவட்டத்திலே கள்ளக்குறிச்சியிலே இருக்கக்கூடிய கோமுகி அணையை உயர்த்த வேண்டும் என்று சென்ற ஆண்டு நீர்ப்பாசனத் துறை

மானியத்தின் மீது பேசும்போதும் நான் சொல்லியிருக்கிறேன். இன்றைய தினம் அதனுடைய ஆய்வு வேலைகளில் ஒரு பகுதி முடிந்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது எல்லாத் திட்டங்களுக்கும், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கையசைத்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். கை நிறைய பணம் தேவை என்று கருதுகிறாரா, இல்லை கை அசைத்தால் மட்டும் போதுமா என்பது தான் நமக்குத் தெரிய வேண்டும்.

திரு. எஸ். சிவராமன் : தேவைப்பட்டவருக்கு, தேவைப் படுகின்ற நேரத்தில், தேவைப்படுகின்ற திட்டங்களுக்கு கையை அசைப்பது என்று சொன்னாலே—ஆண்டவன் இடத்திலே சென்று அருள் பெறுவது என்று சொன்னால், கையை அசைத்துப் பெறுவது என்று சொல்வது போல்—அருள் என்று சொன்னாலே பொருள் என்று தான் அர்த்தம். (சிரிப்பு). ஆகவே, பொருள் கொடுப்பதற்கு கையை அசைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். ஆகவே, அவர்கள் நீட்டுகின்ற கரம் அன்புக் கரம். அவர்கள் காட்டுகின்ற கை அன்புக் கை. அடிக்கிற கை தான் அணைக்கும் என்று சொல்வார்கள். அதைப் போல் அடித்தாலும் அவர்கள் அரவணைப்பில் தான் தமிழகம் இருந்துக் கொண்டு இருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்திரா காங்கிரஸ் கட்சி நண்பர் திரு. சிவராமன் அவர்கள் கையைப் பற்றி ஒரு விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், அந்தக் கையிலே அருளும் இல்லை, பொருளும் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் தான் அந்தக் கை இருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. எம். எஸ். மாணிக்கம்) மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கை மீது தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நாம் பார்க்கின்ற கண் எப்படி இருக் கின்றதோ அப்படித்தான் அது தெரியும். கண்ணாடி முன் நாம் எந்த உருவத்தில் நிற்கிறோமோ அந்த உருவம் தான் தெரியும். மஞ்சள் காமாலை கண் உடையவனுக்கு எதைப் பார்த்தாலும் மஞ்சளாகத் தெரியும். நல்ல கண் உடையவனுக்கு எல்லாம்



நல்லதாகத் தெரியும். ஆகவே, பார்க்கின்ற நோக்கத்தைப் பொறுத்துத்தான் அது இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

என்னுடைய தென்னாற்காடு மாவட்டத்தில் கோமுகி அணையின் கரையை உயர்த்த வேண்டும் என்று கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலே சொல்லி இருந்தேன். அது குறித்து ஆய்வு செய்வதாகவும் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்தக் கரையை உயர்த்துவதன் மூலம் பாசனம் பெறாமல் இருக்கும் பல பகுதிகள் நல்ல முறையில் பாசனம் பெற முடியும். ஆகவே, அந்தக் கரை உயர்த்தும் பணி விரைவில் செய்து முடிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள பாக்கம்பாடி அணை கட்டும் பணி இன்னும் ஆய்வுப் பணியில் இருக்கிறது. அடுத்து ஆத் தூரில் இருந்து வரக் கூடிய வசிஸ்ட்டர் அணையின் குறுக்கே ஒரு அணையை கட்டுவதற்குரிய ஆய்வுப் பணி முடித்து, அந்த அணையைக் கட்ட வேண்டும். அந்த அணையைக் கட்டுவதற் கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் உடனடியாக எடுத்து, அவர்கள் கையாலேயே அதற்கு அடிக்கல் நாட்ட வேண்டும். அவர் புன் சிரிப்பு காட்டுகிற போதே அது முடிந்து விடும் என்று எனக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. ஆகவே, அதை விரைவில் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கத்தால் ஓடைகள் பெருவாரியாக பழுதுபட்டு இருக்கின்றன. அவற்றை யெல்லாம் செப்பனிட்டுத் தர வேண்டும். கள்ளக் குறிச்சியிலே உள்ள கோமுகியாற்றிலே நீலமங்கலம் என்ற ஒரு அணைக் கட்டும், தென்கீரனூர் என்ற அணைக் கட்டும் இருக்கின்றன. அவற் றிலே வருஷா வருஷம் ஏற்படும் வெள்ளத்தின் காரணமாக பழுது அடைந்து இருக்கிறது. அந்தக் கரைகள் உடைந்து இருக்கின்றன. அந்த இரண்டு அணைகளுக்கும் பல இலட்சம் ரூபாய் செல வழித்து இருக்கிறோம். ஆகவே, அவற்றைப் பழுது பார்த்துத் தர வேண்டும். அதோடு மட்டுமல்ல. பக்கத்திலே இருந்து வரும் நீர் வரத்து காரணமாக அங்கேயுள்ள நிலங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே கரையை உயர்த்தி, அங்கே ஒரு ஷெட் ரூலிய்ஸ் கட்டி முறையாக தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது குறித்துச் சம்பந்தப்பட்ட பொறியாள ரிடம் எடுத்துச் சொல்லியும் அது செய்யப்பட வில்லை. ஆகவே, அதை உடனடியாக இந்த வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின் மூலம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மலைக் கொட்டாலம் என்ற இடத்திலே அணைக்கட்டு உடைந்து பல்லாண்டுக் காலம் ஆகிறது. அதனால் அந்தக் கிராமத்தில் உள்ள நிலங்களுக்கு பாசன வசதி இல்லை. அதைப் புதுப்பித்துக் கொடுத்தால், அந்த கிராமத்தில் உள்ள சுமார் 400 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் ஆகவே, அதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நிலக்குடியேற்றச் சங்கங்கள் 9,10 இருக்கின்றன. அவர்கள் அரசாங்கத்திடமிருந்து கடன் பெற்று மானாவாரிப் பயிர் மட்டும் செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு ஆழ்குழாய் கிணறுகள் அமைத்துக் கொடுத்து, அவர்கள் அதன் மூலம் நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

(பிற்பகல் 1-00)

கோமுகி ஆற்றங்கரைப் பகுதியில் நிலத்திற்கு அடியில் பெருமளவில் தண்ணீர் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்கே ஆறு போல் தண்ணீர் ஓடிக்கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது சம்பந்தமான தகவல்களை பொதுப்பணித்துறையின் மூலம் சேகரித்து, அந்தத் தண்ணீரை மேலே கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டும். சேலம் மாவட்டத்திலே பூமிக்கு அடியில் எப்படி ஆறு ஓடிக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்களோ அதைப் போன்று இந்தப் பகுதியிலும் இருக்கிறது. விரிவான முறையில் ஆய்வு செய்து, அந்த நிலத்தடி நீரை வெளியே கொண்டுவந்து, அந்தப் பகுதி மக்களுக்கு பாசன வசதி செய்துகொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கசாமி அவர்களுடைய உளுந்தூர்ப்பேட்டை தொகுதியில் பாயக்கூடிய மணிமுத்தாறு வாய்க்காலை நீட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த கிராம மக்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். சுமார் 200 மீட்டர் அந்த வாய்க்காலை நீட்டித்தால் திரு. ரங்கசாமி, எம்.எல்.ஏ., தொகுதியில் சுமார் 400 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் வாய்ப்பு இருக்கும். அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84-ஆம் ஆண்டுக்கான பாசனம்குறித்த மூலதனச் செலவு மானியக் கோரிக்கைகள் மீதுபேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக முதற்கண் நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன்.



இன்றைக்கு பாசனத் துறையின் மூலமாக மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கொண்டுவந்திருக்கிற பாசனத் திட்டங்களை நான் உள்ளபடியே பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் அதற்குரிய காரணத்தைச் சொல்லும்போது, எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு குறிப்பாக நடுத்தர பாசனத் திட்டங்கள் 11 செயல்பட்டு வருகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் தும்பளஹள்ளி, வாணியாறு, நாகாவதி, ஈச்சம்பாடி, தொப்பையாறு, குளசிரிசின்னாறு, கேசரிகுலிஹள்ளா போன்ற 11 திட்டங்களை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் கட்டி முடிக்கப்படும்போது கிட்டத்தட்ட 50,000 ஏக்கர் நிலம் நல்ல முறையில் பாசன வசதி பெறும். அதற்காக இந்த அரசுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தர்மபுரி மாவட்ட மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்னும் தர்மபுரி மாவட்டத்தில் நடுத்தர பாசனத் திட்டங்கள் என்ற அளவில், 4, 5 திட்டங்கள் இருக்கின்றன. அவற்றையும் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய கிருஷ்ணகிரி தொகுதியில் வேப்பனபள்ளி ஒன்றியத்தில் நாச்சிக்குப்பம் ஆற்றின் குறுக்கே சிங்கரபள்ளி அணைக்கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது. 1981-ஆம் ஆண்டு மிகப்பெரும் வெள்ளம் வந்து மிக அதிகமாக பொதுமக்களுக்கு சேதம் ஏற்படுத்தியிருக்கிறது. அங்கே நீர் வளம் அதிகமாக இருப்பதால் அந்த அணையை விரைவிலே கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, தேன்கனிக்கோட்டை வட்டத்தில் தொட்டஹள்ளா அணையைக் கட்டித்தர மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று சனத்குமார் நதி என்று அங்கே வருகின்ற சின்னாற்றின் குறுக்கே ஒரு அணையைக்கட்டித்தரவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கிருஷ்ணகிரி வட்டத்தில் கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ஆலப்பட்டி கிராமத்தில் புதிய ஏரி அமைக்க மதிப்பீடு

தயார் செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைப் போன்று வெலகலஹள்ளி கிராமத்தில் புதிய ஏரி அமைக்க மதிப்பீடு செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைப்போன்று கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் எட்டிக்கல் அகரம் என்ற இடத்தில் புது ஏரி ஒன்று அமைப்பது பற்றியும் மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைப்போன்று இன்னும், குருதொட்டனூர் ஏரி, மந்திரிகவுண்டன்கொட்டில் ஏரி போன்ற திட்டங்களும் இருக்கின்றன. இந்த ஏரிகளையும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் இந்த அறிக்கையில் பல ஏரிகளை அமைக்கும் பணி ஆய்வில் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதோடு வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில் ஆவல்நத்தம் அருகில் ஒரு காட்டாற்றின் குறுக்கே ஏரி அமைக்கும் திட்டமும் ஆய்வில் இருக்கிறது. அதோடு ஆலேகுந்தாணி அருகில் காட்டாற்றின் குறுக்கே புதிய ஏரி ஒன்று கட்டும் திட்டத்தையும் தீட்டியிருக்கிறார்கள். அதோடு பாலக்கோடு வட்டம், பாலகோடு ஒன்றியத்திற்கு உட்பட்ட சாஸ்திரமோட்லு என்ற இடத்தில் உப்பம்பள்ளம் என்ற ஆற்றின் குறுக்கே ஒரு பெரிய ஏரி கட்டுவது அரசின் ஆய்வில் இருக்கிறது. இந்த ஏரிகளையும் தர்மபுரி மாவட்டத்தில் கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு தர்மபுரி தொகுதிக்கு உட்பட்ட தர்மபுரி நகரத்தின் பக்கத்திலே ஓடுகிறது சன்னதி என்னும் ஆறு. அந்த ஆற்றின் கரைகளை வெட்டி செம்படகுப்பம் என்னும் இடத்தில் புதிய ஏரி ஒன்று வெட்டுவது சம்பந்தமாக ஆய்விலே இருக்கிறது. அந்த ஏரியை வெட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு தர்மபுரி ஒன்றியத்தைச் சேர்ந்த பதிகால் பள்ளம் பகுதியில் புதிய ஏரி ஒன்று கட்டிக் கொடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்திலே நீர் அதிகமாக இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் அரசின் ஆய்விலே இருப்பதாகத் தெரிகிறது. ஆகையினால் அந்த ஏரியையும் கட்டித் தர வேண்டும் என்று கேட்டு, அதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழே, தர்மபுரி மாவட்டத்தில் நல்ல பல திட்டங்களைப் போட வேண்டும் என்பதற்கான ஆய்விலே இருப்பதாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை யெல்லாம் நமது அரசு காலத்திலே நிறைவேற்றி



அந்த மாவட்டத்தை ஒரு வளமான மாவட்டமாக ஆக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் திட்டத்தின் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய சில கருத்துக்களை வலியுறுத்தும் விதமாக இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, மேற்பரப்பு நீரை பயன்படுத்துகிற வாய்ப்பு அநேகமாக முடிந்துவிட்டது என்று சுட்டிக்காட்டுகிறேன். இப்போது நாம் மேற்கே நோக்கி பார்க்க ஆரம்பித்திருக்கிறோம். கேரள பகுதியில் மேற்கு நோக்கி பாய்கிற நதிகளை கிழக்கே திருப்பிவிட்டு, அதை வைத்து தமிழகத்திற்கு பாசனத்திற்கு பயன்படுத்த முடியுமா என்கிற ஆராய்ச்சியை, மேற்கொண்டிருக்கிறோம். அது தொடர்பாக சில நிகழ்ச்சிகளை கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு 1982 செப்டம்பர் திங்களில் டெல்லி மாநகரத்தில் நடைபெற்ற நேஷனல் வாட்டர் டெவலப்மெண்ட் ஏஜென்சி கூட்டத்தில், மத்திய அரசு அதிகாரி, கேரள சர்க்காரே அந்தத் திட்டத்தை ஆய்வு செய்து, கிழக்கே திருப்பிவிடுவதற்கான திட்டங்களை தாமாகவே செயல்படுத்த முன் வருவார்கள் என்று தாம் எதிர் பார்ப்பதாகவும், கேரள அரசு அப்படி வரவில்லை என்றால், அந்தத் திட்டங்களை மைய அரசே மேற்கொள்ளும் என்றும் செய்தி வந்திருக்கிறது. ஆரம்பக் காலத்திலே அதற்கென ஆறு மாதங்கள் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் தம்முடைய எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளார்கள். நான் இந்தச் சூழ்நிலையிலே சுட்டிக்காட்ட விரும்புவது, அந்த 6 மாத கால அவகாசத்தை நாம் எட்டிக்கொண்டிருக்கிறோம். இது குறித்து மத்திய அரசுக்கு நினைவுபடுத்த வேண்டிய காலக்கட்டத்தை மாநில அரசு எட்டிக்கொண்டிருக்கிறது. எனவே, கடந்த காலத்தில் சில பிரச்சினைகளில் இருந்தது போல் இருந்து விடாமல்— உரிய காலத்தில் நினைவூட்டத் தவறியதை மீண்டும் கைக் கொண்டு விடாமல், தக்க காலத்தில் மைய அரசின் கவனத்திற்கு, இந்தப் பிரச்சினையை கொண்டு சென்று எழுப்பவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆறுகளில் அநேகமாக அணைகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் உங்கள் கவனத்திற்கு இந்தச் சந்தர்ப்பத்திலே கொண்டுவர

விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்னும் சில
ஆறுகள், அணைகள் கட்டப்படுவதற்காக, உங்களுடைய திட்டங்
களை எதிர்நோக்கியிருக்கின்றன என்று. அப்படி அந்த வகையில்
யில், பொய்கை அணை திட்டம், தாடகா ஆற்றின் குறுக்கே
ஆணை கட்டுவதற்கான திட்டம், இன்னொன்று மாம்பழத்துறை
ஆறு அணைக்கட்டு திட்டம், 4-வது உலக்கை அருவி அணைத்
திட்டம் என்று இந்த திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்
றன. ஏற்கெனவே கோதையாறு திட்டத்தை கன்னியாகுமரி
மாவட்டத்திற்கென உருக்கொண்டபோது, சிந்தித்துப் பார்த்து
தீட்டப்பட்ட திட்டங்கள் இவை.

அவைகளிலே பேச்சிப்பாறை அணை முழுமை பெற்றிருக்
கிறது. தொடர்ந்து பெருஞ்சாணி அணை கட்டப்பட்டிருக்கிறது.
இந்த 4 அணைகளையும் கட்டுவதற்காக அரசு முனைந்து
செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்
கிறேன். அதிலும் குறிப்பாக மாம்பழத்தாறு அணையிலும்
உலக்கை அருவி அணைத் திட்டத்திலும் கிடைக்கும் தண்ணீர்
குடிதண்ணீருக்கு முழுமையாகப் பயன்படுத்த ஏதுவாக இருக்கும்
என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இவைகளில் அதிக
கவனம் செலுத்தி கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

கோதையாறு மேம்பாடு திட்டம் என்கிற ஒரு திட்டம் ஆய்
வில் இருப்பதாக சென்ற முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
இங்கே ஒரு தகவலை தந்தார்கள் என்று நினைக்கிறேன். அதில்
17 கோடிக்கு மதிப்பீடு போடப்பட்டிருப்பதாகவும், அது முழுமை
பெற்று வருகிறபோது சில கிளைக் கால்வாய்களை வெட்டும் பணி
யும் மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். நான் அதற்கு
முன்பு சில பணிகளைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த
விரும்புகிறேன். கோழிப்பூர் கிளைக்கால்வாய் வெட்டும் திட்ட
மும், கப்பியறை கிளைக் கால்வாய் வெட்டும் திட்டமும் அரசினு
டைய பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அந்த திட்டங்
களை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

முழுமையாக கன்னியாகுமரி மாவட்டம் வறட்சியால் பாதிக்
கப்பட்டு இருக்கின்றது என்ற தகவலை மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்கள் உங்களுக்கு அனுப்பி இருக்கிறார்கள். ஏறத்
தாழ 80 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு இரண்டாவது பாசனம்
செய்ய முடியாத நிலைமை இருக்கின்றது என்று சுட்டிக்காட்டி





இருக்கிறார்கள். ஏறத்தாழ 200-க்கும் அதிகமான கிராமங்
கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல் வந்
திருக்கின்றது. எனவே வறட்சிப் பணித் திட்டத்தை மேற்கொள்
கின்றபோது கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற நிலைமை
யைப் போக்குகின்ற வகையிலும் வேலையற்று இருக்கின்ற விவ
சாயப் பெருங்குடி மக்களுக்கு வேலைவாய்ப்புத் தருகின்ற வகையி
லும் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்கின்றபோது குறிப்
பாக உங்கள் கவனம் குளங்களைத் தூர் எடுப்பதிலும், பாசன
கால்வாய்களைப் பழுது பார்ப்பதிலும் செலுத்தப்பட வேண்
டும் என்று கேட்டுக்கொண்டு நான் வைத்திருக்கின்ற கோரிக்கை
களை முழு அளவிற்கு எங்களுக்கு நம்பிக்கையூட்டுகின்ற வகையில்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில தகவல்களைத் தருவார்
கள் என்ற எதிர்பார்ப்புடன் அமர்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்
களே, பாசனம் குறித்த மானியக் கோரிக்கையினை வரவேற்று
ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்பு தந்தமைக்கு
நன்றியினை நான் காணிக்கையாக்குகின்றேன்.

ஆரணி, போளூர் போன்ற பகுதிகளில் பல்லாண்டு காலமாக
இருந்த கோரிக்கையை குறிப்பாக அங்கே ஒரு அணை கட்ட
வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களின் அரசு ஏற்றுக் கொண்டு அரியணை ஏறியவுடன்
வடாற்காடு மாவட்டத்திற்கு செண்பகத் தோப்பு அணையை
முதல் பரிசாக கொடுத்தது. ஆனால் அதற்குப் பிறகு அதில்
எவ்விதமான வேலையும் செய்யாமல் ஆய்வு சரியான முறையில்
எடுக்கப்படவில்லை என்ற குறையைக் காட்டி அது அந்த ஆண்
டோடு நிறுத்தப்பட்டது. அதற்கடுத்து 1982-83 ஆம் ஆண்டில்
நிதிநிலை அறிக்கையில் செண்பகத்தோப்பு அணை இந்த ஆண்டு
கட்டி முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு அது பல்வேறு
பிரச்சினைகளின் காரணமாக நின்றுகொண்டிருக்கின்றது. எனவே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த செண்பகத்தோப்பு
அணையை பல்லாண்டு காலமாக மக்களின் கோரிக்கையாக
இருக்கக்கூடிய இந்த அணையை எங்கள் பகுதி
யில் நிரந்தரமாக வறட்சியினை அகற்றுவதற்குரிய
வகையில் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். அதனைக் கட்டி முடிப்பதற்கான வகையில் அதற்கான
அடிக்கல்லை நாட்டுவதற்கான ஆணையை விரைவில் பிறப்பிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 6 மாத கால
மாக இந்த அணையின் அடிக்கல்லை நாட்டுவதற்கு பல முறை
மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தேதி கேட்டு வருகிறோம்.
எனவே அதற்கான தேதியை இப்போது கூட, பதிலளிக்கும்போது
சொன்னால் நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்களாக
இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வடாற்காடு மாவட்டம் நிரந்தரமாக வறட்சியிலே
இருந்து மீளவேண்டும் என்றால் வடாற்காடு மாவட்டத்தின் 10,
12 தொகுதிகள் நிரந்தரமாக வறட்சியிலே இருந்து விடுபட
வேண்டும் என்றால் இந்த செண்பகத்தோப்பு அணையையும் மற்
றும் பில்லூர் அணை, கீழரசம்பட்டு அணை, குப்பநத்தம் அணை,
ஆகியவற்றை அமைத்துக் கொடுக்க வேண்டும். இந்த அணை
களுக்காக கிட்டத்தட்ட 30 கோடி அல்லது 40 கோடி ரூபாய்
செலவாகும். அந்த 30 கோடி அல்லது 40 கோடியைச் செல
விட்டால் வடாற்காடு மாவட்டத்தில் என்றென்றும் நிரந்தர
மாக வறட்சியிலே இருந்து கிட்டத்தட்ட 15 தொகுதிகளை காப்
பாற்றக்கூடிய நிலைமை இருக்கின்றது. எனவே இந்த நான்கு
அணைகளையும் கட்ட வேணண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்
அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

அடுத்து நிலத்தடி நீர் வற்றாமல் இருக்க புதிய சிறு அணை
களைக் கட்டுவதற்கும் புதிய ஏரிகளைக் கட்டுவதற்கும் ஆங்
காங்கே குளங்களை வெட்டுவதற்கும் வேண்டிய வசதிகளைச்
செய்ய வேண்டும். அப்போதுதான் நிலத்தடி நீரைக் காப்பாற்று
வதற்கு வேண்டிய ஆயத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து குழாய் கிணறுகளை அமைப்பதற்கு அதிகமான நிதி
ஒதுக்கி அதிகப்படியான நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டு
வரவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெள்ளைச்சாமி
அவர்கள் சொன்னது போன்று கடல் நீரான உப்பு நீரை விவ
சாயத்திற்கும், குடிப்பதற்கும் பயன்படுத்துகின்ற வகையில்
நல்ல நீராக ஆக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். அப்படிப்பட்ட
முயற்சிகளை மேற்கொண்டால் வருங்காலத்திலே இங்கே பஞ்சமே
இல்லாத நிலைமை ஏற்படும். ஆகவே, கோடிக்கணக்கில் பணம்
செலவழித்தாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி
செய்ய வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பல ஏரிகளுக்கு ஆற்றிலே இருந்துதான் வாய்க்கால்
மூலமாக தண்ணீர் வரக்கூடிய நிலைமை இருக்கின்றது. மழைக்
காலங்களில் அந்த ஆற்றுக்கால்வாய் ஒழுங்காக இருந்தால்தான்
தண்ணீர் நிரம்பி வழியும். பல ஏரிகளில் வாய்க்கால்கள் இருக்
கின்றன. பல ஏரிகளில் வாய்க்கால்கள் இல்லாமல் இருக்கின்றன.
எனவே அவற்றுக்குப் பக்கத்திலே இருக்ககூடிய ஆறுகளில் புதிய
வாய்க்கால்களை அமைத்து அவற்றை இணைக்கக்கூடிய காரியங்
களைச் செய்வதில் அரசு ஈடுபடவேண்டும் என்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இப்போது வறட்சியை பயன்படுத்தி வட ஆற்காடு மாவட்டத்
தில் இருக்கக்கூடிய மிகப்பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் மற்றும்
தூசி மாமண்டூர் ஏரிகளை ஆழப்படுத்துவதற்கு வேண்டிய வழி
வகைகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
மதுராந்தகம், புயலேரி, மணலூர் போன்ற ஏரிகளையும் இந்த
வறட்சி திட்டத்தில் எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல் நீரின் தன்மை கெடுவது பற்றி ஆய்வை செய்வ
தாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும்
வட ஆற்காடு மாவட்டத்தில் அந்த ஆய்வைத் துவங்க இருப்பதாக
சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு அமைச்சர்
அவர்களுக்கும் அரசுக்கும் மாவட்டத்தின் சார்பில் என்னுடைய
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏன் என்று கேட்டால்
பாலாறு பகுதியில் தான் ராணிப்பேட்டை, ஆற்காடு, வாணியம்
பாடி, ஆம்பூர் போன்ற முக்கியமான பகுதிகள் எல்லாம் இருக்
கின்றன. அங்கே கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான தோல் பத
னிடும் தொழிற்சாலைகள் துவங்கப்பட்டிருக்கிறது. அவைகளி
லிருந்து வெளிவரும் கழிவு நீர் மிகவும் ஆபத்தானது. குடிக்க
தண்ணீர் இல்லாமல் குடிநீரை கெடுக்கக்கூடிய நிலைமையில்
விவசாயத்திற்கு பயன்படுத்தமுடியாமல் குடிநீருக்கு பயன்படுத்த
முடியாமல் அந்த 4 பகுதிகளும் இருக்கின்றன என்பதை இந்த
நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்கூறி
விரைவில் அதற்கு பரிகாரம் காணவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல் இங்கே காலதாமதம் செய்வதனால் பல்வேறு
பிரச்னைகள் இருக்கின்றன. இங்கே சிறிய அணைகளுக்கும் பெரிய
அணைகளுக்கும் உண்டான திட்டங்களை போடுகிறோம். நிதி
ஒதுக்கீடு செய்கிறோம். ஆனால் ஆய்வுப் பணிகள் என்று சொல்லி
ஒரு சில ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. அதற்கு பிறகு நில
ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று சொல்லி 4 (1) நோட்டிபி
கேஷன் 6,7 நோட்டிபிகேஷன் போன்றவைகளைப் போட்டு அரசு
ஆணை வாங்கி அதற்கு பிறகு நில ஆர்ஜிதம் செய்ய வேண்டும்
என்று சொன்னால் 2 ஆண்டு, 3 ஆண்டு காலம் ஆகிறது. எனவே
நில ஆர்ஜிதம் செய்யும் பணியை மாவட்ட ஆட்சித் தலைவர்
இடத்தில் ஒப்படைத்துவிட்டால் இது போன்ற காலதாமதங்களை
குறைக்க முடியும். ரீ—எஸ்டிமேட் என்று 400 லட்சம் போட்டு
பின்பு அதை 500 லட்சமாக மாற்றக்கூடிய நிலமையும் காலதாம
தத்தால் ஏற்படுகிறது. அதை குறைப்பதற்கான வழிவகை
களை இந்த அரசு செய்ய முயற்சி செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நீர்ப்பாசன திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி பல காரியங்களை செய்து கொண்டு வருகிறது இந்த அரசு. மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அதிலே முனைப்பாக பணிபுரிந்து வரு கிறார்கள். ஆனால் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மற்ற நிதி நிறுவனங்கள் மூலம் நிதியைப் பெறுவதற்கோ கடனாக பெறு வதற்கோ முடியவில்லை. எனவே எப்படி ஆழ் குழாய் வாரியம் அமைத்து அதற்குண்டான வழிவகைகளை செய்தீர்களோ அதே போல் பாசன திட்டத்திற்கு என்று தனியாக ஒரு வாரியம் அமைத்து மற்ற நிதி நிறுவனங்களிலிருந்து கடன் வாங்குவதற் கான வசதியை செய்வதற்கான நல்ல பணியினை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கங்கை காவேரி இணைப்பு பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வெள்ளைச்சாமி எடுத்துச்சொன்னார் கள். இங்கே கங்கை-காவேரி இணைப்புத் திட்டத்திற்கு கிட்டத் தட்ட 2 ஆயிரம் கோடி, 3 ஆயிரம் கோடி செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இங்கே விளையாட்டுக்கு ஆயிரம் கோடி, 1,500 கோடி என்று செலவு செய்கிறார்கள். மாநாடு என்று சொல்லி ஆயிரம் கோடிக்கு மேல் செலவு செய் கிறார்கள். மிகப்பெரிய திட்டமாக இருக்கக்கூடிய கங்கை-காவேரி திட்டத்தை விரைவில் மத்திய அரசு கடைபிடிக்கவேண்டும், அந்த திட்டத்தை செயலாற்றவேண்டும். அதற்கான வழிவகை களை செய்யவேண்டும். தமிழ்நாடு அதற்காக மத்திய அரசை வலியுறுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

மேற்கு நோக்கி பாயும் நதிகளின் பிரச்சனை. இங்கே தமிழகத்திற்கு திருப்பி விடவேண்டும் என்று பல முறை அமைச்சர் அவர்கள் இலாக்கா மூலம் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால். கேரள அரசு இதுவரை எந்தவிதமான பதிலும் சொல்ல வில்லை. பேச்சுவார்த்தைக்குக்கூட அவர்கள் ஒத்து வரவில்லை. 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் டெல்லியில் தேசீய நீர் வள அமைப்பு மாநாட்டில்கூட மத்திய அரசு கேரள அரசை வற்புறுத்தவில்லை.

அதேபோல், இங்கே தமிழகத்திற்கு மிக முக்கியமான பிரச் சனையாக காவேரி நதி நீர் பிரச்சனை இருக்கிறது. பல மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்படுவதற்கு இந்த காவேரி நதி நீர் பிரச்சினை ஒரு அடிப்படை காரணமாக அமைந்து இருக்கிறது.

கிட்டத்தட்ட 1924 ஆம் ஆண்டு செய்து கொண்ட அந்த ஒப்பந்தத்தை 50 ஆண்டுகாலத்திற்குள் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். அதாவது, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி காலத்தில்





1974 ஆம் ஆண்டு புதுப்பித்து இருக்கவேண்டும். ஆனால், அந்த முறை தவறவிட்டு விட்டார்கள். 1974 லிருந்து 1977 வரை அந்த 4 ஆண்டு காலத்திலும் அதைத் தவற விட்டுவிட்டார்கள். கோர்ட்டுக்கு சென்றபோது. பாரதப் பிரதமர் அவர்கள் அதை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள் அதற்கு நல்ல சுமுகமான முடிவை எடுக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் அதற்குப் பிறகு எந்தவிதமான முடிவும் காவேரி நதி நீர் பிரச்சனையில் ஏற்பட வில்லை. தமிழக அரசைப் பொறுத்தவரையில் 5 மாநாடுகள் டெல்லியிலும், 2 முறை பெங்களூரிலும், சென்னையில் நடந்த ஒரு மாநாட்டிலும் கண்டிப்பான முறையில் தமிழகத்தினுடைய பிரச்சனையை எடுத்துச் சொல்லி நதி நீர் பிரச்சனைக்காக போராடியிருக்கிறது. ஆனால் மத்திய அரசின் முன்னாள் நீர்ப் பாசனத்துறை அமைச்சர் திரு. பாண்டே அவர்கள் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் பரிந்துரை செய்யக்கூடிய கட்டத்தில் இருக்கிறோம். அதிகாரம் போடும் கட்டத்தில் இல்லை. சட்டம் அதற்கு இடம் கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு எவ்வளவோ சட்டங்களை போடுகிறது. எவ்வளவோ பிரச்சனைகளை சட்டங்களாக கொண்டு வருகிறது. கலவரப்பகுதி சட்டம், மாநிலங்களை ஒடுக்கக்கூடிய சட்டம் அதையும் போட்டு அவர்கள் கையில் எடுத்துக்கொள்கிறார்கள். மாநில பட்டியலிலிருந்து மத்திய பட்டி யலுக்கு பல பொருள்களை எடுத்து சொல்கிறார்கள். அப்போது அவர்களுக்குச் சட்டம் இடம் கொடுக்கிறது ஆனால், காவேரி நதி நீர் பிரச்சனை இதுபோன்ற நதி நீர் பிரச்சனைகளில் மத்திய அரசு சுணக்கம் காட்டுகிறது.

(பிற்பகல் 1-20)

இங்கே திரு. சிவராமன் போன்ற நண்பர்கள் ஏதோ கையை ஆட்டு கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், ஏன் இதுபோன்ற பிரச்சினைகளிலே ** என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் குறிப்பிட்டது தேவையற்றது என்று கருது கிறேன், ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்,

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்) :** அவைக் குறிப்பிலிருந்து அது நீக்கப்படுகிறது. (மணியடிக்கப் பெற்றது.)

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவ அவர்களே, 1983-84 ஆம் ஆண்டிற்கான பாசனம் மீதான மானியக் கோரிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். வரலாறு காணாத வகையில் வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ள இந்த ஆண்டுக்கு பாசனம், பாசனம் மீதான மூலதன செலவுக்காக ஒதுக்கப்பட்ட தொகை மிகவும் குறைவாக உள்ளது. ஒதுக்கிய தொகையிலே நீர்ப்பாசனத்திற்குத் தேவையான இன்றி யமையாத நல்ல திட்டங்கள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் எதுவும் அப்படி எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பது உள்ளபடியே வருந்தத்தக்கது.

பெரியாறு-வைகைப் பாசனத் திட்டத்தை நவீனப் படுத்துவது போல் காவிரி டெல்டா திட்டத்தை நவீனப்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் 9.34 லட்சம் ஏக்கர் டெல்டா பகுதி காவிரியை மட்டுமே நம்பியிருக்கிற பகுதியாகும். அந்த 9·34 லட்சம் ஏக்கரும் அடுத்த ஆண்டுக்குப் பயன்படுமா என்ற சந்தேகம் இன்றைய தினம் எல்லோருடைய மனத்திலேயும் ஏற்பட்டிருக்கிறது. காவேரி டெல்டா திட்டத்தை நவீனப்படுத்த 366 கோடி ரூபாய் மதிப்பீடு ஆகும் திட்டத்தை மத்திய அரசின் ஒப்புதலுக்கு இனிமேல்தான் அனுப்பப்போகி றோம் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப் பட்டுள்ளது உள்ளபடியே வருந்தத்தக்கது. 6 மாத காலமாக வறட்சியைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். தமிழகத்தின் நெற்களஞ்சியமாக உள்ள தஞ்சை மாவட்டம் இன்றைக்கு எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோரும் தெரிந்த ஒன்று. இந்த நிலைமையிலே இனிமேல் தான் காவிரி டெல்டா திட்டத்தை நவீனப்படுத்துவதற்கான 366 கோடி ரூபாய் திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்ப இருக்கிறோம் என்று கூறி இருப்பது உள்ளபடியே கண்டிக்கத் தக்கதாக இருக்கிறது. உலக வங்கியின் நிதியுதவிக்காக என்ன முயற்சிகளை மேற்கொண்டி ருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. இன்றையதினம் யார் யாரையோ மத்திய அரசுக்கு டெல்லிப் பிரதிநிதிகளாக நியமிக்கிறீர்கள். அவர்கள் என்ன செய்துகொண்டு இருக்கிறார் களோ எங்களுக்குத் தெரியாது. இந்தத் திட்டங்களிலாவது அவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வருகின்ற ஆண்டு வெள் ளத்தால் சேதம் ஏற்படும் என்ற ஐயப்பாடு யாருக்கும் கிடையாது. காரணம் தற்போது நாம் வறட்சியைப் பற்றி பேசிக் கொண்டி ருக்கிறோம். ந்தச் சூழ்நிலையில் தஞ்சை மாவட்டத்திலே வருகிற ஆண்டில் வெள்ளத் தடுப்பு பணிகளுக்காக 66.40 லட்சம்





செலவிட உத்தேசித்து உள்ளதாகக் குறிப்பட்டிருக்கிறது. இது தேவைதானா என்று கேட்க விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம் பாலைவனமாக ராஜஸ்தானாக மாறிக்கொண்டிருக்கிறது. உலகத்திலே இருக்கிற நீர் நிபுணர்கள் எல்லாம் பூமிக்கடியில் இருக்கிற நீரைப் பயன்படுத்தி பாலைவனத்தை எப்படிச் சோலை வனமாக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத் திலே நாம் சோலைவனமாக இருக்கக்கூடிய தஞ்சை மாவட்டத்தை பாலைவனமாக மாற்றிக்கொண்டிருக்கிற நிலை உள்ளபடியே வருந்தத்தக்கதாகும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆலக்குடி கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் வலது கரையில் வெள்ளத்தடுப்பு சுவர் கட்ட 60 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த வறட்சி நேரத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் தேவைதானா என்று கேட்கவிரும்புகிறேன். கடந்த நான்கு ஐந்து ஆண்டு காலமாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 'ஏ' பிரிவு வாய்க்கால்கள் எதுவுமே வெட்டப்படவில்லை. அதன் விளைவாகத்தான் ஆறுகளிலே வந்த நீர் கூட வாய்க்கால் வழியாக வயலுக்கு சென்று அடைய முடியாத நிலை கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டது. இந்த ஆண்டு 'ஏ' பிரிவு வாய்க்கால்களை வெட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிற்குரிய காவேரி நீரை கர்நாட அரசு தடுத்தாலும் சரி அல்லது யார் தடுத்தாலும் சரி எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல வருகிற 24, 25 தேதிகளில் இரண்டு மாநிலங்களின் நீர்ப்பாசன அமைச்சர் களும் சந்தித்து பேசயிருப்பதாகச் சொன்னார்கள், ஆனால் இன்றைக்கு எனக்கு கிடைத்திருக்கிற தகவல் அந்த சந்திப்பு ஒத்திப்போடப் படலாம் என்று சொல்லப்படுகிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த பேச்சுவார்த்தை தள்ளிப்போடப் படாமல் இந்தப்பிரச்சினையில் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு 27—1—1983 அன்று மேட்டூர் அணை மூடப்பட்டது. ஆனால் ஒரு மாதம் கழித்து 23—2—1983 அன்று மீண்டும் டெல்டா பகுதிகளுக்கு தண்ணீர் விடப்பட்டது. இது தேவைதானா என்று தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வறட்சியினுடைய கொடுமை எல்லோருக்கும் தெரியும் 27—1—1983 அன்று மூடப்பட்டதை நிறுத்தி இன்னும் ஒரு பதி னைந்து நாட்களுக்கு தண்ணீர் விடப்பட்டிருந்தால் ஓரளவிற்கு சம்பா, தாளடிப் பயிர்களைக் காப்பற்றி இருக்கமுடியும், இப்படி தஞ்சை மாவட்டம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குவேண்டிய நிவாரணப் பணிகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும். புதிய அணைகள் எங்கெங்கு தேவையோ அங்கே புதிய அணைகள் கட்டப்பட வேண்டும். ஏரிகள் அமைக்கப்படவேண்டும். ஏரி, குளங்கள்

உடனடியாக பழுது பார்க்கப்படவேண்டும். தஞ்சை மாவட் டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு ஆறுகள் வாய்க்கால் களுடைய உயரத்தை விட கீழே, ஆறுகளின் 'சில் லெவலை' விட மிகவும் ஆழமாக இருப்பதால் ஆறுகளில் வருகிற தண்ணீர் வாய்க்கால்களில் ஏறமுடியாமல் இருக்கின்றன. ஆகவே ஆங்காங்கு ஒரு பெட் டாம் அல்லது ஒரு ரெகுலேட்டர் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயக் குழாய் கிணறுகள் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஓரளவிற்கு ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அமைக் கப்படுகிற குழாய் கிணறுகளுக்கு மோட்டார்களோ, ஆயில் என்ஜின்களோ வாங்கிப் பொருத்தப் படாததால் பல்வேறு குழாய் கிணறுகள் இன்றைய தினம் பயனற்றதாக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 82-83-ஆம் ஆண்டில் கடைமடைப் பகுதியில் ஆயிரம் குழாய் கிணறுகள் கட்டப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. தற்போது 500 குழாய் கிணறுகள் கூட செயல்படவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். 83 ஜனவரிக்கு பிறகு 4 ஆயிரம் குழாய் கிணறுகள் இறக்கப்போவதாகச் சொல்லி விவசாயிகளுக்கு கடுமையான விதிமுறைகளை கூறியிருக்கிறார்கள். இன்றைய தினம் கூறப் பட்டிருக்கிற விதிமுறைகள் சாதாரண விவசாயிகளால் 4 ஆயிரம் குழாய் கிணறுகள் திட்டத்தின்கீழ் பயன் அடைய முடியாமல் இருக்கிறது. 2½ ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கவேண்டும். 13 வருடங்கள் வில்லங்க சான்றிதழ் அதற்கு முந்தைய உரிமை யாளரிடம் பெறவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் பாக்கி இருக்கக் கூடாது ; அருகிலே எந்த ஷெட்யூல்ட் வங்கிகளிலும் அவருக்கு கடன் இருக்கக்கூடாது ; அரசாங்க கடன் கிஸ்தி பாக்கி இருக்கக் கூடாது ; நிலவள வங்கியில் எந்தவித கடனும் இருக்கக்கூடாது ; 500 அடிகளுக்குள் வேறு எந்தவித குழாய் கிணறும் இருக்கக் கூடாது; இப்படிப்பட்ட முரணான விதிமுறை கள் கூறப்பட்டிருப்பதால் சாதாரண ஏழை, எளிய விவசாயிகள் இந்தத் திட்டத்தால் பயன் அடைய முடியவில்லை. இது வறட்சி நிலையை நீக்க எடுக்கப்படும் துரித நடவடிக்கையா ? அல்லது நீங்கள் அடிக்கடி சொல்கிறீர்களே போர்க்கால நட வடிக்கையென்று; இதுதான் போர்க் கால நடவடிக்கையா என்று கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் : (திரு. எம். எஸ். மணிக்கம்) : அவையின் அனுமதியோடு, அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



திரு செ. இராமலிங்கம் : இப்படிப்பட்ட விதிமுறைகளுக்குட் பட்டு எத்தனை மனுக்கள் உங்களுக்கு இன்றுவரை கிடைத திருக்கின்றன? இந்த 4,000 குழாய்க் கிணறுகள் போட, இதுவரை 1,000 மனுக்கள்கூட வரவில்லையென்று என்னிடம் கூறியிருக் கிறார்கள். இது எப்படி இருக்கிறது ? சாகாத வீட்டிலே யிருந்து கடுகு வாங்கி வந்தால் செத்த குழந்தையைப் பிழைக்க வைக்கிறேன் என்பதைப் போல, இப்படிப்பட்ட விதிமுறைகளை எல்லாம் கூறி, ஏதோ 4,000 குழாய்க் கிணறுகளை இன்றைக்கு அமைக்கப்போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் குழாய்க் கிணறு வாரியம் என்று ஒரு வாரியம் அமைத்தீர்கள். அந்த வாரியம் இதுவரை என்ன செய்திருக் கிறது என்று எனக்குத் தெரியவில்லை. தஞ்சை மாவட்டத்தில் துயர் துடைக்கும் பணியில் இந்தக் குழாய்க் கிணறு வாரியம் ஈடுபடுகிறதா ? அல்லது எதையாவது செய்திருக்கிறதா என்பதை இந்த நேரத்தில் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், காவிரிக் கோட்டத்தைச் சேர்ந்த மன்னியாறு இந்த ஆண்டு மட்டுமல்லா மல், எல்லா ஆண்டுகளிலும் பொய்த்துப் போகிற ஒரு ஆறு. இதை நம்பி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாசனம் பெற வேண்டியுள்ளது. அந்த ஆறு கடந்த 6 மாத காலமாக வறண்டு கிடக்கிறது. அந்த ஆற்றிலிருந்து பாசனம் பெறுகின்ற குருச்சி, காட்டூர், வேலூர் போன்ற வாய்க்கால் தலைப்புகளுக்கு அருகாமையிலேயே உடனடியாக ரெகுலேட்டர் அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று மாயவரத்திலிருந்து அம்மையப்பன் வாய்க் காலுக்கு ஒரு புதிய தலைப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திட்டச்சேரி, இருமூளை, குலசேகரநல்லூர், கோனுலாம் பள்ளம் ஆகிய கிராமங்களுக்குப் புதிய பாசனத் தலைப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டலாம்பேட்டை, முத்தூர் கிராமப் பாசனத்திற்கு, நாட்டாற்றில் ஒரு ரெகுலேட்டர் கட்டித் தரவேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பவுண்டரீகபுரம், மாங்குடி, ரெண்டாங்கட்டளை ஆகிய கிராமங்களின் வாய்க்கால் தலைப்பில் கீர்த்திமனூரில் ஒரு புதிய ரெகுலேட்டர் கட்டித் தரவேண்டும்.

வீரசோழன் ஆற்றிலிருந்து 67 சாத்தனூர் கிராமத்திற்குப் புதிய வாய்க்கால் தலைப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருவிடைமருதூர், வண்ணக்குடி வாய்க்கால்களுக்கு வீரசோழன் ஆற்றில் புதிய தலைப்பு ஏற்படுத்தித் தரவேண்டும்.

காவிரி கோட்டம், நன்னிலம் துணைக் கோட்டத்தைச் சேர்ந்த திருமலைராசன் ஆற்றிலிருந்து பிரியும் பூவாம்பூர் வாய்க்கால் தலைப்பை கூகூர் ரெகுலேட்டர் அருகில் மாற்றித் தரும்படி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி கோட்டம் மாயவரம் துணைக் கோட்டத்தைச் சேர்ந்த வேலூர் வாய்க்காலுக்குப் பழவாற்றில் ஒரு புதிய தலைப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீரசோழன் ஆற்றிலிருந்து மஞ்சமல்லி கிராமத்திற்குப் புதிய பாசனத் தலைப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் சில கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் உப்பன்பள்ளம் குறுக்கே சாஸ்திரமொட்லு நீர்த் தேக்கத் திட்டம் நிலுவையாக உள்ளது. அது வேளாண்மைத் துறையின் ஒப்புதலுக்காக வைக்கப் பட்டுள்ளது என்று கூறியிருக்கிறார்கள். அதனுடைய மதிப் பீட்டுத் தொகை ரூ. 7 கோடி. அதற்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து, நிறைவேற்றித் தருமாறு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதியில் பாலாறு அணைக்கட்டு மூலம் வரும் தூசி சக்கரமல்லூர் கால்வாயைத் தூர் வாரி ஆழப்படுத்தி, தண்ணீர் வரத்து தாராளமாகப் போக ஆவன செய்யுமாறு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடையஉறுப்பினர்திருத.வேணுகோபால்அவர்கள்காவிரியில் இருந்து பெண்ணை ஆற்றுக்குக் கால்வாய் கேட்டார்கள், அதே போன்று பெண்ணை ஆற்றின் உபரி தண்ணீரைச் செய்யாற்றில் கால்வாய் வெட்டித் திருப்பித் தருமாறு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் தொகுதியில் மேலப்புலியூர், புதுநடுவலூர், பாண்டகபாடி ஆகிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை உடனடி



யாக நிறைவேற்றித் தருமாறு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

குத்தாலம் தொகுதியில் திருமலைராசன் ஆற்றில் தேதியூர் பாகசாலை கிராமத்திற்கருகில் ரெகுலேட்டர் கட்ட அனுமதி வழங்கப்பட்டும் வேலை துவங்கப்படாமல் இருக்கிறது. எனவே, இந்தக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாசனம் கோரிக்கை மீதான இந்த விவாதத்தில் 19 உறுப்பினர்கள் பங்கு பெற்று அரிய பல நல்ல யோசனைகளை வழங்கி இருக்கிறார்கள். காலத்தைக் கருத்தில் கொண்டு ஒன்றிரண்டு முக்கியமான விளக்கங்களைச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர்களுடைய அனைத்து ஆலோசனைகளையும் முறையாகப் பரிசீலனை செய்து, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளில் நாங்கள் ஈடுபடுவோம் என்கின்ற உறுதியினை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பாசனக் கோரிக்கை எண் 36-இல் கிட்டத்தட்ட 145 வெட்டுத்தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல பாசனக் கோரிக்கை எண் 51-ல் 32 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒட்டு மொத்தமாக 177 வெட்டுத் தீர்மானங்கள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் மீது நடவடிக்கைகள் எடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் எப்படிப்பட்ட பணிகள் இந்த நாட்டிலே நடைபெற வேண்டு மென்று கருதுகிறார்களோ அதைச் செய்வதற்கு எங்களை நாங்கள் தயார்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதி அல்லது மாவட்டம் அல்லது அதையும் சிலநேரங்களில் தாண்டி மாநிலம் என்ற அளவில் பல்வேறு கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள்.

வறட்சி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்காகப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு பெரிய ஆராய்ச்சியைச் செய்யவேண்டியதில்லை. வறட்சி இருக்கிறது. அதை நாம் உணர்கின்றோம். இந்த நேரத்தில் எப்படிப்பட்ட அணுகு முறையைப்

பாசனத் துறை மேற்கொண்டால் எதிர்காலத்திலே
சில நிலைமைகளைச் சமாளிக்க முடியும் என்ற யோசனையைச்
சொல்ல வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

சிலருக்கு அந்த யோசனை இருக்கிறது. ஆனால் கட்சிக்
கட்டுப்பாடு அல்லது வாக்காளர்களைச் சந்திக்க வேண்டிய நிர்ப்
பந்தம் இருப்பதால், யோசனைகளைச் சொல்வதற்கு நாம்
விழைகின்றோம். அது ஆளும் கட்சிக்கும் பொதுவானது;
அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவானதுதான். சில பிரச்சினை
களில் நீங்கள் ஏன் இதைச் செய்யவில்லை என்று சொல்வார்களே
தவிர இதை இப்படிச் செய்தால் நன்றாக இருக்கும் என்று
கூறுவதில்லை. யாரும் அப்படிச் சொல்ல மாட்டார்கள். ஏனென்
றால் அவர்கள் அதிலே அப்படி ஈடுபடுத்திக் கொள்ள முடியாது.
அப்படிச் சொன்னால் அவர்களுடைய நிலைபாடு தெரிந்துவிடு
கிறது, மற்றவர்களால் பிரச்சாரம் செய்யப்படும் என்ற நிலைமை
எனவே தான் மேலெழுந்தவாரியாக சில யோசனைகளைச்சொல்லி
விடுகிறீர்கள்.

ஆனால் இந்த ஒரு துறையைப் பொருத்தவரையில், இந்த
நாட்டை வளம் உள்ளதாக ஆக்குவதற்கு இந்த நாட்டை முன்
னேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். சில
யோசனைகளைப் பரிசீலிக்கிறோம். அதிலே ஒன்று இருக்கின்ற
நீர்வளத்தை எப்படி நாம் பயன்படுத்துவது என்பது. நீர்
வளத்தைப்பெருக்க வேண்டும் என்பது இனி முடியாத ஒருகாரியம்
தண்ணீர் என்றால் அதிலே என்னென்ன இரசாயனப் பொருட்கள்
இருக்கின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம். எச் டு ஓ
என்று சொல்லலாம். ஆனால் அதை நாம் உருவாக்க முடியாது.

இருக்கின்ற நீர்வளத்தை எப்படி பகிர்ந்து அளிப்பது. Fair
and equitable dist ibution இந்தக் கொள்கையை நாம் எப்படி
எப்படிப் பின்பற்றலாம்' எந்தெந்த நடைமுறைகளை நாம் பின்
பற்ற வேண்டும் அனைத்து மாவட்டங்களுக்கும் நன்மை பயக்கும்
விதத்தில் ஒவ்வொரு காலத்திலேயும் நாம் ஒவ்வொரு நிலைமை
களை மேற்கொண்டிருக்கக்கூடும். ஆனால் அதற்காக அவைகளை
நாம் அப்படியே பின்பற்ற வேண்டுமென்ற அவசியமில்லை. ஒரு
இடத்தில் இரண்டு போகம் விளையும், இன்னொரு இடத்திலே
மூன்று போகம், வேறொரு இடத்திலே வருஷத்திற்கு ஒருமுறை
இன்னொரு இடத்திலே 18 மாதங்களுக்கு ஒரு முறை இன்னொரு
இடத்திலே இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை என்ற நிலைமை
இருக்கக்கூடும். அணைக்கட்டினால் பக்கத்திலிருப்பவர்களுக்கு



நீர் வசதி அதிகம் இருக்கிறது, கடைமடைப் பகுதியில் இருப்
பவர்கள் போராட வேண்டியிருக்கிறது என்ற நிலைமைகளும்
இருக்கின்றன.

எனவே நம்முடைய கொள்கை என்ன? நிலைப்பாடு என்ன?
என்பது குறித்து ஒட்டுமொத்தமான கருத்தை உருவாக்கினால்
அது எதிர்காலத்திலே நல்ல பயன் தரும் என்று கருதுகிறோம்.

வளர்ந்துள்ள நாடுகளில் இப்படிப்பட்ட விஷயங்களில் கட்சி
களைப் பார்ப்பதில்லை, கருத்து வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம்
கொடுக்காமல் ஆக்கப்பூர்வமான முறையில் ஆலோசனைகளைச்
செய்து முடிவுகளை மேற்கொள்வார்கள்.

நாம் பாசன வசதிகளைப் பெருக்குவதன் மூலம் ஓரளவுக்கு
உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெருகிறோம்; அதிகம் உற்பத்தி
செய்கிறோம் என்ற நிலைமைகள் ஒருபுறம் இருக்க, நவீன முறை
களிலேயும் விஞ்ஞான முறைகளிலேயும் விவசாயம் செய்வதற்கும்
நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு நாம் பார்க்கிறோம் நம்முடைய நாட்டில்
பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்படுகின்றன. Pesticid s
and Insccticides வைத்திருக்கிறோம். ஆனால், ஜெர்மன் நாட்டிலே
ஒரு பூச்சிபயிரை அழிக்கிறது என்றால் அந்தப் பூச்சியை அழிப்
பதற்காக இன்னொரு பூச்சியை உருவாக்குகிறார்கள். இதனால்
விரயம் தவிர்க்கப்படுகிறது. பண விரயமும் தவிர்க்கப்படுகிறது.
இதன்மூலம் உணவு உற்பத்தி அதிகமாகிறது. ஏனென்றால்
பயிர்களைப் பாதிக்கின்ற நிலைமை ஏற்படாமல், ஒரு பூச்சி
யால் பாதிக்கப்பட்டால் அந்தப் பூச்சியை அழிப்பதற்கு இன்
னொரு பூச்சியை உண்டாக்குகின்ற ஆராய்ச்சியைச் செய்கிறார்
கள்; நடைமுறைப் படுத்துகிறார்கள்.

அப்படிப்பட்ட ஆராய்ச்சிமையம் ஒன்றை நிறுவ வருகிறோம்
இடம் தாருங்கள் என்று கேட்டு, கொடைக்கானலில் 100
ஏக்கர்கள் தருவதாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. மத்திய
அரசு ஆராய்ச்சி மையத்தை இங்கே நிறுவப் போகிறது. அப்
பொழுது புதிய, நவீன முறையில் விவசாயம் செய்வதற்கான
போக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆறுகளைத் தேசீயமயமாக்குவது என்ற விஷயம் இப்பொழுது
சொல்லப்பட்டு வரும் கருத்தாகும். இப்பொழுது நான் சொல்லிக்
கொண்டு வருவது எல்லோருக்கும் பொதுவான, பல்வேறு
உறுப்பினர்களின் கோரிக்கைகளைக் குறித்து, ஒட்டு மொத்த

மாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷயத்தைக் குறித்துப் பேசிக்
கொண்டு வருகிறேன். பிறகு குறிப்பிட்ட சில விஷயங்களுக்குப்
பதில் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

தேசீயமயமாக்குவதைப்பற்றிய பிரச்சினைகளை இங்கே
சொன்னார்கள். தேசீயமயமாக்குவது என்பது ஒரு நல்ல விஷய
மாக இருக்குமேயானால், அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்
டும். வங்கிகளை தேசீய உடைமையாக்கினார்கள். அதன் காரண
மாக ஒரு இடத்திலே நாம் நோட்டு அடிக்கின்றோம். கரன்சி
என்பது இந்தியாவில் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகத்
தான் இருக்கும். எனவே அது எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்
என்ற அடிப்படையில் நாம் அதை தேச உடைமையாக்கினோம்.
அது எந்த அளவுக்கு பயன் அளிக்கிறது என்பது வேறு. ஏதோ
ஒரு தேசியக் கொள்கை நிறைவேற்றப்பட்டது என்று ஏற்றுக்
கொள்ளலாம் அதேபோல இன்றைக்கு ஆறுகளை தேசீயமய
மாக்குவது என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டது. அதேபோல
மின்சாரம் பற்றி வந்தாலும், அதைப்பற்றி நாம் எப்படி முடிவு
எடுப்பது என்று யோசித்து வருகிறோம். கோதுமை உற்பத்தி
செய்கிறார்கள், வட மாநிலங்களில். குஜராத்தில் கோதுமை
என்ன விலைக்குக் கிடைக்கிறதோ அதேபோலத்தான் கும்ப
கோணத்திலும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு பொரு
ளாதார நிலையை இந்திய அரசு உருவாக்க வேண்டும் மாநில
அரசுகள் அதற்கு உதவ கடமைப்பட்டிருக்கிறார்கள்.
அரிசி விலையும் அப்படித்தான். அய்யம்பேட்டையிலே அரிசி
விலை என்னவோ, அதேபோல அஹமதாபாத்திலும் இருக்க
வேண்டும். இந்த நாட்டிற்கு இதுதான் பொதுவான நிலைமை.
மபத்லால் துணியை பாம்பேயில் வாங்கினாலும், அதே விலைதான்
சென்னையில் வாங்கினாலும் அதே விலைதான். சில பொருள்
களுக்கு வேறுபாடு என்பதும், விலையேற்றம் என்பதும், நாம்
பின்பற்றுகின்ற சுரண்டல் பொருளாதாரத்தின்
காரணமாக வருகிறதே தவிர, ஏதோ இயற்கையாக வந்து
விட்டதல்ல. நாம் தான் அந்தக் குறைகளை உண்டாக்கிக்
கொண்டிருக்கிறோம். அப்படி என்று சொன்னால், இந்தியா
ஒரு நாடு என்று சொல்கிறபோது, சில பொதுத் தன்மை
களைக் கருதி, தேசிய உடைமையாக்க முன்வருவார்களேயானால்
அதை ஏற்றுக் கொள்வோம். ஆகவே அதை விட்டுவிட்டு கல்வி
யிலே கைவைப்பது, அல்லது வீடு கட்டுவதிலே கை வைப்பது
ஏனென்றால் ஒன்றும் செய்யாவிட்டால், எதையாவது ஒன்றை
செய்யப்போகிறோம் என்று மிரட்டுகின்ற போக்கு இருக்குமே
யானால், அது நாட்டுக்கு நல்லதல்ல. தேசீய மயம் என்பது





தேசீய மாயை என்று ஆகிவிடக்கூடாது. தேசிய மயமாக்குவது
என்பது நாட்டிற்கு அனைவருக்கும் நன்மை உண்டாக்கக்கூடிய
விஷயமாக இருக்க வேண்டும். அதிலே இந்த நீர்வளத்தில்
தேசிய உடைமையாக்குவது என்று சொல்வதற்குக் காரணம்
பல இடங்களில் அது வீணாகிப் போய்க்கொண்டிருக்கிறது.
ஆனால் சில இடங்களிலே அதனுடைய தேவை அதிகமாக
இருக்கிறது. ஏற்கனவே நான் சொன்ன குறிப்பைத்தான் திரும்ப
வும் சொல்ல விரும்புகிறேன். கேரளாவினுடைய நிலைமைகளை
எடுத்துப் பார்ப்போமேயானால், நம்மைவிட 10 மடங்கு நீர்வளம்
அங்கு இருக்கிறது. ஆனால் அவர்கள் விவசாயம் செய்கின்ற
பரப்பு 10 லே ஒரு மடங்குதான் இருக்கிறது. என்ன தலைகீழான
போக்கு? இதில் யார் வந்தாலும் என்ன செய்ய முடியும்?
எல்லோருக்கும் நல்ல கொள்கை இருக்கிறது. தேசியக்
கொள்கை இருக்கிறது. சர்வதேசக் கொள்கை இருக்கிறது.
இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அங்கேயுள்ள
அரசியல் நிலைமைகள் காரணமாக, நாம் ஒரு நல்ல காரியம்
செய்ய முன்வந்தால் கூட, ஒரு பிரச்சாரம் வந்துவிடுகிறது.
எனவே இங்கே உட்கார்ந்து மனம் விட்டுப் பேசுகின்றபொழுது
சில திட்டங்களை ஒப்புக் கொண்டு தாங்கள் அங்கே போய
செய்யமுடியாது என்று மறுக்கக்கூடிய நிலைமகள் எல்லாம்
வருகிறது. அவைகளையெல்லாம் பார்த்து, இந்த நழுவும்
திட்டத்தை என்றைக்கு நாம் கைவிடுகிறோமோ அன்றைக்குத்
தான் நாம் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்
என்று நான் மிகவும்......

திரு. என். சங்கரய்யா : நதிகள் மாநில அரசினுடைய
உடமைகள் என்று அரசியல் சட்டம் சொல்கிறது. கொஞ்சநஞ்ச
பாக்கி இருக்கக்கூடிய, மாநில அரசுக்குச் சொந்தமான ஆறுகள்
ஒன்று. அதை விட்டுக்கொடுக்க கூடாது என்று ஜன
நாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிற கட்சிகள், மாநிலங்
களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கோருகின்ற கட்சிகள்
கேட்கின்றன. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் தன்னுடைய கொள்கைகளை மாற்றிவிட்டு, அந்த
உரிமையை விட்டுக்கொடுக்க தயாராக இருக்கிறதா, இல்லை
யென்றால், நதிகளை தேசீயமயமாக்குவது என்ற பிரச்சினைக்கு
நாம் எப்படி ஒப்புக்கொள்ளமுடியும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே,
கொள்கைகளைச் சொல்லுகிறேன். நாட்டிற்கு எது தேவையோ
அந்த அடிப்படையில், நம்முடைய நிலைமை என்ன ? பேசு
கின்றபோதே சொல்கின்றேன். நீர்ப்பரப்பு நீரெல்லாம் முடிந்து
விட்டது. இப்போது நிலத்தடி நீருக்குப் போய்விட்டோம்

என்று சொல்வது—திருமணத்திற்கு நாம் பெண் தேடியது போக இப்பொழுது மகளுக்கு மாப்பிள்ளை தேட வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். காலம் மாறி இருக்கிறது. நமக்குத் தேவை இருக்கிறது. மாநிலங்கள் அங்கேயிருக்கக்கூடிய நிலைமைக்கு தக்கபடி, அவர்கள் எதை ஏற்றுக்கொள்ளக் கருதினாலும், அதைச் செயல்படுத்த முன்வரவில்லை. அப்படியென்றால் இதை எப்படி தீர்க்கப் போகிறோம்?

திரு. என். சங்கரய்யா : கொள்கை முடிவு என்றாலும், அதை நீங்கள் சொல்லலாம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் கொஞ்சம் நஞ்சம் இருக்கக் கூடிய மாநில உரிமைகள், ஆறுகள், அந்தந்த மாநிலங்களுக்குச் சொந்தமானது. அதிலே பிரச்சினைகள் இருந்தால், அதைப் பேசித் தீர்க்கவேண்டும். அதிலே அதிகமாக வந்தால் கேட்டுப்பெறவேண்டும், என்ற ஒரு நிலைமை இருக்கிறது. அதற்காகப் போய்—இன்றைக்கும் அவர்கள் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் மாநிலங்களுடைய தீர்வுகளை எடுத்துக்கொள்ளக்கூடிய கொள்கையைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். ஏனென்றால் அதைப்பற்றிய ஆதிக்கம் அவர்கள் கையில் வந்துவிடும் என்று, ஆக அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஆறுகளை தேசிய மயமாக்க வேண்டுமென்ற கொள்கை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் திட்டவட்டமாக வெளியிடப்பட்டிருக்கிறது. நாங்கள் தேர்தல்களிலும் சொல்லியிருக்கிறோம். தேசிய உடமையாக்க வேண்டும்—'நேஷனலைஸ்'—ஆக வேண்டும் என்று. இன்னொன்று நேஷனலைஸ் செய்யும்பொழுது நாம் உரிமைகளை இழந்துவிடுகிறோம் என்று ஒட்டுமொத்தமாகச் சொல்லமுடியாது. எல்லோருக்கும் பொதுவாகக் கிடைக்கும்பொழுது அது அனைவருக்கும் கிடைக்கிறது. அதுவேதான் உங்கள் சித்தாந்தமும் கூட. எல்லோருக்கும், இந்திய மக்கள் எல்லோருக்கும், ஆறுகள் பொதுவாக ஆகும்பொழுது, தமிழ்நாட்டு உரிமைகள் போய்விடுவதாக சொல்லமுடியாது. இன்னும் சொல்லப் போனால், நாம் பற்றாக்குறையான மாநிலம். அதிலே யதார்த்தமான நிலைமை என்ன? அதை நாம் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திரு. என். சங்கரய்யா : ஆறுகள் அந்தந்த மாநிலத்திற்கு சொந்தமானால்தான் இந்த உரிமைகளை வைத்துக் கேட்கலாம். நீங்கள் தேசியமயமாக்குவதை ஏற்றுக்கொண்டுவிட்டால், பிறகு



அந்த மாகாணத்திற்கு, இந்த மாநிலத்திலே ஓடக்கூடிய நதிகளின் மீது என்ன உரிமை இருக்கமுடியும்? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிப்பட்ட ஒரு கொள்கைக்கு வந்துவிட்டால் அது அபாயகரமாக நமக்கே வந்து முடித்துவிடும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, நதிகளை எல்லாம் தேசிய மயமாக்குவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். நதிகளை தேசியமயமாக்குவதாலே பிரச்னைகள் எப்படித் தீரும். உதாரணமாக காவிரி நீர்ப்பிரச்னை. கேரளா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களை உள்ளடக்கிய பிரச்னை. இது தேசிய மயமாக்கப்படுகிறது என்றால், பிரச்னைகள் ஷிப்டு ஆகிறதே தவிர, பிரச்னைகளை எப்படி தீர்ப்பது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே பிரச்னைகள் இது வரையிலேயும் தீர்க்கப்படாமல் இருப்பதால் தான் நாம் தேசிய மயமாக்கவேண்டும் என்று சொல்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் கேட்டார்கள். இந்த மாநிலத்திற்குள்ளே ஓடுகின்ற நதிகள் இருக்கிறது. அதாவது தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால், தாமிரபரணி. நல்லவேளையாக நாம் என்ன புண்ணியம் செய்தோமோ, அது ஒன்றுதான் இன்றைக்கு இந்த மாநிலத்திலேயே தோன்றி, இந்த மாநிலத்திலேயே முடிகிறது. அதை நாம் எந்த வகையிலே நல்லவிதமாக பயன்படுத்த முடியுமோ அதை நாம் செய்து கொண்டு வருகிறோம். ஆனால் இன்றைக்கு நாம் சொல்லக்கூடிய காவிரியை எடுத்துக்கொண்டாலும் சரி, அது இரண்டு மாநிலங்களுக்கு உடைமையாக வருகின்றபோது அவர்கள் உட்கார்ந்து பேசித் தீர்க்கவேண்டிய நிலைமையை நாம் சமீபத்திலே பார்த்துக்கொண்டு வருகிறோம். அதற்கு என்ன காரணம்? ஆளும் கட்சியாக இருக்கின்றபோது அவர்கள் ஒரு கொள்கையைச் சொல்கிறார்கள். அவர்களே எதிர்க்கட்சியாக மாறிய உடனே நீங்கள் ஏன் அதைச் செய்யவில்லை என்று கேட்கிறார்கள். ஆகவே இதிலே மத்திய அரசு மூலமாக உட்கார்ந்து அவர்கள் ஒரு நல்ல முடிவை எடுத்தால் அதை நாம் ஏற்றுக்கொள்வதிலே சிரமம் இல்லை. அதனால்தான் நான் சொன்னேன். ஆகவே இந்த மாநிலத்தின் தேவைகளை, நன்மைகளைக் கருதி நாட்டுடைமையாக்கப்படுமானால் அதை ஏற்றுக்கொள்வோம். ஆனால் இதற்காக மற்றத் துறைகளிலே

எல்லாம் அவர்கள் வந்து தேவையில்லாத விவரத்திலே[redacted] தலையிடாமல் இருக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

திரு. என். சங்கரய்யா : நீங்கள் நதிகளை தேசிய மயமாக்குவதை ஏற்றுக்கொண்டால் தாமிரபரணியும் தேசிய மயமாக்கப்பட்டுவிடும். அதாவது நீங்கள் நதிகளை தேசியமயமாக்குவது என்ற கொள்கையை ஒத்துக்கொண்டால்—இந்தியாவிலே உள்ள தொழில்களையும் நாட்டுடமையாக்கப்பட்டது போல்—இந்த தாமிரபரணியும் தேசியமயமாகிவிடும். ஆகவே இன்டர் ஸ்டேட் நதிகளை, இரண்டு மாகாணங்களுக்கு இடையே போகக்கூடிய நதிகளை மட்டும் அல்ல—இப்போது வங்கிகளை தேசியமயமாக்கினால் திருநெல்வேலி இன்டியன் பேங்கும் தேசிய மயமாக்கப்பட்டு விடும். ஆகவே தான் சொல்கிறேன். இது ஒரு அபாயகரமான கொள்கை. இதை எப்படி நீங்கள்ஏற்றுக் கொள்ள முடிகிறது. எங்களைப் பொறுத்தவரைக்கும் அதை நாங்கள் எற்றுக்கொள்ள முடியாது. இரண்டு மாநிலத்திலே உள்ள நதிப் பிரச்னைகளை பேசித் தீர்க்கப்படவேண்டும். இல்லை என்றால் நாம் ஒரு அடிப்படையான உரிமையை விட்டு விடுவோம்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் பதில் சொல்லிவிட்டு அப்படியே தொடர்கிறேன். (குறுக்கீடு). நான் முடித்ததற்குப் பிறகு வேண்டுமானால் கேட்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நதிகளை தேசிய மயமாக்குவதாலே பிரச்னைகள் தீர்க்கப்படாது என்பதுதான் என்னுடைய வாதம். உதாரணமாக காவிரி நீர்ப் பிரச்னை இருக்கிறது. காவிரி நீர் தேசிய மயமாக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். பிரச்னையை எப்படித் தீர்ப்பீர்கள் ? மாநில அளவிலே மாநிலத்திற்கு இடையில் உள்ள பிரச்னையை டெல்லியிலே உட்கார்ந்து பேசப் போகிறீர்கள். அவ்வளவு தானே. பிரச்னை எப்படி தீரும். அதனால் என்ன பலன் ? என்ன இலாபம். இதுதான் என் கேள்வி.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைத்தான் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நாம் ஏற்கனவே உட்கார்ந்து பல தடவை முதல் அமைச்சர் மட்டத்திலே கூட்டம் நடந்து மத்திய அமைச்சர்கள் தலையிட்டு, பாரத பிரதமர் அவர்கள் சொல்லியும்கூட





நிலைமையின்
அவரவர்கள் மாநிலங்களிலே இருக்கக்கூடிய
காரணமாக சில முடிவுகளை எடுக்கிறார்கள். இன்னும் சொல்லப்
போனால் இந்தப் பேச்சு வார்த்தைகளுக்கான செலவை வைத்துக்
கொண்டு ஒரு அணையைக்கூடக்கட்டியிருக்கலாம் என்ற அளவிற்கு
பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன, அதை நான்
திரும்ப மூன்றாவது முறை சொல்கிறேன். ஆகவே பேச்சு
வார்த்தைகள் பயன் அளிக்கவில்லை. உதாரணமாக இந்த
மாதிரியாக யாரும் செய்யலாம். பேர் அன்ட் ஈக்குவிட்டபிள்
டிஸ்ட்டிரிபூசன் என்பது மாநிலங்களுக்கு இடையிலே உள்ள
விவாதம் மட்டுமல்ல. நாம் பின்பற்ற வேண்டிய கொள்கை
என்று சொன்னால் சில மாவட்டங்கள் பாதிக்கப்படுகின்றன
என்று சொல்கிறபோது நாம் யோசிக்கவேண்டியிருக்கிறது.
அது எல்லோருக்கும் பொதுவானதுதான். இந்த விஷயத்தில்
சில கொள்கையைச் சொல்வது, தமிழக மக்களுக்கு நன்மை
அளிக்கக்கூடிய விஷயம் என்ற அடிப்படையிலே, அதைப்
பின்பற்றுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

விப்ட்
அதுபோல் இப்போது நவீனமயமாக்கப்பட்ட
இர்ரிகேசன் முறைகள் எல்லாம் இருக்கின்றன. ஓரளவிற்கு
தொழிற்கூடங்களை நடத்தக்கூடியவர்கள் வறண்ட பகுதியிலே
உள்ள நிலங்களில் இதற்கு கவனம் செலுத்தி அவர்கள் அக்கறை
யோடு செயல்படுவார்களானால் நிச்சயமாக இது பயனுள்ள
தாக இருக்கும். இப்போது டி.வி.எஸ். போன்ற மற்ற நிறு
வனங்களை வைத்து நடத்தக்கூடியவர்களுடைய பண்ணை
களைப் பார்க்கிறோம். சிம்சன் போன்றவர்களுடைய பண்ணை
களையும் நாம் பார்க்கிறோம். அவர்கள் இதிலே கவனம்
செலுத்தி நல்லவிதமான வளர்ச்சி அடைய முடிகிறது. அப்படி
சில தொழில் நிறுவனங்கள் கூட வறண்ட பகுதியிலே சில
இடங்களிலே நிலங்களை விவசாயம் செய்வதற்கு முடியாமல்
பண வசதி இல்லாமல் பல்வேறு நிலைமைகள் இருக்கிறது.
இதைப் போக்க அவர்கள் கூட முன்வருவார்களானால் நல்ல
விதமாக இருக்கும். இதிலே பேசிய நண்பர்கள் இதிலே பெரிய
திட்டம் இல்லை என்று சொன்னார்கள். ராமலிங்கம் அவர்கள்
பேசினார்கள். இப்போது ராமலிங்கம் அவர்கள் கூட விவாதத்திற்
குரிய பல விஷயங்களை வைத்துவிட்டு இப்போது அவர்கள்
உட்கார்ந்துகொண்டு சிரித்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்
போது நானும் அதை பேசஆரம்பித்தால் அது நீண்டு கொண்டே
போகும்.

(பிற்பகல் 1-50)

சில திட்டங்கள் சேர்க்கப்படாமல் விட்டு இருந்தால், விடப்
பட்டு இருக்கிறது என்று சொல்லுங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.
தெளிவாகத் தமிழிலும் அடித்து இருக்கிறோம். ஆங்கிலத்திலும்

அடித்து இருக்கிறோம். அந்த இரண்டு மொழிகளும் நமக்கு
தெரியும் என்ற நம்பிக்கையில் இங்கே கொடுத்து இருக்கிறோம்.
ஒரு வேளை இந்த மொழிகள் எல்லாம் தெரியாது. வேறு
மொழிதான் தெரியும் என்று சொன்னால் அதிலும் அடித்து
கொடுத்து இருக்கலாம்.

மிகத் தெளிவாக திட்டங்களை நாம் வகுத்துக்கொடுத்து
இருக்கிறோம். சென்ற முறை இந்த மாமன்றத்திலே உறுப்பினர்
கள் பேசி அவர்கள் என்னென்ன கோரிக்கைகளை வைத்தார்
களோ அந்த கோரிக்கைகள் என்ன நிலை என்பதற்கு பதில்
கொடுத்து இருக்கிறோம். இப்போது நீங்கள் கொடுத்து இருக்கிற
வெட்டுத் தீர்மானங்கள் மீது நிலைமைகளைப்பற்றி நாம் சொல்
லிக்கொண்டு இருக்கிறோம். ஏற்கனவே நிறைவேற்றப்படுகின்ற
திட்டங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். இந்தத் திட்டங்
களின் எண்ணிக்கை குறைவு என்று சொல்லுங்கள் உயர்த்துவதற்கு
முயற்சி செய்கிறோம். அது வேறு விஷயம். திட்டங்களே
இல்லை என்கிறபோது ஒரு வேளை அச்சுக்கோளாறு ஆகி
யிருக்கிறதோ என்று நாம் பார்க்கிறோம். ஆகவே, திட்டங்கள்
இருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால், பாசனத் துறையைப் பொறுத்த
வரையில், பெரும் தலைவர் காமராஜர் அவர்களின் சாதனை
என்பது சரித்திர சாதனை. அதை எந்த இடத்திலும் சொல்
வேன். எப்பொதும் சொல்வேன். இந்த மாமன்றத்திலும்
இப்போது சொல்கிறேன். அதிலே எனக்கு ஒன்றும் கட்சி
குறுக்கிட்டு விடமுடியாது. காரணம், உண்மைகளை நாம் சொல்லி
யாக வேண்டும். அதற்குப் பிறகு இன்னொரு மாபெரும்
சரித்திர சாதனையைப் புரிந்து கொண்டு வரும் ஒரே முதல்வர்
தமிழகத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான்.
(கைதட்டல்). இதை நாங்கள் ஏதோ சொல்லவேண்டும் என்பதற்
காக சொல்லவில்லை. உதாரணமாக சென்ற நிதிநிலை அறிக்
கையில் பேசுகின்றபோது சொன்னோம்.

தருமபுரி மாவட்டத்தில் எத்தனை திட்டங்கள் எடுத்துக்
கொள்ளப்பட்டு இருக்கின்றன. இப்போது அறிவிக்கப்பட்டு
இருக்கின்ற திட்டங்களிலே, முகவை மாவட்டம் என்று தோன்றி
யதற்குப் பிறகு—குறிப்பாக, மேற்கு முகவை மாவட்டத்திற்கு
—இத்தனை பெரிய திட்டங்கள் எந்த ஆட்சி காலத்திலாவது
கொடுக்கப்பட்டு இருக்கிறதா? நாம் தான் வழங்கியிருக்கிறோம்.
மதுரை மாவட்டத்திலே விடுப்பட்டுபோன திட்டங்கள் —
குதிரையாறு திட்டம் — நண்பர் பழனிவேல் அவர்களுக்காகச்
சொல்வேன் — அவர்கள் அதிலே எவ்வளவு வேண்டும் என்று
கேட்டார்கள்., நண்பர் குப்புசாமி அவர்கள் கேட்டார்கள்





மற்ற நண்பர்கள் எல்லாம் கேட்டார்கள் — அந்தத் திட்டம்
குதிரையைவிட எவ்வளவு வேகமாக வந்து இப்போது செயல்
பட்டுக்கொண்டு இருக்கிறது. அதைப் பாராட்டாமல் விட்டு
விட்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நண்பர் பேசுகிறபோது, பச்சை
யாறு திட்டம் என்ன ஆகிவிட்டது என்று கேட்டார்கள்.
பச்சையைப் பச்சையாகத்தான் வைத்து இருக்கிறோம். சிவப்
பாக்கிவிட மாட்டோம். அதாவது நல்ல அடையாளங்களை நாம்
காட்டத் தயாராக இருக்கிறோம். ஆனால் நாம் செய்து கொண்டு
இருக்கிறோம். ஆனால் இந்தக் குதிரையாறு திட்டம் இந்த
மாநிலத்தில் எத்தனை ஆண்டுகாலம் நிலுவையாக இருந்தது?
அதைப் இப்போது எடுத்துச் செய்து கொண்டு இருக்கிறோம்.
அடுத்த திட்டத்திற்கு அப்போது தான் போகமுடியும். கையிலே
இருக்கக்கூடிய திட்டங்களில், 95 சதவீதம் மேல்பரப்பு நீரைப்
பயன்படுத்தி வருகிறோம் என்றாலும், இருக்கக்கூடிய திட்டங்
களை நிறைவேற்ற வேண்டும், அதுவும் ஓராண்டு காலத்திலேயே
நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னால், அதற்குத் தனியாக
200 கோடி ரூபாய் வேண்டும். இருக்கிறது. ஆனால்,
முன்னுரிமை கொடுத்து அடுத்தடுத்து எடுத்து வருகிறோம்.
இப்போது குதிரையாறு திட்டம் அங்கே எடுத்து விட்டோம்
என்று சொன்னால், அடுத்து வேறு பகுதிக்குப் போகிறோம்.

இப்போது சேலம் மாவட்டத்திலே, நாம் கரியகோவிலார்
அணைக்கட்டுத் திட்டத்திற்கு கால்கோள் நாட்டிவிட்டு வந்து
இருக்கிறோம். அதுபோல ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு
மூன்று பெரிய திட்டங்கள் வருகின்றன. அது ஒரு புறம்.
அதுபோல, நடுத்தரப் பாசனத் திட்டங்களையும் செய்து வரு
கிறோம். சிறப்பு புதிய பாசனத் திட்டத்தின் கீழ் சிறிய பாசனத்
திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகிறோம். அது குறித்துப்
புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இதிலே முக்கியமாக கவனிக்கவேண்டியது, நாம் திட்டங்
களிலே பெரிய திட்டங்களாக இனி மேல் நினைக்க வேண்டியது—
நவீனப்படுத்துவதுதான். மார்டர்னைசேஷன். அது தவிர்க்க
முடியாதது. அதன் மூலமாக ஏற்படக்கூடிய சேமிப்பில்தான்
நாம் இன்னும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன
வசதி கொடுக்க முடியும். அது ஒரு பெரிய திட்டம். அதிலே
கோதையாறு பற்றி நீங்கள் கேட்டீர்கள். கோதையாறு
திட்டத்தைப் பொறுத்த வரையில், இப்போது ஆய்வுப் பணிகள்
கிட்டத்தட்ட முடியக்கூடிய நிலையில் இருக்கிறது. 25 கோடி
ரூபாய் அளவிலே நாம் கோதையாறு திட்டத்தை நவீனப்படுத்து
கின்றபோது, அதிலே கிளைக்கால்வாய் ஏற்படுத்தி, கோழிக்
கோர்விளை, உலக்கை கப்பியரை போன்ற கிளைக் கால்வாய்

மூலமாக அந்தப் பகுதிகள் பயன் அடையும் முறையில் அரசு நல்ல முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தாமிரபரணி ஆறு, அதையும் நவீனப் படுத்த வேண்டும் என்கிற அடிப்படையில் அதற்கும் 25 கோடி ரூபாய்க்கு மேலே ஆகும் என்று தோரயா மதிப்பீடு தெரிவிக்கப் பட்டு இருக்கிறது. வைகை பெரியாறு நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. நடந்து கொண்டு இருக்கிறது. 84-லே முடித்து விடலாம் என்று இருக்கிறாம். அதிலே எந்தக் குறையும் இருப்ப தாக எனக்குத் தெரியவில்லை.

அதற்கு அடுத்து காவிரி டெல்டா நவீனப்படுத்துவதைப் பொறுத்த வரையில், ஏன் இப்போதுதானே அறிவிக்கப்போகிறீர் கள் என்று கேட்கிறார்கள். இது எல்லாம் என்ன என்று சொன்னால், முதலிலேயே கொடுக்கலாம் என்று சொன்னால், யாரிடத்தில் கொடுப்பது? எப்படிக் கொடுப்பது? காவிரிப் பிரச்சினை என்பது அதை நவீனப்படுத்துவதின் மூலமாக ஏற்படு கின்ற சேமிப்பில் எவ்வளவு நாம் பெற்றுக்கொள்வது என்பது தான். ஆனால் அதிலே நீங்கள் உடன்பாடு காணாமல் நாங்கள் நவீனப்படுத்தப் போகிறோம், எனவே எங்களுக்குப் பணம் தாருங்கள் என்று கேட்டால், நீங்களே சொல்வீர்கள், அடிப் படைப் பொருளாதார அறிவு கூட இல்லாமல் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை முன்கூட்டியே கொடுக்கலாமா என்று திரு. இராமலிங்கம் அவர்கள் திருப்பிக் கேட்பார். எனவே நான் கேட்டுக்கொள்வது, 'கேட்டுவிடலாம்'. நடைமுறையிலே இது தான் நிலைமை. இப்போது என்ன வந்து இருக்கிறது. மத்திய அரசு இந்த ஆண்டு 1983-84 ஆம் ஆண்டு உலக வங்கியின் உதவிக்காக நாம் பல்வேறு திட்டங்களைக் கொடுக்கிறபோது; அவர்களுடைய பரிசீலனைக்கு இது போகிறது. 366 கோடி திட்டம் என்பது அவர்களுடைய பரிசீலனைக்குப் போகிறது. அதை ஒட்டி நாம் நம்முடைய விரிவான மதிப்பீட்டை தயாரித்துக் கொடுக்கிறோம். காரணம் என்னவென்றால் ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடு மாறி, மாறி வருகிறது. உலக வங்கியிடமிருந்து நமக்கு கிடைக்கும் உதவிகள், அவர்களுடைய அறிவுரைகள் போன்ற நிலைமைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்றபடி திட்டங்களை தயாரித்துக் கொடுக்கிறோம். வைகை-பெரியாறு நவீனப்படுத்தும் திட்டத்திற்கு 40 கோடி ரூபாய் ஆகும் என்று முதலிலே திட்டத்தை தயாரித்து அனுப்பினோம். இப்போது அது 70 கோடி ரூபாய் ஆகும் நிலைமை வந்திருக்கிறது.

இருக்கின்ற நிலைமைகளை ஆராய்ந்து பார்த்து, பொறுமை யோடு திட்டங்களைத் தயாரித்து கொடுக்க வில்லை என்றால், ஏன் பொறுமையாக நிலைமைகளைப் பார்த்து, தயாரித்துக்



கொடுக்கவில்லை? அதனால் காவேரி டெல்டா பகுதியை நவீனப்படுத்தும் திட்டமே பாழாகிவிட்டதே என்று நீங்கள் பேசக் கூடாது. அதற்காகத்தான் தீர பரிசீலனை செய்து, நல்ல பயன் கிடைக்கின்ற வகையில் திட்டங்களை தயாரித்து அனுப்புகிறோம். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் போன்றவர் களிடமிருந்து பாராட்டுதலைப் பெற வேண்டும் என்பதற்காக கவனமாகச் செயல்படுகிறோம். இன்னும் சொல்லப்போனால் என்னுடைய சுற்றுப்பயனத்தில் பாதிக்குமேல் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள் இருக்கின்ற பகுதியாகத்தான் இருக்கும். காரணம், திட்டங்கள் அப்படி அமைந்திருக்கின்றன. மாண்பு மிகு உறுப்பினர் பலராமன் அவர்கள் கூப்பிட்டார்கள். அப் போது வேறுசில நிலைமைகள் இருந்தது அவர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன்.

திட்டம்பற்றி குறிப்பாக, செண்பகத் தோப்பு அணைத் 1979-ல் வெளிப்படையான நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அறிக்கையிலே அறிவித்தோம். அதன்பிறகு நீர் வரத்துக நிநிலை அறிக்கையிலே வேண்டுமென்ற நிலை வந்து, அந்தக் கணக்கினை கவனிக்க வருகிறது. இப்போது அந்தக் கணக்கும் எடுக்கப்பட்டு வாய்ப்பு இருக்கிறது என்று திட்டத்தை எடுத்துக் கொள்ளும் கருதுகிறேன்.

வடாற்காடு மாவட்டத்திலே பாலாறு மற்றும் செய்யாறு படுகைகளில் தண்ணீர் தாராளமாக இருக்கிறது என்று சொன்னார் கள். அப்படி அல்ல. அவை பற்றாக்குறை படுகைகளாகும். அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து பார்ப்பதற்காக 13 இடங் களில், 5 ஆண்டுகளில் நீர்நிலை கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 5 ஆண்டுகள் எடுத்து பார்த்த பிறகுதான் ஒரு திட்ட வட்டமான முடிவை நாம் மேற்கொள்ள முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால், மற்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். 3,000 ஏரிகள் இருக்கின்றன; 3 இலட்சம் கிணறுகள் இருக்கின்றன. இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மோட்டார்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு வடாற்காடு மாவட்டத்தில் நிலத்தடி நீரை நம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். முதலிலே அதற்கு குந்தகம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதை எல்லாம் பார்க்காமல், ஏதோ ரெடிமேடு சட்டை வாங்குவதைப்போல அணைகளை கட்டினால் அங்கே வேறுவிதமான பிரச்சனைகள் வரும். அதனால் நாங்கள் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கினோம். மத்திய திட்டக் குழு கூட அதை வெகுவாகப் பாராட்டியிருக்கிறது.

மழைக்காலங்களில் வெள்ளம் அதிகமாக வரும்போது, உபரி யாக இருக்கும்போது, அது வீணாகக் கடலிலே போய் கலந்து விடாமல் இப்படி பெரிய அணைகளில் நீரை தேக்கி வைத்தால் வறண்ட நேரத்தில் அதை பயன்படுத்திக்கொள்ளலாம். அப்படி ஒரு திட்டத்தை, வடாற்காடு மாவட்டத்திலே புல்லூர் அணைக் கட்டும் திட்டத்தை 15 கோடி ரூபாயில் தயாரித்திருக்கிறோம். அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளும் ஒரு சூழ்நிலை இருக்கிறது ஆனால் அதே நேரத்தில் ஆந்திர மாநிலம் அதில் சம்பந்தப்படுகிறது. அவர்களுடைய நிலம் மூழ்கும் வாய்ப்பு இருக்கிறது. தற்போது இருக்கிற நியதிபடி இப்படிப்பட்ட எந்த ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தாலும் வன இலாகா வினர் அனுமதி பெறவேண்டும்; மத்திய அரசின் அனுமதியும் பெற வேண்டும். அதிலே அவர்கள் கடுமையாக இருப்பதில் நியாயம் இருக்கிறது. நான் ஒட்டுமொத்தமாக குற்றம் சொல்ல வில்லை. ஆனால் 10 மரங்களுக்காக 100 முறை டெல்லிக்கு போகவேண்டுமென்ற நிலைமை இருக்கக்கூடாது.

இப்போது மேலை நாடுகளில் இதுபற்றி ஒரு நடைமுறையை கடைப்பிடிக்கிறார்கள். ஒரு அணை கட்டும்போது , அந்த அணை கட்டி முடிக்கப்படும் போது, அந்த அணையின் நீரினால் எவ்வளவு இடம் மூழ்கும்., அதனால் எவ்வளவு நிலம் பாதிக்கப் படும், எவ்வளவு மரங்கள் பாழாகும் என்று பார்த்து, எவ்வளவு மரங்கள் பாழாகுமோ அவ்வளவு மரங்களை வேறு ஒரு பகுதியில் 'ரி பிளாண்ட்' செய்து கொடுத்து விடுகிறார்கள். அதே மாதிரி நாமும் செய்து விடலாம். 5,000 மரங்கள் பாதிக்கும் என்றால் அவற்றை பொதுப்பணித் துறையிலிருந்து நட்டுக்கொடுத்து விட லாம். அப்படி இல்லாமல் மரம் பாதிக்கப்படுகிறது என்று சொல்வது பற்றாக்குறை மாநிலத்தைப் பொறுத்த வரையில் அந்தக் கூற்று சரியாகாது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இதை கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாகக் காடுகளை அழிக்கக்கூடாது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். இந்தக் காடுகள் அழிவு பற்றி 30 ஆண்டு காலமாக இருந்துவருகின்ற ஒரு கணக்கை கொடுத்திருக்கிறார் கள். கிட்டத்தட்ட 4 கோடி ஏக்கர் நிலத்திலுள்ள மரங்கள் வெட்டி வீணாக்கப்பட்டிருக்கின்றன இந்தியா முழுவதும். அப்படி இருந்தால் '' எக்கனாமிக் பேலன்ஸ் '' எப்படி கிடைக்கும்? பெருமளவில் மரங்களை அழிப்பது கடுமையான குற்றம். ஆனால் அதற்கு மாற்று ஏற்பாடு என்ன? சோத்துப்பாறை திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால், 4 மரங்கள் பாதிக்கப்படு கின்றன என்ற கணக்கை வைத்துக் கொண்டு தாமதப்படுத்தி னால் அதன் விளைவுகள் என்ன? 7 கோடி ரூபாயில் போடும் திட்டம் ஒரு வருடம் கழித்தால் 14 கோடியாக மாறிவிடும்.



இதேமுறையில் 10 ஆண்டுகள் போனால் திட்ட மதிப்பீடு எந்த அளவுக்கு உயரும் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். பிறகு அதற்கு ஒரு தூதுக்குழு போக வேண்டும். நீங்கள் காடு களை அழிப்பது கூடாது என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். தேவையில்லை. சில நேரங்களில் பிளேன்- டேஷன் ஏரியாக்களில் கூட சொல்வார்கள்—அதாவது ஷேடோ ரெக்களமேஷன் ஆக்ட் படி நாங்கள் சில மரங்களை வெட்டப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, 10 மரம் என்று எழுதிக் கொடுத்து 100-ஐ வெட்டுவார்கள். அதை நாம் தடுப்போம். அதற்கு கடுமையாகவும் இருப்போம். ஆனால் அணைத் திட்டம் என்று வருகிறபோது, இந்த நீர் வளம் இருந்தால்தான் நில வளம் இருக்கும். வனச் செல்வம் என்பதே கூட நீர் வளம் இல்லாமல் இருக்க முடியாது. எனவே, நான் பாரஸ்ட்டரி ஸ்கீமில் எந்தத் திட்டம் வந்தாலும் காடுகளை அழிக்கக் கூடாது என்று சொல்கிறீர்கள். ஆனால் பாசனத் திட்டங்களைப் பொருத்த வரையில் அவைகளை நான் பாரஸ்ட்டரி என்று இதிலே சேர்க்கக்கூடாது. அப்படி நாம் ஒரு புதிய நிலையை மேற் கொள்வோமேயானால் நிச்சயமாக அது பயன் உடையதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்வேன். அந்த அடிப்படையிலே ஆந்திர அரசோடு பேசிப் பார்க்கலாம்.

(முற்பகல் 2-00)

அல்லது அவர்களுடைய நிலம் பாதிக்கப்படாமல் நாம் வேறு ஒரு திட்டத்தைப் போட்டு அதை உடனடியாக நிறைவேற் லாமா என்று கூட ஒரு யோசனை இப்போது இருக்கிறது. அவர்கள் சரி என்று சொல்லி ஒப்புக் கொண்டு வரவேற்பார்கள் என்று எதிர் பார்க்கிறோம். அப்படி வரவில்லை என்று சொன் னால், வேறு திட்டங்களைப் போட்டு முடித்துவிடலாமா என்று கூட யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதைப்போலவே வட ஆற்காடு மாவட்டத்தில் போளூர் வட்டத்தில் ரூபாய் 470 லட்சம் செலவில் செண்பகத்தோப்பு அணைக்கட்டு திட்டமும் வாணியம்பாடி வட்டத்தில் ரூபாய் 323 இலட்சம் செலவில் ஆண்டியப்பனூர் அணைக்கட்டுத் திட்டமும் இப்போது அரசின் பரிசீலனையில் வந்திருக்கிறது. பரிசீலனை செய்யாமலேயே திட்டங்களை நிறைவேற்றிட முடியாது. சில முன் உரிமைகளை வேண்டுமானால் சில மாவட்டங்களுக்கு கொடுக்கலாம்.

என்னைப் பொறுத்தவரையில் இந்த மாமன்றத்திற்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எப்படி இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மதுரை, முகவை மாவட்டங் களில் பல்வேறு திட்டங்களை அறிவித்தோமோ அதைப்போல, இந்த அதிகபட்சமான பணிகளை அடுத்த நிதிநிலைக்குள்ளாக, திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கிறது என்ற அறிவிப்பு நிச்சயமாக வரும். இதிலே வட ஆற்காடு மாவட்டத்தைச்

[திரு கே. இராஜா முகமது] [1983 மார்ச் 19

சேர்ந்த நண்பர்கள் மகிழ்ச்சிவரலாம் என்று இந்த நேரத்திலே
தெரிவித்துக் கொள்கிறேன். திரு. ராமலிங்கம் அவர்கள் இன்
னொரு அபூர்வமான ஆபத்தான யோசனையைச் சொன்னார்கள்.
நீங்கள் திட்டங்களைத்தான் சொல்லவில்லை—அவைகளை
நிறைவேற்றத்தான் முடியவில்லை. குறைந்த பட்சம் அதை
செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று அச்சடித்து அதையா
வது கொடுக்கக்கூடாதா என்று கேட்டார்கள். அது எப்படி?
பழைய கால அனுபவமா அல்லது புதிய ஆபத்தான யோசனையா?

நாங்கள் இங்கே 3 விதமான குறிப்புக்களைக் கொடுத்திருக்கி
றோம். நீங்கள் என்னென்ன இந்த அவையிலே கேட்டீர்கள்
அவைகளின் நிலைமை தற்போது என்ன என்பதையும் நாங்கள்
தொகுத்து கொடுத்திருக்கிறோம். ஏன் நாங்கள் இப்போதே
சொல்லியிருக்கக்கூடாதா—செண்பகத்தோப்பு திட்டம் வரும்
என்று. நாங்கள் ஏன் சொல்லவில்லை. நடைபெற்றிருக்கிற
உண்மைகளை மட்டும் தான் சொல்லியாக வேண்டும். இந்தத்
திட்டங்கள் அவைகள் வருகிறபோது பேசக்கூடிய விஷயங்கள்.
சில இடங்களில் அடிக்கல் நடப்படுகின்றன. அவைகளில் பெரும்
தலைவர்களுடைய பெயர் இருக்கின்றது. அதற்காக வேண்டி
யாவது அந்தக் கல்லை பாதுகாக்க வேண்டிய நிலை இருக்கிறது.
அணை வருகிறதோ இல்லையோ கல்லைப் பாதுகாக்க வேண்டிய
ஒரு சுமை நமக்கு கூடவே வந்துவிடுகிறது. ஆகவே, நாங்கள்
இதிலே திறந்த மனத்தோடு சொல்கிறோம். நல்ல திட்டங்
களைச் சொல்லியிருக்கிறோம்.

நீங்கள் என்ன கேட்டீர்கள, குழாய் கிணறுகள் கழகம் என்ன
செய்கிறது என்று கேட்டீர்கள். சுருக்கமாகச் சொன்னால்
குழாய்க்கிணறுகள் கழகம் குழாய்களைப் போட்டுக் கொண்டிருக்
கிறது. அது உங்களுடைய மாவட்டத்திலும் போட்டுக்
கொண்டிருக்கிறது. நீங்கள் உங்கள் தொகுதியைத் தாண்டிப்
போய் பார்த்தால் தெரியும். ஏனென்று சொன்னால் முக்கியமாக
பரீட்சார்த்தமாக எடுத்துக் கொண்ட மாவட்டங்களில் தஞ்சை
மாவட்டமும் ஒன்று. தஞ்சை மாவட்டத்திலே கிட்டத்தட்ட
என்னுடைய கணக்கு சரியாக இருக்குமேயானால் குறைந்தபட்சம்
500 ஆதி திராவிட விவசாயிகளுக்கு பயன்படக்கூடிய அளவுக்கு
இரு பெரும் திட்டங்கள் அங்கே வந்திருக்கின்றன என்று நான்
நினைக்கிறேன்.

இப்போது நீங்கள் இங்கே ஒரு நெருக்கடியை உண்டாக்கி
விட்டால், சமிக்ஞை மூலமாகவே நான் அதிகாரிகளைப் பார்த்து
சில விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு)
பின்னால் கேளுங்கள். அதேபோல் தென்னாற்காடு மாவட்டம்
அந்த மாவட்டத்திலும் நிறைய பணிகள் செய்யப்பட்டிருக்கின்



1983 மார்ச் 19] [திரு கே. இராஜா முகமது]

றன. ஒரு வாரியம் ஏற்படுத்திய உடனேயே, ஆயிரம் ஆயிரம்
துளைக் கிணறுகளை போடவேண்டும் என்று சொல்வது எப்படி
நியாயமாகும். அதுவும் விவசாயத்திற்கு போடுவது என்பது
தனியான விஷயம். அதை நாம் சற்று உணர்ந்து பார்க்க வேண்
டும். ஆழ் குழாய் கிணறுகளை குடிப்பதற்கு நீர்வேண்டும்
என்று போட்டாலே, அதிலே 10 காலனுக்கு தண்ணீர் குறைந்து
வந்தாலே, தண்ணீரே வரவில்லை, காற்றுதான் வருகிறது
என்று நாம் குற்றம் சொல்கிறோம். விவசாயத்திற்கு எவ்வளவு
காலன்கள் தேவை. ஒரு வினாடிக்கு குறைந்தபட்சம் ஆயிரம்
காலனாவது தண்ணீர் வரவேண்டும். அப்படி என்றால், எந்த
அளவுக்கு பணிகளைச் செய்ய வேண்டும் அதை சற்று யோசித்துப்
பாருங்களேன்.

அதன் அடிப்படை பூர்வாங்க வேலைகள் இப்போதுதான்
முடிவு அடைந்திருக்கின்றன. இந்தக் குழாய்க் கிணறு கழகத்தி
னுடைய முக்கியமான பணிகளிலே ஒன்று, ஆதி திராவிட
மக்களுக்கு ஒரு அந்தஸ்த்தைக் கொடுக்க வேண்டும் என்பது
(குறுக்கீடு).

நண்பர் ரகுமான்கான் அவர்கள் சிரிக்கிறார்கள். அவர்
களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், அந்த ஆதிதிராவிட மக்க
ளுக்கு அந்த உரிமையை உண்டாக்கினால்தான், இப்போது
இருக்கக்கூடிய சில கோளாறுகள் குறையும். இப்போது ஜாதிப்
பிரச்சினை—மோதல் என்று எவ்வளவோ வருகின்றன. காரணம்
என்ன ? இல்லாதவர்கள் அவர்கள், எதையும் தாங்கிக் கொள்
வார்கள் அல்லது இருப்பவர்கள் அவர்களை ஏய்க்கக்கூடிய
நிலைமை இருக்கலாம். ஆனால் அவர்களுக்கும் ஒரு உடைமையை
உண்டாக்கி பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்துகிறபோது, அந்த
நிலைமைகள் மாறும். அதனால்தான் ஆதித் திராவிடர்களுக்கே
அதிக முன் உரிமை கொடுத்து, அந்தக் கழகத்தினுடைய பணி
களை விரைவுப் படுத்த வேண்டும் என்று சொல்லி, அதற்குச்
சம்பந்தமான பொருத்தமான அதிகாரிகளைப் போட்டு, இப்
போது காரியங்கள் செய்து வருகிறோம். (குறுக்கீடு).

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு நான் எப்போதுமே
முன் உரிமை கொடுப்பவன். நான் முடித்த பிறகு வேண்டுமா
னால் அவர் பேசலாம். அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர்
கள் அதிகமாக பேசிய கருத்து, பாசன கருத்தரங்கம் சம்பந்த
மாக, நாங்கள் ஏற்கெனவே கன்சல்டேட்டிங் கமிட்டி மூலமாக
பல்வேறு திட்டங்களைச் சொல்லி நிலைமைகளை வைத்திருக்கி
றோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப்
பார்த்தால், ஒரு கருத்தை—ஒரு பொறுப்பை நான் ஏற்றுக்
கொள்ள விரும்புகிறேன். பல்வேறு மாவட்டங்களில் அது

நடக்கவில்லை என்று சொன்னால், இனிமேல் அந்தக் கருத்தரங்கை நடத்துகிற பொறுப்பை நானே நேரிடையாக ஏற்றுக் கொள்கிறேன்.

அதைத் தவிர வேறு வழி கிடையாது. அப்படி வருகின்றபோது ஏப்ரல் கடைசி வாரத்தில் மதுரை மற்றும் கோவை மாவட்டங்களில் பாசனக் கருத்தரங்கு நடைபெறும். மே மாதத்தில் மூன்றாவது வாரத்தில் பாசன ஆலோசனைக் குழுக் கூட்டம் ஊட்டியிலே நடக்கும். இரண்டாவது மூன்றாவது வாரத்தில் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பாசனக் கருத்தரங்கு நடத்தப்படும். ஜூன் மாதம் இரண்டாவது வாரத்தில் நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களிலே பாசனக் கருத்தரங்கு நடத்தப்படும். ஜூன் மாதம் கடைசி வாரத்தில் தென்னாற்காடு மாவட்டத்திலும், வடாற்காடு மாவட்டத்திலும் பாசனக் கருத்தரங்கு நடத்தப்படும். ஜூலை முதல் வாரத்தில் செங்கை மாவட்டத்திலும், இரண்டாவது வாரத்தில் சேலம் மாவட்டத்திலும், மூன்றாவது வாரத்தில் கோவை மாவட்டத்திலும் பாசனக் கருத்தரங்குகள் நடத்தப்படும். அப்போது ஆங்காங்கே உள்ள பிரச்சினைகளைப் பற்றிப் பேசலாம். கோவை என்பதிலே பெரியாரையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம் அந்த அளவுக்கு அந்தக் கருத்தரங்குகளை நாம் நடத்துகின்றபோது ஆங்காங்கே உள்ள பிரச்சினைகளை அப்போதுதான் சரியாகப் பார்க்க முடியும். ஒன்றை நான் ஒத்துக் கொள்கிறேன். இந்தத் திட்டங்கள் ஒன்றைத்தாண்டி ஒன்றைத்தாண்டி வருகின்றபோது பல்வேறு கிராமங்களில் அதாவது 50 வருகின்றது என்றால் அவற்றிலே 20 தான் தேர்வு செய்கிறோம் என்பதை ஒப்புக் கொள்கிறேன். எனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களும், நம்முடைய பொறியாளர்களும், பொதுப்பணித்துறை செயலாளர் மற்றவர்களும் உட்கார்ந்து பேசுகின்றபோதுதான் அங்கே நாம் ஒரு முடிவுக்கு வர வாய்ப்பு இருக்கின்றது.

அடுத்து ஒட்டுமொத்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் யோசனைகள் சொல்லியதிலிருந்து ஒன்று தெரிகின்றது. அதாவது நாங்கள் மிக எச்சரிக்கையாக திட்டங்களை இன்னும் விரைவு படுத்தவேண்டும். அதிகமாக நீர்ப்பற்றாக்குறை வந்தாலும் கூட ப்ராப்பர் வாட்டர் மேனேஜ்மென்ட் மூலமாக சில காரியங்களைச் செய்யவேண்டும் என்று எல்லாம் கருதுகின்றபோது இந்த அரசு இப்போது என்ன யோசித்து வைத்திருக்கின்றது என்பதைச் சொல்லிவிடுகிறேன். எப்படிப்பட்ட பற்றாக்குறை மாநிலத்தில் ஏற்பட்டாலும் கூட பாசன வசதியை விஸ்தரிப்பதிலோ அல்லது அவற்றின் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலோ பின்வாங்கி விடாமல் இருக்கின்ற வகையிலே, தொல்லைகளைச் சந்திப்பதற்குரிய வாய்ப்பைத் தவிர்க்கின்ற வகையிலே



சில முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று கருதுகிறோம். அதிலே ஒன்று பெரியார் பாசனம். நடுத்தர சிறிய பாசனத் திட்டங்கள் பற்றி நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். அறிவிப்புகளிலேயே எல்லாம் வந்து விடுகின்றன. அந்த மூன்று பிரிவுகளின்கீழே நாம் செய்ய வேண்டிய ஒன்று, இறைவைப் பாசனத் திட்டங்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்பது. வளம் கொழிக்கும், வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரி என்று காவியத்திலே மட்டும்தான் இப்போது நின்று கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே காவிரி டெல்டா பகுதியிலே கூட இப்போது இறைவைப் பாசனத் திட்டங்களின் உதவி தேவைப்படுகின்றது. ஆகவே வரும் முன் காக்கவேண்டிய திருக்கின்றது. நம்முடைய நண்பர் திரு. இராமலிங்கம் அவர்கள் கேட்டார்கள். தண்ணீர் இல்லையே இப்போது ஏன் தடுப்புச் சுவர் என்று. வெள்ளம் வருகின்றபோது எந்த புத்திசாலியும் தடுப்புச் சுவர் கட்ட மாட்டான். அதுதான் வருமுன் காக்க என்பதன் பொருள். ஆகவே தடுப்புச் சுவர் கட்டுகிறோம். வெள்ளம் வரும், நாம் நம்புகிறோம், அடுத்த ஆண்டு நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். கடுமையான வெள்ளம் வரத்தான் போகின்றது. நாம் நம்புவோமாக. ஆகவே இறைவைப் பாசனத் திட்டங்கள் மிக முக்கியமானவை.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆயிரம் கோடித் திட்டத்திலே இந்த மன்றத்திலே பேசினார்கள். அப்போது நமது மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதியமைச்சராக இருந்தார்கள். அவர்கள் இது பண்டாரத்தினுடைய ஆசையைப் போன்று இருக்கின்றது என்று சொன்னார்கள். அதற்கு பண்டாரம் என்று சொன்னால் அது கூட நிதியமைச்சர் என்று பொருள் என்று இலக்கிய ரீதியாகக் கூட விளக்கங்கள் செய்துகொண்டு இருந்த காலம் அது. அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் கடல் நீரைப்பயன்படுத்துவது பற்றி யோசித்தாக வேண்டும் என்று சொன்னார்கள். அது தவிர்க்க முடியாதது. அதற்காக யார் என்ன செய்யவேண்டும் என்பது வேறு. ஆனால் அதனை என்னென்ன முறைகளில் பயன்படுத்த முடியும் என்று கொஞ்சம் யோசித்துப் பார்ப்பது இப்போது பயன்படக்கூடியதாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன். அது இரண்டாவது நிலை. மூன்றாவது நான் ஏற்கெனவே சொன்னது போன்று பேலன்சிங் ரிசர்வாயர். நான்காவது நிலை ஃப்ளட் டிஸ்சார்ஜ். அதுதான் நான் சொன்னேன், கட்டளை பிறகு, புதுக்கோட்டை, பிறகு கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் என்று. திரு இராமலிங்கம் அவர்கள் கோபப்படுவார்கள். காவிரித் தண்ணீரை

அங்கெல்லாம் கொண்டு போகப் போகிறீர்களா என்று. அது அப்படி அல்ல. வெள்ளக் காலங்களில் வீணாகின்ற நீரைக் குடிநீருக்கும் பயன்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் மனிதாபிமானத்தோடு அந்தத் திட்டங்களை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்கூட அதை எதிர்க்கவில்லை. அதாவது அடிப்படைப் பிரச்சினையைச் சொல்கிறபோது அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அதுபற்றிய ஆய்வு இப் போது நடந்துகொண்டு இருக்கின்றது. அதே போன்று வைகைப் பெரியார் திட்டம். திரு. ரகுமான்கான் அவர் களுடைய தாய்வீட்டுத் தொட்டிலான கம்பத்துக்கு எவ்வளவு பயன் அளிக்கும் என்பது தெரியும். 18ஆம் கால்வாய்த் திட்டம் பிரிட்டிஷ் காலத்திலே ஆய்வு செய்யப்பட்டு கிடப்பிலே போடப் பட்டு இருந்தது. அதை எடுத்து வைத்துக்கொண்டு இப்போது சட்டமன்ற உறுப்பினர்களின் முயற்சி காரணமாகவும் ஆய்வு செய்வதற்காக ஒரு கோட்டம் அமைத்து அந்தப் பணிகளைத் துவக்கி வருகிறோம். அப்படிச் செய்கின்றபோது அதன் மூலமாக பெரிய நன்மை கிடைக்கும்.

அடுத்து பெர்கோலேஷன் பான்ட்ஸ். அதை அதிகப் படுத்தவேண்டும். அதேபோல் எல்லா முனைகளிலும் நவீனப் படுத்துகின்ற திட்டம். வரத்துக் கால்வாய்களையும், கிளைக் கால்வாய்களையும் நவீனப்படுத்துகின்ற திட்டம். அதுமட்டு மல்ல. 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதி தரக்கூடிய 500 ஏரிகளை 300 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து நவீனப் படுத்தக்கூடிய திட்டத்தை நாம் யோசித்துக் கொண்டு இருக் கிறோம். ஆக்கிரமிப்புகளை அகற்றி ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும். அந்த அடிப்படையில் திட்டங்கள் வரவேண்டும். அடுத்ததாக புதிய ஏரிகளை அமைப்பதுஎன்பது பற்றி யோசிக்க வேண்டும். அடுத்தாற்போல் விவசாயிகளுக்கு உதவக் கூடிய வகையில் காற்றாடி இயந்திரங்களை அதிகமாக அறிமுகப் படுத்துவது பற்றி மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கருத்துச் சொன்னார்கள். நம்முடைய துறையில் நிலத்தடி நீர் பெறுவதற்காக நம்முடைய துறையைச் சேர்ந்த வர்கள் அதிலே கவனம் செலுத்தி கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 2-10)

அதேபோல் அன்-ஆதரைஸ்டு பம்புசெட்டுகள், அதிலே பல்வேறு பிரச்சனைகள் வந்திருக்கின்றன. நான் இங்கே எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றை நாம்





நிறுத்த முடிந்தால் நிறுத்திவிடலாம். நிறுதத் முடியாது அவர்கள் எடுத்துக் கொண்டே தான் இருக்கிறார்கள் என்பதை அது அன்-ஆதரைஸ்டு ஆக இருப்பதை ரெகுலரைஸ் செய்வது என்பது அந்த கிரிமினல் குற்றங்களைக் குறைப்பதற்கு வழி வகுக்கும். என்ன செய்தாலும் அவர்கள் இயந்திரங்களைப் பயன் படுத்தப்போகிறார்கள் என்கிறபோது அதை ரெகுலரைஸ் செய்கிற போது அவர்கள் ஆயில் இன்ஜினை மாற்றலாம், மின் இயந்திரங்களை பொருத்தலாம். இதனால் விவசாயிகளுக்கு நலம் வருமானால் அதை எண்ணத்தில் கொண்டு அதைச் செய்ய வேண்டும். அதை இரண்டு முறை கூடிபேசி ஒரு 20 ஆண்டு காலத்திற்கு மேலாக திருச்செங்கோடு பகுதிகளில் அந்த அன்-ஆதரைஸ்டு பம்புசெட்டுகளை ரெகுலரைஸ் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அதை நாம் சொல்லி இதில் எந்த பேச்சு வார்த்தையும் குறுக்கிட்டு விடாமல் அது பெரிய நதியாக இருந் தாலும் கிளை வாய்க்கால்களாக இருந்தாலும் ஒன்று ஒட்டு மொத்தமாக அப்புறப்படுத்திவிட முடியும் என்றால் பரவா யில்லை. ஏற்கெனவே 1960-லிருந்து 1958-லிருந்து, 1957-லிருந்து அல்லது 1965லிருந்து பயன்படுத்தி வருவதை நாம் நிறுத்திவிட முடியாது. எனவே அதையும் கொஞ்சம் பார்க்க வேண்டும். அன்-ஆதரைஸ்டு பம்புசெட்டுகளை எல்லாம் ரெகுலரைஸ் செய்வதன் மூலமாக விவசாயிகள் பன்முனைப் போடு மேலும் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பதை நாம் செய்கிறோம்.

ஏற்கெனவே சொன்னதுபோல் புதிய திட்டங்களை நிறை வேற்றும்போது Fair and equitable distribution என்ற அடிப்படையில் Dry become un-irrigated dry என்பது தான் நம்முடைய சித்தாந்தம். நஞ்சைகளுக்குக் கூடுதலாக அதிகமான தண்ணீர் கொடுக்க முடியவில்லை. எனவே புஞ்சைக்கு தண்ணீர் கொடுத்து அதிகமான விவசாய பரப்புகளை கொண்டு வருவது என்ற திட்டத்தை நாம் இன்றைக்கு செய்து வருகிறோம்.

அடுத்து முக்கியமானது மகாநதி இணைப்பு. எத்தனை காரியங்களுக்கோ, எது எதற்கோ டெல்லிக்கு போய்வருகிறார்கள். புதிதாக நம்முடைய தமிழக அரசு பிரதிநிதியாக இப்போது டெல்லிக்கு செல்கிறார். அவர் இப்போதுதான் அந்த பொறுப்பை ஏற்று இருக்கிறார். ஏற்றுக்கொண்டவுடனே மாண்புமிகு உறுப்பினர் ராமலிங்கத்திற்கு பொறுக்கவில்லை. டெல்லி பிரதிநிதி என்று ஏதோ சொல்ல ஆரம்பித்துவிட்டார். அது வேறு விஷயம். அவர் நம்முடைய காரியங்களுக்காகத் தான் செல்லப்போகிறார். அங்கே இருந்தால் இனிக்கும், அங்கே இருந்தால் கசக்கும் என்பது எல்லாம் வேண்டாம். மாநிலத்திற்கு நன்மைபயக்கக்கூடிய காரியங்களை மேற் கொள்வதற்காக அவர்கள் அனுபவம் மிக்க முன்னாள் ஒரு

அமைச்சர் செல்கிறார் என்றால் மேலும் கூடுதலாக நன்மை பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் கூட அந்த பொறுப்பில் இருந்து பல்வேறு நல்ல காரியங்களை செய்திருக்கிறார்கள். அதிலே நான் சொல்ல விரும்புவது வேறு சில காரியங்களுக்காக நீங்கள் போனால் கூட நான் ஒரு இதுவாகவே கூறுகிறேன். எங்கள் மீது புகார் கொடுப்பதற்காக நீங்கள் டெல்லிக்கு போனால் கூட உங்களுடைய காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பதைப் போல தமிழ்நாட்டையும் கொஞ்சம் எண்ணிப்பார்த்து இந்த மகாநதி இணைப்பை—இதையாவது நாம் செய்யவேண்டும். அவர்கள் கங்கை காவேரியை இணைக்கிறார்கள் என்பது வேறு விஷயம். அதில் உள்ள பிரச்சனைகள் வேறு விஷயம். கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, வைகை, தாமிரபரணி இவைகளை எல்லாம் நாம் நினைக்கவேண்டும். இந்த பிரச்சனைகள் தீர்ந்தால்தான் பசி நிரந்தரமாக போகும். அதனால் தான் நான் இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டு பேசிகொண்டிருக்கிறேன். எனவே இவைகளைச் செய்ய வேண்டும்.

இந்த பி.சி. பேனிபிட் காஸ்டு ரேஷியோ. இந்தப் பிரச்சனையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் சொன்னார்கள். அது குறித்து கூட இங்கே அதிகாரிகள் குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். நீர் வளக்குழு அமைத்து நம்முடைய தலைமைப் பொறியாளர்கள் சென்று பேசுகிறபோது இதை நாம் தளர்த்தவேண்டும். பேனிபிட் காஸ்டு ரேஷியோ என்பதில் எவ்வளவோ பேனிபிட் இருக்கிறது. நேரிடையாகவோ, மறைமுகமாகவோ பேனிபிட் இருக்கிறது. நேரிடை வருவது ஒரு பேனிபிட் தான். மீன் வளர்ப்பது ஒரு பேனிபிட். ரிஸ்டு தான். இரண்டாவது ஒரு குறிப்பிட்ட பொருள்களை உற்பத்தி செய்கிறபோது ஒரு டன்னுக்கு இவ்வளவு செலவாகிறது என்று சொன்னால் இன்றைக்கு அதனுடைய மார்க்கெட்டிங் நிலவரம் என்ன? அதில் வேறு பயிர்கள் போட்டால் எவ்வளவு லாபம் கிடைக்கிறது என்று எல்லாம் பார்க்கிறபோது பேனிபிட் காஸ்டு ரேஷியோவைத் தளர்த்தி பழைய விதிகளை மாற்றி இன்னும் சொல்லவேண்டுமானால் வறண்ட பகுதிகள், பின் தங்கியபகுதிகள் என்று சொன்னால் அந்த பி.சி. ரேஷியோவை பற்றி பார்க்காமல் கூட திட்டங்களை நாம் நிறைவேற்ற முன் வந்தால் தான் ஓரளவுக்காவது மாவட்டங்களின் பல்வேறு பிரச்சனைகளை நாம் போக்கமுடியும் என்று இந்த அரசு கருதுகிறது. இது தான் எங்களுடைய அணுகுமுறை. இதிலே ஒன்றிரண்டு சேர்க்க வேண்டும் என்று சொன்னால் சேர்த்துக் கொள்வோம். மறு பரிசீலனைக்கு இடம் இருக்காது என்று நினைக்கிறேன். நல்ல அணுகு முறை என்று நம்புகிறேன். வேறு ஏதாவது பேச வேண்டும் என்று சொன்னால்





மாண்புமிகு உறுப்பினர்களுடைய யோசனையைத் தனியாகவும் கொடுக்கலாம். நான் ஏற்கனவே உங்களிடத்தில் கடிதம் மூலம் உங்களுடைய திட்டங்களைக் கேட்டு பெற்று அதிலேதான் அருமை நண்பர் திரு. தங்கவேல் அவர்களுடைய தொகுதிக்கு ஜெயங்கொண்டபுரம் தொகுதிக்கு போனது. அவர்கள் எழுதி இந்தத் திட்டம் வேண்டும் என்று கேட்டார்கள். பல்வேறு பகுதிகளுக்கு நான் சென்றபோது அந்தமாதிரியான கோரிக்கைகளைச் செய்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்ற கழக நண்பர்கள் திகைக்க வேண்டாம். நண்பர் திரு. ராஜு அவர்கள் தொகுதிக்கு கூட 7 திட்டங்கள் வேண்டும் என்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். சிறு திட்டங்கள். அதிலே 5 திட்டங்களை நிறைவேற்றுவதாக அந்த மேடையிலேயே அறிவித்து இருக்கிறேன். அறிவித்தால் அறிவித்தது தான். அந்த திட்டங்கள் நிறைவேற்றப்படும். வாக்குறுதியை நிறைவேற்றுவோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே....

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, இந்த வறண்ட காலத்திலே அவர்கள் சில கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை ஒன்று இங்கே இருக்கிறது. சோத்து நாயக்கன்கோம்பைத் திட்டம் ஒரு பான்ட் ஸ்கீமாக அந்த அளவிலே தயாரிக்கப்பட்டதாகக் கருத்துச் சொன்னார்கள். அதை மாற்றியமைத்து ஓரளவுக்கு நல்ல திட்டமாக நிறைவேற்றுவதற்கு நாங்கள் முயற்சி எடுப்போம் என்பதைச் சொல்லி அதைப்போன்று திரு. அழகர்சாமி அவர்கள் நெல்லை மாவட்டத்திலே கொடுமுடியாறு திட்டம் பற்றிச் சொன்னார்கள், மற்றவர்களும் சொன்னார்கள். அவைகளுக்கு நான் பதில் சொல்லவில்லை என்று அர்த்தமில்லை. ஏற்கனவே சென்ற முறையும் பேசியிருக்கிறோம். யார் குறுக்கிட்டாலும் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்கனவே சொன்னதைப்போல் கட்சிவேறுபாடு இன்றி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் ஒத்துழைத்து இந்த கொடுமுடியாறு திட்டத்தை நிறைவேற்றுவோம். அதைப்போலவே துணைத் தலைவர் சில திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள் அதையும் நிறைவேற்றுவதிலே நான் கவனம் செலுத்துவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. இராஜாமுகமது] [1983 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 36—பாசனம்.

திருவாளர்கள் சு. பாலன், கே. ஆர். சுந்தரம், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திருமதி தா. இராசாம்பாள் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 36.—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 41,15,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. கே. எம். தங்கமணி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

" மானியக் கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 63,99,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.



1983 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 21-3-83 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

200. திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி மற்றும் சங்கரன் கோவில் வட்டங்களில் உள்ள சில கிராமங்களைத் தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது தொடர்பாக ஊரகவளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 31-12-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1974 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

89. 1983-84 ஆம் ஆண்டின் பாசனம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் உரை(தமிழ், ஆங்கிலம்).

90. 1983-84 ஆம் ஆண்டில் பாசனம் மற்றும் நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

91. 1982-83 ஆம் ஆண்டு நீர்ப்பாசனம் மீதான மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் அளித்த ஆலோசனைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I.

(506-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 472-க்கான விடையைக் காண்க.)

(அ) 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளில் 100 சதவிகிதம் மாணவர்கள் தேர்வுபெற்று பள்ளிகள் 23 ஆகும். (பள்ளிகளின் விவரம் இணைப்பு அ-ல் காணலாம்). 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. தேர்வுகளில் 100 சதவிகிதம் மாணவர்கள் தேர்வு பெற்ற பள்ளிகள் 110 ஆகும். (பள்ளிகளின் விவரம் இணைப்பு ஆ-ல் காணலாம்).

(ஆ) மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளில் 30 சதவிகிதத்துக்கு கீழ் தேர்வுபெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை 94 ஆகும். எஸ். எஸ். எல். சி. தேர்வுகளில் 30 சதவிகிதத்துக்கு கீழ் தேர்வு பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை 404 ஆகும்.

## இணைப்பு அ.

பிளஸ்-2 தேர்வில் 100% மாணவர்கள் தேர்ச்சிபெற்ற பள்ளிகளின் விவரம்.

1. அரசு மேல்நிலைப் பள்ளி, எழுதீசம்பட்டு.

2. ஹோலிகிராஸ் ஆங்கிலோ-இந்திய மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

3. வைகாசர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி, மதுரை.

4. தூய. ஜோசப் கான்வென்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, குன்னூர்.

5. சி. ஜி. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, கோயம்புத்தூர்.

6. செக்ரட் ஹார்ட் ஆங்கிலோ இந்திய பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஏர்காடு.

7. ஹோலிகிராஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சேலம்.



8. பாத்திமா மேல்நிலைப்பள்ளி, முத்தியால்பேட்டை, புதுவை.

9. தூய ஜோசப் குளூனி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, புதுவை.

10. தூய மேரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, கடலூர்.

11. அரசு மேல்நிலைப் பள்ளி, தக்கோலம்.

12. தூய டோமினிக் எஸ். ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளி, சென்னை-16.

13. கிரிசண்ட் ஆர். எம். மேல்நிலைப் பள்ளி, வண்டலூர்.

14. ஸ்ரீ எஸ். எஸ். டி. பெண்கள் மேல்நிலைப் பள்ளி சென்னை-1.

15. வனவாணி மேல்நிலைப் பள்ளி, ஐ. ஐ. டி., அடையாறு.

16. தூய பிட்ஸ் ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளி, சென்னை-4.

17. தூய அந்தோணி பெண்கள் ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளி, எழும்பூர், சென்னை-8.

18. தூய மேரி ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளி, சென்னை-1.

19. டான்பாஸ்கோ மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி, எழும்பூர், சென்னை-8.

20. ரோசரி மெட்ரிகுலேஷன் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மைலாப்பூர்.

21. சி. எஸ். ஐ. சுவார்ட்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சென்னை-84.

22. பாத்திமா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை.

23. குட்ஷெப்பெர்ட்டு கான்வென்ட், சென்னை-34.

## இணைப்பு ஆ.

### எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வில் (மார்ச் 1982) 100 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் விபரம்.

1. புனித மேரி உயர்நிலைப்பள்ளி, கேசவன் புத்தன்துரை.
2. புனித அந்தோணி உயர்நிலைப்பள்ளி, முன்ளங்கி நாவிலை.
3. மார் கிரிகோரியஸ் உயர்நிலைப்பள்ளி, கிரத்தூர்.
4. புனித ஜான் வியானி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பள்ளியாடி.
5. அரசு உயர்நிலைப்பள்ளி, குமாரபுரம், தோப்பூர்.
6. பி. வி. கே. எஸ். பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னமரெட்டிபட்டி.
7. அரசு உயர்நிலைப்பள்ளி, பெரிய கோவில்குளம்.
8. கே. என். ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.
9. [illegible] உயர்நிலைப்பள்ளி, தூத்துக்குடி-5.
10. டி.டி.டி.ஏ.ஜி.எஸ். உயர்நிலைப்பள்ளி, இடையார்காடு.
11. அரசு உயர்நிலைப்பள்ளி, கொங்கராயகுறிச்சி.
12. அரசு உயர்நிலைப்பள்ளி, வலவல்லான்.
13. சென்ட்ரல் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, காயல்பட்டினம்.
14. எஸ். வி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.
15. தாஸ் நிவாஸ் மாதா பெண்கள் உயர்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.
16. எஸ். எம். ஆர். அரசு உயர்நிலைப்பள்ளி, சமூகரங்கபுரம்.
17. புனித ஜோசப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ஜவாஹர் நகர்.
18. அரசு உயர்நிலைப்பள்ளி, மகாராஜபுரம்.
19. பி.ஏ.சி.ஆர். மெமோரியல் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம்.
20. ஸ்ரீ ரேணுகா ஹிந்து உயர்நிலைப்பள்ளி, புதுப்பட்டி



21. நாடார் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம்.
22. அரசு உயர்நிலைப்பள்ளி, பூவநாதபுரம்.
23. அரசு உயர்நிலைப்பள்ளி, கள்ளமநாயக்கர்பட்டி.
24. டி.ஏ.எஸ். அரசு உயர்நிலைப்பள்ளி, மீசலூர்.
25. அரசு மேல்நிலைப்பள்ளி, சின்னகாமன்பட்டி.
26. ஏ.வி.எம்.எம். நாடார் உயர்நிலைப்பள்ளி, விலாம்பட்டி.
27. எஸ்.ஆர்.பி.ஏ.கே.டி.டி.ஆர். ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, ராஜபாளையம்.
28. மோனும்போ உயர்நிலைப்பள்ளி, எம். சின்னையாபுரம்.
29. தூய இருதய பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீவில்லிப்புத்தூர்.
30. டி.எம்.பி.எம்.எம்.ஏ.என். பெண்கள் உயர்நிலைப்பள்ளி, தளவாய்புரம்.
31. பி.ஏ.சி.ஆர்.ஏ.ஏ. பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ராஜபாளையம்.
32. அரசு உயர்நிலைப்பள்ளி, டி. எம். கந்தன்கோட்டை.
33. அரசு உயர்நிலைப்பள்ளி, பொம்மனேந்தல்.
34. கே. ஹெச். என். உயர்நிலைப்பள்ளி, பெருநாழி.
35. சாத்தப்ப அரசு உயர்நிலைப்பள்ளி, தெற்குப்பை.
36. புனித அருளானந்தர் உயர்நிலைப்பள்ளி, ஓரியூர்.
37. சி. சி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கோட்டையூர்.
38. அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, தொண்டி.
39. எஸ். சி. உயர்நிலைப்பள்ளி, ஒக்கூர்.
40. அரசு உயர்நிலைப்பள்ளி, தமராக்கி.
41. அரசு உயர்நிலைப்பள்ளி, மேலப்பரளச்சி.
42. அரசு உயர்நிலைப்பள்ளி, முத்துராமலிங்கபுரம்.
43. அரசு உயர்நிலைப்பள்ளி, இலுப்பையூர்.
44. அரசு உயர்நிலைப்பள்ளி, அலியூர்.
45. பி. எம். உயர்நிலைப்பள்ளி, பழனிசெட்டிப்பட்டி.

[1983 மார்ச் 19

46. பி. எச். என். உயர்நிலைப்பள்ளி, காமாட்சிபுரம்.
47. பச்சையப்பா உயர்நிலைப்பள்ளி, உப்புக்கோட்டை.
48. அரசு உயர்நிலைப்பள்ளி, சுருளிப்பட்டி.
49. கே. என். உயர்நிலைப்பள்ளி, கடகோவில்.
50. அரசு உயர்நிலைப்பள்ளி, சேடபட்டி.
51. என்.எஸ்.வி.வி. பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பட்டிவீரன் பட்டி.
52. பி. கே. என். பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருமங்கலம்.
53. நகராட்சி உயர்நிலைப்பள்ளி, மேட்டுப்பட்டி, திண்டுக்கல்-2
54. அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, திண்டுக்கல்.
55. ஏ. எம். பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திண்டுக்கல்.
56. ஸ்ரீனிவாசன் மெமோரியல் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சத்திரப்பட்டி.
57. அரசு உயர்நிலைப்பள்ளி, ஏ. வெள்ளாளப்பட்டி.
58. அரசு உயர்நிலைப்பள்ளி, மாங்குளம்.
59. ஸ்ரீ கோபாலகிருஷ்ணா உயர்நிலைப்பள்ளி, சிறுதூர்.
60. அரசு உயர்நிலைப்பள்ளி, கோடிமங்கலம்.
61. பாரதியார் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, செல்லூர், மதுரை.
62. புனித ஆன்ஸ் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, வெல்லிங்டன்.
63. சென்ட்ரல் உயர்நிலைப்பள்ளி, ஏ. நகர்.
64. அரசு உயர்நிலைப்பள்ளி, கேதாலூர்.
65. வெங்கடேஸ்வர உயர்நிலைப்பள்ளி, அப்பநாயக்கன்பட்டி.
66. எஸ். சி. எம். உயர்நிலைப்பள்ளி, வடம்பாசேரி.
67. அரசு உயர்நிலைப்பள்ளி, வடுகப்பட்டி.
68. ஏ.டி.எம். உயர்நிலைப்பள்ளி, வைரபாளையம், ஈரோடு.
69. கே. கே. என். பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ஈரோடு.
70. கே. எஸ். பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னிமலை.
71. எஸ். ஆர். கே. எம். வித்யாலயா உயர்நிலைப்பள்ளி, பி. என். பாளையம்.



1983 மார்ச் 19]

72. கோபால நாயுடு செக்கண்டரி பள்ளி, பீளமேடு.
73. நகராட்சி உயர்நிலைப்பள்ளி, ஒடையாம்பாளையம்.
74. அரசு உயர்நிலைப்பள்ளி, அனுமந்தாபுரம்.
75. அரசு உயர்நிலைப்பள்ளி, குன்னத்தூர்.
76. அரசு உயர்நிலைப்பள்ளி, பண்ணாந்தூர்.
77. அரசு உயர்நிலைப்பள்ளி, உடான்பள்ளி.
78. சங்கர் உயர்நிலைப்பள்ளி, சங்ககிரி மேற்கு.
79. நிர்மலா மேல்நிலைப்பள்ளி, கொளத்தூர்.
80. அரசு உயர்நிலைப்பள்ளி, அனியாபுரம்.
81. அரசு உயர்நிலைப்பள்ளி, புதுப்பாளையம்.
82. அரசு அரிசன நல உயர்நிலைப்பள்ளி, களங்கானி.
83. அரசு உயர்நிலைப்பள்ளி, என். புதுப்பட்டி.
84. எஸ். எஸ். வி. பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சேலம்-4.
85. கே. கே. பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கொப்பனப்பட்டி.
86. ரங்கசாமி கவுண்டர் உயர்நிலைப்பள்ளி, நடையனூர்.
87. அரசு உயர்நிலைப்பள்ளி, நெய்தலூர்.
88. புனித அந்தோணி உயர்நிலைப்பள்ளி, மஞ்சம்பட்டு.
89. பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கல்லாத்தூர், தண்டலை.
90. எஸ். வி. வி. உயர்நிலைப்பள்ளி, திருப்பராய்த்துறை.
91. எஸ். ஆர். வி. உயர்நிலைப்பள்ளி, திருப்பராய்த்துறை.
92. லூர்து பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கோட்டை பாளையம்.
93. பி. ஏ. அன்னை உயர்நிலைப்பள்ளி, புன்னவாசல்.
94. அவர் லேடி ஆப் ஹெல்த், வேளாங்கண்ணி.
95. அரசு உயர்நிலைப்பள்ளி, ஆவினங்குடி.
96. அரசு உயர்நிலைப்பள்ளி, கிழக்கல், பூண்டி.
97. அரசு உயர்நிலைப்பள்ளி, திருமால்பூர்,
98. அரசு உயர்நிலைப்பள்ளி, மேலபுலம்.

[1983 மார்ச் 19

99. தூய இருதய பெண்கள் உயர்நிலைப்பள்ளி, வந்தவாசி.
100. அரசு உயர்நிலைப்பள்ளி, குரும்பேரி.
101. சிறுமலர் உயர்நிலைப்பள்ளி, தெரசாபுரம்.
102. ஸ்ரீ கே. எஸ். பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சென்னை-1.
103. ஞானோதய பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னை-39.
104. பார்வையற்றோர் பள்ளி, சென்னை-6.
105. எம்.ஜி.ஆர். மேல்நிலைப்பள்ளி, வடபழனி, சென்னை-26.
106. பழனியப்பா உயர்நிலைப்பள்ளி, சோழபுரம், இராமநாதபுரம்.
107. செவிடர் பள்ளி, சென்னை-6.
108. புனித லூயிஸ் செவிடர் பார்வையற்றோர் பள்ளி, அடையார், சென்னை-20.
109. உஸ்வதான் ஹஸ்னா ஓரியண்டல் அராபிக் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பள்ளப்பட்டி, திருச்சி.
110. ஹபீபியா ஓரியண்டல் அராபிக் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ஆம்பூர்.



1983 மார்ச் 19]

## இணைப்பு II

(548-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண். 36—பாசனம்.

ஆளுநரின் பரிந்துரையின் பேரில் இவ்வரசுக்கு ''கோரிக்கை 36-பாசனம்'' என்பதன் கீழ் ரூ. 41,15,74,000-க்கு மேற்படாமலும் ''கோரிக்கை 51-பாசனம் மீதான மூலதனச் செலவு'' என்பதன் கீழ் ரூ. 63,99,71,000-க்கு மேற்படாமலும் தொகை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவாக்குவதற்கு ஏற்படும் செலவும், அவற்றை பராமரிப்பதற்கான வழக்கமான செலவும், வெள்ளம், புயல் காரணமாக ஏற்படும் செப்பனீட்டுச் செலவும், ''கோரிக்கை 36-பாசனம்'' என்பதன் கீழ் வழங்கப்படும் மானியத்திலிருந்து ஈடுசெய்யப்படும்.

2. புதிய பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றின் செலவு ''கோரிக்கை 51-பாசனம் மீதான மூலதனச் செலவு'' என்பதன் கீழ் பெறும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

### பெரிய மற்றும் நடுத்தர பாசனம்.

3. பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு 1983–84 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 55.99 கோடி ஒதுக்கப்படும். பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களின் மூலம் 1983–84 ஆம் ஆண்டில் 14,000 ஹெக்டேர் (34,580 ஏக்கர்) நிலங்கள் பாசன வளம் பெறும்.

### பெரிய பாசனத் திட்டங்கள்.

4. 1982–83 ஆம் ஆண்டில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் (கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்கள்) மற்றும் பெரியாறு வைகை நவீனப்படுத்தும் திட்டம் (மதுரை மாவட்டம்) ஆகிய இவ்விரண்டு பெரிய திட்டங்களின் வேலைகள் நடைபெற்று வந்தன. 1.01 இலட்சம் ஹெக்டேர் (2.50 இலட்சம் ஏக்கர்)

நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்கக்கூடிய பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. இத்திட்டத்தின் ஆயக்கட்டை விரிவாக்கி கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம் வட்டங்களிலும் பெரியார் மாவட்டத்திலுள்ள தாராபுரம் வட்டத்திலும் 0.466 இலட்சம் ஹெக்டேர் (1.15 இலட்சம் ஏக்கர்) கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்காக ரூ. 14 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள திட்ட வேலைகள் முன்னேற்ற நிலையிலுள்ளன.

5. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் பதிவு பெற்ற ஆயக்கட்டுகளால் சூழப்பட்ட நிலங்களையும் மற்றும் பதிவு பெற்ற ஆயக்கட்டுகளுக்கு இடைப்பட்ட சுமார் 10,125 ஹெக்டேர் (25,000 ஏக்கர்) நிலங்களை மேலும் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் கீழ் சேர்க்க ரூ. 4.00 கோடி மதிப்பீட்டில் இப்பணி மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. 1983-84 ஆம் ஆண்டில் இப்பணிக்காக ரூ. 4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

6. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் பல்வேறு அம்சங் களையும், அது செயல்படும் விதத்தையும் அப்பகுதியின் சட்ட மன்ற உறுப்பினர்கள், விவசாயிகள், பெரியார், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியவர்களைக் கலந்து ஆலோசித்து திட்டத்தின் செயல் திறனை மேம்படுத்தத் தேவை யான ஆலோசனைகளை வழங்க அரசு நியமித்த குழு தனது அறிக்கையை அளித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளன.

7. பெரியாறு-வைகை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் தற்போது கொண்டு வரும் நீரின் இழப்பை குறைப்பதையும் புதிதாக 10,305 ஹெக்டேர் (25,500 ஏக்கர்) நிலங்களுக்கு பாசன வசதி அளிப்பதையும் கருத்திற்கொண்டு உலக வங்கியின் உதவியுடன் முதற்கட்ட திட்டப்பணியாக மேற்படி திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகின்றது. 1983-84 ஆம் ஆண்டில் இம் முதற்கட்ட பணிகளுக்காக ரூ. 10.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி 1984 ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

8. இம்முதற்கட்ட திட்டப் பணியினை செயல்படுத்துவதின் மூலம் கிடைக்கப்பெறும் நீரின் சேமிப்பு ஊக்கமளிப்பதாக இருப்பதை கருத்திற் கொண்டு இத்திட்டத்தின் இரண்டாம் கட்ட பணியாக அரசு மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிவகங்கை வட்டம், மதுரை மாவட்டத்தில் உள்ள திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டி ஆகிய வட்டங்களில் சுமார்



9,642 ஹெக்டேர் (23,825 ஏக்கர்) ஆயக்கட்டுகளுக்கு கூடுதலான பாசன வசதி அளிக்க உத்தேசித்துள்ளது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கும் உலக வங்கியிலிருந்து நிதி உதவி பெற வாய்ப்பு இருக்கிறது.

### நடுத்தர பாசனத் திட்டங்கள்.

9. முந்தைய ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 14 நடுத் தர பாசனத் திட்டங்களின் வேலைகள் முன்னேற்ற நிலையி லுள்ளன. இவற்றில் இவ்வாண்டு இறுதிக்குள் மூன்று திட்டங் கள் முடிக்கப்பட்டுவிடும். அவையாவன :

(i) 1054 ஹெக்டேர் (2,606 ஏக்கர்) நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கக்கூடிய தர்மபுரி மாவட்டத்திலுள்ள தும்பளஹல்லி நீர்த் தேக்கத் திட்டம்.

(ii) 3,278 ஹெக்டேர் (8,100 ஏக்கர்) நிலங்கள் பயனடையக் கூடிய இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வெம்பக் கோட்டை நீர்த் தேக்கம்.

(iii) 723 ஹெக்டேர் (1,785 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறக்கூடிய திருச்சி மாவட்டத்தில் உள்ள உப்பாறு நீர்த் தேக்கம்.

10. இராமநாதபுரம், மதுரை மற்றும் சேலம் மாவட்டங் களுக்கு தலா இரண்டு வீதத்தில் ஆறு நடுத்தர பாசன திட்டங் களுக்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. அவையாவன:—

(i) இராமநாதபுரம் மாவட்டத்தில் 2,765 ஹெக்டேர் (6832 ஏக்கர்) நிலங்களுக்கு பயனளிக்க ரூ. 597 இலட்சம் மதிப் பீட்டிற்கு கோல்வார்பட்டி நீர்த்தேக்கத் திட்டம்.

(ii) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,821 ஹெக்டேர் (4500 ஏக்கர்) நிலங்களுக்கு பாசன வசதியளிக்க ரூ. 276 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத் திட்டம்.

(iii) மதுரை மாவட்டத்தில் 2,449 ஹெக்டேர் (6052 ஏக்கர்) நிலங்களுக்கு பாசன வசதியளிக்க ரூபாய் 406 இலட்சம் மதிப்பீட்டிற்கு குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

(iv) மதுரை மாவட்டத்தில் 1,170 ஹெக்டேர் (2892 ஏக்கர்) நிலங்களுக்கு பயனளிக்க ரூ. 791 இலட்சம் மதிப்பீட்டிற்கு சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம்.

(v) சேலம் மாவட்டத்தில் 2,820 ஹெக்டேர் (6,967 ஏக்கர்) நிலங்களுக்குப் பாசன வசதியளிக்க ரூ. 554 இலட்சம் செலவில் ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டம்.

(vi) சேலம் மாவட்டத்தில் 2,709 ஹெக்டேர் (6,695 ஏக்கர்) நிலங்களுக்கு பாசன வசதியளிக்க ரூ. 573 இலட்சம் செலவில் கரியக்கோயில் நீர்த்தேக்கத் திட்டம்.

11. 1983–84-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் புதிய நடுத்தர பாசன திட்டங்களுக்கு ஒட்டு மொத்தமாக ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நொய்யல் அணைக் கட்டுத் திட்டத்தின்கீழ் கூடுதலான நிலங்களுக்குப் பாசன வசதியளித்தல் மற்றும் இதர 15 நடுத்தர பாசன திட்டங்கள் ஆகியவை அரசின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 79.37 கோடியாகும். இத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் 17,821 ஹெக்டேர் (44,000 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறும். மதுரை மாவட்டம் டேராப்பாறை நீர்த்தேக்கத் திட்டப் பணிகளும் அடுத்து எடுத்துக் கொள்ளப்படும்.

### தற்போதுள்ள பாசன அமைப்புகளை நவீனப்படுத்துதல்.

12. தமிழ்நாட்டில் மேற்பரப்பு நீரை மேலும் பயன்படுத்துவதற்கான பெரிய திட்டங்களை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு மிக குறைவாகவே உள்ளது. ஆகவே தற்போது உள்ள பாசன திட்டங்களை நவீனப்படுத்தி அதன் மூலம் சேமிக்கப்பட்ட தண்ணீரை கூடுதல் நிலங்களுக்குப் பாசனம் அளிக்க நாம் திட்டமிட்டு வருகின்றோம்.

13. பெரியாறு—வைகை பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவது தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் பெரிய திட்டங்களுள் ஒன்றாகும். பழமையான காவிரி டெல்டா திட்டத்தையும் நவீனப்படுத்துவதற்கான பணிகளும் அளவாக மேற்கொள்ளப்படுகின்றன. காவிரி டெல்டா திட்டத்தை நவீனப்படுத்துவதற்காக ரூ. 366 கோடி மதிப்பீட்டுத் தொகை அரசினால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு மைய அரசின் ஒப்புதலுக்காகவும் உலக வங்கியின் நிதியுதவி பெறுவதற்காகவும் இப்பொழுது மைய அரசை அணுகவுள்ளோம். அனந்தனாறு கால்வாய் மற்றும் இதன் கிளைக் கால்வாய்களை ரூ. 246 லட்சம் செலவில் மாற்றியமைத்தலும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு திட்டத்தின் கீழ் திருப்பரப்பு அணைக்கட்டின் வலதுபுறக் கால்வாயை விரிவுபடுத்துதல் மற்றும் அதனை நவீனப்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ. 46.70 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு



வருகின்றன. கோதையாறு திட்டத்தின் எஞ்சிய பகுதிகள், மணிமுத்தாறு பிரதானக் கால்வாய், கீழ் பவானி திட்டம், பொன்னியாறு திட்டம், தாமிரவருணித் திட்டம் முதலியவற்றை நவீனப்படுத்துவதற்கான ஆரம்ப ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### பாசனத் திட்டங்கள் ஆய்வு.

14. இருபத்துமூன்று திட்டங்கள் ஆய்வின் பல்வேறு கட்டங்களில் உள்ளன. இத்திட்டங்கள் ரூ. 59.78 கோடி செலவில் 19,628 ஹெக்டேர் (48,480 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதியளிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வெள்ளத் தடுப்பு.

15. தமிழ்நாட்டிற்கு வெள்ளத்தினால் ஏற்படும் சேதம் ஒரு முக்கியப் பிரச்னையாக இல்லாமையால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வெள்ளத் தடுப்புப் பணிகளுக்காக ஆரம்பக் கட்டத்தில் ரூ. 19 கோடி ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தற்காலிகமாக ரூ. 5.50 கோடியாக குறைக்கப்பட்டன. எஞ்சியுள்ள நிதி ஒதுக்கீட்டினை பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்குப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1983–84-ஆம் ஆண்டில் தற்போது நடைபெற்று வரும் வெள்ளத் தடுப்புப் பணிகளுக்காக ரூ. 66.40 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ. 95 இலட்சம் செலவில் வெள்ள நீரை வைகைப் படுகையிலிருந்து குண்டாறு மற்றும் கிருதமால் படுகைகளுக்கு திருப்பிவிடும் திட்டப் பணிகள், ரூ. 6.40 இலட்சம் செலவில் அடையாற்றின் வலது கரையில் கோட்டூர் புரத்திலிருந்து தெற்கு அடையாறு லாக் வரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்தல், மற்றும் கூவம் ஆற்றின் வலதுகரையில் கிலோ மீட்டர்கள் 3.37 லிருந்து 4.22 வரை ரூ. 7.40 இலட்சம் செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் அமைத்தல் ஆகிய பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்ற நிலையிலுள்ளன. நான்கு வெள்ளத் தடுப்புப் பணிகளை நிறைவேற்ற அரசு அனுமதியளித்துள்ளது. அவையாவன :—

(i) தஞ்சை மாவட்டத்தில் ஆலக்குடி கிராமத்தில் கொள்ளிடமாற்றின் வலது கரையில் ரூ. 60 இலட்சம் செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்தல்.

(ii) பண்ணுருட்டி—நெய்வேலி தரைப்பாலத்திற்கு மேலே கடிலமாற்றின் இடது மற்றும் வலது கரைகளில் ரூ. 7.40 இலட்சம் செலவில் வெள்ளத்தடுப்புச் சுவர் அமைத்தல்.

(iii) அடையாறு ஆற்றில் ஜாபர்கான்பேட்டை தரைப் பாலத்திலிருந்து அடையாறு பாலம் வரை ரூ. 84 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.

(iv) தென்னாற்காடு மாவட்டத்தில் மருதூர் மற்றும் சிவப்பட்டினம் கிராமம் எல்லைக்குள் கடிலம் ஆற்றின் இடது கரையில் ரூ. 3.20 இலட்சம் செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்தல், மேற்கூறிய பணிகள் இவ்விடங்களுக்கு அருகில் உள்ள கிராமங்களுக்கும், இக்கிராமங்களிலுள்ள பயிர் செய்யப்படும் நிலங்களுக்கும் வெள்ளச் சேதங்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கவும் வகை செய்கிறது.

16. 1983–84 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் புதிய வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பாசன வளம்

17. 1982–83 ஆம் ஆண்டில் (1) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின்கீழ் ஆயக்கட்டு விரிவாக்கத்திட்ட பணியில் ஒரு பகுதி (2) பெரியாறு வைகை நவீனப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியும் (3) உப்பாறு நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய பெரிய மற்றும் நடுத்தர பாசனத்திட்டங்கள் நிறைவேற்றுவதன் மூலம் மொத்தமாக 9,760 ஹெக்டேர் (24,120 ஏக்கர்) நிலங்களுக்கு புதிதாக பாசன வசதி ஏற்படுத்தவியலும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டில் பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் கூடுதலாக 14,000 ஹெக்டேர் (34,580 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாக பாசன வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 1982–83 ஆம் ஆண்டில் பருவ நிலை.

18. 1982–83 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை பலவீனமாக இருந்தது. பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்துவிட்டதால் தமிழ்நாட்டில் வறட்சி நிலை ஏற்பட்டது. இதனால் நீர்த் தேக்கங்களிலும் நீரின் அளவு மிகவும் குறைந்தது. தமிழ்நாட்டிற்குரிய நீர் வரத்தினை கர்நாடகஅரசு தடுத்ததால் வறட்சிநிலை கடுமையாகியது. அதனால் மேட்டூர் நீர்த் தேக்கத்தின் கீழ் காவேரிப்படுகையில் உள்ள நிலங்களுக்கு பாசனத்திற்கு நீர் விடுவது ஒத்தி வைக்கப்பட்டதோடு மேலும் முறைப்பாசனமும் கையாள வேண்டியிருந்தது. தஞ்சை மாவட்டத்தில் பயிர்களுக்காக அதிக நீர் தேவையிருந்தும் கூட போதுமான நீர் இல்லாத காரணத்தினால் மேட்டூர் நீர்த்தேக்கம் 27—1—1983 அன்று மூட வேண்டியதாயிற்று. பயிர்களைக் காப்பாற்றுவதற்காக இவ்வரசு கர்நாடக அரசை தண்ணீர் விடுவிக்க பலமுறை கோரியும் கூட பயனற்றுப் போய்விட்டது. 3. டி.எம்.சி. தண்ணீரை கர்நாடக அரசு காலங்கடந்து விடுவித்தது. 23—2—1983 முதல் 28—2—1983 வரை இத்தண்ணீரை காவிரி டெல்டாவிலுள்ள பயிர்கள் பயன் பெற மேட்டூர் அணையிலிருந்து விடப்பட்டது. ஆனால் பயன் குறைந்த அளவே இருந்தது எனினும் நாம் நம் நன்றியினை கர்நாடக அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். தென்மேற்கு பருவக்காலங்களில் பெரியாறு வைகை மற்றும் அமராவதி கால்வாய்களில் சில பகுதிகள் திறக்கப்படவில்லை. தொடர்ந்து வடகிழக்கு பருவ காலத்தில்தான் இக்கால்வாய்கள் திறக்கப்பட்டன. வடகிழக்குப் பருவ காலத்தில் மணிமுத்தாறு பிரதான கால்வாயின் கீழ் உள்ள ஆயக்கட்டுகளின் ஒரு பகுதிக்குத்தான் பாசன வசதி அளிக்கப்பட்டது. இதுபோன்று சாத்தனூர் இடது புறக்கால்வாய் திட்டத்தின் கீழுள்ள சில ஆயக்கட்டுகளுக்கு ஒரு சிறு பகுதிக்குத்தான் 1983-ஆம் ஆண்டு சனவரி திங்கள் முதல் தேதியில் இருந்து பாசனத்திற்கு நீர் விடப்பட்டது.





### வறட்சி நிவாரணப் பணிகள்

19. 1982 ஆம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழைகள் பொய்த்த காரணத்தினால் தமிழ்நாடு முழுவதும் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டது. பாசன வசதிக்கும் குடிநீர் உபயோகத்திற்கும் கடும் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்களுக்கு தங்கள் வாழ்க்கை நடத்துவதற்கான வேலை வாய்ப்புகள் இல்லாமல் போயின.

20. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் அரசு வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. புதிய அணைகள் கட்டும் பணி, புதிய ஏரிகள் அமைத்தல், தற்போதுள்ள ஏரிகளையும் குளங்களையும் பழுதுபார்த்தல், வெள்ளத்தடுப்பு கரைகளை உயர்த்துதல், புதிய நீர்க்குட்டைகள் அமைத்தல், நீர்க்குட்டைகளை மேம்படுத்தி பழுதுபார்த்தல் ஆகிய பணிகளை பொதுப்பணித்துறை மேற்கொண்டு செயலாக்க உத்தேசித்துள்ளது. இவற்றால் 6,560 வேலைகள் உடனடியாக ரூ. 36·75 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் உதவியுடன் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படும். மத்திய அரசிடமிருந்து உதவித்தொகை வரும்வரை பொதுப் பணித்துறையினால் ரூ. 4 கோடி வறட்சிப் பணிகளின் தொடக்கப் பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

21 இவ்வறட்சி நிவாரணப் பணிகள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு நிலையான பயனை அளிக்கும்.

## சிறுபாசனம்.

22. 1982–83 ஆம் ஆண்டில் சிறப்பு சிறுபாசனத் திட்டத்திற்காக ரூ. 255 இலட்சமும் தூர் வாரி புனரமைக்கும் திட்டத்திற்காக ரூ. 3.41 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது 32 வேலைகள் 1982–83 ஆம் ஆண்டில் முடிக்கப்படவிருக்கின்றன. இப் பணிகள் முடிவுறும்போது 2,530 ஹெக்டேர் (6, 325 ஏக்கர்) நிலங்கள் கூடுதலாக பாசன வசதிபெறும். அவற்றில் 103 வேலைகள் பல்வேறு கட்டங்களிலும் முன்னேற்ற நிலையிலுள்ளன. 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 80·25 இலட்சம் மதிப்புள்ள எட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

23. 1983–84 ஆம் ஆண்டில் சிறப்புச் சிறுபாசனத் திட்டத்திற்காகவும் தூர் வாரி புனரமைக்கும் திட்டத்திற்காகவும் ரூ. 247 இலட்சம், ரூ. 3 இலட்சம் முறையே ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 30 வேலைகள் 1983–84 ஆம் ஆண்டிலேயே முடிக்கப்படும். இப்பணிகள் முடிவுறும்போது 2530 ஹெக்டேர் (6·325 ஏக்கர்) கூடுதல் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கப்பெறும். ரூ. 8·60 கோடி மதிப்புள்ள 47 திட்டங்களின் ஆய்வுப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 20.47 கோடி மதிப்புள்ள 193 திட்டங்களின் ஆய்வுப்பணிகள் பல்வேறு நிலைகளில் இருந்து வருகின்றன. ரூ. 210 கோடிக்கான சிறப்புப் சிறுபாசனத்தின் கீழ் வரும் 130 நீர்க்குட்டைகள் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு இவற்றின் விரிவான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தீவிரப்படுத்தப்பட்ட சிறு பாசனத்திட்டங்கள்.

24. 40 ஹெக்டேருக்கும் (100 ஏக்கர்) அதற்கும் மேற்பட்ட நிலங்களுக்கு பாசனவசதியளிக்கக்கூடிய நீர் நிலைகளைப் பராமரிக்கும் பொறுப்பை பொதுப்பணித்துறை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள 40 ஹெக்டேருக்குக் குறைவான நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கக்கூடிய நீர் நிலைகளைப் பொதுப்பணித்துறை தரப்படுத்தி பராமரிப்புக்காக ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கும். இதுபோல் முன்னாள் ஜமீன்களைச் சேர்ந்த நீர் நிலைகளும் பொதுப்பணித்துறையால் தரப்படுத்தப்படும்.

25 1974 ஆம் ஆண்டு முதற்கொண்டே தீவிரப்படுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்திலுள்ள சிறுபாசன நீர் நிலைகளை தரப்படுத்தி மேம்



படுத்துவதற்கான அனைத்து பராமரிப்புப் பணிகளையும் மேற்கொண்டுசிறு ஆயக்கட்டுகாரர்களும் முழுப்பயன் பெறும் வகையில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது 1982-83 ஆம் ஆண்டில் ஏரி மற்றும் குளங்களை தரப்படுத்த பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.75 இலட்சமும் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் ரூ. 40 இலட்சமும் செலவிடப்பட்டன. அது போல் 1983–84 ஆம் ஆண்டிலும் பொதுப்பணித் துறையின் மூலம் ரூ. 75 இலட்சமும் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் ரூ. 40 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## முன்னாள் ஜமீன் குளங்களைத் தரப்படுத்தும் சிறப்புத் திட்டம்

26. இராமநாதபுரம், செங்கற்பட்டு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் அதிக அளவில் அமைந்துள்ள முன்னாள் ஜமீன் குளங்களை தரப்படுத்துவதற்கு ஒரு விரிவான செயற்குறிப்பு உள்ளது. பாசன வசதிக்கு மிகவும் அடிப்படையான இந்தக் கண்மாய்கள் ஆயக்கட்டுதாரர்கள் பயன்பெறும் வகையில் சீர் செய்யப்பட்டு தரப்படுத்தப்படவிருக்கின்றன. இதற்காக 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 3 கோடி செலவில் தீவிரப்படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டத்தின்கீழ் 695 குளங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு அப்பணிகளும் முன்னேற்றத்தில் இருந்து வருகின்றன. இதற்காக 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டம்.

27. உலக வங்கியின் உதவியுடன் 500 ஏக்கர் நிலங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட ஆயக்கட்டுகளுக்குப் பாசன வசதி தரக்கூடிய கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அத்திட்டத்தின் பொருளாதார சாத்தியக் கூறுகளை நிர்ணயிக்க எட்டு முன்னோடி திட்டங்களை எடுத்துக் கொள்ள அரசு முதலில் முடிவு செய்தது. ஒரு கண்மாயினை நவீனப் படுத்தவும், மற்ற இரண்டு கண்மாய்களை நவீனப் படுத்தாமலும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டுமென்றும் மத்திய அரசு கருத்து தெரிவித்ததன் பேரில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பிள்ளைப்பாக்கம் கண்மாயை நவீனப்படுத்தவும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கம்பிக்குடி மற்றும் கட்டிக்குளம் கண்மாய்களை நவீனப் படுத்தாமலும் ஆய்வுகள் நடத்த ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## நிலத்தடி நீர்

### தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் ஆய்வு

28. நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொள்ள இசைவளிக்க, வளர்ச்சி வட்டார அடிப்படையில் நீர்வளம் குறித்து நுண்ணிய அளவு மதிப்பிடப்பட்டது. இந்த ஆய்வின் அடிப்படையில் மொத்தமுள்ள 376 வளர்ச்சி வட்டாரங்களில் 133 வளர்ச்சி வட்டாரங்களில் நிலத்தடி நீர் 80 சதவீதத்திற்கும் மிகையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிந்தது. இந்த வளர்ச்சி வட்டாரங்களில் மேலும் திட்டங்களைச் செயல்படுத்த வாய்ப்பில்லை. எனவே, மிகையாக நிலத்தடி நீர் எடுக்கப்பட்டுள்ள வளர்ச்சி வட்டாரங்கள்கூட நிலத்தடி நீர் கிடைக்கும் பகுதிகளை கண்டறிவதற்காக உபப்படுகைவாரியாக ( Sub-basinwise ) நுண்ணிய அளவில் ஆய்வை மேற்கொள்ள இத்திட்டமானது மாற்றியமைக்கப்பட்டது. இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட நுண்ணிய அளவிலான ஆய்வின் அடிப்படையில் நிலத்தடி நீர் ஏற்கனவே மிகையாகப் பயன்படுத்தப்பட்டுள்ள வளர்ச்சி வட்டாரங்கள்கூட இன்னும் நிலத்தடி நீர் நிச்சயமாக இருக்கும் பகுதிகளும் உள்ளன என்று தெரியவந்தது. சில பகுதிகளில் சிறு பாசனத் திட்டங்களை உருவாக்குவதற்கு வாய்ப்புள்ளது என்று தற்போது மதிப்பிடப்பட்டது. எல்லா வளர்ச்சி வட்டாரங்களிலும் இந்த ஆய்வு 31–3–1985-க்குள் முழுமை பெறும்.

### நீரின் தூய்மை கெடுவது பற்றிய ஆய்வு.

29. தமிழ்நாட்டின் சில பகுதிகளில் தொழிற்சாலைக் கழிவுகளும் கழிவுநீரும் ஆறுகளில் விடப்படுகின்றன. நீரின் தன்மையில் ஏற்படும் மாற்றங்களைத் தொடர்ந்து கண்காணித்து ஆய்வு செய்வதும் மற்றும் நீரின் தூய்மை கெடுவதற்கான காராணத்தை ஆராய்ந்து, நிலத்தடி நீர் தூய்மைக் கேட்டினை நீக்க வழிவகை காண்பதற்காகவும் இவ்வாய்வுப்பணிகள் முதற்கட்டமாக வட ஆற்காடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

### மேற்பரப்பு நீரையும் நிலத்தடி நீரையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்துதல்.

30. நிலத்தடி நீர் வளத்தை சரிவர பயன்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழுள்ள ஆயக்கட்டுகள் மேற்பரப்பு நீரையும் நிலத்தடி நீரையும்



ஒருங்கிணைத்து பயன்படுத்த ஆய்வு செய்யவும் முக்கியமாக நீர்த் தேக்கங்கள் சரிவர நிரம்பப்பெறாத காலங்களில், விவசாயிகள் தங்கள் விவசாயப் பணிகளை உரிய காலங்களில் ஆரம்பிக்க உதவி செய்யும் நோக்கத்துடன் 1982–83 ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டப்பகுதியில் முன்னோடித் திட்டம் ஒன்றினை மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த முன்னோடித் திட்டம் வெற்றி பெறுமானால், நீர்ப்பாசனப் பகுதிகளுக்கருகில் உள்ள பாசனப் பகுதிகளை விரிவாக்கு வாய்ப்பு உள்ளது.

### செயற்கை முறையில் நிலத்தடிநீர் அபிவிருத்தி செய்வதுபற்றிய ஆய்வுகள்.

31. தற்போது நிலத்தடிநீர் கொணர நடைபெறும் ஆய்வுப் பணிகளோடு வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் கொணருவதற்கான தகுந்த இடங்களையும் அதற்கு கிடைக்கப் பெறக்கூடிய நீரையும் கண்டறிவதற்கான ஆய்வுப்பணிகளையும் மேற்கொள்ள நிலத்தடி நீர்த் துறை உத்தேசித்துள்ளது.

### ஆலோசனைப் பணி.

32. நிலத்தடி நீர் ஆய்வின்போது, பெருமளவில் தொழில் நுட்பப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது தருமபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு இவ்வாலோசனைகள் நிலத்தடி நீர்த்துறையினால் வழங்கப்படுகின்றன. குறைந்த செலவில் கிணறுகள் தோண்டுவதற்கு தகுந்த இடங்கள் பற்றிய ஆலோசனை வழங்குவது சம்பந்தமான பணிகள் மாநிலத்தில் இதர மாவட்டங்களிலுள்ள பொதுமக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

### மாநிலக் குழாய் கிணறுகள் கழகம்.

33. 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் தமிழ்நாடு குழாய் கிணறுகள்கழகம் அமைக்கப்பட்டது. கிணறு எடுக்கவோ அல்லது அவர்களுடைய கிணறுகளில் மின் விசை ஏற்றம் அமைக்கவோ வசதியற்ற சிறு விவசாயிகளுக்கு கடைமடைப் பகுதியில், கடலுக்குபோய் விழும் வடிகால்நீரை பயன்படுத்துதல் மற்றும் நிலத்தடிநீரை முழுமையாக பயன்படுத்தி பாசன வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் முதலியன இக்கழகத்தின் நோக்கமாகும். ஆதி திராவிடர்களுக்கான மத்திய அரசின் சிறப்புத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் உதவித் தொகையை வைத்து உரிய முறையில் ஆதி திராவிடர்களுக்கும் மற்றும் பிற்பட்டவர்களுக்கும் சொந்த

மான விவசாய நிலங்களுக்குப் பாசன வசதி செய்துகொடுக்க இக்கழகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். தனி நபர்கள் உள்ளாட்சித் துறை, மாநில அல்லது மத்திய அரசு நிறுவனங்கள் அவர்களது நீர் நிலைகளின் நீரினை பாசனத்திற்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் முழுமையாக பயன்படுத்துவது பற்றிய ஆலோசனைகள், ஆய்வுகள் மற்றும் கட்டுமானப்பணிகளை இக் கழகம்செய்து வருகின்றது. 1983 ஆம் ஆண்டு சனவரி இறுதிக்குள் 1587 ஹெக்டேர் (3,920 ஏக்கர்) நிலங்களுக்கு பாசன வசதி யளிக்க ரூ. 240.74 இலட்சம் செலவில் 190 குழாய் கிணறுகள் அமைக்க இக்கழகம் திட்டம் தீட்டியுள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 561.16 இலட்சம் செலவில் 3,600 ஹெக்டேர் (8,892 ஏக்கர்) நிலங்களுக்கு பாசன வசதியளிக்க இக்கழகம் உத்தேசித்துள்ளது.

## காவிரி நீர்.

34. படுகை மாநிலங்களிடையே ( Ba in S a'es ) காவிரி நீர் பங்கிடு பற்றி பேச்சு வார்த்தைகள் மூலம் இன்னும் தீர்வுகாண முடியவில்லை. இப்பிரச்சினைக்கு தீர்வு காண மத்திய அரசு படுகைமாநில முதலமைச்சர்கள் மாநாட்டினை விரைவில் புதுடெல்லியில் நடந்த உத்தேசித்துள்ளது. இந்த நீண்டகாலப் பிரச்சினைக்கு விரைவில் ஒரு தீர்வு காண முடியும் என நாம் நம்புகிறோம்.

## மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை திருப்பிவிடுதல்.

35. கேரளாவில் மேற்குநோக்கிப்பாயும் நதிகளின் உபரி நீரை தமிழகத்திற்கு திருப்புவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்பக் குழு தெரிவித்துள்ள பரிந்துரைக்கிணங்க, தமிழக அரசு கேரள அரசோடு இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காக கேரள முதலமைச்சரை தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார். கேரள அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

36. 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் டெல்லியில் நடைபெற்ற தேசிய நீர்வள அமைப்பின் முதல் கூட்டத்தின் பொழுது கேரள அரசு மேற்கு நோக்கி பாயும் நதிகளின் உபரி நீரை கிழக்கு நோக்கி திருப்புவதற்கான ஆய்வுப்பணிகளை தானே மேற்கொண்டு ஒத்துழைப்பு அளிக்க முன்வருமென்று நம்பு வதாகவும் கேரள அரசு ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளவில்லை என்றால் இந்த அமைப்பு அப்பணியை மேற்கொள்ளும் என்றும் மத்திய அரசு பிரதிநிதி கூறியுள்ளார்.



## நீர் மேலாண்மை.

37. நமது மாநிலத்தில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் நீரின் கேரளா மற்றும்
அளவு நமது அண்டை மாநிலங்களான நீரின் அளவில் நான்கில்
கர்நாடக மாநிலங்களில் கிடைக்கும் நீரில் 95 விழுக்காட்டை
ஒரு பங்காகும். நாம் மேற்பரப்பு விட்டோம். பயிரிட்டுள்ள எல்லா
ஏற்கனவே உபயோகப்படுத்தி விரிவாக்க இன்னும் நம்மால் இயல
நிலங்களுக்கும் பாசனத்தை நீரை மிக அதிக அளவில்
வில்லை. ஆகையால் இருக்கும் நீராதாரங்களை மிகவும்
பயன்படுத்துவதற்கு நமக்குள்ள பயன்படுத்துவதைத்தவிர வேறு வழி
சிக்கனமான முறையில் நீர் மேலாண்மையைப் பற்றி
யில்லை. இதனை சாதிக்க, பெருமக்களுக்கும் பயிற்சி
துறை அலுவலர்களுக்கும் விவசாயப் நிலையிலுள்ள அலுவலர்
அளிக்கப்பட வேண்டும். பல்வேறு நீராதாரங்கள் முதல் விவசாய
களுக்கு இப்பயிற்சி அளிப்பதற்கும், ஏற்படக் கூடிய நற்பயன்
நிலங்கள்வரை நீர் மேலாண்மையால் நீர் மோலாண்மைப்
களை விவசாயிகளுக்கு அறிவுறுத்துவதற்கும் இன்றியமையாத
பயிற்சி நிறுவனம் ஒன்றை நிறுவுவது மிகவும் நிதியுதவியுடனும்,
தாகும். அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்
( USAID ) அண்ணா பல்கலைக்கழகத்தின் ஒன்றை நிறுவ
புடனும், நீர் மேலாண்மைப் பயிற்சி நிறுவனம்
கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

38. 1982–83 ஆம் ஆண்டு பாசனத் திட்டத்திற்கான நிதி
ஒதுக்கீட்டுக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது
மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துரைகளையும்
யோசனைகளையும் அரசு கவனத்தில் கொண்டுள்ளது.
அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவர
அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

13606
சென்னை-600 008.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Bros., Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
B. Aruldoss, Villupuram (South Arcot District).
8 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-1.
9 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
10 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
11 Ganesh Stores, South Car Street, Sivakasi.
12 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
13 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
14 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
15 Meenakshi Pathippagam, Pudukkottai.
16 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
17 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
18 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
19 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore.
20 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
21 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
22 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
23 Ajantha Book Centre, Salem-1.
24 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
25 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-12.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.